கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

# சைவநீதி

# SAIVANEETHI




50.98
சைவநீ
PP.

கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

## தீபாவலி மலர் - 1999

மேன்மை கொள் சைவநீதி விளங்குக வைய மெங்கும்



# நல்லூர் குமரன்
## சாறி பலஸ்

இந்தியாவில் உள்ள அனைத்துத்
தரமான பட்டுப் புடவைகளுக்கும்
நாடவேண்டிய நம்பிக்கையான
ஸ்தாபனம்



சிறந்த தரம், குறைந்த விலைகளுக்கு
உத்தரவாதம் வழங்கப்படும்.

கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகள்,
மங்கையர் மனம் கவரும் நவநாகரிகப்
புடவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**நல்லூர் குமரன்**
**சாறி பலஸ்**

**2387 EGLINTON AVE. EAST,**
**SUIT #6** (1st Floor) Eglinton & Kennedy
**SCARBOROUGH, ONT. M1K 2M5**
**TEL: (416) 285-6797**
**FAX: (416) 281-9561**

**Branch:**
**1429 GERRARD STREET EAST. TORONTO**
**TEL: (416) 469-9800**

உ
அன்பே சிவம்

# செய்திச் சுருள்


மலரின் பெயர்: சைவநீதி

நிறுவனத்தின் பெயர்: கனடா இந்து மாமன்றம்

மலராசிரியர்: பண்டிதர், முதுபெரும்புலவர், இலக்கியவித்தகர், சிவநெறிப்புரவலர், சைவப்புலவர்
வீ. வ. நம்பி

வெளியீட்டுத் திகதி : 06-11-1999

வெளியீட்டு வைப்பவர்: திரு. தம்பையா ஸ்ரீபதி
தலைவர், கனடா இந்து மாமன்றம்

பிரதிகள்: 1000

விநியோகம்: உலகில் சைவத் தமிழர் வாழும் இடமெங்கும்



பதிப்புரிமை: ஆசிரியர் வீ. வ. நம்பி - கனடா இந்து மாமன்றம்



முகப்பு ஓவியம்: திரு. வி.கே. கண்ணன்

பக்க வடிவமைப்பு: திரு. மா. கனகசபாபதி

அச்சுப்பதிவு: Royal Graphic Inc.


என்றும்,

தமிழ் – சைவப்பயிரை வளர்த்திடுவோம் வாரீர்!

மூடர்முனே பாடல் மொழிந்தால் அறிவரோ!
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா - ஆடகப்பொன்
செந்திருவைப் போல்அணங்கைச் சிங்காரித் தென்னபயன்?
அந்தகனே நாயகன் ஆனால் - இரட்டையர்.

ஓம்

சிவசக்தியாயநம!

கண்காள் காண்மின்களோ......................................................................கடல் நஞ்சுண்ட கணடன்றனை

சைவ நீதியின் முகப்பில் நீங்கள் காண்பது ஈஸ்வரங்களில் ஒன்றாகிய இலங்கை - சிலாபத்தில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும்

## முன்னேசுவர ஆலயத்தின் அமைப்பாகும்.

### முனீசுவரம் என்றும் அழைப்பர்.

மூர்த்திதலம் தீர்த்தமெனும் மூன்றுங் கொண்ட
முன்னேசு வரத்தீசன் கோயில், அட்டை
நேர்த்தியுடன் காட்டுவதை நீங்கள் பார்த்து
நெஞ்சார நினையுங்கள் நித்தம் போற்றி
சீர்த்திபெற நேருங்கள் சிந்தை வைத்தே
சிரந்தாழ்த்தி நில்லுங்கள் சிறப்பு யாவும்
வார்த்தருளை மக்களுக்கு வழங்கி நிற்பன்
வந்தவினை போய்விடுமே வல்லோன் தானே. –நம்பி

# சைவநீதி - ஐப்பசி - தீபாவலி மலர் - 1999

வணக்கம்! வருக – வருக!! இதுவே நுழைவாயில். சென்று வருக!!!

## பொருட் பதிவேடு

செடி: 5 கொடி: 12


| பகுதி | இல. | தரும் பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|---|
| I | 1. | பஞ்சபுராணம் (வழிபாடு) | கனடா இந்து மாமன்றத் தொகுப்பு | 1–4 |
| | 2. | நால்வர்காட்டிய வழியும் –தேவர் காட்டிய நெறியும் | சிவஸ்ரீ ப. கிருஷ்ணராஜக்குருக்கள் | 5–6 |
| | 3. | ஆசிரியர் சிந்தனையில் | பத்திராதிபர் | 7–8 |
| | 4. | உலக ஏழாவது சைவ மாநாடு தலைமைப் பேருரை – கனடா | தவத்திரு சிவநந்தி அடிகளார் | 9–12 |
| | 5. | "ஓம் என்னும்" பிரணவம் | சிவ அன்பர் சீ. கிருஷ்ணன் – சிங்கப்பூர் | 13–15 |
| 11 | 6. | அன்பும் சிவமும் | திரு. எஸ். தெய்வநாயகம் – கொழும்பு | 16 |
| | 7. | சைவத்திருமுறைகள் (சிறப்பு) | திரு. க. இ. ஆறுமுகம் J.P | 17 |
| | 8. | சைவம்– வழிபாடு – சமயம் – மதம் – இனஅடைளம் | துணைவேந்தர் க. ப. அறவாணன். | 18–20 |
| | 9. | The Sacred Life of Valluvar | C. S.Rajaratnam - Ret. Principal | 21 |
| | 10. | தவத்திரு தனிநாயகம் அடிகளார் | கவிஞர் செ. நாகேந்திரன் U.K | 22 |
| | 11. | "எனக்கு அருள்தருவாய்" – துதிப்பாடல் | திருமதி இராஜேஸ்வரி கந்தையா | 23 |
| | 12 | அன்பும் சிவமும் | செய. பாலகிருஷ்ணன் – பிரான்சு | 24–25 |
| | 13 | திருமந்திரம் காட்டும் வாழ்வியல் | திரு. கா. கதிர்காமத்தம்பி இ. த. ஆசிரியர் | 26–27 |
| II1 | 14. | Saiva Siddhantha Philoosophy | Thiru D. Madury - Darpan S.AFR | 28-31 |
| IV | 15 | வாழும் வழி – நல்லபெண்மணி | கலாநிதி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி | 32 |
| | 16. | 'சைவசமய சாரம்' | அமரர் சு. சிவபாதசுந்தரனார் | 33 |

| பகுதி | இல. | தரும்பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|---|
| | 17. | மனத்துக்கண் மாசிலனாதல் அறம் | பண்டிதர் சி. அப்புத்துரை | 34–35 |
| | 18. | ஆன்மா அநாதியானது | திரு. ஆ. தா. ஆறுமுகம் – இலங்கை | 36–38 |
| V | 19. | ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் – பண்பாட்டுக் கட்டமைப்பு | திருமதி. மலையரசி சிவராஜா யாழ். பல்கலைக்கழகம் | 39–42 |
| | 20. | PANTHION OF SAIVA DEITES | By Kumar Punithavel | 43–48 |
| | 21. | சைவ சமயமும் இளஞ்சந்ததியினரும் | திரு. வீ. விக்கினராசா | 49 |
| | 22. | சைவமும் ஸ்மார்த்தமும் | கலாநிதி மு. கந்தையா – ஏழாலை, யாழ்ப்பாணம் | 50–54 |
| | 23. | "பக்தி இலக்கியங்களில் – உமையொரு பாகன்" | பா. சர்வேஸ்வரசர்மா பீ. ஏ (சிறப்பு) | 55–57 |
| | 24. | குடியிருப்பு – மக்கட் பரம்பல் – கோயில் அமைத்தல் | திருமதி. சித்திரா இரத்தினஜோதி | 58–60 |
| VI | 25. | மாணவர் பகுதி | மன்றப்பாடசாலைகள் – மாணவர்கள் | 61–64 |
| | 26. | சைவசித்தாந்தம் கூறும் – ஞானம் வரும் முறை | சட்டத்தரணி இ. நமசிவாயம் J.P திருக்கேதீஸ்வரம் | 65–66 |
| | 27. | "ஒறுத்துக் கொஞ்சம் ஊருக்கும்...' (கவிதை) | குறிஞ்சித்தேவன் | 67–69 |
| | 28. | தமிழ் – தமிழ்ச் சமுதாயம் – சைவசித்தாந்தம் | டாக்டா கி. கருணாகரன்– மிக்சிக்கன் பல்கலைக்கழகம் | 70–75 |
| | 29. | 'HINDUISM" | BY S. PONNUCHCHAMY, Australia | 76–78 |
| | 30. | கலாபீடம் | ஆசிரியர் | 79–80 |
| | 31. | வாசகர் அகழ்வும் ஆய்வும் | சைவநீதி வாசகர்கள் | 81–83 |
| | 32. | திருமுறைத் திருமணம் | டாக்டர் . சாம்பசிவனார் எம். ஏ. | 84–87 |
| | 33. | ADDHANAREESWARA | Saithanyanandhasaraswathy (சைதன்யானந்த சரஸ்வதி) | 88–93 |
| | 34. | நன்றிக்கலசம் | செயலர் – சைவநீதி | 94 |



சஞ்சிகையின் ஆலோசனைக் குழுவினர்
1. திரு. சு. ஆறுமுகம்
2. திரு. கனக மனோகரன்
3. திரு. குமார் புனிதவேல்

கனடா இந்து மாமன்றம்
06-11-1999


முத்திக்கு வித்தாகும் மோனமொழி பயில்வானை
எத்திக்கும் ஏத்தும் இனிதே - அருட்குறள்

THE WHOLE WORLD PRAISES THE GLORIES OF THE ONE WHO INTONES THE LANGUAGE OF DEEP SILENCE THAT LEADS ALL TOWARDS MUKTI. - ARUT KURAL

## பைந்தமிழர் போற்றும் பண்பு

சுயநலத்தில் நாட்டமதைச் செலுத்த வேண்டாம்!
துயர்வரினும் பொதுநலத்தை மறக்க வேண்டாம்!
கயமைதனைக் கடுகளவும் வளர்க்க வேண்டாம்!
கற்றோர்தம் அறிவுரையை இகழ வேண்டாம்!
பயவுணர்வு நெஞ்சிலென்றும் அரும்ப வேண்டாம்!
பகட்டிற்கும் பொய்மைக்கும் பணிய வேண்டாம்!
தயவென்னுங் கருணையுடன் இவற்றைக் கொண்டால்
சத்தியங்காண் பைந்தமிழர் போற்றும் பண்பு.

- ப. கணேசன் ஆற்காடு, தமிழகம்.

நிதமும் நலமே செய்தல் வேண்டும்
நீதி தவறா திருத்தல் வேண்டும்
உதவி தேடிச் செய்தல் வேண்டும்
ஊசி முனையில் நீதி வேண்டும்

பதவி ஆசை ஒழிதல் வேண்டும்
பார பட்சம் தவிர்த்தல் வேண்டும்
உதவிக் கரத்தை நீட்டல் வேண்டும்
ஊறு செய்யா துழைத்தல் வேண்டும் - நம்பி

உ

*சிவமயம்*

# பஞ்சபுராணம்

**சுந்தரமூர்த்திநாயனார் பண்: நட்டராகம்**

*திருச்சிற்றம்பலம்*

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்
வைத்துகந்து திறம்பா வண்ணம்
கைம்மாவி னுரிவை போர்த் துமைவெருவக்
கண்டானைக் கருப்பறியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
மயிலாடுங் கொகுடிக் கோயில்
எம்மானை மனத்தினா னினைத்தபோ
தவர்நமக் கினியவாறே.

**திருவாசகம் - கண்டபத்து - மோகனம்**

பாங்கினொடு பரிசொன்று மறியாத நாயேனை
யோங்கியுளத் தொளிவளர வுலப்பிலா வன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயிறில்லை யம்பலத்தே கண்டேனே.

**திருவிசைப்பா பண் - சாளரபாணி**

அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிட(ம்)நீ தேடாதே
புவலோக, நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணியசீர்ச்
சிவலோகம் ஆவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே.

**திருப்பல்லாண்டு பண் - பஞ்சமம்**

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஒலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பனஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

**திருப்புராணம்**

எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
"உண்ணடிசில்' எனஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணமளித்(து)
அண்ணலைஅங் கழுகைதீர்த் தங்கணனார் அருள்புரிந்தார்.

*திருச்சிற்றம்பலம்*

**திருமந்திரம் - திருமூலர்**

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாசில்
தங்காவினை களும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே

### திருமந்திரம் - திருமூலர்

**ஒன்று** கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும்
**ஒன்று** கண்டீர் உலகுக்கு உயிா ஆவதும்
**நன்று** கண்டீர் இனி நமச்சிவாயப் பழம்
**தின்று** கண்டோற்கு இது தித்தித்த வாறே

"**மறந்**தொழி மண்மிசை மன்னாப் பிறவி
**இ**றந் தொழி காலத்தும் ஈசனைஉள்கும்
பறந்து (அ)லமந்து படுதுயா தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தை செய் யீரே.

### கந்தரலங்காரம் - அருணகிரிநாதர்

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட்டாதுங்க எத்தமெல்லா
மாழம் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவனேமற வேனுனைநா
னைவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

### கந்தரனுபூதி

ஆடம் பரிவே லணிசே லலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந்திலனே

### அபிராமி அந்தாதி - (முற்றொடர்ச்சி)

அன்றே தடுத்(து) என்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து) அல்ல வென்கை
நன்றே உனக்(கு) இனிநான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே வீழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே. 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங்களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் படஇருந் தேனைநின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சலென் பாய்யத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளயே
உழைக்கும் பொழு(து) உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான் உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங்கக் கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில்கூறும் விழுப்பொருளே. 35

பொருளே பொருள்முடிக் கும்போக மே அரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றிஒளிவெளி யாகி இருக்கும்உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்பு யாதனத்(து) அம்பிகையே. 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரசின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான் இடம் சேர்பவளே. 37

பவளக் கொடியில் பழுத்தசெவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநனை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொழுது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே. 38

### திருப்புகழ் - அருணகிரிநாதர்

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற அருளாலே
அந்தரியொ டுடனுடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு மகிழ்வாக
மண்டலமு முனிவோரு மெண்டிசையி லுளபேரு
மஞ்சினனு மயனாரு மெதிர்காண
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
மைத்துமயி லுடனாடி வரவேணும்
புண்டரிக விழியாள அண்டர் மகள் மணவாள
புந்தி நிறை யறிவாள வுயர் தோளா
பொங்கு கடலுட னாகம் விண்டுவரை யிகல்சாடு
பொன்பரவு கதிர் வீசு வடிவேலா
தண்டரள மணிமார்ப செம் பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில் மேவு பெருமாளே!

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரியுன்னைப் பாடி டுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவிமணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

# இலக்குமி தோத்திரம்

மூவுலகு மிடரியற்று மடலவுணனுயி
ரொழிய முனிவு கூர்ந்த
பூவையுறள் திருமேனியருட் கடவுளகன
மார்பிற் பொலிந்தோன்றித்
தேவருலகினும் விளங்கும் புகழ்க்கொல்லா
புரத்தினிது சேர்ந்துவைகும்
பாவையிருதாடொழு துபழமறைத்தேர்
குறுமுனிவன் பழிச்சுகின்றான்

மல்லநெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கு மன்னர் யாருங்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகில்
நிகரில்லாக் காட்சியோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர்தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையு மணியிழைநின்
னருணோக்க மடைந்துளாரே

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவேவேலை
அங்கணுலகிருள் துரக்குமலர்க்கதிராய்
வெண்மதியாய் யமரர்க்கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின்மண்ணில்
எங்குளைநீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்பதம்மா.

# சரஸ்வதி தோத்திரம்

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் – துடியிடையும்
அல்லும் பகலு மநவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி

புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவீ
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
சரஸ்வதி யென்னுந் திருவே
எக்கால முமுனைத் தொழுவே
னியலிசை நாடகமென்னும்
முத்தமிழ்க் கல்விக ளெல்லா
முழுது மெனக்கருள் செய்தென்
சித்தந் தனில்நீ யிருந்து
திருவருள் செய்திடுவாயே.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்க வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்
தாக வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலாவல்லியே

# நால்வர் காட்டிய வழியும்.....

சிவஸ்ரீ. ப. கிருஷ்ணராச குருக்கள்



**திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் - திருத்தலம்: சிதம்பரம்**

**பண்:குறிஞ்சி**

*திருச்சிற்றம்பலம்*

அலையார் புனல்சூடி யாகத்தொரு பாக
மலையான் மகளோடு மகிழ்தானுல கேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலையானார்களே.

**திருத்தலம்: திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் பண்: சாதாரி**

ஓங்கிமேலுழிதரு மொலிபுனற் கங்கையை யொருசடை மேல்
தாங்கினாரிடு பலிதலைகலனாக் கொண்ட தம்மடிகள்
பாங்கினாலுமையொடும் பகலிடம் புகலிடம் பைப்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தி யாரிரவிடத்துறைவர் வேள்விக்குடியே.



**திருநாவுக்கரசுநாயனார் திருத்தலம்: திருவாரூர் பண்: காந்தாரம்**

நீறுமெய் பூசவல்லானு நினைப்பவர் நெஞ்சத்துளானும்
ஏறுகந்தேறவல்லானு மெரிபுரை மேனியினானும்
நாறு கரந்தையினானு நான்மறைக் கண்டத்தினானும்
ஆறுசடைக் கரந்தானு மாரூரமர்ந்த வம்மானே.

**திருத்தலம்: திருவையாறு பண்: பழந்தக்கராகம்**

முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளங் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்க ளெம்பெருமானென விறைஞ்சும்
அத்திசையா மையாறர்க் காளாய் நானுய்ந்தேனே.



**சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தலம்: திருவாலங்காடு பண்: பழம்பஞ்சுரம்**

வண்டார் குழலியுமை நங்கைபங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்களெரிசெய்த விடையாய் வேத நெறியானே
பண்டாழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழையனூர்மேய
அண்டா வாலங்காடாவுன் னடியார்க் கடியேனாவேனே.

**திருத்தலம்: திருக்கச்சூராலக்கோயில் பண்: கொல்லிக்கௌவாணம்**

மேலைவிதியே வினையின் பயனே விரவார்புரமூன் றெரிசெய்தாய்
காலையெழுந் துதொழுவார் தங்கள் கவலைகளைவாய் கறைக்கண்டா
மாலைமதியே மலைமேன் மருந்தே மறவேனடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக்கச் சூராலிக் கோயிலம்மானே.



**மாணிக்கவாசகசுவாமிகள் - திருவாசகம் - கண்டபத்து**

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தானை
யெல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே.

**குழைத்த பத்து**

நாயிற் கடையா நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி
யாயக் கடவே னானோதா னென்ன தோவிங் கதிகாரங்
காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

# தேவர்காட்டிய நெறியும்.

**திருக்குறள் - அதிகாரம் 12 - நடுவுநிலைமை**

111. தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.
(க.ரை): அந்தவந்தப் பகுதிதோறும் முறைமையோடு ஒட்டி ஒழுகப் பெற்றால், நடுவுநிலைமை எனக் கூறப்படும் அறம் நன்மையாகும்

112. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.
(க.ரை) நடுநிலைமை கொண்டவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனது வழிவருவோர்க்கும் உறுதியான நன்மை பயப்பதாகும்.

113. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.
(க.ரை) தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவு நிலைமை தவறி உளதாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.

114. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.
(க.ரை) நடுவுநிலைமை உடையவர், நடுவுநிலைமை அற்றவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சிநிற்கும் புகழாலும் இகழ்வாலும் அறியப்படும்.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.
(க.ரை) கேடும் ஆக்கமும் வாழ்வில் இல்லாதவையல்ல. ஆகையால், நெஞ்சில் நடுவுநிலைமை தவறாமல் இருப்பது சான்றோர்க்கு அழகாகும்

116. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.
(க.ரை) தனது நெஞ்சம் நடுவுநிலைமை நீங்கித் தவறுசெய்ய நினைக்குமாயின், யான் கெடப்போகிறேன் என்று ஒருவன் அறிதல் வேண்டும்.

117. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.
(க.ரை) நடுவுநிலையில் நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடையும் வறுமை நிலையைக் கெடுதி என்று உலகம் கூறாது.

118. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.
(க.ரை) முன்னே தான் சமமாக இருந்து பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் (தராசு) போல் அமைந்து ஒருபக்கம் சாயாமல் நடுவுநிலைமை தாங்குவது சான்றோருக்கு அழகாகும்.

119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்
(க.ரை) உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால் சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவுநிலைமையாகும்.

120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்
(க.ரை) பிறர் பொருளையும் தம் பொருள் போற் போற்றிச் செய்தால், அதுவே, வாணிகம் செய்வார்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும்

வாழ்க சைவநீதி! வளர்க இந்து மாமன்றம்!

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்.


கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி)

(புங்குடுதீவு – 10)

**(416) 266 - 3333**

**(416) 2 6 6 - 3 3 3 3**



**(416) 2 6 6 - 3 3 3 3**

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும், திருமணம், மற்றும் மங்களகரமான வைபவங்களுக்கும் வேண்டிய எல்லாத் தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ ஆகிய இடங்களில் 200 பேர் முதல்600 பேர் வரை இருக்கக்கூடிய கார் தரிப்பு வசதியுடன் கூடிய அழகான மண்டபங்கள் பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

ஓம்
சிவ சக்திமயம்

# ஆசிரியர் குரல்

**ஆசிரியர் தரும் அருங்கருத்துக்கள் உங்கள் சிந்தனைக்கே!**

மன்னு பெருஞ் சைவத் தமிழ் அன்பர்களே! வணக்கம்.

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்ற நிலையிலிருக்கும் அடியேன் **சைவநீதி - தீபாவலி மலரை** இன்று வெளியிடுவதில் பெருமகிழ்வெய்துகிறேன். இத்தீபாவலி மலர் சைவநீக்கு நான்காவது தீபாவலி மலராகும். எனவே, உங்களுக்குத் தீபாவலி வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்றேன். ஐப்பசி மாதம் சைவத் தமிழருக்குச் சிறந்தமாதமாகும். புரட்டாதி நவராத்திரி விரதம், தீபாவலித் திருநாள், கந்த சட்டி விரதம், கேதார கௌரி விரதம் சனி, வெள்ளி விரதங்கள் இந்த மாதத்தை அண்டியே வருகின்றன. எனவே தெய்வதரிசனத்திற்கு உகந்த காலத்தில் இம்மலரும் வெளிவருவது சிறப்புத்தானே.

**"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்" (திருக்குறள் 466)**

என்பது வள்ளுவன் வாய்மொழி. அதாவது சமூகத்தில் செய்யத்தகாத செயல்களைச் செய்தாலும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விடுவதாலும் கெடுதி விளையும் என்பது இக்குறள் பாவின் கருத்தாகும். எனவே, அவ்வப்போது நாம் செய்யவேண்டிய சமய - சமூகக்கடமைகளை உணர்ந்து ஆய்ந்து செய்தல் வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே கனடா இந்து மாமன்றம் ஏனைய சைவஸ்தாபனங்களின் ஆதரவோடு உலகச் சைவப்பேரவையின் **ஏழாவது உலகசைவ மகாநாட்டை** கனடாவில் வெகு சிறப்பாக - மக்களுக்கு பயன் தரும் வகையில் மிகச் சிறப்பாகச் செய்து பாராட்டைப் பெற்றது. இது சரித்திர நிகழ்வுமாகும். நாம் சமூகத்திற்கு சிந்தித்துச் செயற்பட்டு வந்தால் நமது மக்கட் சமுதாயத்தின் சீரிய வாழ்விற்கு உதவியவர்களாவோம். இதைவிடுத்து சுயமதிப்பிற்கும் சுயதேவையை நிறைவேற்றுவதற்கும் சொந்த நன்மை கருதியும் பொதுப்பணியில் இறங்கினால் சமுதாயத்தின் ஆக்கமும் கெடச்செய்து தானும் கெடுவான். ஆகவே, பரந்த மனப்பான்மையும் சிறந்த சிந்தனையும் இணைந்து செயற்படுத்துபவனே நிறைந்த மனிதனாவான். இன்று குறுகிய மனப்பான்மையுடனும் பதவி வேட்டைக்காகவும் பாரம்பரிய தமிழ்ப் பண்பாட்டையும் கெடுத்துப் பணம் பெருக்கும் எண்ணத்துடன் பலர் பொதுப் பணியில் இறங்கி ஆதரவளிக்கும் மக்களையும் முன்னொன்று பின்னொன்றாகக் கதை சொல்லிக் கெடுக்கிறார்கள். இவர்களின் குறுகிய எண்ணத்தாலே மக்கட் சமுதாயம் கெட்டுப்போகும் நிலை உருவாகிறது. காலத்திற்கு ஒருகதை நேரத்திற்கு ஒரு பேச்சு நிகழ்த்திப் பிரித்தாளப் பார்க்கிறார்கள். இந்நிலை சமுதாயப் பணியில் - பணியாற்றுபவர்களில் ஒரு சிறிதும் இருத்தல் கூடாது. இவர்களைச் சமூக விரோதி என்றே சொல்லவேண்டும்.

இன்னுஞ்சிலர் சமூகத்தொண்டன் என்ற போர்வையை ஆட்பலங்கொண்டு தான் போர்த்துக் கொண்டு **"ஆர்குடி கெட்டாலும் நீகுடி மிளகுசாறு"** என்ற நோக்கில் தானும் தன்னைச் சார்ந்தவர்களும் பிழைக்கும் வழியை வருவாயைக் காண வழி சமைக்கிறார்கள். இருக்கிறவன் சரியாக இருந்தால் தான் சிதைக்கிறவன் சரியாகச் சிதைப்பான். ஆகவே சிறந்த நிருவாகி நிருவாகத்தில் அமரின் இப்படியான தகடு - தத்தங்கள் இடம்பெறுதல் மிக மிகக் குறைவாக இருக்கும். எதற்கும் - எல்லாவற்றிற்கும் தலையாட்டி நல்லபிள்ளையாக இருந்தால் - மற்றவர் தயவில் வாழ்ந்தால் செய்வினை சிறப்புற மாட்டாது. எந்தவொரு செயலையும் நிருவாகசபையின் ஆலோசனை பெற்றுச் செய்தால் புத்திஜீவிகளின் ஆலோசனைகள், நல்ல பயனளிக்கும். எனவே, சேவை சிறக்க நாம் சுய நலமின்றி பரநலத்திற்காக வாழ வேண்டும். தேவையற்ற - பயனற்ற கொண்டாட்டங்களுக்குச் செலவு செய்வதிலும் பார்க்க எத்தனையோ பிரதானமான சமய அபிவிருத்தி தமிழ் அபிவிருத்தித் திட்டங்களுக்கு விழா வெடுத்தால் மிக்க பயனைச் சமுதாயத்திற்கு அளிக்கமுடியும். சங்கங்களோ சபைகளோ பெருவிழா எடுத்துத்தான் வளர்வதில்லை. மன்றாற்றும் மகத்தான பணிகளால் தான் நன்கு வளரவோ பயன்தரவோ முடியும். யாரையும் மகிழ்விக்க அல்லது பொன்னாடை போர்க்க விழா வெடுப்பது தவிர்க்கப்படவேண்டும். செய்யவேண்டிய அவசிய சேவைகள் எத்தனையோ உள்ளன. அதைச் செய்யவேண்டும், முடியாதெனில் செய்ய எண்ணி நிற்பவருக்கு இடமளிக்க வேண்டும். இங்கு சில மன்றங்கள் பேரளவில்தான் இருக்கின்றன என எண்ணி நாமும் செயற்படாதிருக்கக்கூடாது. விடயமறிந்த பொதுமக்கள் இதைப்பார்த்துக் கொண்டு வாளாவிருத்தல் நன்றன்று. எனவே சமயம், மொழி, கலாச்சாரப்பணிகளை கடவுட்பணியென உணர்ந்து ஒவ்வொருவரும் செயற்படுதல் மிக நன்று. எதிர்கால இளைஞர் சமுதாயம் நலம் பயக்கும் நமது சிறந்த வழிப்பாதையை விட்டு வழுவிச் செல்லாது நாம் இப்போதே அணை கட்டாவிட்டால் நமது சமுதாயம் **காட்டாற்று வெள்ளத்தால்** கரைபட்டுவிடும். சிந்தியுங்கள் - சீர் செய்யுங்கள்.

ஒரு நூலைப் பதிப்பிக்குங் காலத்தில் உளவாகுங் காலப்போக்கு, பொருட் செலவு, உழைப்பு முதலியவற்றைக் காட்டிலும், அவற்றைத் தேடுதலிலும், பரிசோதித்தல் முதலியவற்றிலும் உளவாகும் காலப்போக்கு பிரயாசை முதலியன எத்தனையோ மடங்கு அதிக மென்பது நூலாசிரியர்களுககுத்தான் தெரியும்.

உணவைச் சமைத்ததும், யாராவது ஒரு அன்னக்காவடிக்கோ, பிச்சைக்காரனுக்கோ போட்டுவிட்டுச் சாப்பிடுவது என்ற பழக்கம் சைவ சமயத்தவர்களுக்கு உண்டு. **அறஞ்செய்ய விரும்பு** என்றார் ஔவைப்பாட்டி. செய் என்று ஆணையிடவில்லை விரும்பு என்றே சொன்னார். ஏன் தமிழன் செய்வான் என்ற துணிவு அவருக்குண்டு. குருட்டுப் பிச்சைக்காரனின் பிச்சைப் பாத்திரத்தில் 25 சதத்தைப் போட்டு விட்டு அதற்குள் கிடக்கும் ஒரு டொலரைத் தூக்கி எடுத்துக் கொள்கிறவனும் இருக்கத்தான் செய்கிறான். ஆகவே செய்ய விரும்பாமையும் திருட்டுத்தனமும் சமூகத்தைப் பாழ்படுத்துகின்றன. இந்தநிலை பொதுப் பணியில் இடம் பெற்றால் மக்கள் சேவை மலருமா?.

இந்நிலையில் **சைவநீதியின்** கருத்துக்களை - கட்டுரைகளின் அறிவுப் பயனை - சமய விளக்கங்களை நாமும் நமது எதிர்கால உலகமும் கற்றுத் தெளிய கடவுள் நம்பிக்கையும் அதன் பயனும் தெரிந்த - உணர்ந்த தமிழ்ச் சமுதாயம் வாங்கி வாசித்து எல்லோர்க்கும் உணர்த்தவும்வேண்டும். இது எதிர்கால உலகம் வழிவிலகிச் செல்லாது தடுக்கும் சாதனமாகும். ஆகவே அன்பர்களே! நாம்வாழ, நம் சமுதாயம் வாழ, நம் நாடு வாழ, நம் மொழி வாழ, நம் சமய நெறிவாழ, சுருங்கச் சொன்னால் நமது இளஞ்சமுதாயம், சீருடன் வாழ ஏற்ற வழிவகைகளைக் கையாள் வதில் கருத்துச் செலுத்துவோமாக. தரப்பட்ட விடயங்கள் யாரையும் சுட்டி எழுதப்பட்டன வல்ல. சட்டையாருக்கு அளவோ அவர் மாத்திரம் அணிவதில் தவறில்லை.

இன்றுவரை நிரூபிக்கப் பெற்ற உண்மை ஒரு நல்ல மனிதன் ஒரு நல்ல சைவனாக, ஒரு நல்ல தமிழன் நல்ல தமிழனாகவுந்தான் இருப்பான் என்று ஆயிரம், ஆயிரம் வருடங்களுக்கு முன்னே நிலைநாட்டிய இந்தக் கருத்தை என்றும் நிலைபெறச் செய்வது நமது பொறுப்பு
"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்" என்பது குறள் தரும் உண்மை. நன்மை செய்யப் பிறந்த நாம் நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாதிருத்தல் வேண்டும். வாணாளை வீணாளாக்காது நமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ்வோமாக.

"இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்" - குறள் 961

நலம் விரும்பும்
வீ.வ. நம்பி
ஆசிரியர் - சைவநீதி

வணக்கம்

இ. மா. மன்றம்
கனடா
6-11-1999

# விசேட அறிவித்தல்

**கட்டுரை - கவிதையாளர்களே! வாசகர்களே!**
**சைவநீதியின் அடுத்த வெளியீடு 2000ஆம் ஆண்டு தை மாதம் 14ம் திகதி (14-01-2000) தைப்பொங்கல் தினமாகும். இம்மலருக்குரிய உங்கள் தரமான ஆக்கங்களை அழகுற எழுதி அல்லது தட்டச்சில் பொறித்து 1-12-99ந் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைப்பீர்களாக. அவை தரமறிந்து பிரசுரிக்கப்படும்.**

**நன்றி.**

ஆசிரியர்
''சைவநீதி''

**EDITOR**
**50, TUXEDO COURT, #1121**
**SCARBOROUGH, ON.**
**M1G 3S8 CANADA**
**TEL/FAX: (416) 431-2460**

**சட்டந் தன்னை மதித்திடல் வேண்டும்**
**சாதிப் பேச்சை ஒழித்திடல் வேண்டும்**
**வெட்டிப் பேச்சை விடுத்திட வேண்டும்**
**வேடம் போடல் விலகிட வேண்டும்**

**திட்ப நுட்பம் தெரிந்திட வேண்டும்**
**தீமை யாயின் தடைசெய வேண்டும்**
**அட்டம் அயலை அணைக்க வேண்டும்**
**ஆரும்மற் றவர்க்கு உதவிட வேண்டும்**
*- நம்பி*

வந்த நாள் முதல் இங்கு வாரித் தரும் ஒருவர்
இந்து மாமன்றின் இதம் மிகுந்த துணைத் தலைவர்
எங்கு விழாவெனினும் வந்தமரும் தமிழ்ப் பிரியர்
இந்த மகா நாடும் இனிதுற உழைத்த ஒரு பெரியர்.

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

**திருமணம் மற்றும் இந்துமதக் கிரியைகள் சேவை**

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

இந்து மதகுரு, திருமணப்பதிவதிகாரி – கனடா

**(905) 5 0 1 0 0 1 1**



**(905) 5 0 1 0 0 1 1**

அனைத்து இந்துமத கிரியைகளையும் வேதாகம விதிப்படி செய்து கொள்வதற்கும் மற்றும் திருமணத்திற்கு தேவையான முத்து மணவறை, தலைநகை, தலைப்பாகை, மண்டப அலங்காரம், கல்யாண பூஜைக்குரிய பொருள்கள், என்பவற்றையும் பெற்றுக் கொள்வதற்கும், சைவ உணவுச் சேவைகளும் உகந்த இடம்.

**5576 CORTINA CRESCENT, MISSISSAUGA, ON L4Z 3R2**
**(Matheson / Hurontario)**

# (905) 501 - 0011

திருக்கயிலாய பரம்பரை:
இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்: குருமுதல்வரும்
ஆதீன கர்த்தரும், பேரவையின் ஆட்சிக்குழுத் தலைவருமான

# திருப்பெருந்திரு சிவநந்தி அடிகளாரது கனடா உலக சைவ மாநாட்டுப் பேருரை

## சைவ சமயம் எதிர்நோக்கும் சவால்கள்

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் எம்நெஞ்சில் நீங்காதான் தாள்
- வாழ்க"!

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

கனடா ரொறன்ரோ (Toronto) நகரில் நடைபெறும் உலகசைவப் பேரவையின் இந்த 7வது உலக மாநாட்டைத் திறம்பட ஒழுங்கு செய்துள்ள கனடா இந்து மாமன்றத்தினர்க்கும், அவர்களுடன் ஒத்துழைத்த சைவ அன்பர்களுக்கும் முதற்கண் பேரவையின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றோம். அடுத்து, உலகின் பல நாடுகளிலிருந்து இங்கே வந்து இந்த மாநாட்டைச் சிறப்பிக்கும் திருமடத்தலைவர்களுக்கும் பேராளர்களுக்கும், பங்கு பற்றும் அன்பர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து, அனைவரும் எல்லா நலன்களும் பெற்று மகிழத் தில்லைநடராசப் பெருமான் திருவடிகளை நினைந்து வாழ்த்துகிறோம்.

சமயதத்துவ அடிப்படையில் சைவத்தின் தனித்துவமும், அருமை பெருமைகளும், வரலாற்றுச் சிறப்பும் எமது நாயன்மார்களால் போற்றி வளர்க்கப்பட்டன. உலக சமய ஆராய்ச்சியாளர்களாலும் மதிக்கப்பட்டன. எனினும், காலப் போக்கினாலும் அரசியல், பொருளாதாரப் பின்னடைவுகளாலும் எமது பாரம்பரிய சைவம் இன்று வலுவிழந்து குற்றுயிரோடுதான் வாழ்கிறது. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற ஒரு தெய்வவழிபாடுதான் "உரிமை உணர்வு" வளர்ப்பதாகும். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற அப்பர் சுவாமிகள் வாழ்வு அஞ்சாமைக்கும், உரிமை உணர்வுக்கும் ஓர் இலக்கியமாகும். "அன்பே சிவம்" என்ற சைவ சமய அடிப்படைக் கொள்கையிலே சமரச நோக்கு. பிறர்க்குழைத்தல், சகோதரநேயம், இன்பவாழ்வு ஆகியன மலர்தலே சமயவாழ்க்கையின் பயனாகும்.

சைவசமயம் இன்று தன் நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளது என்பது பலரின் பொதுவான கருத்து. இதற்கான காரணங்கள் பலவாகும். மதமாற்றம், அயல்வழக்குகள் சைவவழிபாட்டில் ஊடுருவல், தாய்மொழிமூலம் திருமுறைகள் மூலம் சிவாலய வழிபாடுகள் நடைபெறாத நிலை பணத்துக்காகப் பெருகிவரும் அர்த்தமற்ற சடங்குகளின் எண்ணிக்கை என்பன சைவத்தை நாளும், பொழுதும் ஓரங்கட்டி அழிக்கின்றன. இந்த முயற்சியில் பல்வேறு சக்திகள் பல நூற்றாண்டுகளாக, மறைமுகமாகவும் தொடர்ந்து இன்றும் ஈடுபட்டு வருகின்றன. இவற்றுக்கு மேலாக சைவம் அழிவதற்கு உடந்தையாக இருப்பவர்கள் நமது உடன்பிறப்புக்களான, சைவத்தை அறியாத, அதன் சிறப்புக்களை அறிய ஆர்வம் காட்டாத அரைகுறைச் சைவர்களே ஆவார்கள் என்றால் மிகையாகாது. இந்த நிலை மாறவேண்டும்.

எமது பாரம்பரிய செலவக்களஞ்சியமான சைவத்தின் இன்றைய நிலையையும், அதன் வீழ்ச்சிக்கான காரணங்களையும் சிந்தித்து, ஆராய்ந்து ஒரு செயல் திட்டத்தின்மூலம் ஆவன செய்வதே இந்த உலக சைவ மாநாட்டின் தலையாய பணியாகும். உலக சைவப் பேரவையின், மலேசியா-பினாங்கு நகரில் உருவாக்கப்பட்ட செயல்திட்டங்களையும், இம்மாநாடு ஆராய்ந்து, அவற்றை உலகெலாம் செயற்படுத்த முன்வரவேண்டுமென அனைவரையும் அன்போடு வேண்டுகிறோம்.

## சைவ சமயம் எதிர்நோக்கும் சவால்கள்

1. "ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும், ஒன்று கண்டீர் உலகுக்கு உயிர் ஆவதும், நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழம், தின்று கண்டேற்கு அது தித்தித்தவாறே" "நமச்சிவாய", அன்பே சிவம் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பன நமது திருமூல நாயனார் வழிவந்த சைவத்தின் தாரக மந்திரங்கள்' நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி மந்திரங்கள். நாம் வாழும் உலகம் சிவசக்தி மயமானது - இவ்வாறுஅமைந்துள்ள வாழ்க்கையில், அவனருளாலே அவன்தாள் வணங்கும்" அரிய பேற்றினைப் பெற்றவர்கள் நமது சைவப் பெருமக்கள். இது உண்மை, வெறும் தற்புகழ்ச்சி அல்ல என்பதைப் பன்னாட்டு வரலாற்று அறிஞர்களும், சமய தத்துவத்துறை ஆராய்ச்சி வல்லுநரும், ஏன், விஞ்ஞானிகளும் கூட இன்று ஒப்புக் கொள்வதை உணர்ந்து உலக சைவர்கள் பெருமைப்பட வேண்டும்; சைவத்தைப் பாராட்ட வேண்டும்; போற்றிப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

சமயம் என்பது இறைவனது அருளை எண்ணி அவனுக்கு நன்றி கூறுவதை மையமாகக் கொண்டவொன்றாகும். அவ்வகையில் உலக சைவப்பேரவை சார்பில் இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்கட்கு அவர்கள் ஆற்றியிருக்கின்ற அரும்பெரும் சைவப்பணியைக் கண்டு பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம். வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாநாடு, வரலாற்றுச் சிறப்பு மிக்க

இவ்வழகிய கனடா நகரில் சைவத் தமிழர்கள் சிறப்போடு வாழும் திருநகரில் நடைபெறுவது பொருந்துவதே. கட்டுரைகளும் கலந்துரையாடல்களும் சொற்பொழிவு களும் சைவ மறுமலர்ச்சிக்கு அடிகோலும் என்பது உறுதி.

சைவம் யாண்டுமே சமயப் பேதங்களை போற்றிய வொன்றல்ல. சமயாதீதநிலை நின்று எல்லா வகை சமயங்களும் பண்பாடுகளும் இறைவனது வெளிப்பாடு களே என்று கண்டு மகிழும் ஒருபொதுச் சமயமாகும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முழக்கத்திற்கு ஏற்ப, மனித உள்ளங்களின் ஆழ்தளத்திலே புதைந்து கிடக்கும் பேருண்மைகளைக் கண்டவொன்றாகும். திருக்குறளும் இதைத்தான் வற்புறுத்துகின்றது. மூடப் பழக்கவழக் கங்களை முற்றாகப் போக்கி, அறியாமையைக் கடிந்து ஞானத்தெளிவு பெற்று வையத்து வாழ்வாங்கு வாழ்வதே உயர்வு என்று வாழ்க்கையை நன்றாக வாழ்ந்து களிக்க வழிகாட்டும் சமயம் சைவமாகும். எல்லாரும் இன்புற்றுஇருக்க நினைப்பதுவே சைவத்தின் மையக் கருத்தாகும்.

2. இவ்வாறான திறந்த மனத்தோடு கூடிய பரந்த சிந்தனை, பல்லாயிரம் ஆண்டுகாலங்களாக பண்பாட்டு வளர்ச்சியில் ஏற்பட்ட பக்குவத்தின் காரணமாக எழுந்தவொன்றாகும். பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் மிளிர்வது சைவசமயத்தின் தனிச்சிறப்பு. பேராசிரியர் மோர்டிமர் வீலர், அரப்பாவில் செய்த புதைபொருள் ஆய்வின் வழி, வேத ஆரியர்கள் வருவதற்கு முன்பே சிந்துவெளி நாகரிகத்தில் சிறப்புற்றிருந்தது சைவ சமயமே என்று காட்டுகின்றார். சமீப காலத்தில் முனைவர் கி. லோகநாதனின் ஆய்வு. சுமேரு எனப்படும் அந்தப் பண்டைய நாகரிகம் உண்மையில் முதற்சங்கத் தமிழ் நாகரிகமே என்றும், அங்கு மிகச் சிறப்பான முறையில் கோயில் வழிபாட் டோடு கூடியவொன்றாய் சைவம் வளர்ந்திருந்ததென்றும் தக்க சான்றுகளோடு நிறுவி உள்ளார். இவ்வாறு உலக நாகரிகத்திற்கு வழிகாட்டியாய் நின்ற சைவசமயத்தின் பெருமையை நாம் நன்கறிந்து போற்ற வேண்டும். இத்தகைய ஆய்வுகள் இன்னும் பல்குமேயெனில், தமிழினம் பெரியதோர் விழிப்போடு எழும் என்பது உறுதி.

3. சராசரி மனிதனது சரித்திரம் மூன்று சொற்களுக்குள் அடங்கி விடுகிறது எனலாம் பிறந்தான். வாழ்ந்தான், இறந்தான். பெரும்பான்மையோரைப் பற்றி "வாழ்வாங்கு வாழ்ந்தான்" என்று கூடச் சொல்ல முடியாமல் இப்படியும் அப்படியுமாக எப்படியோ வாழ்ந்து வாழ்க்கைப் போராட்டத்தை முடித்தான் என்றுதான் கூறமுடியும். தம்மைப்பற்றி மாத்திரம் கருதி வாழ்தல் விலங்கு வாழ்க்கை. சமுதாய நலம் பேணித் தம்மைச் சுற்றியுள்ளோரையும் கருதி வாழ்தல்தான் மனித வாழ்க்கை. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கொண்டு, கொடுத்து வாழ்ந்த சங்கத் தமிழ்ச் சமுதாயம் அன்று பேரொளி பரப்பி நின்றது. "தேசம் ஞானம் கல்வி, ஈசன் பூசையெல்லாம் காசுக்குப் பின்னாலடி" என்று தன்னலம் தலைவிரித்தாடும் இன்றைய தமிழுலகம் தாழ்ந்து, வீழ்ந்து கொண்டிருக்கிறது.

மிருக நிலைக்கும், தெய்வ நிலைக்கும் நடுவே உள்ள மனிதனிடம் ஒரு சிறப்பு அம்சத்தை உலக மதங்கள் பொதுவாகவும், சைவ மதம் சிறப்பாகவும் போதித்து வந்திருக்கின்றன; இன்றும் வளர்த்து வருகின்றன. இதுவே சமயங்களின் உயிர் நாடி.

வீறுபெற்ற விடுதலை வாழ்வின் மலர்ச்சியே, நிறைவே வீடுபேறு. அஞ்சா நெஞ்சம், அகத்தூய்மையும் விடுதலை வாழ்விற்கு மிக முக்கியமான அம்சங்கள். கோழைகளுக்கு விடுதலையும் இல்லை ' வீடுபேறும் இல்லை, அன்பு அருளாக மலர்கிறது. மருள் நிலை நீங்கி அருள்நிலை உருவாகிறது. பலநூற்றாண்டுகளாக, "வீடுபேறு" என்ற வாழ்வாங்கு வாழும் வாழ்வியல் நிறைவைத் தெரிந்தோ தெரியாமலோ சமயம் என்ற சிறைக்குள்ளே வைத்துவிட்டு, நாம் இறைவனை ஓலமிட்டு அழைத்து உலகெலாம் தேடி "வீடுபேறு" கேட்டிருக்கிறோம்; இன்றும் கேட்டுக் கொண்டிருக் கிறோம். இது ஒருவர் கொடுக்க இன்னொருவர் பெறக்கூடிய "பொருள்" அல்ல; ஏனென்றால் இறைவனைப் போலவே, வீடுபேறு என்பதையும்" ஒன்றும் நீயல்லை ' அன்றி ஒன்றில்லை" என்றுதான் மணிவாசகப் பெருமானுடன் சேர்ந்து நாமும் கூறமுடியும்.

4. வீடுபேறு என்பதற்கு அடித்தளமாக அமையும் விடுதலை வாழ்வு பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. சமுதாய பந்த பாசங்க ளிலிருந்து விலகிக் கடமையின் பேரில் கருமஞ் செய்யும் விடுதலை; அரசியல்-பொருளாதார அடக்குமுறைகளை எதிர்த்து நிற்கும் மனவலிமையுணர்வு தரும் விடுதலை ' ஆசை அபிலாசைகளை எல்லாம் தன்னலத்திலிருந்து பொதுநலத்திற்கு மடைமாற்றும் இயல்பை உணர்த்தும் அறிவைப் பெற்றுஅறியாமைப்படையை வென்ற விடுதலை, உண்மை, மனத்தூய்மை, ஆத்மிகம் என்பனவற்றால் பெறப்படும் சக்திகளை மனிதாபிமான அடிப்படையில் மக்கள் நலத்திற்காக மக்களின் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தும் உள்ளத்தெளிவு என்னும் விடுதலை. இவைகளின் நிறைவே வீடுபேறு என்பது தேற்றம்.

சைவத்தின் அடிப்படைத் தத்துவம் மனிதாபிமானம் - இதைவிட மேலான சமயம் உலகத்தில் இருக்க முடியாது. காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக உருவாகும் ஆராதனையில் மூர்த்தியாக வீற்றிருப்பது மனிதாபிமானம் என்ற தெய்வம். இவ்வாறு மனிதாபிமானத்தின் பரிணாம வளர்ச்சியாகவே அன்பும், அறமும், கற்பும், கருணையும்" மனித நிலையின் மேம்பாடுகளாகவும், தெய்வநிலைகளாகவும் உயர்ந்து நிற்கின்றன. "கங்கை ஆடிலென்? காவிரி ஆடிலென்"

என்று மதத்தின் அடிநிலைத் தத்துவத்தை இடித்துக் கூறியவர் எமது அப்பர் பெருமான். இதனால் கோயில் வேண்டாம், பூசை வேண்டாம், குளிக்க வேண்டாம் என்று அர்த்தமல்ல. இவையெல்லாம் தொடக்கநிலைச் சாதனைகள் மட்டுமே என்பதை நாம் உணர்ந்து கொண்டால் போதும், "அறஞ் செய விரும்பு" என்பது மனிதாபிமானத்தின் வித்து - திரை கடல் கடந்து திரவியம் தேடித் திறமையுடன் வாழும் தமிழர்களுக்குரிய தாரக மந்திரம், நன்மை செய்தவனுக்கு நன்றி காட்டித் தீமை செய்தவனை மறந்து விடுவதே மனிதாபிமான மரம். இந்த மரநிழலில் பெறப்படும் இன்ப வாழ்வே இறையுணர்வு.

5. சைவசித்தாந்தம் என்பது தனியோர் சமயமல்ல; எல்லாச் சமயவொழுக்கங்களையும் விளக்கி யருளுகின்ற உண்மை விளக்கமாகும். அருணந்தியார், தாயுமானவர், சுந்தரர் போன்றோரும் இன்னும் பலரும், எங்கெங்கு எவ்வடிவில் எத்தெய்வம் தோன்றிலும் அங்கெல்லாம் அம்மையப்பராகிய சிவப்பரம் பொருளே அவ்வடிவில் நிற்கின்றார் என்று விளக்கங்கூறி, எல்லாச் சமயங் களையும் வெறுக்காது அவ்வவற்றிற்குரிய இலக்கணம் பிழையாது கண்டு மகிழச் செய்கின்றார். ஒவ்வொரு மனிதனும் தத்தமக்குரிய பக்குவத்திற்கு ஏற்ப வழிபடும் உரிமையைச் சைவம் போற்றுகின்றது.

தமிழ்ப்பெருங்குடி மக்கள் உலகப் பண்பாட்டிற்கு நன்கொடையாய்ப் பலவற்றை அருளியுள்ளனர். இலக்கிய வகையில் சங்க இலக்கியங்களோடு, திருக்குறள், தேவாரத் திருமுறைகள், பெரியபுராணம் திருவாசகம் என்பனவும் இன்னும் பலவும் இருக்கின்றன. தத்துவ விசாரணை வகையில் தமிழில் மெய்கண்ட சாத்திரங்களாகப் பல. கலைகள் வரிசையில் பெரும் பெரும் கோயில்களும், சிவநடராச மூர்த்தமும் இசையும், நடனமுமாகப் பல பண்வழி இசை என்பது தமிழர்கள் இசை உலகிற்குத்தந்த பெரும் கொடையாகும். இவற்றோடு பத்தியை வளர்த்து அதன் வழி சமயவொழுக்கங்களையே அன்பு சார்ந்தவொன்றாக மாற்றியமைத்ததும் தமிழர்களே.

தமிழ்ப் பெருங்குடி மக்கள், வேண்டிய பொழுதெல்லாம் எழுந்து போராடி மக்களை நல்வழிப்படுத்தும் புரட்சியாளர்களாகவே, தறுகண்மை உடையவர்களாகவே இருந்துள்ளதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது. கடைச்சங்கம் அழிய தமிழ் நாகரிகம் சிதைய வேதமரபின் வடமொழியும் சாதிச் சழக்காடுகளும் தமிழ் மண்ணில் வேரூன்றித் தமிழ்ப்பண்பாட்டைச் சிதைக்க, அப்பரும் திருஞானசம்பந்தரும் சுந்தரரும் இன்னும் பலரும் துடித்தெழுந்து புரட்சி செய்து தமிழ்ப்பண்பாடு மீண்டும் தழைத்தோங்கிச் சுடரப்பாடுபட்டனர். திருமூலரும் மந்திராயனத்தைப் பெரிதும் வளர்த்து, சிந்தனையைப் போற்றும் சைவத்தை வளர்த்து, மூடநம்பிக்கைகளை சிவஞானவொளியில் சுட்டெரியும்படி செய்து "அன்பே சிவம்" என்றவாறு அன்பு நெறியே சமயநெறி என்றுஅளப்பரிய அகலத்து நுணுக்கத்து திருமந்திரம் வாயிலாகக் கூறிச்சென்றார்.

6. ஆணவ மலத்தின் பந்தத்தால், அநாதியே கிடக்கும் அப்பந்தத்தால் வரும் சிற்றறிவுத் தன்மையைப் போக்கி, எல்லா மாயமல கன்மமல பந்தங்களையும் கழற்றி வீசி சுத்தமாகிச் சிவபாதம் கூறுவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதாக அனைவருக்கும் உரிய ஒரு வாழ்வியலை அழகுபட விரிப்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும். ஒருவன் எச்சமயத்தைச் சேர்ந்திருந்தாலும், அவனது சமயத்தின் உட்சமயமாய்க் கிடப்பது சைவமேயாகும். தனது அபிமானங்களையும் கற்பனை களையும் வீணான மதப்பற்றுக்களையும் போக்கி, தன்னையே தான் காண்பானெனில், சைவம் கூறும் முப் பொருள் உண்மையை அவனும் உணர்ந்தவன் ஆவான்.

உலகத்தையெல்லாம் ஆட்டிப் படைக்கின்ற ஆற்றலைத்தான், அறிவொடு கூடியவோர் பேராற்றலைத் தான் அன்றே தமிழ்ப் பெருங்குடி மக்கள், சிவசக்தி எனக்கண்டு அம்மையப்பர் வடிவில் வணங்கியுள்ளனர். சிவமின்றிச் சத்தியில்லை, சத்தியின்றிச் சிவமில்லை என்றவாறு அம்மையும் அப்பரும் இணைந்தே இந்த அற்புத உலகினைத் தோற்றுவித்து, நிறுத்தி, அழித்து பற்பல திருவிளையாடல்கள் புரிந்தவாறு, எல்லாவகை உயிரினங்களும் சிவஞானம் பெற்று உய்யுமாறு சிவத்தாண்டவம் புரிந்து கொண்டே இருக்கின்றனர். தமிழ்மக்களிடையே வேரூன்றி நிற்கின்ற இப்பழங் கருத்தை, பழம்பெரும் உண்மையைச் சமீபகாலத்தில் விஞ்ஞானிகள் பலரும் மீண்டும் கண்டுபிடித்து மகிழ்கின்றனர். பௌதிகப் பூவுலகெங்கும் இந்த சிவத்தாண்டவத்தையே காண்பதாகக் கூறுகின்றனர்.

சைவசித்தாந்தமும் ஒரு மதக் கோட்பாடு அல்ல. நூனெறி எனும் முறையியலைக் கொண்ட அறிவியல் துறையில் எழுந்த உண்மை விளக்கமாகும். ஏரணநியதி பிழையாது எவன் சிந்திக்கின்றானோ, அவன் சைவ சித்தாந்தத்தின் உண்மையைத் தெற்றெனக் கண்டு தானும் சைவன் ஆவான. மெய்கண்டார் அருளியவாறு அத்துவிதம் என்பதுபொருளத்துவிதம் அல்ல. அறிவத்துவிதமாகும். இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று எல்லா ஆன்மாக்களுக்கும் சிவஞானம் போதித்துக் கொண்டே இருக்கும் பேருண்மையை உணர்த்துவது.

7. "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்பது பழமொழி. மனித வாழ்க்கை நிலையற்றது' எனவே நமது சைவம் வற்புறுத்தும் குறிக்கோளை என்றும் மனத்திற் கொண்டே நாம் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்' கல்வியின் பயன். "காலன் வருமுன்னே, கண் பஞ்சடைமுன்னே" என்று பட்டினத்தடிகளும்." "அடியார் ஆனீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டை" என்று மணிவாசகப் பெருமானும் வற்புறுத்தியது நம்மை அச்சுறுத்தவல்ல, வீடு பெருகிய குறிக்கோளை அடைய எம்மை ஆற்றுப்படுத்தவே. வாழ்க்கையை அறவழி நின்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பது சைவத்திற்கே உரிய தனிச்சிறப்பு, அறம், பொருள், இன்பம் இவற்றின் துய்ப்பின் பின்னர் வாழ்க்கையின் மணி மகுடமாக, அமைவது

வீடுபேறு பெற்ற திருவருட் செல்வர்களே வீறு கொண்டு சைவத்தைக் காத்தருளினார்கள்.

ஏழாம் நூற்றாண்டிலேயே "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று சிவனருள் பெற்ற அப்பர் பெருமான் பல்லவப் பேரரசனை எதிர்த்து நின்று சங்கநாதம் செய்து சைவத்தைக் காத்தருளினார். "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று பாடி, குணமாக்கி, சமணரை வென்று கழுவேற்றி, சைவத்தை மதுரையில் மீண்டும் நிலைநாட்டியவர் நாளும் தமிழ் வளர்த்த நமது ஞானசம்பந்தப் பெருமகனார்' புத்தரை வாதில் வென்று, மேலும் உள்ளம் உருக்கும் திருவாசகத்தேன் வழங்கியவர் மணிவாசகப் பெருமான். சைவநாயன்மார்கள் வரிசையிலே சமுதாயத் தொண்டாற்றி நடமாடும் தெய்வம் நம்பர்க்கு ஒன்று ஈந்தவர் சிலர். சிவாலய வழிபாட்டிற் சிறந்து விளங்கியோர் சிலர். சிவாலயங்களின் தொண்டரானோர் சிலர்.

இவ்வாறு சைவத்தைப் பேணிப் போற்றும் வழிமுறைகள் பல உள. என் கடன்பணி செய்து கிடப்பதே" என்று உலக சைவர்கள் செயலாற்ற வேண்டுகிறோம்.

8. இன்று காலத்தாலும், கருத்து வளத்தாலும் மேம்பட்ட எமது சைவம் பல்வேறு அரசியல் சமுதாய சூழல் வரலாற்றுக் காரணங்களின் தாக்கங்களினாலும், எமது செயலின்மையாலும், மாற்றமடைந்து, மாற்றப்பட்டது, உருக்குலைக்கப்பட்டது வருத்தமான செய்தி. இருப்பினும் அவ்வப்போது நமது சைவ அருளாளர்களின் வழிகாட்டலில் சைவமக்கள் திரண்டெழுந்து அயலவர் ஆக்கிரமிப்பைத் தடுத்திருக்கிறார்கள். உதாரணமாக இடைக்கால வடமொழி சமண சமய அயல்வழக்குத் திணிப்பு முயற்சிகள் வெற்றி பெறாமைக்கு எமது சைவ நாயன்மார்கள் வழிநடத்தி வெற்றி கண்ட வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்த பக்தி இயக்கமே சான்றாகும். இன்றைய 20ம் நூற்றாண்டுச் சூழ்நிலையிலும் மதமாற்றம், சைவத்தை ஓரங்கட்டும் முயற்சி, சைவத்தையும், தமிழையும் பிரித்து அழிக்கும் முயற்சி எனப் பல்வேறு தீய சக்திகள் சைவத்தின் உள்ளும், புறமும் ஊடுருவி, அரசியற் செல்வாக்கையும் அறிவியல் தொடர்பு சாதனங்களையும், பயன்படுத்தி சைவத்தை நாளும் பொழுதும் அரித்துஅழிக்கின்றன. இந்நிலையில், உலக சைவர்கள் விழிப்படைந்து சைவத்தைக் காக்கும் வழிவகைகளை ஆராய்ந்து ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டுவது காலத்தின் கட்டாயம்; சிறந்த சிவத்தொண்டு.

9. எனவே, உலக சைவர்கள் தாம் தாம் விரும்பிய துறையிலே சிவப்பணி ஆற்றலாம். எல்லோரும் மேடையிலேறிப் பேசவேண்டுமென்ற மனப்பான்மை அகல வேண்டும். இது பக்குவமற்ற நிலையின் பரிணாமமாகும். சிலர் நூல்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதலாம், வெளியிடலாம். சிலர் நிதி தரலாம், சைவநிதி திரட்டலாம்; சிலர் சைவத்தை ஆலயங்கள் தோறும் போதிக்கலாம் பேச்சுக்கள், சமய நாடக நாட்டியங்கள் நடத்தலாம்; சிலர் சிந்தித்து நிர்வாகத்தில் உதவலாம். சிலர் சிவாலயங்கள் கட்டியெழுப்பலாம் எல்லாப் பணியும் சிவனுக்கே, சைவத்துக்கே.

சைவ சமயம் தமிழ்ப் பண்பாட்டின் ஆணிவேர் என்று உலக சைவ மறுமலர்ச்சிக்கு நாம் ஒவ்வொருவரும் மனம், மொழி, மெய்களால் ஒருமித்து, சிவப்பணி செயல் வழி நிற்போமாக.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே,
அல்லாது வேறு ஒன்று அறியேன் பராபரமே"

"மேன்மை கொள் சைவ நீதி விளக்குக உலக
- மெல்லாம்"

ஓம் நமசிவாய அன்பே சிவம்.!

## 10. இம்மாநாடு நிறைவேற்ற வேண்டிய சில முக்கிய தீர்மானங்கள்

### 1. திருக்குறள் சைவ நூலே:

காலத்தாலும் சைவக் கருத்தாலும் சிறப்பு வாய்ந்த நமது திருக்குறளை சைவத்திருநூலாக ஏற்க வேண்டு மென்பதை நூல்களாலும், பேச்சுக்களாலும் தவத்திரு குன்றக்கு அடிகளாரும் அருட்திரு கிருபானந்த வாரியார் சுவாமிகளும் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளனர்.

### 2. சைவ நாயன்மார் தொகை 64 (மாணிக்கவாசகப் பெருமான் உட்பட)

திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் ஏற்கனவே சைவ நால்வருள் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவரை, சைவ நாயன்மார் வரிசையிலே வைத்து இனி 64 ஆக நாயன்மார்கள் எண்ணப்படவேண்டும்.

### 3. காரைக்கால் அம்மையார் தென்னிந்திய இசையின் தாய்

கி.பி. 18, 19-ம் நூற்றாண்டைச்சேர்ந்த சங்கீத மும்மூர்த்திகள் என்றுஅழைக்கப்படுபவருக்கும் காலத்தால் மூத்தவர்கள் (கி.பி. 16 -18) சீர்காழி முத்துத்தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, அருணாசலக்கவிராயர் ஆகியோர். பண்ணிசை உலகிலே, (7-9 நூற்றாண்டு) சைவ நாயன்மார்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோருக்கு 200 ஆண்டுகள் முந்தியவர் காரைக்கால் அம்மையார். நவளம், இந்தளம் என்ற பண்கள் அம்மையார் உருவாக்கியவை. இன்றும் நிவைத்திருப்பவை.


### 4. சைவத்தை உலகத் தனிச் சமயமாக

(இந்து சமயத்துடன் எந்தவிதத் தொடர்பும் இல்லாதவாறு) ஏற்கனவே உ.சை.பே. 5வது டர்பன் (தென் ஆப்பிரிக்கா) மாநாடு ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. அயல் வழக்கு ஆக்கிரமிப்புகளையும் வடமொழித் திணிப்பையும் தடுத்து சைவத்தையும் தமிழையும் காத்து, வளர்ப்பதற்கு இதுவே சிறந்த வழி. சிந்தியுங்கள், செயற்படுங்கள்.

நன்றி - வணக்கம்

ஓம் சக்தி ஓம்

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்



தேவஸ்தானம்
திறந்திருக்கும் நேரம்
காலை
7:00மணி -
9:00மணி வரை
மாலை
7:00மணி -
9:00மணி வரை

பூஜை நேரம்
காலை 8:00 மணி
மாலை 7:00 மணி
செவ்வாய், வெள்ளி
மாலை 7:30 மணி

விசேட நாட்களில்
நேரங்கள் மாற்றி
அமைக்கப்படும்

மிஸிஸாகா மாநகரில் **Dixie/Dundas East** சந்திப்புக்கு அருகாமையில்
**3057 Universal Drive** இல் ஸ்ரீ முத்து மாரி அம்பாள் தேவஸ்தானம் அமைந்துள்ளது.

மாத அர்ச்சனை, நித்திய பூஜை உபயங்கள் செய்ய விரும்பும் அம்பாள் அடியார்கள் முற்கூட்டியே தேவஸ்தானத்தில் பதிவு செய்து, அம்பாளின் கிருபா கடாட்சத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சகல சமயக் கிரியைகளையும் வேதாகம முறைப்படி செய்து கொள்ளவும், ஜோதிட ஆலோசனை விளக்கங்களுக்கும்

# அம்பாள் நிலையம்

சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்
(பிரதம குருக்கள், ஜோதிடர், திருமணப்பதிவாளர்)

**3057 Universal Drive, Mississauga. ON. L4X 2E2**
**T.P No (905) 602 2068 / 629 2050**
**Fax: (905) 629 4428**

# ஓம் என்னும் பிரணவம்

சீ. கிருஷ்ணன், சிங்கப்பூர்

## ஓம் என்னும் பிரணவம் #1

ஓம் என்பது பிரணவ மந்திரமாகும். இது அ + உ + ம் என்ற மூன்றெழுத்தின் இணைப்பே "ஓம்". மனிதனின் உடலும் இறைவனின் இயற்கை வடிவான ஓங்கார வடிவத்துடன் அமைந்திருக்கிறது. மனித வடிவமும் அருள் வடிவம்தான். ஓம் என்ற பிரணவ வடிவம் "அ" என்பது எட்டும் "உ" என்பது இரண்டும் என்ற எண்களின் தமிழ் வடிவம். உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உயிர்மெய்த்தாவது போல் உயிரும் உடலும் சேர்ந்ததுதான் மனித வாழ்வு. அவரவர் கையால் மனிதனின் உடல் எண் சாண் அளவுடையது. மனிதன் விடும் இரு வகை மூச்சுகள். (உள் மூச்சு, வெளி மூச்சு) "உ" எழுத்து குறிக்கும் மூச்சு வெளி மூச்சு. "ம்" ஆறு அறிவின் உணர்வு இயக்கத்தால் ஏற்படும் இன்பத்தை அது குறிக்கும். அத்துடன் "ஓம்" என்ற பிரணவம் 96 தத்துவத்துடன் விளங்கும். அ உ ம் என்ற எழுத்துக்களால் குறிக்கும் பெருக்குத் தொகை 8x2x6=96. இதனைச் சிலர் இப்படியும் கூறுவார்கள் அ என்பது முதல்வனான சிவனையும் உ என்பது உமையவள் எனப்படும் சக்தியினையும், சிவனும் சக்தியும் இணைந்த சிவசக்தியினையும் குறிக்கும்.

இச்சிவசக்திவடிவமே சொருபமே வரி வடிவில் "ஓ" என பிள்ளையார் சுழியாகவும் "உ" எனவும் உள்ளது. வழிபடும் உருவமாக "சிவலிங்கமும்:" ஒலி எழுத்தாகச் சொல்லும்போது ஓங்காரம் பிரணவம் என்று, ஆன்றோர்களும் சான்றோர்களும் சொல்லுகிறார்கள் இதனைத் திருமூலர் திருமந்திரத்தில்"

"ஓமெனு ஓங்காரத் துள்ளே ஒரு மொழி
ஓமெனு ஓங்காரத் துள்ளே உருவம்
ஓமெனு ஓங்காரத்துள்ளே பல பேதம்
ஓமெனு ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே"

முதல் வரியில் ஓம் என்பதை உச்சரிக்கும் பொழுது ஒரே சொல்லாகவும் இரண்டாம் வரிக்கு அன்னையின் கருவில் பிண்டம்தரிக்கும் பொழுதும் அது தாயின் வயிற்றிற்குள் காணும் காட்சி ஓம் என்றே தோன்றும். மூன்றாம் வரிக்கு ஒரே உச்சரிப்பாயினும், மூன்றெழுத்தையும் அதன் விளக்கங்களையும், பேதங்கள் பலவாறாகவும், நான்காவது வரிக்கு இதை சதா உச்சரித்துத் தியானிப்பதால் முக்தி - உயர்ந்த சித்தியும் கிட்டும் என்பதைப் பாடல் நமக்கு உணர்த்துகிறது.

## ஓம் என்னும் பிரணவம் 2

### முதல் எழுத்து

"ஆதியிலே பராபரத்திற் பிறந்த சத்தம்
அருவுருவாய் நின்ற பரசிவமுமாகி
தோதி யென்ற சிவனிடமாய்ச் சத்தியாகித்
தொல்லுலகி லெழுவகையாந் தோற்றமாகி
என்னும் சுப்பிரமணிய ஞானத்திலிருந்து அறியலாம்.

சட்டை முனியும் தனதுசூத்திரத்தில்
"ஒடுக்கம் ஓங்காரக் கம்பமாச்சு
ஓகோகோ அகாரமங்கே பிறந்ததாச்சு"
என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிவன், சக்தி, சிவசக்தி மூலத்தைக் குறிக்கும் ஓங்கார மந்திரத்திற்கும் முதல் எழுத்தாகவும் இதுவே "அ" உள்ளது. ஆதுதடுன் எழுத்துக்களைக் குறிககுங்கால், தமிழ, தெலுங்கு, கன்னடா, மலையாளம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலும் இதுவே முதல் எழுத்து.

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"
என்ற வள்ளுவர் முதல் குறள் மூலமும்
அகத்திய பெருமான் தனது மெய்ஞான சூத்திரத்தில்
"அவ்வாகி உவ்வாகி மவ்வுமாகி
ஐம்பத்தோ ரெழுத்துக்கும் ஆதியாகி"

"அகாமுதல் அவ்வைமுத்தும் ஆதியாகும்
அறிந்தோர்க்கு இதிலேதான் வெளியதாகும்"
என்று பாடியுள்ளதின் மூலம் நன்கு அறியலாம்.

## ஓம் என்னும் பிரணவம் 3

### உருவும் உடலும்

உடம்பு உருவைக் குறிக்கும் போது ஏற்கனவே குறிப்பிட்டபடி இதுவே கருவில் தரிக்கும் பிண்டத்திற்குக் காரணமாய் விளங்குகிறது. ஆண்டவன் இவ்வெழுத்தின் உருவமாய் உடம்பினுள் அமைந் துள்ளார் என்பது கீழ்க்காணும் மெஞ்ஞான முனிவர்களது சூத்திரம் மூலம் விளங்கும்.

"கண்டது அவ்வென்னுங் கடைய தோரட்சரம்
பிளண்டத்துக் குற்பத்தி பிறக்கு மிதிலே"
- மச்சைமுனி தீட்சை ஞானம்

"உந்தியினுள்ளெ அவ்வும் உவ்வுமாய் மவ்வுமாகி
விந்துவாய் நாதமாகி விளங்கிய சோதிதன்னை"
அகஸ்தியர் முதுமொழி ஞானம்.

மேலும் இது வாயைத் திறந்தவுடன் நாக்கு, அல்லது மேல் வாயைத் தீண்டாமலேயே தொண்டையின் மூலமாய் பிறக்கும் ஓசை பேசும்போது உண்டாகும் எல்லா ஒலியையும் விட மிகவும் இயற்கையானது.

இது பற்றி யூகிமுனி தனது வைத்திய சிந்தாமணி 800-ல்

"அவ்வென்னும் அட்சத்தில் நாடி தோன்றும்
அந்நாடி தானின்று தத்துவந் தோன்றும்
எவ்வென்னு மெலும்பு தசை புடை நரம்பும்
ஈலிட்டு பழவோடிரண்டு கொங்கையுமாம்
முவ்வென்று முட்டுக்கால் விளையீரெட்டாம்
முட்டியமைத் தங்ஙனே யோருருமாக்கி"

என்று கூறியுள்ளதன் மூலம் உருவம் உடம்பிற்கும் இதுவே முதல் காரணமென நன்கு தெளிந்துணரலாம்.

ஓங்காரம், பிரணவம். இது எல்லா எழுத்து ஒலிகட்கும் முதலாகவிருந்து அகத்தும், புறத்தும், இயற்கையாய் ஒலிக்கும்ஓசை, இது உந்தியின் கீழ் தங்கி நிற்கும். இதை விளக்கும்படி திருமூலர்,

"ஓங்காரம் உந்தி கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீள் கண்டத் தாயிடும்"
என்று கூறியுள்ளார்.

ஓங்காரத்தின் தத்துவம், அ, உ, ம் என ஒரு மித்து ஒலி எழுப்புவது. அகரவொலி முதற்பிரிந்து படைத்தற் தொழிலையும், உகரவொலி பின் தோன்றிக் காத்தல் தொழிலையும், மகரவொலி முடிவாதலின் அழித்தற் தொழிலையும் ஆக முத்தொழிலையும் ஒருங்கே இணைத்து அடக்கி நிற்கும்.

## ஓம் என்னும் பிரணவம் #4

"ஓம்" எனும் தாரக மந்திரத்தைத் தனிமையாக இருந்து ஏகாந்த தியானம் செய்தால் இதன் பலன் அதிகம். ஐம்புலன்களின் தொழில்கள் இயக்கம் அடைந்து மனது நிலைபெறும். ஐம்புலக் கதவு அடைபடும். தன்னையும், உலகையும் மறந்து நிற்க, ஆசாபாசங்கள் மறந்து மனம் நிலைப்படும். குறுகிக் கிடந்த மனம் விசாலமடையும். மெய்ஞான விசாரணை விளைந்து, அதனால் வாழ்க்கையும் வேதனைகளும் இல்லாத ஒன்றாகிவிடும். இதனால் விரிந்த அண்டப்பார்வை உண்டாகும்.

"ஓம்" எனத் தியானிப்பதால் அநேக சித்திகள் கைகூடும். அதனால் ஒழுக்கம் ஏற்பட்டு உண்மை அறிவு இன்னதென்று நன்கு நமக்கு விளங்கும். இதன் மூலம் ஒளியைத் தரிசித்து மனத்திருப்தி, மெய், முகம், ஆகியவற்றில் ஒரு தெளிந்த பிரகாசமிக்க ஒளி, அறிவு உயர்ந்து மற்றோருக்கு வழிகாட்டும் தன்மை நீங்களும் காணலாம்.

You see, there is no gain without pain.

ஆனால், முயன்றால் நிச்சயம் சாதித்துவிடலாம்.

ஒரே சமயத்தில் மனதின் வெவ்வேறு ஓட்டங்களை, நாம் விரும்பிய பாதைகளில் செல்லுமாறு செய்வதுதான் அடிப்படையானது. அப்படியொரு சாதனையைப் பழக்கப்படுத்திக் கொள்ளும்போது ஒரே நேரத்தில் மூன்று நான்கு காரியங்களிலாவது மனதை, கவனத்தைச் செலுத்தலாம். வேகமாகச் சிந்திக்கலாம். சிந்தனையின் பல படிகளைத் தாண்டி முடிபுகளை விரைவாக அடையலாம். Lateral Thinking போன்றவை எளிதானவைதானே!

## ஓம் என்னும் பிரணவம் #5

பலர் காயகல்பம் பற்றிக் கேள்விப்பட்டு இருப்பார்கள். இதை உண்டவர்கள் நரை, திரை, மாறி பொன்போல் உடல் ஒளிர்ந்து சாவில்லாது என்றும் இளமையுடன் வாழலாம் என்பார்கள். ஆயினும் அந்த காயகல்பம் கிடைப்பது அரிது. இருப்பினும் நாம் காயகல்பம் பெற ஒரு வழி உண்டு. அதிகாலை எழுந்ததும் இரவில் படுக்கபோகும் பொழுதும் நாள் தவறாது பத்து நிமிட மணித்துளிகள் "ஓம்" என்னும் மந்திரத்தை மனதால் உச்சரிக்க வேண்டும். உச்சரிக்கும் போது நமது மூக்கின் வலப்பகுதி துவார வழியாக காற்றை சுவாசித்து இடப்பக்க மூக்குத்துவார வழியாகக் காற்றை வெளிவிட வேண்டும்.

இப்படி, சூரிய பகுதியில் உஷ்ணமாக உள்ள காற்றை, சந்திரப் பகுதியில் குளிர்ச்சிப்படுத்தி வெளியேற்றும் பொழுது "ஓம்" என்ற மந்திரத்தை மனதால் நினைந்தவாறு தொடர்ந்து செய்து வரவேண்டும். இங்ஙனம் வெளிச்செல்லும் பிராணன் குறைந்து குறைந்து இறுதியில் உள்ளேயே சுழலத் தொடங்கும். உள் சுழற்சியால் மூலாதாரத்தில் பாம்பு வடிவில் உறங்கிக் கொண்டுடிருப்பதாகச் சொல்லப்படும் குண்டிலி அல்லது குண்டலினி என்னும் சக்தி எழுப்பும். குண்டலியும் அடியுண்ட நாகம்போல் ஓசையுடன் எழும். இவ்வாறு எழும்பும் குண்டலினி ஆறு ஆதரங்களில் பொருந்தி சகஸ்ராரத்தில் சென்று அமுதமாக மாறிக் கீழ்வரும். (சித்தர்கள் "விந்து விட்டவன் நெந்து கெடுவான்" என்பார்கள்.) காரணம் இந்த விந்துதான் பிரணாயத்தின் மூலம் குண்டலி வழி சகஸ்ராரத்தில் அடைகிறது. மேல் ஏறினால் பேரின்பம். கீழ் இறங்கினால் சிற்றின்பம்.) யோகியர் நாவை மடித்து இதனை உண்ணுவார். இந்த

ஒரு சொட்டு அமுதச் சுவைதான் பசி தாகம் தூக்கம் இல்லாது பன்னிரண்டு ஆண்டுகள் தவமிருக்கலாம். அதையே சிவநீர் என்பார்கள். இதனை விழுங்கினால் நாமும் காயசித்தி பலனை அடையலாம்.

இதனைத் திருமூலர்:

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே" என்கிறார்

இருகாலும் என்பது இருகாற்று வழி. இடகலை, பிங்கலை. அவ்வாறு இரண்டாகப் பிரிக்காது இரு வழியாகவும் மூச்சுக்காற்றை ஒரே முறையில் ஏற்றிப் பின்பு இறக்கிப் புருவமத்தியில் பூரிக்கச் செய்தல் வேண்டும். இவ்வாறு காற்றை முறையாக ஏற்றி இறக்கும் கணக்கை இவ்வுகத்தார் அறியவில்லை. அவ்வாறு அறிந்தவர்கள் எமனை எதிர்த்து உதைக்கும் ஆற்றல் அறிந்தவர்கள்.

வாழும் கலை என்று மனிதரை நீண்ட நாள் வாழ வைக்கும் கலையினை நம் பண்டைப் பெருமைக்குரிய சித்தர்கள் "தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" என்ற நோக்கில் தெளிவாகச் சொல்லியுள்ளார்கள்.

காயசித்தியின் பெருமையினை காகபுசண்டர் பாடலில் காண்போம்

பாரப்பா பன்னிரண்டு முடிந்துதானால்
பாலகன் போலொரு வயது தானுமாச்சு
நேரப்பா இருபத்தி நான்கு சென்றால்
நேர்மையுள்ள வயது மீரண்டாகும்
சீரப்பா முப்பத்தி ஆறுமானால்
சிறப்பாக மூன்று வயதாச்சுதப்போ
தாரப்பா பன்னிரண்டுக்கோர் வயதாய்த்
தான்பெருக்கி வயததுவை எண்ணிக்கொள்ளே....

ஒன்றில்லாமல் ஒன்றில்லை. இதனை மெய்ப்பிகக்வே சிவனும் - சக்தியும். உலக மாந்தர்களும் அவ்வாறு எண்ணி ஒழுகல் வேண்டும். ஆணும் - பெண்ணும் சேர்ந்ததே வாழ்வு. வாழ்வில் இன்ப - துன்பம் எல்லாவற்றிலும் இருவருக்கும் சம பங்கு உண்டு என்பதை மெய்ப்பிக்கவே, விளக்கவே அர்த்தநாரீஸ்வரர் உருவமாகச் சரிபாதி உடல்.

# சிவம் வளர்த்த தமிழ்ச்சான்றோன் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்

**கவிஞர் க. கணேசலிங்கம்**

முந்தை யர்வழி வந்த பண்பினை
மூல மெய்ப்பொருள் உண்மையை
சிந்தை தேர்ந்தமெயஞ் ஞானி கள்அநு
பூதி மான்கள் நெறிகளை
வந்த அந்நியப் பண்பு மோகத்தில்
வாழ்வில் முற்றும் மறந்தனர்!
அந்த வேளையில் வந்த ஞாயிறே!
அகிலம் போற்றிடும் நாவலர்!

உணவி னோடுநல் லுடைபெ ருந்தொழில்
ஊதி யம்எனக் கூறினர்;
கணமு மேழ்மையில் கலங்கி நின்றவர்
கடிதி லேதடு மாறினர்;
பணத்தி லேமனச் சாட்சி வீழ்ந்திடப்
பரம தத்தினைப் பற்றினர்;
உணர்வி லாதவர் நிலைமை கண்டுளம்
அழிய நொந்தனை நாவலா!

நேற்று வந்தவர் நீண்ட எம்வர
லாறு கண்டவை மாற்றவோ?
தூற்ற வோஉயர் உண்மை காட்டிடு
தூய எம்மதக் கொள்கையை?
ஆற்றி லேவிழுந் தேகு மோர்துரும்
பாகி யெம்மவர் மாழ்வதோ?
வேற்று மாந்தரின் சூழ்ச்சி வென்றெமைக்
காத்து நின்றனை நாவலா!

மரபு ணர்த்திடு கல்வி யூட்டினை;
மறும லர்ச்சியைக் கூட்டினாய்!
அரவ ணிந்தவன் அருளு ரைத்திடும்
அரும றைகளைக் காட்டினாய்;
வரைவி லக்கணம் இலக்கி யம்தமிழ்
வளர நூல்களை ஆக்கினாய்;
உரைகள் செய்தனை; உண்மை யோம்பிடு
நெறிகள் கூறினை நாவலா!

பழந்த மிழ்ப்பெரும் ஏடு கள் தமைப்
பலர றிந்திட அச்சிலே
வழங்கி னாய்; தமிழ் சைவம் வாழ்ந்திட
வாழ்வை யேபணிக் காக்கினாய்!
விளங்கு நீறணி வேட மும்சிவம்
வளரு சிந்தையும் வீரமும்
உளங்கொள் தொண்டன்யாழ்ப் பாண நல்லூர்
உதித்த ஆறுமுக நாவலா!

வாழிய சைவம் – வாழ்க நற்றமிழர் – வாழிய தாயகம்

# ஸ்ரீ வித்யா பீடம்

## அனைத்து இந்து மத கிரியைகள் சேவை

## சிவஸ்ரீ தியாக முருகானந்த குருக்கள்

இந்து மதகுரு, திருமணப் பதிவு அதிகாரி – கனடா

**நந்தன் குருக்கள்** (நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி)

**(416) 299-4957**



**(416) 299-4957**

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளும் முறைப்படி நிறைவேற்றி வைக்கப்பெறுவதுடன் மங்கள வைபவங்களுக்குத் தேவையான மண்டப ஒழுங்குகளும் செய்து தரப்படும்

# "அன்பும் சிவமும்"

(ஆய்வுக்கட்டுரையின் சுருக்கம்)

எஸ். தெய்வநாயகம், கொழும்பு

அன்பாகிய திருவருளும் இன்பமாகிய சிவனும், மணியும் ஒளியும் போல் ஒன்றானதாகும். அவற்றை இருவேறு பொருள்கள் என்று கூறுவோர் மெய்யுணர்வு கைவரப் பெறாதவர் ஆவர். மெய்யான நோக்கின் அன்பாகிய திருவருளே இன்பமாகிய சிவனுக்குத் திருமேனியாகும். அதனால் அன்பே சிவமாகும்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

சிவபெருமான் கருணை உருவானவன். அதலால் அவன் அன்பு வடிவினன் என்று கொள்ளப்படுகின்றது. ஆகவே அன்பு சிவமாயிற்று. திண்ணனாரான கண்ணப்பர் அன்புப் பிழம்பானவர். ஆகவே அவர்சிவ வடிவினர். அங்ஙனம் சிவத்திற்கும் தனக்கும் வேறுபாடு காணாத காரணத்தினால் தான், இறைவன் கண்ணில் தம் கண்ணை எடுத்து அப்பினார்.

எங்கே உள்ள நெகிழ்ச்சி உணடாகிறதோ அங்கே சிவம் விளங்கும். அவ்வாறு அன்புடையார்பால் சிவம் செம்மேனியாகச், சோதி வடிவில் தோன்றி அருளுவான். அன்பிலே சிவத்தைக் கண்டு அந்தப் பேரின்பத்திலே திளைத்து நிற்பார்கள். அன்புதான் சிவமாகிறது என்பதை அறிந்துவிட்டால் அந்த அன்பு வெள்ளத்திலேயே இதயம் திளைத்து சிவானந்தப் பேறு பெறுவார்கள்.

"பொன்னைக் கடந்திலல் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்தேன் பேரன்புதானே"

அன்பு பின்னிக் கிடக்கின்ற போது அன்பிற்குப் பற்றுக்கோடாய் இறைவனும் பின்னிக் கிடப்பான். அன்பும் இறைவனும் பிரிவிலா நிலையில் நம் உள்ளத்தே ஒன்றியிருத்தலின் அவன் நம் எண்ணம் முதலாக எளிதிலே அறிபவனாவான். ஆதலால் மெய்யன்பே நாம் மேற்கொள்ள வேண்டும்.

"கண்டேன் கமழ்தரு கொன்றையினானடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலினை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே"

இறைவன் தன்னை நினைவாரது மனத்தாமரையில் விரைந்து சென்று தங்குவது இயல்பு. அன்பும் சிவமும் கலந்த மாணிக்கவாசகரால் திருவாசகம் விளைந்தது.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே"

எனக் குறிப்பிடுவதில் இருந்து அன்பும் சிவமும் ஒன்றென்பதை உணர்த்துகின்றார் மணிவாசகர். இறைவனை அடைவதற்கு அன்பே தேவை. அம்மையும் அப்பனுமாக ஆட்கொண்டருளும் ஈசனும் கூட அன்பின் வலைக்குள்தான் அகப்படுகின்றார். சிவயோகம் சிவபெருமானின் கருணையினால் விளைவதன்று. ஆன்மாவின் அன்பினில் ஆற்றல்மிக்க அன்பினில் விளைவதே சிவயோகமாகும்.

ஆன்மா இனங்கண்டு கொள்ள இயலாமல் ஒடுங்கிக் கிடக்கும், முடங்கிக் கிடக்கும். ஆன்மாவுக்கு இது கேவலம். அதனால் ஆணவத்துடன் கட்டுண்டு கிடக்கும். ஆன்மாவின் நிலைமையைக் கேவலாவத்தை என்று மெய்கண்ட நூல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் சிவனாகிய் எம்பிரான் கருணையினால் ஆன்மா, மாயையிலிருந்து உடலையும், உலகையும் பெற்று வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகின்றது. ஆணவத்தின் ஆதிக்கத்திலிருந்து ஆன்மாவை மீட்க சிவன், பரம்பொருள், மாயை, கன்மம் என்று இரண்டு கூடுதல் மலங்களைச் சேர்க்கின்றான். அதாவது அழுக்குத் துணியை வெளுக்க உவர் மண்ணைச் சேர்ப்பது போல் இது அமைகின்றது. மாயை கன்மங்கள் உபசார வழக்காலேயே மலம் என்று கூறப்படுகின்றது. மாயை கன்மம் என்ற மலங்களுடன் சேர்க்கை கிடைத்தவுடன் ஆன்மாவுக்கு விருப்பம், ஞானம், செயல் ஆகிய மூன்றும் அமையும். இந் நிலைகள் மாறிமாறி வந்து பொருந்தும். இந்நிலையில் ஆன்மா அறிவும், தெளிவும் இல்லாமல் நிலையில்லாதவற்றை நிலையாயின போலவும், நிலையானவற்றை நிலையில்லாதன போலவும் எண்ணும் நல்லன தீயனவாகும். தீயன நல்லனவாகும் இது மயக்க நிலை. ஒரு மலமாகிய ஆணவத்துடன் கூட்டு, கூட்டநிலை மருள் நிலையாகும். இந்நிலைமை களிலிருந்து ஆன்மா பூரண அறிவுப் பொலிவுடன் விடுதலை அடைய வேண்டும். அதாவது இறவாத இன்ப அன்பு நிலையை அடைதல் வேண்டும். இந்நிலை அருள்நிலை எனப்படும். அந்த அருள்நிலை பெறுவதற்கு அன்பும் சிவமும் அடிப்படையாகத் திகழ்கின்றன என்பதைச் சைவ சமயம் உணர்த்துகின்றது. இக்குறிப்பை ஒட்டியே "அன்பும் சிவமும்" என்ற ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

# சைவத்திருமுறைகள் - சிறப்பியல்பு

திரு. க.இ. ஆறுமுகம் ஜே.பி
முன்னைநாள் கல்வி அதிகாரி (இந்து சமயம்)

அரிதரிது மானிடராதலரிது என்றார் தெய்வத்தன்மை பொருந்திய ஔவையார். "வாய்த்தது நந்தமக்கோர் பிறவி மதித்திடுமின்" என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள். அதனினும் அரிது சிவபரம் பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தில் பிறப்பது. மனிதப்பிறவியின் பயன் இம்மையில் அறம், பொருள், இன்பம், ஆகியவற்றைப் பெற்று, பின்னர் நிலைபேறுடைய இறுதிப்பொருளாகிய வீடுபேறு அடைதலாகும். இதற்கு வழி காட்டியாக அமைவன தோத்திர நூல்களுள் புனிதமான பன்னிரு சைவத்திருமுறைகளாகும். "தோத்திரமுஞ் சாத்திரமுமானான்." இறைவன்.

திருஞான சம்பந்தரின் தேவாரப்பதிகங்கள் தொடக்கம் சேக்கிழார் பெரியபுராணம் வரை சிவனருள் பெற்ற இருபத்தேழு அருளாளர்களால் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற பாடல்களின் தொகுதியே பன்னிரு சைவத்திருமுறைகள். இத்திருமுறைகள் இல்லையேல் சைவசமய மேன்மையை உணருதல் கடினம் சைவசமயத்தின் முதல்நூல்களாக விளங்குபவை இறைவன் அருளிய வேதங்களும் ஆகமங்களுமாகும். இவற்றின் உண்மைப் பொருளை எல்லாம் சிவபெருமான் திருமுறை ஆசிரியர்களை அதிட்டித்து நின்று சைவத்திருமுறைகளைத் தோற்றுவித்தார். திருமுறை ஆசிரியர்கள் அனைவரும் தம்மை இறைவன்பாடுவித்தார் என்றே அருளியுள்ளார்கள். இதனையே திருஞானசம்பந்தர் "எனதுரை தனதுரை" என்றார். எனவே சைவத்திருமுறைகள் ஆண்டவன் வாக்காகும். இவை பதிநூல் என்று அழைக்கப்படும். வேதமும் திருமுறைகளும் ஒரு பொருளையே நுதலுகின்றன. திருமுறைகள் சைவர்களது தமிழ்வேதம். சைத்திருமுறைகள் இல்லையேல் சைவ சமயமில்லை. சைவசமயம் தழைத்தோங்கவும், மக்களை நன்னெறிப்படுத்தவும் பக்தி உணர்வினை ஊட்டி வரும் திருவருட்களஞ்சியங்களே பன்னிரு சைவத்திருமுறைகள்.

திருமுறை என்பது திரு என்றசொல்லும் முறை என்ற சொல்லும் சேர்ந்து தோன்றியபதமாகும். திரு என்பது தெய்வத்தன்மையைக் குறிப்பது. முறை என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு. வரிசை, உறவு, முறையீடு முதலிய பல கருத்துக்கள் உள. எனவே, திருமுறை என்பது தெய்வத்தன்மை பொருந்தியநூல், உயிர் களைச்செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல், இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ளதொடர்பை விளக்கும் நூல், மெய்யடியார்கள் இறைவனிடம் செய்து கொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல் எனப்பலவகையில் பொருள் கொள்ளலாம். திரு என்ற சொல்லிற்கு செல்வம் என்று பொருள் கொள்ளின் திருமுறை என்பது முறையான அருட்செல்வத்தை உணர்த்தும் நூல் எனக்கொள்ளலாம்.

இராஜராஜசோழன் பொல்லாப்பிள்ளையார் அநுக்கிரகம் பெற்ற திருநாரையூரிலுள்ள நம்பியாண்டார்நம்பி என்னும் அந்தணச் சிறுவன் மூலம் தில்லையில் மறைத்திருந்த திருமுறை ஏடுகளை எடுத்து பதினொரு திருமுறைகளாக்கி உலகிற்குக்கொடுத்தான். சேக்கிழார் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகப் பின்னர் சேர்க்கப்பட்டது. வேதங்களால் அடைக்கப்பட்ட திருக்கதவு அப்பர் சுவாமிகள் பாடிய "பண்ணினேர் மொழியாள்" என்று தொடங்கும் பதிகத்தால் திறக்கப் பட்டது திருமுறையின் மகிமையை காட்டி நிற்கின்றது.

திருமுறைப் பாடல்கள் சைவ சித்தாந்த முப்பொருள் உண்மையை விளக்குவதோடு முத்திக்குரிய சாதனங்களாகிய குருவருள், திருவருள், நால்வகை நெறிகள், திருவைந்தெழுத்து, விபூதி, உருத்திராக்கம், தீட்சை என்பவற்றின் சிறப்புக்களை எடுத்துக் கூறுகின்றன. மேலும் கொல்லாமை, அன்பு, பணிவு, உள்ளத்தூய்மை, ஐம்பொருள், வேள்வி போன்ற பண்புகளை திருமுறைகள் விளக்குகின்றன.

திருமுறைகள் இம்மை வாழ்விற்கு வேண்டிய பொன்னும் பொருளும் தரவல்லன் சோறும் கூறையும் அருளவல்லது. நாளையும் கோளையும் நல்லனவாகச் செய்வது. இவை போன்றனவற்றைத் திருமுறை ஓதுவதால் பெறலாம். இம்மைப்பயன் நல்கும். சைவ சமயத்தைச் சார்ந்தோர் சைவத்திருமுறைகளை ஓதியும் அவற்றின் வழி நின்றும் இம்மை, மறுமைப்பயன்களைப் பெறுவார்களாக.

**சான்றோர் சொல்லமுதம்**

மெய்யுணர்வு தோன்றி விட்டால் இனிப்பில்லை, கசப்பில்லை, விருப்பில்லை, வெறுப்பில்லை, இகத்திலே சந்தோசமில்லை, மரணத்திலே துக்கமில்லை. அடிக்குமேல் அடிவிழுந்தாலும் கூட, அது கல்லிலே விழுந்த அடியாக இருக்குமே தவிரத் தசையிலே விழுந்த அடியாக இருக்காது. மெய்யுணர்வு உடல் உணர்வைக் குறிப்பதல்ல; உண்மை உணர்வைக் குறிப்பது. - கண்ணதாசன்


மேன்மை கொள் "சைவநீதி" விளங்குக உலகமெல்லாம்

# மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

# 42 ஆண்டுகள்

## வர்த்தகத் துறையின் முன்னோடிகள்

## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?




9 வருடங்களாக துரித
பணமாற்றுச் சேவையில்
கனடா வாழ் தமிழ் மக்களின்
மனதில் நம்பிக்கை,
நாணயம் என்ற
நன்மதிப்பைப் பெற்ற
ஒரே ஸ்தாபனம்

## முதலாவது தலைமுறையும் இணைந்த நிர்வாகம்

# (416) 267-8221

# M. KASIPPILLAI & SONS INC.

**3228 EGLINTON AVE. EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**

# சைவம்
# வழிபாடு - சமயம் -மதம் - இன அடையாளம்

க. ப. அறவாணன் - துணை வேந்தர்
துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், தமிழ் நாடு - இந்தியா

சமூகவியல் அறிஞர் கோம்தே அன்று முதல் இன்று வரை வளர்ந்துள்ள சமுதாயப் படிநிலையை வகைப்படுதத்துகிறபோது, ஆதி சமுதாயம், முது பழங்குடி நிலையைத் தெய்வீகக் கட்டம் (Theological Stage) என்றும், இடைக்காலச் சமுதாய நிலையை (Meta Physical Stage) என்றும், 19ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நவீன சமுதாய நிலையை (Positive Stage) என்றும் வகைப்படுத்தினார். தொடக்கக் காலச் சமுதாயக் கட்டத்தைத் தெய்வீக நிலைக்கு உள்ளாக்கியபோது, அது ஆதி மனிதனின் உள நிலை என்றும், அனிமிசத்தில் இருந்து தெய்வ நிலையை நோக்கி வளர்ந்த நிலை என்றும் விளக்கினார். டெய்லரும், ஸ்பென்சரும் மத நம்பிக்கைக்கு அடிப்படை ஆன்மா பற்றிய எண்ணம் என்று கருதினார்கள். மனிதர் கனவு இறப்பு ஆகியவற்றைத் தவறாக விளங்கிக் கொண்டு ஆன்மாவைப் பற்றிப் பேசினர் என்றனர்.

கார்ல் மார்க்ஸ் அச்சமும் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பும் மதத் தோற்றத்திற்குக் காரணம் என்றார். ஃபிரேசர் மதத்தையும் மந்திரச் சடங்கையும் பிரித்து விளக்கினார். துர்க்கேம் மதத் தோற்றத்திற்குப் புதிய காரணங்களைக் காட்டி விளக்கம் சொன்னார். கூட்டத்தில் கூடி, பதைத்து ஆவியாக வந்து ஆடும் நிலையைத் தொடர்பு படுத்தினார். மலினோஸ்கி, பிளென் ஆகியோர் மதம் சமுதாய ஒருங்கிணைப்பிற்கும் தனி மனித ஒழுக்கத்திற்கும் பழைய சமூகங்களில் பெரிய துணையாக இருந்தது என்றனர். மதம் ஒருங்கிணைக்கும் சக்தியாக இருந்தபோதிலும் ஒருங்கிணைப்பின் மூலம் மற்ற மதங்களில் இருந்து பேதப்படுத்தும் சக்தியாகவும் இருக்கிறது என்று அண்மைச் சமூகவியல் அறிஞர் கருதுகின்றனர். நவீனத் தொழில்மயச் சமுதாயங்களில் மதம் இணைக்கும் சக்தியாகவும், பிரிக்கும் சக்தியாகவும் செயல்படுகிறது. சடங்குகளைவிட நம்பிக்கைகளில் முதன்மை கொள்கிறது. சமுதாய வளர்ச்சிக்கு மதம் பயன்படும் என்பதை மேக்ஜ்வெப்பர் கொள்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சில மதங்கள் நாடு கடந்து, வேறு நாடுகளில் பரவியமைக்குச் சமூகவியல் அறிஞர்கள் காரணம் சொல்கின்றனர். இசுலாம், கிருத்துவம், புத்தம் ஆகியன கடல் கடந்து பரவியமை போல சைவ (இந்து) சமயம் பரவ வில்லை. வேறு வழிபாட்டினர் தம் வழிபாட்டிற்கு வரும்போது நிகழக் கூடிய Baptism என்ற சடங்கு சைவ சமயம் போன்றவற்றில் இல்லை என்பதும், கடல் கடந்து செல்லல் ஆகாது என்ற நம்பிக்கையும் வேறு சில மதம் சார்ந்த உணவு, உடை, பழக்கவழக்க முறைகளும் காரணம். பொறுத்துப் போதல், இச்சமுதாயத்தின் பாங்காக இருப்பினும், மிஷினரி (அரும்பெரும் தொண்டுணர்வு) இச்சமயங்களில் குறைவு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

அண்மைக் காலங்களில் உலகம் முழுதும் மத நம்பிக்கை வழிபாடு ஆகியன நடுத்தர மக்களிடமும் நிலையான ஊதியம் பெறும் தொழில்சார் மக்களிடமும் குறைந்துள்ளன. ஐந்தில் ஒரு பகுதி நடுத்தர மக்கள் கோயில்களுக்குச் செல்வதிலலை என்று ஒரு புள்ளிவிபரம் மொழிகிறது. ஆனால், அமெரிக்காவில் மதம் சார் பழக்கவழக்கங்கள் கூடிவருகின்றன. சில இடங்களில் மதச் சார்பு என்பது மனிதனின் சொந்த முடிவு எனுங் கருத்து பரவி வருகிறது. இவை அனைத்தும் மேலும் உலகத் தமிழ்ச் சமுதாயத்துடன் பொருத்தி ஆராயத் தக்கவை.

## வழிபாடு

### வழிபாட்டின் தோற்றம்

கடவுள் நம்பிக்கை வழிபாடு, பூசை, ஆகியன உலகில் முதன் முதல் என்று தோன்றின? எப்படித் தோன்றின? ஏன் தோன்றின? இவ்வினாக்களுக்கு விடையளிப்பது அத்துணை எளிதன்று. எளிதில் இயலாமைக்குக் காரணங்கள்:

1. உலகம் மிகப் பெரியது. அதனைக் கடல் நீரும் ஆறும் மலைகளும் பாலை வெளிகளும் காடுகளும் ஆங்காங்கே பிரிவினை செய்துள்ளன.

2. இயற்கையால் எற்பட்ட உலகப் பிரிவுகள் மனித இனத்தையும் பிரித்தன. வெவ்வேறு நிறமும் தோற்றமும் பழக்கமும் பண்பாடும்உடைய மனித இனங்கள் உலகம் முழுதும் சிதறிக் கிடக்கின்றன.

3. உடல் உறுப்புகளுக்கு இணையாக மனித இனத்துடன் மொழிகள் பல தோன்றியுள்ளன. அம்மொழிகளும் மனித இனங்களைப் பிரித்துள்ளன, பிரிக்கின்றன, பிரிக்கும்.

4. மனிதனின் சூழ்நிலைகளுக்குத் தக, முயற்சிகளுக்குத்

தக அவனது சிந்தனையும் செயலும் அமைகின்றன. எனவே, அவற்றின் வேறுபாடுகளுக்கு ஏற்ப மனித இனச் சிந்தனைகளும் வேறு வேறு வடிவில் தோன்றுகின்றன.

ஆகவே, உலக விரிவு - பிரிவு, மனித இன வேறுபாடு - கூறுபாடு, மொழிகளின் பன்மை - தன்மை, சிந்தனைகளின் தோற்றம் - மாற்றம் ஆகியன உலகம் அளாவிய வினாக்களுக்கு விடையளிப்பதைச் சிக்கலாக்குகின்றன.

### வழிபாட்டின் பொதுமை

எனினும் மனிதச் சிந்தனைகள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குறிப்பிட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக எழுகிறபோது பேரளவு ஒத்துள்ளன. சிலபோது ஓரிடத்தில் தோன்றிய மனிதச் சிந்தனைகள் இனம் பரவுதலுக்கு ஏற்ப உலகெங்கும் பரவுகின்றன. இப்பரவுதல் ஓர் இனம் இடம்விட்டு இடம் பெயர்வதாலும் நிகழும். ஓர் இனமக்களைப் பிறிதோர் இனமக்கள் வணிகம், அரசியல், மதம் இவை தொடர்பாகச் சந்திப்பதாலும், கலப்பதாலும் நிகழும். ஆக, உலகளாவ ஏதேனும் ஒரு பொதுச் சிந்தனை தென்பட்டால் அதற்கு அடிப்படைக் காரணங்கள் ஐந்து ஆகலாம்.

### 1. மனித இனத்தின் குறிப்பிடட சூழலில் எழுவது

சான்று - கடவுள் நம்பிக்கை, பிறப்பிற்கு முன் மனிதன் எங்கிருந்தான்? இறப்பிற்குப் பின் அவன் எங்கு இருப்பான்? உண்ணக் காய், கனி, கிழங்குகளையும் உறைய மலைக் குகைகளையும், பருக நீரையும் அல்லும் பகலும் ஒளியையும் படைத்தது யார்? இவ்வினாக்களுக்குப் பண்டைய மனிதன் தேடிய விடைதான் கடவுள். இவ்வினாக்களுக்கு விடையும் ஆசிய மக்களுக்குத் தோன்றியிருக்கும், ஆபிரிக்க மக்களுக்கும் தோன்றியிருக்கும், ஆத்திரேலிய, ஐரோப்பிய மக்களுக்கும் தோன்றியிருக்கும்.

### 2. இன, இடப் பெயர்ச்சியால் எழுவது

ஐரோப்பியர் கி.பி. 17,18.19ஆம் நூற்றாண்டுகளில் தம் மண்ணிற்குரிய சிந்தனைகளோடு உலகெங்கும் பரவினர். அப்போது அவர் சென்ற இடமெல்லாம், அவர்தம் சிந்தனைகளும் செயல்களும் பரவின. பண்டைய நாளில் ஆரியர் இந்தியாவிற்கு வந்தனர்; அவருடன் அவர்தம் பழக்க வழக்கங்களும் பண்பாடும் வந்தன; பரவின.

### 3. வணிகக் கூட்டுறவால் எழுவது

கி. மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே திராவிட நாட்டு மேலைநிலக் கடலோரப் பகுதிகளுக்கும், நடுநிலக் கடலோரப் பகுதிகளுக்கும் இடையே வணிகப் போக்குவரத்து நடந்தது. இதன் விளைவாகத் திராவிடப் பொருள்களும், திராவிட மக்கள்தம் நம்பிக்கைகளும் நடுநிலப் பகுதிகளுக்குச் சென்றன. நடுநிலக் கடலோர நாடுகளான கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து முதலிய நாடுகளின் பொருள்களும், அந்நாட்டு மக்களின் சில பழக்க வழக்கங்களும் திராவிட மாநிலங்களில் பரவின. ஐரோப்பியர் தம் வணிக விரிவால் அவர் தம் சிந்தனைகளும் பண்பாடுகளும் இன்றும் உலகெங்கும் பரவியுள்ளன.

### 4. அரசியல் படையெடுப்பால் எழுவது.

ஐரோப்பிய ஆப்பிரிக்க நாடுகளின் மீது கிரேக்க, உரோமரின் படையெடுப்பு கி.மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பும் பின்பும் நிகழ்ந்தது. கி.பி. முதல் சில நூற்றாண்டுகளில் திராவிடத் தமிழர்தம் படையெடுப்பு இலங்கை, வட இந்திய ஆரிய நாடுகள் மீதும் நிகழ்ந்தது. முகமதியர்தம் படையெடுப்பு பேரளவு வட இந்தியாவிலும், ஓரளவு தென்னிந்தியாவிலும் இடைக்காலத்தில் தொடர்ந்து நிகழ்ந்தது. ஒரு நாட்டிற்கு உரிமையற்ற வேறு இன மக்கள் படையெடுப்பு நிகழ்த்தி வெற்றி கொண்டு அந்நாட்டிலேயே நிலை நிற்கும்போது அவர் தம் சிந்தனைகளும் செயல்களும் கலக்கின்றன.

### 5. மதம் பரப்புதலால் எழுவது

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் புத்த மதம் இந்தியாவிலிருந்து இலங்கை, இந்தோனேசியா, கம்போடியா, சப்பான், பர்மா, நேபாளம், திபெத் முதலான நாடுகளில் பரவியது. இடைக்காலத்தில் இசுலாம் அராபியா, பாரசீகம் வழி உலகெங்கும் பரவியது. கி.பி. 17,18,19,20 ஆம் நூற்றாண்டுகளில் கிறித்தவம் உலகம் முழுதும் பரந்தது. ஒரு குறிப்பிட்ட கொள்கைக் கோட்பாடு உடைய மதம் பிறந்த இடமன்றிப் பிற இடங்களுக்குப் பரவுகிறபோது அம்மதத்தின் கொள்கைகளும் நம்பிக்கைகளும் பரவுகின்றன.

எனவே, பண்பாட்டு ஒப்பீட்டு ஆராய்ச்சியில், உலக வரலாற்று அறிவும், இனவரலாற்று அறிவும் தேவையாகின்றன. சில பழக்க வழக்கப் பண்பாடுகள் ஒரு நாட்டைப் போல இன்னொரு நாட்டில் பின்பற்றப்படுமானால் அதற்குரிய காரணத்தைத் திடும் என்று எழுதிவிட இயலாது. இரண்டு நாடுகளின் வராலாற்றையும், இன, வணிக, அரசியல், மதத் தொடர்புகளையும் நன்கு ஆராய்ந்த பிறகே பண்பாட்டு ஒற்றுமைக்கான காரணத்தை நுவல முடியும்.

ஒவ்வோரிடத்திலும் சிறசில சூழ்நிலைகள் அமையும்போது ஒத்த உயிர்கள் தோன்றுகின்றன. ஈக்கள், கொசுக்கள் இன்ன பிற செடி, கொடிகள் உலகத்தின் வெவ்வேறிடங்களில் குறிப்பிட்ட தட்ப வெப்பச் சூழநிலைகளில் உயிர்க்கின்றன. இவ்வாறே குறிப்பிட்ட அரசியல், பொருளியல், சமூக இயல் சூழல்களில் ஒத்த பண்பாடுகளும் அங்கங்கே தன்னிச்சையாகத் தோன்ற வாய்ப்புண்டு. எனவே, ஒத்த

பண்பாடுகளை இரு வேறு இனத்தில் கண்டுபிடிக்கிறபொழுது அவை தன்னிச்சையாகத் தோன்றியவையா அல்லது மனித இடப் பெயர்ச்சியால் நேர்ந்தவையா என்பதைச் சோதித்து அறிதல் வேண்டும். அதன் பின்பே குறிப்பிடட பண்பாட்டுக் கூற்றின் தோற்றத்தைப் பற்றி முடிவு செய்தல் வேண்டும்.

## இயற்கை வழிபாடு

உலகளாவிய கடவுள் நம்பிக்கை, வழிபாடு, பூசை ஆகியவற்றைப் பொறுத்த வரையில் அவை அச்ச அடிப்படையிலும், அன்பு அடிப்படையிலும் எங்கும் தன்னிச்சையாகத் தோன்றித் தழைத்திருத்தல் வேண்டும். அன்பு காட்டுவனவற்றிற்கு நன்றி காட்டுவதும், அச்சம் ஊட்டுவனவற்றிற்கு அடிபணிவதும் மனிதச் செயல்கள். நிலம், நீர், தீ, காற்று, விண் என்ற ஐம்பூதங்களும் மனிதனுக்கு நன்மை செய்வனவாயும், தீமை செய்வனவாயும் திகழ்ந்தன. நிலம் அவனுக்குக் காய் கனி கிழங்குகளைத் தந்து நன்மை செய்தது; ஒன்றும் விளையாமல் வாடி வறண்டு அவனுக்குத் தீமையும் செய்தது. நீர் அவன் தாகத்தைத் தணித்தும், பயிர்களை விளைத்தும் நன்மை செய்தது. சில சமயங்களில் கொடு மழையாகக் கொட்டியும் கடலாகக் குமுறியும் அவனுக்கு அல்லல் விளைத்தது. தீ அவன் உணவுகளைச் சுடவும், சமைக்கவும் குளிரில் வாடாமல் நலமுறவும் காத்தது. சில சமயம் எரி பிழம்பாகக் காடுகளை அழித்தது; வீடுகளை அழித்தது. காற்று, அவனுக்கு மூச்சைத் தந்தது. களைப்புற்ற அவனை மீட்டது. சில சமயம் புயலாகச் சீறி அவன் வீட்டையும் காட்டையும் அழித்தது. விண் நிலவாக அவனுக்குக் குளிர்ந்தது, மழையாகப் பொழிந்தது. கதிர் ஒளியாகக் காய்ந்தது. சில சமயம் இருள் மண்டியது; மழை பொய்த்தது; கதிர் சுட்டது. இயற்கை தரும் நன்மைகள் அவனை அன்பு செய்ய வைத்தன. அவை படுத்தும் அல்லல்கள் அவனை அச்சப்படுத்தின. நன்மை செய்த ஒருவர் மீது அன்பு காட்டினால் அவர் மேலும் நன்மை செய்வார் அன்றோ? தீமை செய்த ஒருவர்முன் பணிந்து போற்றினால் அவர் தீமை செய்யாது இருப்பார் அன்றோ? அதன் விளைவே ஐம்பூத வழிபாடும் பூசையும். நில வழிபாடு - பூமாதேவி வழிபாடாயிற்று; நீர் வழிபாடு - கங்காதேவி - வருண - மழை- இந்திர வழிபாடாயிற்று; தீ வழிபாடு சேய், சிவ வழிபாடாயிற்று; காற்று வழிபாடு வாயு அனும வழிபாடாயிற்று; விண் வழிபாடு சூரிய வழிபாடுகள் ஆயின.

## முன்னோர் வழிபாடு

மனிதனுடன் வாழ்ந்த மூத்தோர் முதுமையாலும் நோயாலும் விபத்தாலும் இறந்தனர். உடன் வாழ்ந்த மாந்தன் இறந்த முதியவர் இருக்கும் போது அவனிடம் காட்டிய பேரன்பை எண்ணுகிறான். அவர் ஆற்றிய பேருதவிகளை எண்ணுகிறான். அவர் செய்த பெருஞ் செயல்களை எண்ணுகிறான். அவர் தன்னோடு தொடர்ந்து இருத்தலாகாதா என்று எண்ணுகிறான். இந்த எண்ணங்களின் நினைவுகளோடு அவன் உறங்குகிறான். உறக்கத்தில் கனவுகள் காண்கிறான். கனவில் அந்த முதியவர் வருகிறார், அவனோடு உரையாடுகிறார் உறவாடுகிறார். ஓ! அவர் இறக்க வில்லை; இருக்கிறார். மூச்சுக் காற்று வெற்று வெளியில் விண்ணில்தானே உள்ளது. அவர் இருக்கும்போது அவரை உடன் இருந்து இயக்கியது மூச்சுக் காற்றுத்தானே. அம்மூச்சுக் காற்று அவரைவிட்டுப் போனதும் அவர் போய்விட்டார். எனவே அந்தக் காற்றுத்தான் அவர். ஆகவே, அவர் காற்றோடு கலந்து விட்டார். காற்று விண்ணோடு கலந்து விட்டது. எனவே இவர் விண்ணில் இருக்கிறர். அவரைத் தொடர்ந்து நினைப்போம். நினைப்பதை எப்படிக் காட்டுவது? அவருக்கு வழிபாடு செய்வோம் அவரை எண்ணிப் பூசைகள் செய்வோம் என்று ஆதி மனிதன் கண்ட கனவு முன்னோர் வழிபாட்டிற்கு அடிகோலி யிருத்தல் வேண்டும். இம்முன்னோர் வழிபாடே பிற்காலத்தில் பல இடங்களில் உருவ வழிபாடாக வளர்ந்திருத்தல் வேண்டும். இறந்தாரை நினைவு கூரும் நடுகற்கள் அனைத்தும் பிற்காலத்தில் வழிபடு கோயில்கள் ஆயின. இறந்தோரை நடுகல்லில் உருவமாகச் செதுக்கினர். பெயரும் பீடும் எழுதினர் வழிபட்டனர்.

இறந்த நல்லவர், மனித நினைவை அலைத்தது போல, கனவில் நிலைத்தது போல, இறந்த தீயவரும் அவன் நினைவை விட்டு அவன் கனவை விட்டு அகல மறுத்தனர். வாழும்போது தீங்குகள் செய்தது போலவே, இறந்த பின்பும் கனவுகளில் அவனை அல்லல்படுத்தினர். அவனிடம் நல்லவரை நினைந்து அன்பு பிறந்தது. தீயவரை நினைந்து அச்சம் பிறந்தது. அதற்காகத் தீயோரையும் வணங்கும் முகமாக இறந்தோர் நினைவுக் கடன்கள் ஆற்றினான். ஒழுங்குறத் தவறாமல் வழிபாடு செய்யவில்லை எனில் அவர் ஆவியாகப் பேயாக வந்து அல்லல் படுத்துவர் என்று நம்பினான். மழையோ பயிர் விளைவோ இல்லை எனில் காரணம் முன்னோரே எனக் கருதி, ஆவி உருவில் இருக்கும் முன்னோரை அழைத்துப் பூசை முதலாயினவற்றை ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் செய்வது இதனை அடியொற்றியே ஆகும். தீயோர் பாம்பாக வருவர் என்ற நம்பிக்கை ஆப்பிரிக்காவில் உள்ளது. நளனுக்குத் தொடர்ந்து தீமை செய்யும் சனி பகவான் "கார்க்கோடகன்" என்ற பாம்பு உருவில் அவனை அல்லல்படுத்தினான் என்ற கதை இந்தியாவில் வழங்குகிறது. ஏவாளைப் பழந்தின்னச் செய்து பாவியாக்கும் பாவத்தைச் சாத்தான் பாம்பு உருவில் செய்ததாகப் பைபிள் பழைய ஏற்பாட்டில் பழங்கதை வழங்குகிறது.

NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு

## நிரு வெற்று உறை லேபல்களைச் சேகரித்து பெறுமதிமிக்க பரிசுகளைப் பெறுங்கள்

கீழ்க்காணும் பட்டியலில் தொகுதி **A** யில் உள்ள நிரு பிராண்ட் தயாரிப்புக்களின் வெற்று உறைகள் / லேபல்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 20 புள்ளிகளும், தொகுதி **B**யில் உள்ளவற்றிற்கு தலா 15 புள்ளிகளும், தொகுதி **c** யில் உள்ளவற்றிற்கு தலா 10 புள்ளிகள் வீதமும் கணக்கிடப்பட்டு ஒவ்வொரு 100 புள்ளிகளுக்கும் ஒரு பெறுமதிமிக்க எவர் சில்வர்தட்டு இலவசமாக வழங்கப்படும். நீங்கள் இதுவரை சேகரித்த வெற்று உறைகள் லேபல்களுடன் இத்துடன் காணப்படும் படிவத்தை நிரப்பி வரும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டு எத்தனை எவர் சில்வர் தட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாமென்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### தொகுதி A (20 புள்ளிகள்)

| | |
|---|---|
| அமெரிக்கன் பார்பொயில் அரிசி | 20Lb |
| கைக்குத்தரிசி | 5Kg |
| பஸ்மதி அரிசி | 10Lb |
| பசு நெய் | 227gr/454gr |
| வறுத்த சிவப்பு அரிசி மா | 5Kg |
| நல்லெண்ணெய் | 750ml/1Lit |
| வறுத்த மிளகாய்த்தூள் | 900gr |
| உறைபபுக் கூடிய வ.மி. தூ | 900gr |

### தொகுதி B (15 புள்ளிகள்)

| | |
|---|---|
| கோப்பித்தூள் | 175gr |
| நெத்தலி தலையற்றது | 200gr |
| அச்சாறு | 400gr |
| மீன் கறித்தூள் | 400gr |
| பத்தியத்தூள் | 400gr |
| சரக்குத்தூள் | 400gr |
| இட்டலிப்பொடி | 400gr |
| குரக்கன் மா | 1Kg |
| தனி மிளகாய்த்தூள் | 900gr |
| மல்லித்தூள் | 400gr |
| இரசத்தூள் | 200gr |
| வறுத்த மிளகாய்த்தூள் | 450gr |
| வறுத்த மிளகாய்த்தூள் Cont | 450gr |
| வறுத்த உழுத்தம் மா | 900gr |
| வறுத்த பயற்றம் மா | 900gr |
| உறைப்புக் கூடிய வ.மி.தூ | 450gr |

### தொகுதி C (20 புள்ளிகள்)

| | |
|---|---|
| சவ்வரிசி | 450gr |
| வறுத்த உழுத்தம்மா | 450gr |
| ஆட்டாமா | 5Lb/10Lb |
| அரிசி வெள்ளை | 2Kg/10Lb |
| ஓமம் ஓமத்தூள் | 200gr |
| பார்லி அரிசி | 200gr |
| மிளகு மிளகு தூள் | 200gr |
| மல்லித்தூள் | --450gr |
| மோர்மிளகாய் | --500gr |
| மல்லி | 200gr/450gr |
| கறிவாசனைக் கூட்டு | 100gr |
| உடைத்த மிளகாய் | 200gr |
| சி.சீரகம் சி. சீரகத்தூள் | 200gr |
| வெந்தயம் | 200gr/ 400gr |
| பெ.சீரகம் பெ.சீரகத்தூள் | 200gr |
| கரம்மசாலா | 100gr |
| உள்ளித்தூள் | 100gr |
| வறுத்த பயறு | 450gr |
| வறுத்த சிவப்பரிசிமா | 1Kg/2Kg |
| வறுத்த வெள்ளை அரிசிமா | 1Kg |
| வறுக்காத வெ. அரிசிமா | 900g/ 1.8Kg |
| எள்ளு கறுப்பு / வெள்ளை | 200gr |
| சேமியா | 200gr |
| நிரு சோயா | 250gr |
| கோப்பிக்கொட்டை | 250gr |
| கொர்ஸ் கொஸ் | 450gr |
| செத்தல் மிளகாய் | 100gr |
| கற்கண்டு | 200gr |
| பழப்புளி | 227gr |
| மஞ்சள் | 100gr |
| மஞ்சள் தூள் | 200gr |
| கடலை மா | 900gr |
| வேர்க்கொம்பு /வே. தூள் | 100gr |
| பலாப்பழம்(ரின்) | 500gr |
| சர்க்கரை | 400gr |
| மாசி துகள்கள் | 185gr |
| வேப்பம்பூ வடகம் | 75gr |
| மதராஸ் கறிப்பவுடர் | 200gr |
| பப்ரிக்கா தூள் | 200gr |
| அவல் சிவப்பு ∴ வெள்ளை | 400gr |
| பாவக்காய் வற்றல் | 100gr |
| குத்தரிசி | 1Kg |
| மிளகாய்த்தூள் (வறுக்காதது) | 200gr/450gr |
| மல்லி இலை ஊறுகாய் | 400gr |
| உள்ளி ஊறுகாய் | 400gr |
| எலுமிச்சை ஊறுகாய் | 400gr |
| மாங்காய் ஊறுகாய் | 400gr |
| நெல்லி ஊறுகாய் | 400gr |
| பப்படம் 3"X5" | 175gr |
| கசகசா | 100gr |
| பொட்டுக் கடலை | 400gr |
| தீட்டிய சிவப்பரிசி | 1Kg |
| சம்பா அரிசி / சீரகச்சம்பா | 1Kg/ 5kg |
| சுண்டங்காய் வற்றல் | 100gr |
| சாம்பார் பொடி | 200gr |
| கடுகு | 200gr |
| அரிசிக்குறுணல் | 900gr |
| கடலைப்பருப்பு | 900gr/1.8kg/5kg |
| உழுத்தம்பருப்பு | 900gr/1.8kg/5kg |
| மைசூர்பருப்பு | 900gr/1.8kg/5kg |
| துவரம் பருப்பு | 900gr/1.8kg/5kg |
| கொண்டல் கடலை | 900gr/1.8kg/5kg |

பெயர்..................................

விலாசம்..................................

..................................

..................................

..................................

தொலைபேசி இல..................................

நிரு பிராண்ட் பொருட்களை
வாங்கும் வியாபார
ஸ்தாபனம்

..................................

ஒவ்வொரு 100 புள்ளிகளுக்கும் தலா ஒரு எவர்சில்வர் சாப்பாட்டுத் தட்டு வழங்கப்படும்

| | | |
|---|---|---|
| தொகுதி - A | X 20 | |
| தொகுதி - B | X 15 | |
| தொகுதி - C | X 10 | |
| | மொத்தப்புள்ளிகள் | |

அனுப்பவேண்டிய முகவரி

**76 HOWDEN ROAD, SCARBOROUGH**
**ONTARIO, M1R 3E4 CANADA**

NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு

# THE SACRED LIFE OF VALLUVAR AND VASUKI

**C.S.Rajaratnam. (Retd. principal)**

From Indian legend we learn about the secret of the sacred life of Thiru-Valluvar and Vasuki, the poet saint of Mayilapur. The life of Valluvar and Vasuki was in accord with the domestic lifestated in Thirukkural. Vasuki was an embodiment of all the virtues required for a worthy wife.

While Valluvar was in his youth, Vasuki's father Marka-chakayar stuck by the virtues of Valluvar, offered his daughter in marriage to him. Thiruvalluvar was inclined to marry, because domestic virtue is the best. Yet he resolved to test the maidens temper and gifts and thus he replied if she will take this sand and make rice for me, I will take her my wife. Vasuki meekly took the basket of sand, and feeling sure that what the holy man ordained was possible and right, proceeded to boil it and as verse 55.

தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

Her spouse before God, who adores, is like rain that at request pours.

The virtuous woman is said to have the power with the God, so it came to pass with her, a miracle was wrougt on her behalf and she brought him the rice meal, which he asked for. So she became his wife faithfull and obedient.

In after years when the poets fame has spread all over the Tamil regions one day a noble stranger came to the weavers cottage and asked Valluvar this question. Which is greater domestic life or an ascetic life? The sage while courteously entertaining the stranger gave no reply. The enquierer was left to see Domestic life in its perfect grace and judge himself. What he saw was this. One day Vasuki was drawing water from the well. The sage suddenly called her, and the obedient wife instantly came, leaving the bucket full of water hanging midway in the well.

Another day when the good wife brought her husband his breakfast of cold rice, he complained that it burnt his mouth. When she unquestioning and unhesitating in her attention to his comfort, instantly began to fan it.

Another day at noon when the glaering light was everywhere, the sage who was at work at his loom, let fall his shuttle, and called for a light to serch it. The wife with unquestioning obedience lit a lamp and brought it to him.

The inquirer had learnt his lessons, where such a wife is found domestic life is best, if not ascetic life is to be prefered.

So the poet and Vasuki lived till the time that she must leave him and gain release. The dying wife looked wistfully at her husband. What is it, that he told her when you married me and on that day, when I stood and served the rice for you (literly for you my lord) you ordered me to place always, with your meals a cup of water and a needle, I do not know why it was. 'It was" he replied, that a grain of rice were spilt, I might pick it up and clean it. Satisfied, the meek Vasuki closed her eyes for ever.

She has never during her whole married life questioned her lords command! and also it is clear no grain of rice fell on the ground.

As he lay that night after her death and ceremation, and pondered, he was heard to exclaim.

அடி சிற்கினியாளே, அன்புடையாளே
படி சொற்தவறாத பாவாய் - அடி வருடிப்
பின்றூங்கி முன்னெழும் பேதையே! போதியோ!
என்றூங்கும் என்கண்ணிரா.

Sweet as my daily food! O full of love O wife, Obedient ever to my word! chaffing my feet the last to sleep the first to rise O gentle one.

By night Hence forth what slumbr to mine eyes. Whatever one may wonder over these traditions. It is singular glory of the poet to have drawn this picture of this perfect householder and speaks loudly in favour of the Tamil people and these couplets of valluvar's thirukkural are enshrined in the herarts of the wholde people.

Dynastic changes, mohomaddan raids and invation of Alien races a dozen time have weakened the culture of south Indians.

Old times have changed and all manners are gone and strangers filled the Indian throne.

But the Tamil race preserves many of its old virtues and promise of a noble future.

Humility, charity and forgiVeness of injuries are the three qualities which are everywhere forcibly incalculated by the Tamil moralist. These are themes of his finest verses.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

In spotless mind virtue is found and not in show and swelling sound by.

# தவத்திரு தனிநாயகம் அடிகளாரை நினைவு கொள்வோமே!

**கவிஞர் செ. நாகேந்திரன்**

இயற்கை எழில் தாவும் ஈழத்திருமண்ணில்
இன்தமிழ் பேசும் நெடுந்தீவுக் கிராமத்தில்
உயர்திரு வஸ்தியாம்பிள்ளை தம்பதிகளுக்கு
உத்தம புத்திரனாய் அவதரித்தென்றும்
அயராது ழைத்து அருந்தமிழ் ஆய்ந்து
அகிலப் புகழை அணையாது பெற்ற
செயற்றிறன் மிக்க செந்தமிழ்க் காவலனை
சிறப்புடன் போற்றி நினைவு கொள்வோமே

சேவியர் எனும் பரம்பரைப் பெயருடன்
செவ்வனே செந்தமிழ் கற்றுத் தெளிந்து
மேவிய உணர்வால் மட்டற்ற வெறியுடன்
மென்தமிழுக்காய்த் தன்னைக் கொடுத்து
ஆவிபோல் அலைந்து உலகெங்குந் திரிந்து
அன்னைத் தமிழின் பெருமைகள் சொல்லி
ஏவிப் பலரைத்தமிழ் ஆய வைத்த
எண்ணற்கரியானை நினைவு கொள்வோமே

கிறிஸ்தவக் குருவாய் நியமனம் பெற்றும்
கருத்தோடு சைவத்திருமுறை கற்றுச்
செறிந்த தத்துவக் கருத்துக்கள் எடுத்து
செந்தமிழ்ச் செய்தியாய் உலகுக்கீந்து
குறிக்கோளுடன் பல கட்டுரை எழுதியும்
கன்னித்தமிழின் தொன்மையை விளக்கியும்
நெறிதவறாது வாழ்ந்துங் காட்டிய
நேசத்தமிழனை நினைவு கொள்வோமே

மனித நேயத்தை மனங்களிற் செலுத்தி
மக்களில் ஏற்றத் தாழ்வினை வெறுத்து
புனித கிறிஸ்தவக் கொள்கையின் சீலனாய்
பாரத மண்ணிலும் கிறிஸ்தவ உலகிலும்
இனிய தமிழுக்கே முதலிடங் கொடுத்து
இல்லந்துறந்த தவத்திரு வள்ளலாம்
தனிநாயகம் அடிகளைத் தரணித் தமிழர் நாம்
தன்மானத்துடன் நினைவு கொள்வோமே

சாதிமதபேதமற்ற சமத்துவம் தாங்கி
சீரிய தமிழால் ஒருகுடைப்பட்டு
ஓதியுணர்ந்த உலகமொழியனைத்திலும்
ஒப்பற்றதென்றும் தமிழென நிறுவி
மேதினியெங்கும் முழங்கித் திரிந்து
மேன்மைகொள் மாநாடு பற்பல நடாத்திய
நீதியின் செம்மலாம் நிகரற்ற தொண்டனை
நெஞ்சம் உருக நினைவு கொள்வோமே

ஓங்கிய அறிவுடன் மேடைகள் ஏறி
ஓயாது தமிழின் பெருமைகளியம்பி
ஆங்கில மக்களும் தமிழ்கற்கும் அளவுக்கு
அரும்பெருங்கருத்துக்கள் அகிலத்துக்கீந்து
தூங்கியதமிழரும் தமிழ் கற்க வைத்துத்
தன்மானங்காத்து வாழவுஞ் செய்து
நீங்காத இடத்தை வரலாற்றில் பெற்ற
நித்தியநாயகனை நினைவு கொள்வோமே

உள்ளத்தால் உயர்ந்து இதயத்தாற்பரந்து
உலகளாவிய சிந்தையில் வாழ்ந்து
தெள்ளுதமிழில் திறனாய்வு நடாத்தி
தமிழ் இலக்கண இலக்கியப் படைப்பிளை
அள்ளியெடுத்து ஒப்பிட்டு உலக
அறிஞர்களுக்குத் தமிழின் உயர்வினை
வெள்ளிடைமலையாய் விளக்கிப் புகழ்பெற்ற
வித்தகச் செம்மலை நினைவு கொள்வோமே

சென்னிக்களஞ்சியமாய்ச் செந்தமிழ்க்காவலனாய்
செவ்விய படைப்புக்கள் பற்பல தந்து
தன்புகழ் தவிர்த்துத் தமிழ்ப் புகழ் பாடித்
தரணிவாழ் புலமைத் தமிழரைத் திரட்டி
பொன்னரிய உலகத் தமிழ் மாநாட்டினை
பன்முறை நடத்த முன்னின்றுழைத்த
கன்னித்தமிழின் கலங்கரை விளக்காம்
கருணையின் வடிவை நினைவு கொள்வோமே

பல்கலைக்கழக விரிவுரையாளராய்
பரிசுத்த குருவாய் பன்மொழி ஆசானாய்
வல்லமைவளம் பெற்ற பாவலராய் புரவலராய்
வத்திக் கானிலும் தமிழோசை தொடக்கிப்
பல்மொழி நூலையும் எடுத்தாய்வு செய்து
பற்பல நாட்டிலும் புகழினையீட்டி
நல்லதை யெண்ணி நன்மையே புரிந்த
நல்லதோர் ஞானியை நினைவு கொள்வோமே

அகராதி யமைக்கும் குழுவின் முதல்வராய்
அந்நியதேச மொழியிலும் பங்கேற்று
நிகரற்ற புகழைத்தன்னாட்டுக் களித்.து
நிதிகள் திரட்டி யாழ் நூலகத்துக்குப்
பகரவே முடியாப் பல்லாயிரம் புத்தகம்
பாரெங்கிருந்துந் தேடிக் கொடுத்து
உகந்தன எல்லாம் உவகையுடன் செய்த
உத்தமனை நாம் நினைவு கொள்வோமே

சிந்தையில் தமிழர் எனும் உணர்வோடு
சித்திரவதைப் பட்டுச் செத்துமடிந்த
செந்தமிழ் பேசும் ஈழத்து மக்களின்
சோகங்களில் சென்று தானும் பங்கேற்று
தந்தை செல்வாவின் பணியினை மெச்சி
தந்தைக்கு அஞ்சலி யெனுந்நூல் இயற்றி
சொந்த பந்தமாய் இனத்தையே நேசித்த
சுதந்திரப் பிரியனை நினைவு கொள்வோமே

கலை கலாச்சார இதழ்களைத் தொடங்கி
கழகங்கள் நிறுவிக் கருத்துப் பரிமாறி
அலையலையாய் தமிழர் படுமின்னல் கண்டு
ஆத்திரங்கொண்டு அதனால் நலிந்து
நிலையாய் நமக்கோர் நாடுவரும் வரை
நமக்கேது விடிவென்று தீர்க்கமுரைத்துக்
குலையாத் தமிழ்ப் பற்றுடன் காற்றில்
கலந்த கனவானை நினைவு கொள்வோமே.

# எனக்கருள் தருவாய்

திருமதி. இராஜேஸ்வரி தந்தையா

நான் முகன் தேவி சரஸ்வதியே
ஞான ஒளிச் சுடர் நாயகியே
நாவில் இருந்து கல்விதரும்
நாதப் பொருளே அருள் வடிவே
மோனத் தவத்தின் உயிர்ப்பொருளே
மூவா மருந்தே இளமயிலே
தாயே உம்மைத் துதிக்கின்றோம்
தஞ்சமளித் தெமைக் காப்பாயே
மாயந்தன்னில் உளம் சென்று
மனிதம் தன்னை இழந்து விடா
நேய வழியில் எமை நடத்தி
நீதி நோமையுடன் வாழக்
தாயே எமக்கருள் வரம் தருவாய்
தமிழே இசையே கலைமகளே.

வேதியர் வேந்தர்கள் வீரர்களும்
வேதமுணர்ந்த ஞானியரும்
பாடிப் பரவித் தொழு தேத்தும்
பாமகளே உயர் நாமகளே
தூய வெண்பட்டு முத்தணிகள்
சுடர் தரும் உந்தன் பேரெழிலாம்
ஞான வேத ஏடெடுத்து
நங்கலை அருவும் கலையமுதே
வீணை கரத்தில் ஏந்தி என்றும்
வேதப் பொருளாய் ஒலிப்பவளே
நாதச் சுருதி இசைமீட்டி
ஞாலந் தன்னைக் காப்பளளே
ஏழை எந்தன் இதயத்துள்
என்றும் இனிதே எழுந்தருளிக்
கோழைத் தனங்கள் குறை நீக்கி
கொஞ்சும் தமிழால் உனைப்பாடத்
தாயே எனக்கருள் வரம் தருவாய்
தமிழே இசையே கலைமகளே.

## அன்னையரை வேண்டுகிறோம்

அகிலம் காக்கும் மலைமகளே
ஆக்கம் நல்கும் திருமகளே
இனிய கல்விக் கலைமகளே
ஈண்டு உம் அருள் வரம் வேண்டுகிறோம்
உண்மை நெறியை வேண்டுகிறோம்
ஊக்கமும் ஆக்கமும் வேண்டுகிறோம்
எண்ணும் செயல்கள் அனைத்திலுமே
ஏற்றம் காண வேண்டுகிறோம்
ஐம்புலன் அடக்கம் வேண்டுகிறோம்
ஒற்றுமை வாழ்வு வேண்டுகிறோம்
ஓங்கிடும் உயர்வுகள் வேண்டுகிறோம்
ஔவைத் தமிழால் உமைப்பாடி
அன்புடன் நித்தமும் வேண்டுகிறோம்
எங்கள் மனதில் வரவேண்டும்
இனியவை எல்லாம் தரவேண்டும்
சிறய பாலர்கள் வேண்டுகிறோம்
சிறப்புடன் எமக்கருள் தரவேண்டும்.

அண்டங்கள் அனைத்தின் ஆதியாய் நின்று
அன்னை பராசக்தி தாயே
அசைவதும், இசைவதும் ஆக்கமும் அழிவும்
அருள்வதும் அவளது செயலே
இன்று நாம் இயங்கும் ஐம்பொறி பூதம்
இயற்கை யென்றாவதும் அவளே
நன்று நாம் போற்றி அவள் பதம் தொழுது
நலனெலாம் பெற்றுயர் வடைலேவாம்.

விண்ணும் மண்ணும் ஆனவளே
வேதமும் வீரமும் ஆனவளே
கண்ணும் கருத்தும் ஆனவளே
காளியும் துர்க்கையும் ஆனவளே
பஞ்ச பூதம் நவக் கோள்கள்
பகுத்திட முடியாச் சுடரொளிகள்
அண்டவெளியும் அவனியுமாய்
அணைத்து அறிவும் அணுவுமாய்
கொஞ்சும் அழகுக் குவைகளுமாய்
கோடி கோடி இன்பமுமாய்
எங்கும் நிறைந்து எழில் கொஞ்சும்
இயற்கைத் தாயே மலை மகளே

திருமால் இதயக் திருமகளே
சிறப்பும் செல்வமும் அருள்பவளே
பெருமாமலரில் உறைபவளே
பேணும் நலன்கள் அளிப்பவளே
நவதானியங்கள் நவமணிகள்
நல்கிடும் பற்பல நிதிக் குவைகள்
வளமாய் நிறைந்த வயல் வெளிகள்
வகை வகையான கனிதருக்கள்
தனமாய் நிறைந்த செல்வமெல்லாம்
குறையா தெமக்கருள் செய்வாயே
குலமாமணியே திருமகளே.

# அன்பும் சிவமும்

செய. பாலகிருஷ்ணன், M.O.L பிரான்ஸ்

**முகவுரை**

இன்றுள்ள அறிவியல் முன்னேற்றம் மருத்துவம், பொறியியல், தொலைக்காட்சி, தொலைபேசி போன்றவற்றில் இருப்பதோடு இலக்கியங்களிலும் மிளிர்வதைக்காணலாம். மேல் நாடுகளில் காணும் புதிய இலக்கியக்கண்ணோட்டம் தமிழ்மொழியிலும் தாக்கம் பெற்றுள்ளதை இன்று வெளிவரும் நூல்கள் தெளிவு படுத்துகின்றன. புதிய நோக்கம், புதிய பார்வை, புதிய சிந்தனை, புதிய அமைப்பு போன்றவை தோன்றுவதற்கு ஆய்வுக்கண்ணோட்டமே காரணமாக அமைகின்றது.

"கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ"

என்ற நக்கீரரின் சங்கப்பாடல் ஆய்விற்கு ஒரு சான்றாக அமைந்துள்ளதைக் காணலாம். எனவே, சங்ககாலம் தொடங்கி இன்று வரையில் ஆய்வுகள் பெருகிக் கொண்டே வருவதை நாம் நன்கு உணரலாம். ஆய்வு செய்வதன் நோக்கம் அதன் உட்பொருளை உணர்ந்து உணர்த்துவதற்கே யாகும். அதன் அடிப்படையில் அன்பு, சிவம் எனும் இருசொற்களை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆய்வு செய்வதற்கு ஆர்வமும் உழைப்பும் இன்றியமையாதவை. ஆர்வம் அன்பின் அடிப்படையில் தோன்றினால் நிலைத்து நிற்கும். அதனை,

"அன்பு ஈனும் ஆர்வமுடைமை" என்கிறார் வள்ளுவர். அடுத்ததாகஉழைப்பு. உழைப்பிற்கு முயற்சிதேவை. முயற்சிக்குச் சக்திதேவை. சக்தியின் அடிப்படையை சிவம் என்ற சொல்லால் கூறலாம்.

அன்பு என்பதைப் பால் என்று கொண்டால் அதன் உள்ளே கலந்திருக்கின்ற நெய்யை சிவம் என்று கூறலாம். அன்பு என்பதை மரமாகக் கொண்டால் அதன் வேர்களைச் சிவமாகக் கூறலாம்.

**அன்பு.**

கொடிய விலங்குகள்கூடத் தன் குட்டிகளிடம் அன்பாக உள்ளன. கொடுஞ்செயல்புரிந்து கொலை செய்து வாழ்பவர்களும் தம் மக்களிடம் அன்புடன் வாழ்கின்றனர். அன்பு எல்லோருக்கும் பொதுவானது. எல்லோரிடமும் உள்ளது. ஆனால் அதன் அளவுகள் மாறுபடுகின்றன. அதன் தன்மைகள் மாறுபடுகின்றன. அப்படிப்பட்ட அன்பு என்பதை நான்கு வகைப்படுத்தலாம்.

**ஒன்று**

தனக்கு உறவானவர் மீது கொள்ளும் அன்பு அதனைத் தொடர்புடையார்மாட்டு கொள்ளும் அன்பு எனலாம். இது சாதாரண நிலை, அனைவராலும் இயன்றது. இதனை அடிப்படை அன்பு என்றும் கூறலாம்.

**இரண்டு**

தம் மக்களிடம் கொள்ளும் அன்பு போலவே பிறரிடமும் அன்பு கொள்வது. இதனைத் தொடர்பில்லார் மாட்டு கொள்ளும் அன்பு எனலாம். இவ்வன்பிற்குத் தெளிந்த சிந்தனையும், உயர்ந்த நோக்கமும் வேண்டும். இதுமுதற்படியான தொடர்புடையார் அன்பிலிருந்து விரிவடைவது.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்னும் கருத்தோடு தொடர்புடையது.

**மூன்று**

பகைவர்களிடமும் அன்பு செலுத்துவதை மூன்றாவது அன்பாகக் கொள்ளலாம். இவ்வன்பு முன்னே கூறிய இரண்டைக் காட்டிலும் மேன்மையானது கடினமானது. இவ்வன்பிற்கு அடிப்படையானது பகையும், பற்றும் அற்ற தூய உள்ளம். ஆன்றோர்களும் சான்றோர்களும் இவ்வுள்ளங் கொண்டோர்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தரவாரா"

என்ற வானளாவிய உயர்ந்த எண்ணங்களுக்கு அடிப்படையானது.

**நான்காவது**

தூய அன்பு கைமாறு கருதா அன்பு. உலக உயிர்கள் அனைத்தின் மீதும் (ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை) அன்பு கொள்வது. பிற உயர்களின் துன்பத்தை வலியச் சென்று தானே ஏற்றுக் கொள்வது. இதனைத் தெய்வீக அன்பு அல்லது பூரண அன்பு எனலாம். முன்னே சொன்ன மூன்று அன்பினையும் உள்ளடக்கியது. ஒன்றிலிருந்து ஒன்றாகக் கிளைத்து முழுமையும் நிறைவும் கொண்டதே இவ்வன்பு.

"ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக் கீந்த செல்லா நல்லிசைப்
படுமணியானைப் பறம்பிற் கோமான்
நெடு மாப்பாரி...................................

என்ற கடை ஏழுவள்ளல்களில் ஒருவனான பாரியின் அன்பினையும்.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலாரின் அன்பையும் சான்றாகக் கூறலாம்.

முதல் அன்பான மனித அன்பானது நான்காவது அன்பான தெய்வீக அன்பாக வளரும் முயற்சிகளைக் கல்வி, வழிபாடு, பூசை, படையல், தியானம், நோன்பு போன்ற சொற்களால் விளக்கலாம். மனிதப்பிறவியின் நோக்கமே தெய்வீக அன்பினை அடைவதே யாகும். பிறந்தது முதல் இறக்கும் வரையில் ஒவ்வொரு செயலும் தெய்வீக அன்பினை நோக்கியே செல்லுதல் வேண்டும்.

**சிவம்**

உலக இயக்கத்திற்குக் காரணமான சொல்லை "சிவம்" என்ற சொல்லால் குறித்தனர். சிவம் - சைவம், சிவன் - சீவன் என்ற சொற்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. தமிழில் உள்ள பழமையான நூல் தொல்காப்பியம். அதன் சிறப்புப்பாயிரத்தை எழுதிய "பனம்பாரனார்"

"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு" என்ற உரைத் தொடரில் "சிவணிய" என்ற சொல்லை கலந்த மயங்கிய என்ற பொருளில் பயன் கொள்கிறார்.

முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களும் நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களும் கலந்த பேரியக்கத்தைச் சிவம் என்ற சொல்லால் கூறுதல் பொருந்தும்.

**ஓம்**

சிவம், ஓம் என்ற நாதத்தின் உட்பொருளாய் விளங்குகின்றது. ஓம் என்ற ஒலியின் தோற்றத்தை அறிவியல் முறையில் சிந்திப்போம். வானத்திலிருந்து பூமியைப் பார்க்கும்போது மேடுபள்ளங்களும் உயர்வு தாழ்வுகளும் மறைந்து பூமியனைத்தும் சமமாகத் தோன்றுவதுபோல் கடல்ஒலி, நீர், நிலம் வாழ் உயிர்களின் ஒலிகள், காற்றின் ஒலி அனைத்தும் சேர்ந்து "ஓம்" என்ற போரொலி (கூட்டு ஒலி?) உண்டாவதை உணரலாம்.

கண்களை இறுகமூடி ஓம் என்ற ஒலியை உணரும் போது கொழுந்து விட்டு எரிகின்ற தீபத்தின் ஓசையைக் கேட்க முடிகின்றது. நடு இரவில் கடல் நடுவே கண்களை மூடி தியானம்செய்தால் ஓம் என்ற ஒலியை உணர முடிகின்றது. "ஓம்" என்ற ஒலியைப் பிரணவ நாதம் என்கிறது சைவம். பிராணம், பிரணவம் என்ற சொல்லின் திரிபு. பிராணம் என்றால் உயிர். நாதம் என்றால் ஒலி. எனவே உயிரின் ஒலியை "ஓம்" என்ற சொல்லால் உணர்த்தினர்.

**நிறைவுரை.**

இது காறும் கூறியவற்றால் அன்பின் அடிப்படையில் தோன்றிய சிவமும், சிவத்தின் இயக்கமாகிய உலகமும் ஒன்றுக் கொன்று தொடர்புடையதைக் கண்டோம்.

"அன்பெனும் பிடியின் அகப்படும் மலையே" என்றார் வள்ளலார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதை யாரும் அறிகிலார்" என்பர் திருமூலர்.

அன்பிற்கு உருவமில்லை, நிறமில்லை, உடையில்லை, அளவில்லை, நாடில்லை, மொழியில்லை. அது போல் சிவத்திற்கும் உருவமில்லை, நிறமில்லை, எடையில்லை, அளவில்லை, நாடில்லை, மொழியில்லை. அன்பும் சிவமும் இரட்டைக் குழந்தைகள் எனலாம்.

## சான்றோர் சொல்லமுதம்

செய்ய விரும்பாமையும், திருட்டுத் தனமுமே சமூகத்தைப் பாழ்படுத்துகின்றன. பிள்ளையே இல்லாத ஒரு கோடீஸ்வரர் எல்லையே இல்லாத ஒரு வீடுகட்டி இருக்கிறார். கணவனும் மனைவியும் மட்டுமே மாடி ஏறி இறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் விரும்பினால் எத்தனையோ சுற்றங்களை வாழவைத்திருக்கலாம். மனக்கதவு அடைத்துக் கொண்டது. அதனால் வாசற்கதவும் அடைபட்டு விட்டது. கடைசியில், அவரது சமாதியாவது அந்த வீட்டிற்குள் அமையப்போகிறதா? என்றால் இல்லை. அவரது வேலைக்காரனை எரித்த இடத்திலேதான் அவரையும் எரிக்கப்போகிறார்கள். இத்தகைய மூடர்களுக்காகவே சைவசமயம் நிலையாமையைப் போதித்தது. எனவே, நிலையாமையை எண்ணி விரும்பாமையைக் கைவிடு. - கவிஞர் கண்ணதாசன்

**தந்தை எனப்படுபவர்:**

பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பின் உபதேசம் செய்தோன் - அறப்பெரிய
பஞ்சத்தில் அன்னம் பகர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப்பி தாக்கள் என எண்.


- தனிப்பாடல்

# LAW OFFICE

# T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சினைகள் எதுவாயினும் தமிழிலும், ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும், சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**REAL ESTATE - Purchase, Sale, Mortgage**
**காணி, நிலம், வீடு** வாங்குதல் விற்றல், அடமானம் வைத்தல்



**FAMILY LAW - Divorce, Separation**
**குடும்பம் தொடர்பான வழக்குகள்** விவாகரத்து, பிரிவு

**BUSINESS - Purchase, Sale, Incorporation**
**வர்த்தக ஸ்தாபனங்கள்** கொள்முதல், விற்பனை

**IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal**
**குடிவரவு** அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை. மேன்முறையீடு

**POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will**
**தத்துவப் பத்திரம்** சத்தியக்கடுதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து, ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்

## தி. ஜெகதீசன்

**Barrister, Solicitor and Notary Public (ONTARIO)**

**TEL:**

**Office: (416) 266-6154 Res: (416) 449-0358**
**Fax: (416) 266 - 4677**

**2620 Eglinton Ave. E., #201**
**Scarborough, ON M1K 2S3**

# திருமந்திரம் காட்டும் வாழ்வியற் கருத்துக்கள்

கா. கதிர்காமத்தம்பி

படைத்தற் கடவுளும் பார்ப்பானுமாகிய பிரமன் கட்டிய வீடே இந்தச் சரீரம் ஆகும். இந்தச் சரீரத்தின் உள்ளே மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பசுக்கள் காணப்படுகின்றன. இந்த ஐம்புலன்களைச் சரியாக நெறிப்படுத்தாது போனால் இவை ஐந்தும் மேய்ப்பான் இல்லாத மாடுகளைப் போல வெறிகொண்டு திரியும். ஐம்புலப் பசுக்களை மேய்ப்பதற்குரிய ஞானம் கிடைத்து வெறியும் அடங்கினால் இந்த ஐந்து பசுக்களும் பேரின்பமாகிய ஞானப்பாலைப் பொழியும். கள்ளப் புலன்களாகவும் வஞ்சப்புலன்களாகவும் இருந்த ஐம்புலன்களும் ஞானவிளக்குகளாக மாறிவிடும்.

*"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு*
*மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன*
*மேய்ப்பாரும் உண்டாயும் வெறியும் அடங்கினால்*
*பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே"*

என்ற திருமந்திரப் பாடல் மேற்கூறிய உண்மைகளை விளக்கி நிற்கிறது.

பேதைகள் உலகியல் இன்பங்களில் ஆசையை வைப்பார்கள். ஆனால் ஞானிகள் நிலையில்லாத பொருட்களில் பற்று வைப்பதைத் தவிர்த்து நிலையான பரம்பொருளிடத்தில் பற்றை வைப்பார்கள். நிலையான இன்பத்தைத் தரக்கூடியது இறைவன் மேல் வைக்கும் பற்றே என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். உலகப் பற்றுக்களை விடுவதற்கு இறைவனைப் பற்றிப் பிடிப்பது ஒன்றே வழி என்பதை "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகிறது. செல்வம், உடல் இளமை ஆகியவற்றில் நாம் நிறையப் பற்று வைத்து வாழ்கிறோம். வயதிலே முதியவர்களைப் பார்த்து வயதிலே இளையவர்கள் கிழடு, பழசு, என நையாண்டி செய்வதும் உண்டு. "காவோலை விழக் குருத்தோலை சிரிக்கிறது என நம்மவர்களிடம் ஒரு முது மொழியும் உண்டு. இளமையிலே கொட்டையாக பயனற்ற பொருளாக மாறிவிடும். பரிதாபகரமான நிலை ஏற்படும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

*"விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்*
*கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்*
*அரும்பொத்த மென்முலை ஆயிழையார்க்குக்*
*கரும்பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தேனே"*

அருள் இல்லாதவர்களுக்குத் தெய்வ உலகத்தில் இடமில்லாததுபோல பொருள் இல்லாதவர்களுக்கு இந்தப்பூவுலகத்தில் இடமில்லை என்பதை வள்ளுவரின் திருக்குறள் பல இடங்களில் விளக்குகிறது. பொருள் இல்லாதவர்களை எல்லோரும் எள்ளி நகையாடுவார்கள். பொருள் உள்ளவர்கள் அனைவரையும் போற்றித் துதிப்பார்கள். இல்லாதவரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை எல்லோரும் செய்வர் சிறப்பு.

திருக்குறள் இதனை விளக்குகிறது. புடவை மானத்தைக் காக்க வல்லதுபோல பொருளும் ஒருவருடைய மானத்தைக் காக்க வல்லதாகும். பொருள் இல்லாதவர்களை விட்டு உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் விலகிவிடுவார்கள். பொருளாதார வசதி இல்லாதவர்களால் தான தருமங்கள் எதுவும் செய்ய முடியாது. உலகியலில் அவர்கள் வெறும் நடைப்பிணங்களாகவே காணப்படுவார்கள். "பணம் இல்லாதவர்கள் பிணம்" என்பதே முதுமொழி ஆகும்.

*"புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை*
*அடையப்பட்டார்களும் அன்பிலர் ஆனார்*
*கொடையில்லை கோளில்லை கொண்டாட்டம்*
*- இல்லை*
*நடையில்லை நாட்டில் இயங்குகின்றார்கட்கே."*

எனத் திருமந்திரம் பொருளில்லாதவனின் பரிதாபகரமான நிலையைத் தெளிவாக விளக்குகிறது.

இறைவன் வெளிப்படும் இடங்களில் ஒன்றாக சிவனடியார் வழிபாட்டைப் பெரியபுராணம் குறிக்கிறது. தொண்டர்களின் உள்ளத்தில் இறைவன் வீற்றிருப்பதால் அவர்களுடைய பெருமை பேசுவதற்குப் பெரியது என்பதை "தொண்டர் தம்பெருமை பேசவும் பெரிதே" என ஔவையார் குறிப்பிடுகிறார். நடமாடும் கோயிலாகத் திகழ்கின்ற சிவனடியார்களுக்குச் செய்யும் பணி படமாடும் கோயிலாகிய இறைவனுக்குச் செய்கின்ற பணிக்குச் சமனாகும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

*"படமாடக் கோயில் பகவற்கொன்றீயல்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்*
*படமாடக் கோயில் பகவற்கது ஆமே."*

ஒவ்வொருவருடைய நாளாந்தச் செய்கையும் தெய்வீகத்துலாக் கோலில் நிறுக்கப்படுகிறது என்றே இந்து தர்மசாஸ்திரநூல்கள் கூறுகின்றன. உலகியல் சட்டங்களில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி பிரபஞ்ச வாழ்வில் நாம் செய்கின்ற தவறுகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் தெய்வத்திற்கு யாரும்

தப்ப முடியாது. பெரிய கங்காணியாக இருக்கின்ற இறைவன் உலகில் நடைபெறும் சகல செயற்பாடு களையும் நாளாந்தம் அவதானித்துக் கொண்டே இருக்கின்றான். இறைவனின் சர்வவியாபகத்தை உணராதவர்கள் களவுகள் பல செய்வார்கள். எல்லாப் பொருள்களிலும் இறையருள் கலந்திருப்பதை உணர்ந்தவர்கள் களவைத்தவிர்த்து நடப்பார்கள்.

*"கங்காணியில் லென்று கள்ளம் பல செய்வார்*
*கங்காணியாகக் கலந்தெங்கும் நின்றானைக்*
*கங்காணி கண்டார் களவொழிந்தாரே*

என்ற திருமந்திரப் பாடல் இறைவனின் பெருமையையும் வியாபகத்தையும் சிறப்பாக எடுத்து விளக்குகிறது.

திருமந்திரத்தில் அரசியல் கருத்துக்கள் பல கூறப்பட்டுள்ளன. நாட்டை ஆளும் அரசனுக்கு கல்வி அறிவு மிகவும் அவசியம் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கல்வி அறிவில்லாத அரசனை திருமூலர் யமனுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். கல்வி அறிவில்லாதவனை யமனுடன் ஒப்பிட்ட திருமூலர் அடுத்த வரியில் யமனிலும் மோசமானவனாக அவனைக் குறிப்பிடுகிறார் அரசன், அறத்துக்கு மாறாகவும் செயற்படுவான். ஆனால் யமன் தர்மம் தவறி என்றுமே செயற்படமாட்டான்.

*கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்*
*கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்*
*கல்லா அரசன் அறம் ஓரான் சொல் என்பான்*
*நல்லாரைக் காலன் நணுக நில்லானே*

எனத் திருமந்திரம் இதனைச் செப்புகிறது. தமிழ் மறையாகிய திருக்குறள் போல தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்திலும் வாழ்வியற் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் ஞானத் திருநூலாகத் திருமந்திரம் காணப்படுகிறது.

"அன்பை விட வலியசக்தி உலகில் எங்கும் இல்லை"

## சான்றோர் சொல்லமுதம்

*பித்தா! நான் இருப்பதெங்கே?*
*இங்கு இருக்க என்றால் எமன் ஒட்டான், இவ்விடம் விட்டு*
*அங்கு இருக்க என்றால் அயன் ஒட்டான் - எங்குவைத்து*
*தேறுவேன் இவ்வுடலை. பித்தா பிறைசூடும்*
*தாணுவே சொக்கநா தா.*

பித்தன் என்ற பெயரை உடையவனே! பிறைச் சந்திரனைச் சூடிய சொக்க நாதனே! நான் இவ்வுலகத்தில் வாழலாம் என்றால் இயமன் அதற்கு இடம் தரமாட்டான். இந்த உலகத்தை விட்டு அந்த உலகத்தில் இருக்கலாம் என்றாலோ நான்முகன் என்னை மீண்டும் பிறக்கச் செய்கிறான். எனவே என் உடலை நான் எங்கு வைத்துக் காப்பாற்றுவேன்.

இலக்கியம் விளக்கு, இலக்கணம் ஒளி. விளக்கினிடமாக ஒளி நின்று பொருண்மையைப் புலப்படுத்துவது போலவே இலக்கியங்களினிடமாக இலக்கணம் நின்று பொருளுண்மையை உணர்த்தும். எள்ளிலிருந்து எண்நெய் எடுபடுவதுபோல இலக்கியத்தினின்றும் எடுபடுவதே இலக்கணம். - நம்பி

**நண்பர்கள் முதலியோரைப் பாராட்டும் இடம்**

நேசனைக்கா ணாஇடத்தில் நெஞ்சார வேதுதித்தல்
ஆசானை எவ்விடத்தும் அப்படியே - வாச
மனையாளைப் பஞ்சணையில், மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில் - ஔவையார்

## இறைவனுக்குத் திருவருளே உருவம்.

இறைவன் திருவருளையே தனது வடிவமாக உடையவன். (சித்தி 64). மனிதர்களைப் போல, மாலையால் ஆகிய உடலைப் பெற்றவன் அல்லன்.

"அருளே உரு" (கந்தர் கலிவெண்பா 9) என்பர் குமர குருபரர். மணிவாசகரும் "பெருங் கருணைப் பேராறு" "அருள்நிதி தரவரும் ஆனந்தமாமலை" என்பர் (திருவாசகம்). மேலும் அவன் குணங்களும் உடற்கருவிகளும், செய்யுந் தொழில்களும், திருக்கை, திருவடி முதலிய உறுப்புக்களும் கையில் விளக்கும் சூலம், மழு முதலியனவற்றையும், அவனுடைய ஆடை, மாலை, இருக்கை ஆகிய அனைத்துமே அருள் வடிவாகும். இவ் வடிவனைத்தும் இறைவன் தன் பொருட்டு இன்றி உயிர்களின் பொருட்டே கொள்கிறான்.

- சித்தியார் 67

# SAIVA SIDDHANTHA PHILOSOPHY

D. MADURAY DARPAN (S. A)

Topic: A brief analysis of the factors restriction the spread of Saivism amongst the youth and the way forward into the new millenium.

Introduction:

As we enter the threshold of a new millenium, the world is preparing itself for a massive celebration whilst the scientific community busies itself with the "millenium bug". Science has advanced to such an extent, that our childhood fantasies of the silver screen-----the Frankenstein monsters are now reality. Consider the following developments: Recently scientists have successfully cloned a sheep and more recently have cloned a human embryo, but the frightening probability is that humans could be cloned in the future.

For the religious community, such advances in biological sciences, pose a ponderous problem and may even shake the fragile foundation on which our faith in God is based. If man is able to create life which up until now had been the sole preserve of God since eternity, then one may begin to doubt the very existence of a Being which we call God.

This is a serious challenge to the religions of the world, and more especially Saiva Siddhantham, since we have proclaimed to the world that Saivism is rational and scientific. Will our philosophers and religious leaders stand up to the rigours of this modern challenge. Most certainly Saiva Siddhantham can!

If one examines the verse about births in Manikkavasagar's Sivapuranam critically and analyse its scientific merits, then the answers may emerge, I am sure questions as cloning must have been clearly understood by the ancients.

Saiva Siddhantham:

Saivism is an ancient religion and many western scholars have enthused over its antiquity and intellectual brilliance. We Tamils no doubt are proud when accolades as "the choicest product of Dravidian Intellect" are showered upon us, especially by western scholars. There is no Tamil scholar who would pass an opportunity to quote one or more of these Accolades. The Tamil have indeed had glorious past and historical research attests to this fact. The demise of the Tamil language and religion corresponded to rise of brahminism in the south. Throughout the past centuries, Tamils succumbed under the economic might of the numerically small Brahmins and failed miserably to market the choicest product of Dravidian intellect. Because of their power derived from their superior education and economic influence, the Brahmins were able to promote their ideals. They deliberately hid Saiva knowledge so that the majority remained ignorant and became intellectually subservient to the new elite class.

By their power of domination they were able to subjucate the Tamils and every sphere of the live of the Tamils was dominated by the upper caste. The tragedy of this subjucation was the pristine Tamil works of ancient writers were deliberately adulterated so that the Brahmin would maintain his status quo. The numerous interpolations in our scriptures are no doubt due to the mischievous influence of the upper caste.

If Saiva followers world over procalim that Siddhantham is "final conclusion", theM why are more recent faiths better known and well supported.

Dr.K.Loganathan a renowned Tamil philosopher states in his book "Metaphsica Universalis" that Meyknder's SivajnanaBodham is the most profound philosophical treatise that has emerged not only on Indian soil but also possibly in the whole world. Mention the word philosopher to any educated Tamil and the names that invariably come to mind may include Kant, Socrates, Plato Nietzsche etc. NEVER Meykander. Why?

Saivite scholars need to ponder over this serious problem. The root of our problem may be traced back to our history. After the halcyon days of the Tamil kingdoms, there was a decline under the influence of weaker kings resulting in the ascendency of brahminism and the gradual subjucation of Tamils under the iniquitious caste systems. As the Tamils developed an inferiority complex, they were unable to assert themselves and were unable to showcase the Tamil heritage.

Another major flaw of the Tamil psyche is our deep distrust of our fellow Tamils and as a result we have become so disintergrated by our petty jealousies that we no longer pose a threat to anyone. Such is our pathetic plight that Tamils are unable unwilling to unite to promote or propogate our ancient heritage. Tamils do not have the will to stand up to the Brahmins who are leading the Tamil people away from saivism. Every Tamil is fully aware of the central and global issues that confront him, but he just despairs at the enormity of the problem. In the annals of human history, individuals

with a vision have changed the course of a nation's destiny. His Holiness Swami Sivanandhi Adikalar is one such visionary who is silently and effectively chartering the course of a nation's destiny. His Holiness Swami Sivanandhi Adikalar is one such visionary who is silently and effective chartering the course of Saivism into the new millenium. It is indeed a burdensome task, but he is equal to the challenge. If support is not forthcoming, then, the challenge becomes awesome even for a person of the stature of Swami Adikalar. Our courage to change our attitude must be the fuel to spur this dynamic individual to greater heights. One of the biggest yoke that is a serious hinderance to our spiritual and possibly our material progress we are freed from this mental yoke, we will definitely take a giant leap forward because we are Saivas. (Sinanoduku thedinoom thun theivom illai).

Why is it so difficult to accept what Thirumoolar said and so easy to accept what the Brahmins say? The answer is Fear. Every religion that wishes to dominate its followers by controlling their feeble minds is based on Fear. Only Saivism is based on Love. Anbe Sivam, Sivame Anbu.

In South Africa, the Indians number just over a million and nearly 60% of the Indians are Tamils. When they arrived in South Africa from 1860 onwards, they brought with them from the motherland the ancient traditions and culture. Through their foresight and perserverance many schools and temples were built. Saivism as we know it was never practised but Hinduism with it myriad gods and a host of rituals was in vogue. Animal sacrififice was the order of the day and on some festival days, hundreds of animals were sacrificed to the bloodthirsty gods. In a country of multicultural diversity, the European ruling class set the social mores of the day and Indian culture was tolerated with imperialistic arrogance, Our religious practises were openly ridiculed and the intellectual Indian who tried to rationalise these obnoxious practises was made to look ridiculous. Constant ridicule and a lack of understanding of the Saivite Religion turned many Hindus towards Christianity.

Just as Thirujnanasambandar was born to protect Saivism and the Tamil language in Tamil Nadu, A great soul, Veera Brahma Siva Soobramoney Guru Swamigal was born in South Africa in 1910 to protect and promote Saivism and the Tamil Language.

At the tender age of 14 years Guru Swamigal though unlettered in Tamil and through divine inspiration composed beautiful hymns in Tamil in praise of Namasivaya. Elders in the community were amazed at the philosophical knowledge possessed by this tender youth. He founded the largest Saiva organisation, the Saiva Siddhantha SAngum and when estate workers and municipal employees were being converted to Christianity in their droves, Guru Swamigal challenged the missionaries and was able to stem the tide of conversion.

Today, the youth are becoming increasingly frustrated with their parents who are largely ignorant of the doctrines of Saiva Siddhantha. A large percentage of the Tamils cling tenaciously to outmoded and meaningless practises. The annual kavady festival still draws significantly a large crowd of devotees and onlookers. Running on coals, piercing the body with needles, dragging large chariots whilst in a trance has now become a tourist attraction. The young are embarrased to say the least and they turn to Christianity in every increasing numbers. The adult has not given the young a meaningful alternative which is readily available in the glorious form of Saivism. I am sure that many expatriate Tamils are experiencing similar problems in other parts of the world.

Historically speaking, what is happening to Saivism today is not an entirely new phenomenon. During the period of our Samaya Archarigal, Jainism and Buddhism had been on the ascendancy. Courageous saints like Thirujnanasambandar and Thirunaavukarasar challenged the total onslaught against Saivism and succeeded in stopping the spread of Jainism and Buddhism. They successfully re-established Saivism as the religion of the Tamils. However, in the period following the Saints subtle influences crept into Saivism almost unnoticed in the form of Brahminism. Alien 'gods' were surreptiously introduced and priests of this caste introduced them into the temples of the south. Elaborate rituals were sent in place for each deity so that a year round visit to temples was imposed on the unsuspecting Tamils. Gradually, the poor souls were made reliant on these upper class Brahmins who became richer and richer on the spoils of their ill gotten gains. Saiva knowledge was kept away from the masses and it became the exclusive preserve of the upper caste. Even Tamil was replaced by a foreign and unintelligible Sanskrit language in the temples.

The Indian Tamil is burdened by a host of oppressive religious rituals that is keeping the Tamil ever subservient to he Brahmin. It is a millstone around our necks and even the greatest 19th century Saint, St.Ramaligar Adikal tossed his hands in frustration at the reluctance of the Tamils to change, so much so that he locked himself in his mutt and departed from earth forever. A sad commentary indeed!

We expatriate Tamils are very fortunate in that we are not under the shackles of these unscrupulous Indian priesthood. So it is easier for us to change.

The divine burden of carrying Saivism into the new millenium now rests on our shoulders. If a little boy and an octogenarian were able to take on the might of the Jains and succeed many centuries ago, then I am sure we too can achieve success especially with the divine inspiration of Swami Sivanandhi Adikalar and the eminent Saiva Souls from the Saiva mutts of India.

A NEW APPROACH.

In the modern world of economics, of a product does not sell as expected the company goes back to the drawing boards were new marketing strategies are devised to make the same product more appealing to the consumer. One of the major reasons for the failure of Saivism in the past was that it was not marketed like the other religions.

We need to treat Saivism as a product and strategise ways and means to market this gem of a product to the world at large. As a way forward, the WSC international should set up a think tank of Marketing experts to formulate probable strategies to 'sell' Saivism to the world. A new approach is necessary and progress can be achieved without compromising our principles. Let us examine the way we approach the study of our Saints and their compositions. For many decades our gurus have used source material which emanate from South India. These works emphasise the biographical detail of the saints and lay great stress on the miracles. The tragedy of this approach is that the soul stirring hymns are not analysed so that the youth and the adults could enjoy the excellence of the highwater mark of Indian philosophy. Generations have missed out. What is worse is that, this approach of the traditional story teller often created false imagery in the minds of the listeners. I have chosen a few excerpts from the Thevaram to illustrate what a new approach may achieve.

In the first of Thirujnanasambandar's Thevaram is the padigam 'Thodudaya Seviyan'. The story goes that the father left his child on the steps to take his ceremonial bath. When he emerged, he saw milk on the lips of the child and he was enraged, thinking that the child had taken milk from a stranger. Just as he was about to strike the child, the child burst into the now famous padigam. In the illustrations accompanying such a verbal description, we see Sivan and Uma seated on bull high above the temple dome. Children and even adults who have been accustomed to such and exposure begin to develop an erroneous perception of God. Strange as it may seem to the intellectuals. This perception is difficult to rectify even among adults.

The phenomenon of a child prodigy is not uncommon in the world and we could relate to Thirujanasambandar just as easily as we have accepted the many whiz kids. What should engage our minds are the following:

1. Why did the child "see" the vision of Lord Siva
2. Why was the father unable to see the vision of the Lord?
3 What is the inherent message of the padigam

Firstly, the child was a highly evolved soul and he could experience the "vision" internally as would a jnani. His pointing to the dome was to explain to the father that the statue that probably adorned the dome was the one who gave him the wisdom. He was not pointing to physical beings in the sky or some apparition.

Secondly the father was unable to experience this "vision" because his spiritual progress was hampered by his ego which is the consequence of his superiority complex. Is it not our ego that is main stumbling block in our spiritual path?

Over 2000 years ago Jesus Christ said "Suffer not little children to come unto me for only as little children can you enter the kingdom of heaven." The question that arises is "Whether Jesus meant that we must reverse our growth and become little babies to enter heaven? Absolutely absurd! What he meant was that all those desirous of entering the spiritual domain whilst living on earth must give up such evils as anger, greed, lust, envy, ego and pride and acquire the innocence of children to get the Grace of God. Was it not anger, pride and ego that made the father to raise a stick to stirke Thirujanasambandar? This approach in explaining our padigams is readily acceptable to the rational mind rather than lengthy biographical detail accompanied by misleading illustrations.

Dr.K Loganathan in his book Metaphysica Univeralis refers to a deep structure and a surface structure and for many decades the South African Tamil public and maybe others too have been scraping the surface structure whilst the gems of Saiva Philosophy lay hidden below the surface of the divine hymns.

Another great Saint, Sundaramoorthi Swaigal sang the elevation padigam "alandhan" when his physical sight was restored. Was Sundarar so elated at regaining his physical sight that made him go into raptures. If that were the case, then our Saint would not have been worthy of Sainthood. Kannappar Nayanar was prepared to lose his sight altogether to show his devotion to God and most definitely Sundarar's outpouring was not the result of regaining his sight. What one must remember of our saints is that they were ordinary people with an extraordinary love for Lord Siva. In the padigam

"alandham" Sundaramoorthi Swamigal expresses his delight at attaining the eye of wisdom which was opened. Now the Saint was able to enjoy he spiritual bliss denied him previously.

Our saints were courageous people and we too, need to take a leaf out of their books. For far too long we have been burdened with the term "Hindu" . As long as we labour under that misnomer, then we will continue to worship the numerous gods and goddesses. Once we break this shackle of being called Hindus and become proud to be referred to as Saivites, then our religious mindsets would become proud to be referred to as Saivites, then you religious mindsets would become focussed. Once we know who we are, then we would know where we are going. Right now Tamils are groping in the dark in so far as their religion and philosophy is concerned.

SAIVA ICONOGRAPHY AND SYMBOLS.

Statues and paintings have become an integral part of the Saiva Religion. Sometimes, icons can become a serious hinderance to spiritual progress. Saiva worshippers who have been raised in the traditional mould are so immersed in turuals that these "crutches" to worship have become the object of worship. So serious is the problem that it is difficult to tear the worshippers away from these icons.

Artists, no doubt, took the liberty of adding their own interpretations to their work, thus adulterating the philosophic significance of some icons. One of the greatest drawbacks of these visual representations is that they reduced God to human form and man in his wisdom began attributing human qualities to God. Once this feature took root, God became limited in His capacity to act out the five fold functions and as a result God began delegation tasks to a myriad lesser gods..... one to create rain, one wind etc. This in itself created a host of festivals for each god either asking for favours of offering some form of thank, which really suited the brahimins as they filled their coffers with the offerings. The negative aspect of this was the obvious shift in focus from Saivism. Siva was now relegated to the background and special days such as Sivarathri, Annamalai Deepam were set aside for Siva.

The Saiva religion is dominated by three symbols that is, the Siva Lingam, The Siva Nataraja and the Ardhanisvera. It is common knowledge that the Vedas refer to the dark skinned Tamils as "sisna devas" a term which was vigorously refuted by our great Tamil Scholar Maraimagal Adigal who took serious excepton to this insult and he made it known in no uncertain terms exactly what he thought of this insult.

Our icons are silent teachers of the great philosophy and it is incumbent upon all religious teachers to explain the esoteric meaning of these symbols.

The dance of Nataraja could be equated to the ceaseless motion of the neutrons and protons within the atom, that which animates life, The youth who relate to logic easily will now be able to relate to the icon. The Saiva principle of sat kariya vadam which is a principle of modern physical science can also be equated to the eternal and motionless dance of Nataraja.

The enigmatic Ardhaniswara has created numerous misconceptions in the youth who regards Sivan as half man and half woman. Physiologically, there is little that separates man from woman simple operations can transform a man into a woman and vice versa. This icon conveys a far deeper meaning than such a superficial interpretation. The world we live in is a world of opposites,.....calm/rough,deep/ shallow, good/ bad etc. As a result the human mind is confined to operate within these parameters and as long as it is confined by these limitations the human mind cannot comprehend the true nature of Sivam. Once these fetters of opposites disappear, then the Supreme is attainable.

In South Africa which has 600 000 expatriate Tamils, acceptance to a new approach is not a problem. South Africa Tamils are not altogether bound by seasonal temple worship. People do flock to temples during the Thai poosam kavady and Sivarathri but other than under normal circumstances, worship is confined to regular weekly congregational worship. It is very similar to a Sunday morning church service without the clapping and chanting, but a more sedate singing of the padigams of our saints interspersed with lectures on the Siva Siddhantha philosophy. It does not mean that we are not plagued by ignorance of our true religion as large number of people still perform traditional rituals. However, because of great Saiva reformers like Guru Swamigal, Thiru P.A. Pillay and others, organisations were established to promote and propagate Saivism as propounded by our great saints. Siva education is forging ahead. During every congregational gathering, the Siva lingam or the Siva Nataraja is the focal point of worship of the congregation. Members of the congregation participate fully in the prayer services by preparing lectures on the different aspects of the religion. Usually these talks last for about fifteen minutes.

With the establishment of the South Africa Branch of the WSC, we are positive to make greater strides in promoting Saivism as was practised by our Nayanamar Saints.

Namasivaya

வாழிய ! "சைவநீதி" வாழ்க ! நற்றமிழர்.

Are you concerned about saving Money
your insurance Cost, Mortgages and Taxes
or to have a better return
on your investments

Quality Coverage
Personal Service
Low Low Premiums
Monthly Payments Plan

# AUTO HOME LIFE
# COMMERCIAL

Representing over 50 Life Insurance and 15
General Insurance Companies

**TEL: (416) 750-9450**
**FAX: (416) 750-9509**

உங்கள் இன்சூரன்ஸ் தேவைகள்
எதுவானாலும் குறைந்த செலவில்
கூடிய பாதுகாப்புப் பெறத் தொடர்பு
கொள்ளுங்கள்

## RAJAH (Roger) BALENDRA

**Insurance Broker**

## Hughes & Associates Insurance Broker Inc.

**2390 Eglinton Ave. East, Suite 205**
**Near Kennedy Subway**
**Scarborough, Ont. MIK 2P5**

---

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் யாவும்

# INSURANCE
# MUTUAL FUNDS
# RRSP

# EASAN KRISHNA

# Sun Life

**245 FAIRVIEW MALL DRIVE**
**WILLOWADALE, ONTARIO M2J 4T1**

**TEL: (416) 493 - 9560**
**FAX: (416) 493 - 9399**

## வாழும் வழி -4

# நல்ல பெண்மணி

கலாநிதி. பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி

**வீ**ட்டுக்கும் நாட்டுக்கும் சிறப்புத் தருபவர்கள் பெண்கள். அவர்கள் திருமகள் சொரூபமாக விளங்குபவர்கள். இந்த விளக்கத்துக்கு இல்லறம் சிறந்த ஒரு இடத்தை வகுத்துக் கொடுக்கின்றது. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை என்பது முற்றிலும் பொருத்தமானது. சங்ககால இலக்கியங்களில் இந்த உண்மையை முழுமையாகக் காணுகின்றோம். மனைக்கு விளக்கு வாள் நுதல் என்று போற்றப்பட்ட காலம் சங்ககாலம். பெண் என்ற சொல்லுக்கே கண்ணால் காணும்பொழுது தோன்றும் சாந்தமான தோற்றத்தின் இயல்பே என்று உரை விரித்துள்ளனர். "மாதர்" என்ற சொல்லுக்கு அழகு, விருப்பு என்ற கருத்துக்களும் உண்டு. பெண்மைக்குரிய இயல்புகள் அடக்கம் பொறுமை, தியாகம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு ஆகியவையாகும். இதனாலே வீட்டை வீடாகவும் நாட்டை நாடாகவும் ஆக்கி வைக்கும் பெருமை பெண்ணினத்தின் கடமையாக அமைகிறது.

எல்லாவற்றிலும் மேலாகத் தொண்டு என்ற பணி பெண்ணினத்தை உயர்த்தி வைக்கும் பணியாகும். அந்தப் பணியில் ஈடுபடுவதற்குத் தியாகசிந்தை வேண்டும். பொன்முடியார் என்ற சங்ககாலப் புலவர் ஒரு தாயின் கூற்றாக.

**"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே"**

என்று தொடங்கி ஒரு நற்பிரசையை உருவாக்கி விடுவதில் தாயின் கடமையை முதலிலே வைத்துப் பாடியுள்ளார். தலைக்கடன் என்று குறிப்பிடப்படுவது முதன்மையான கடமையைக் குறிப்பிடுவதாகும். தாயின் மடியிலேயே பிள்ளையின் எதிர்காலம் கால் கொள்கிறது. தாய்க் குரிய இயல்பான பண்புகளினால் அவள் பெற்ற பிள்ளையும் நற்பண்புகளைப் பயின்று கொள்ளுகின்றது. இந்த உண்மையை உலகப் புகழ்பெற்ற உத்தமர்களை உருவாக்கிய தாய்மார்களின் வரலாறுகளிலிருந்து நாம் காணலாம். சுவாமி விவேகானந்தரை உத்தமனாகவும் ஒழுக்க சீலனாகவும் உலகுக்குத் தந்த பெருமை அவருடைய அன்னை யாருக்கே உண்டு. பட்டப் படிப்புக்காக மேற்கு நாட்டுக்குச் செல்ல இருந்த மகாத்மா காந்தி அடிகளை மூன்று சத்தியங்களைக் கேட்டு முழுமனிதராக்கிய சிறப்பு அவருடைய அன்னைக்கு உண்டு. இப்படியாகத் தாயின் மகத்தான கடமைகளால் நன்மக்கள் பலர் நாட்டை அலங்கரித்தனர்.

"மனையறத்தின் வேரனைஞர்" என்று சேக்கிழார் பெருமான் பெண்களைப் போற்றுகின்றார். ஒரு மரத்தின் வேரிலே கெடுதி ஏற்பட்டுவிட்டால் வேர் காய்ந்து மரமே சாய்ந்து விடும். அதே போன்று ஒரு பெண்மணியின் வாழ்வு இயற்கைக்கு மாறாக அமையுமானால் அக்குடும்பமே கெட்டு நாட்டுக்கும் பெரிய அழிவு ஏற்படும். வேரானது மண்ணுக்குள்ளே மறைந்திருந்து மரத்தையே முழுமையாகத் தாங்குகிறது. அதே போன்று உத்தமமான பெண்குலம் இல்லறம் என்ற சுமையைத் தாங்கி மாண்பு மிக்க செயல்களைச் செய்யவல்லது. அடிநிலையாகவும் அடித்தளமாகவும் இருப்பவர்களும் இவர்கள். ஒழுக்க நிலையிலும் கூட ஒரு ஆடவன் கெட்டால் குடும்பம் கெட்டுப் போகாது. ஆனால் ஒரு பெண்மணி கெட்டால் குடும்பமே அழிந்துவிடும்.

குடும்பத் தலைவனுடைய தகுதிக்கும் பெருமைக்கும் காரணமாக அமைபவர்கள் பெண்கள். கொண்ட கணவனின் வருவாய்க்கு ஏற்பக் குடும்பம் நடாத்த வேண்டியவர்கள் பெண்கள். கணவனை உயிராகப் பேணி மதிக்க வேண்டியவர்கள் பெண்கள். பிறந்த வீடு எவ்வளவு சிறப்பானதாக இருந்தாலும் புகுந்த வீட்டின் நிலைமைக்கேற்பத் தம்மை அமைத்துக் கெள்ள வேண்டிய கடமை பெண்ணுக்கு உண்டு. ஆனால் கணவனிடம் குற்றங்காணுமிடத்து உலகப் பழிச் சொல்லுக்கு ஆளாக்காது தகுந்த புத்திமதி கூறித் தடுத்து நிறுத்தியவர்களும் பெண்களே.

தெள்ளாறு என்ற இடத்தில் ஒரு ஊராட்சி மன்றம். அந்த மன்றத் தலைவி பெருங்கருணை என்ற பெயரைக் கொண்ட ஒரு பெண்மணி. அவளுடைய கணவன் மது போதையிற் பல தவறுகளைச் செய்து வந்தான். பெண்கள் நீராடச் செல்லும் இடங்களிற் சென்று தகாத வார்த்தைகளைச் சொல்லி ஏளனம் செய்வது அவனுடைய வழக்கம். இந்த முறைப்பாடு ஊராட்சி மன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இவனுடைய மனைவிதான் தலைமை தாங்கி நீதி வழங்கினாள். உயர்ந்த தண்டனை கொடுக்கப்பட்டது.

அதிகாலையிலே தொடர்ந்து நாற்பத்தெட்டு நாள்களுக்கு அங்குள்ள கோயில்களுக்குச் சென்று சரியைத் தொண்டு செய்து விளக்கேற்றி வரவேண்டும் என்பது அந்தத் தீர்ப்பாகும். தலைமை தாங்கிய அம்மையாரே மறு நாட் தொடக்கம் இந்தக் கடமைகளைச் செய்து வந்தாள். இதைக் கண்ட பெண்களுக்கு பெரிய அதிசயம். கணவனின் தண்டனையை மனைவி ஏற்றுக் கடமை புரிகிறாளே என்று பெருங்கருணையிடம் உசாவினர். அவள் கூறியவை பின்வருமாறு.

"நீதிபதி என்ற முறையிற் குற்றத்திற்கேற்பத் தண்டனை கொடுத்தேன். மனைவி என்ற முறையில் அவருடைய துன்பத்தில் பங்கேற்கிறேன்". இதனாலே கணவனும் நாளடைவிலே திருந்திவிட்டான். ஊரவர்களும் அப்பெண்மணியின் மாண்பான செயலைப் பாராட்டினார்கள்.

இவ்வாறு இல்லறமாண்பினை ஓம்பிய பெண்ணினத்தைப் பாராட்டும்போது பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்ற கேள்விதான் அனைவராலும் எழுப்பப்படுமன்றோ.

# சைவசமய சாரம்

அமரர் சு. சிவபாதசுந்தரனார்

## 1. கடவுள்

*அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்*
*அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி*
*ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்*
*நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன*
*இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்*
*சிறிய வாகப் பெரியோன்* - மாணிக்கவாசகர்,

ஆகாயத்தை இராக்காலத்திலே அண்ணாந்து பார்த்தால் அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னி விளங்குவதைக் காணலாம். இந்த நட்சத்திரங்கள் வெகு தூரத்திலே இருத்தலாற் சிறியவைகளாகத் தோன்று கின்றன. அவைகள் உள்ளபடி மிகப் பெரியவைகளேயாம். சூரியன் பூமியிலும் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரியவைகளே. ஆதலால், இந்தப் பூமியையும், சூரியனையும், எண்ணில்லாத நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார் தான் சொல்ல வல்லவர்.

இந்த அளவில்லாத பெருமையை உடைய கடவுள் அன்பையே வடிவமாக உடையவர்.

"*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.*"

திருமூலர், திருமந்திரம் - முதற் தந்திரம், பதிகம் 25

ஆதலால், அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாததாகவே இருக்கும். பெற்ற தாயானவள் குழந்தையிடத்தே எவ்வளவு அன்புடையவளாய் இருக் கிறாள். கடவுளுடைய அன்பு தாயினுடைய அன்பினும் கோடானுகோடி மடங்கு அதிகமாய் இருக்குமல்லவா? தாயைக் காணும்போது குழந்தை எவ்வளவு ஆனந்தம் அடைகிறது. ஆதலால், தாயினும் பார்க்க அதிகமான அன்பையுடைய கடவுளை நினைக்கும்போதும், அவரைக் கோயிலிலே காணும்போதும் நாம் எல்லையில்லாத ஆனந்தம் அடையவேண்டும். நமது மனம் கரைந்து உருகுதல் வேண்டும்.

"*மெய்தா னரும்பி விதிர்விதிர்த்*
*துன்விரை யார்கழற்கென்*
*கைதான் தலைவைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பியுள்ளம்*
*பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி*
*சயசய போற்றியென்னும்*
*கைதா னெகிழ விடேனுடை*
*யாயென்னைக் கண்டுகொள்ளே.*"

மாணிக்கவாசகர், திருவாசகம்-திருச்சதகம், பதிகம் 1

தாய் தந்தையர் குழந்தைக்கு வேண்டிய ஊண், உடை முதலியவற்றை, அக்குழந்தை கேளாமலிருக்கவே கொடுத்து விடுகிறார்கள். குழந்தைக்கு வேண்டியவற்றுட் சிலவற்றை அவர்கள் அறியமாட்டார்கள். அவற்றைக் குழந்தை அவர்களுக்குச் சொல்லிய பின்பு அவர்கள் கொடுக்கிறார்கள். கடவுள் எல்லாம் அறிபவர். ஆதலால், நமக்கு வேண்டிய யாவற்றையும் தாமாகவே தருவர். நாம் அவரை ஒன்றுங் கேட்க வேண்டியதில்லை. அவரை வணங்குதலும், துதித்தலும், நினைத்தலும், பூசித்தலுமே நாம் செய்ய வேண்டியவை.

"*பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினியே*"

மாணிக்கவாசகர், திருவாசகம் - பிடித்த பத்து, பதிகம் 9

இந்த உடம்பு நம்மோடு எப்போதும் இருப்பதன்று. ஒரு நாளைக்கு நாம் இதைவிட்டு விலக வேணடிவரும். அப்போது நமது தாய் தந்தையரும் சுற்றத்தவரும் நண்பரும் நம்மைவிட்டுப் பிரிந்து விடுவார்கள். நமது பொருள் பண்டங்களும் தொடர்பற்றுப்போம். கடவுள் ஒருவரே எக்காலத்திலும் எல்லையில்லாத அன்பைச் சொரிந்து கொண்டு நம்மோடு துணையாய் நிற்கும் மெய்ப்பொருள்.

"*ஈன்றாளு மாய்எனக் கெந்தையு*
*மாயுடன் தோன்றினராய்*
*மூன்றாய் உலகம் படைத்துகந்*
*தான்மனத் துள்ளிருக்க*
*ஏன்றான் இமையவர்க் கன்பன்*
*திருப்பா திரிப்புலியூர்த்*
*தோன்றாத் துணையாய் இருந்தனன்*
*தன்னடி யோங்களுக்கே.*"

திருநாவுக்கரசர், தேவாரம்-திருவிருத்தம், பதிகம் 95

ஆதலால், நம்முடைய மனம் அவரையே நாடுதல் வேண்டும். நமது சீவனத்துக்கு வேண்டிய தொழில்களை நாம் செய்யும்போது நமது மனம் அவற்றிலே செல்லுமாயினும் அதன் நாட்டம் எப்போதும் கடவுளிடத்திலேயே இருத்தல் வேண்டும்.

"*நாடகத்தா லுன்னடியார்*
*போனடித்து நானடுவே*
*வீடகத்தே புகுந்திடுவான்*
*மிகப்பெரிதும் விரைகின்றேன்*
*ஆடகச்சீர் மணிக்குன்றே*
*யிடையறா வன்புனக்கென்*
*ஊடகத்தே நின்றுருகத்*
*தந்தருளெம் முடையானே*"

மாணிக்கவாசகர், திருவாசகம்-திருச்சதகம், பதிகம் 11

"இரவும் பகலும் துதிசெய் திருநாள்
பரவும் பரிசே பரிசின் றருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே."

அருணகிரிநாதர், கந்தரனுபூதி

# மனத்துக்கண் மாசிலனாதல் அறம்

பண்டிதர் சி. அப்புத்துரை

"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ........................................"

என்பது புறநானூறு என்னும் சங்க காலத்திய நூலில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் என்னும் பெயரிய புலவர் வாழ்த்திப் பாடியதாக உள்ளதொரு பாடலின் பகுதியாகும். மற்றொரு நூல் பற்றிய செய்தியை இங்கே ஆலத்தூர்கிழார் குறிப்பிடுவதை அவதானிக்கின்றோம். வாயாற் சொல்லப்படவோ, மனதாற் சிந்திக்கப்படவோ கூடாத கொடிய செயலாகிய கோவதை முதலிய வற்றுக்குக்கூடச் சிலவேளை விமோசனங் கிடைக்கலாம். ஆனால், ஒருவன் செய்த நன்றியை மறந்தவனுக்கு நரகம் தவிர்க்கமுடியாததொன்று என்று அறநூல் கூறியிருக்கின்றது என்கின்றார். அறம் பற்றிய தெளிவான கருத்துக்களைத் தரும் அந்த நூலை அறநூலென்றே குறியீடு செய்கின்றார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

- குறள் 110

என்பது அந்தக் கருத்தினைத் தந்து கொண்டிருக்கும் குறட்பாவினைத் தன்னகத்துக் கொண்டதாகிய திருக் குறளெனும் அறநூலே அப்பாடலிற் சுட்டப்பட்டதாகும்.

வையத்து வாழ்வாங்கு வாழ்தலே அறம் என்று அந்தத் திருக்குறள் பேசுகிறது. வாழவேண்டும் முறைமைபற்றி, ஒழுக்க நெறி பற்றி, செய்யப்பட வேண்டுவன பற்றிய சிந்தனைகளையெல்லாம் தந்து கொண்டிருப்பதனாலேயே அது அறநூல் எனப்பட்டது. அந்த நூல் தருஞ் சிந்தனைகளெல்லாம் ஒழுங்கான வாழ்வியனலக் காண வழிப்படுத்துவனவாக அமைந்தவை. எமது நேரிய வாழ்வே அறத்தின் முடிந்த முடிவு எனலாம்.

செயல் எதுவாயினும் அது அறத்தின் வழிப்பட வேண்டுமென்றும், அறத்திற்குப் புறம்பானவை வாழ்விற்கும் புறம்பானவையே என்றும், எல்லோருக்கும் பயன்படக்கூடியவற்றையே செய்ய வேண்டுமென்றும், பயன்பட வாய்ப்பில்லை என்று கண்டவிடத்தும் மற்றையோர்க்குத் துன்பந் தராதவற்றையே செய்ய வேண்டுமென்றும் நாம் தெளிந்து கொள்ள வேண்டும். அறத்தின் வழியதாய வாழ்வியலே அதுதான்.

மனத்துக்கண் மாசிலனாகி இருப்பதுதான் அறம் என்பதாகத் திருவள்ளுவருங் கூறுவர். மாசு-குற்றம், மனங் குற்றமற்றிருப்பதுதான் தூயதாகிப் புனிதம் போற்றுவதாக இருப்பதுதான் அறம் என்று விளங்கிக் கொள்கின்றோம். மனம் மாசுடையதாகி இருப்ப, அண்டை அயலிலுள்ளவர்களுக்குக் காட்டிக் கொள்வதற்காக -"நல்லது செய்கின்றார்" என்று போற்ற வேண்டுமே என்பதற்காகச் செய்யப்படுவன காட்சிக்குரியனவேயன்றி அறமாக முடியாது. அவ்வகையின "ஆகுல நீர" என்பது வள்ளுவர் கருத்து.

இங்கே எமது மனதிற் படுவதொன்று மனம் புனிதமுடையதெனின் அங்கு நிகழ்வனவெல்லாம் புனிதமான சிந்தனைகளாகவே இருக்கும். புனிதமான சிந்தனைகள் புனிதமுடைய செயல்வழிச் செல்பவை யாகவே இருக்குமென்பது துணிவு. அதுவே அறமென்று பேசப்படுவது. இந்த உண்மையை மற்றோர் செயலுடன் பொருத்தி உண்மையின் உயர்வு காணமுடியும். "அறஞ் செய விரும்பு" என்பது தமிழ் மூதாட்டி ஔவை சொன்னதொரு வாக்கியம். "அறஞ் செய்" என்று சொல்லாது, "அறஞ் செய விரும்பு" என்று அந்தக் கிழவி சொன்னாளே! அங்கேதான் கிழவியின் ஆளுமையைப் பார்க்க முடிகிறது. "செய்" என்று சொல்லியிருந்தால், இவர் யார் சொல்வதற்கு என்று எதிர்ப்புணர்வு ஒன்று தோன்றியிருக்கலாம். "விரும்பு" என்னுஞ் சொல்லுப யோகம் வந்தமையால் எதிர்ப் புணர்விற்கு இடமில்லாது போய்விட்டது. "கட்டாயம்" என்ற நியதி இல்லாது போனமைதான் அப்படியான சமநிலைக்குக் காரணமாகும். அஃதே போன்றதும், வேறானதுமான ஒரு சிந்தனையை, "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" என்னும் தொடரிடத்தும் பார்க்க முடிகின்றது. மாசு அற்றிருத்தல் அளவினதே அறம். மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்கூட இனிமையாக இருக்கும் என்று ஔவை கூறினாரல்லவா! மாசற்ற மனதை உடையவனது செயலும் மாசற்றதாகவே இருக்கும் என்று யாம் துணியவேண்டும். அறம் என்ற வகையில் அதைச் செய் இதைச் செய் என்று சொல்லாது உன் மனதைத் தூய்மையுடையதாக வைத்துக் கொள் என்றால் எல்லோரும் விருப்போடு ஏற்றுக்கொள்வார்கள். காரணம், மனதைத் தூய்மையாக

வைத்திருப்பதற்குப் பொருட்செலவோ, உடலுழைப்போ இப்பொழுது வேண்டியதில்லை என்பது. ஆகவே, எல்லோராலும் எளிதாகச் செய்யப்படக்கூடியதாக - ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக அமைகின்றது.

**அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல**
**மற்றைய தேற்றா தவர்** குறள் 289

என்னும் மற்றொரு குறளுக்கு விளக்கவுரை கண்ட பரிமேலழகர் "தீயநினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர்" என்று குறட் பொருள் எழுதி, "நினைத்தலுஞ் செய்தலோ டொக்கும்," என்று விளக்கியுள்ளார்கள். எனவே "நினைவு நல்லது வேண்டும்" என்ற பாரதியார் சொல் போற்றப்படவேண்டியதே!

பெரியபுராணம் என்னும் பன்னிரண்டாந் திருமுறையில் வருவதொரு செய்தி. மனுநீதிகண்ட சோழன் மகன் வீதவிடங்கன் தேரில் உலாவருகின்றான். ஓர் இளைய ஆண் கன்று தேர்ச்சில்லில் அகப்பட்டு இறந்துபடுகிறது. அவன் மன்னன் மைந்தன்; இறந்தது பசுக்கன்று தானே. பொருட்படுத்தாமல் உலாவைத் தொடர்ந்திருக்கலாம். வீதிவிடங்கன் அவ்வாறு செய்யவில்லை. அவன் மனுநீதிகண்ட சோழன் மைந்தன்!! தேரினின்றுங் கீழே குதித்தான். இறந்த கன்றின் தாய் படும் வேதனையை அவதானித்தான். பதறினான். அறம் பற்றியதொரு சிந்தனை அவன் மனதில் நிழலாடுகின்றது. அதுதான் அறமென்றால் எந்தை அறியுமுன்பாகவே அதனைச் செய்வோம் என்று துணிகின்றான்.

"வந்தவிப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த வாற்றா லாற்றுவ தறமே யானால்
எந்தையீ தறியா முன்னம் இயற்றுவன்........................................
....................................................................................................."

என்று துணிகின்றான். இங்கே அவன் நல்ல சிந்தை, ஆனால் முதிர்ச்சியடையாத சிந்தை அறம் பற்றி எண்ணுவதைப் பார்க்கின்றோம். சுயநல நோக்கில் ஊறித் திளைத்த ஒரு கூட்டத்தினரது சூழற் பழக்க வாசனை வீதிவிடங்கனையும் அப்படி எண்ண வைத்துளது. வந்தவிப் பழியை மாற்றும் வழி இதுதான் என்றால் இப்படிச் செய்வோம் என்று அவனுள்ளம் துணிகின்றது. சரியானது எதுவோ அதைச் செய்வோம் என்று அவன் துணிவதை அவன் உரைகொண்டு உணரமுடிகின்றது. எனவே அந்த உள்ளம் அறவழிப்பட்டதுதான் என்று சிந்திக்கலாம். முதிர்வற்ற நிலை குறைபாட்டிற்குரிய காரணமாகலாம்.

தன் அமைச்சர்களுடன் உரையாடும்போது, மனுநீதிகண்ட சோழமகாராசா சொன்னதொரு அறம்பற்றிய சிந்தனை எமக்கு மகிழ்வு தருவது.

மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் மற்றுஉயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ

அரசியல் மக்களை மையமாகக் கொண்டது. எந்தவொரு துன்பமும் மக்களுக்கு வராது காக்க வேண்டிய பொறுப்பு மன்னனுடையது. அதுதான் அறம் என்று மன்னனாற் கண்டு கொள்ளப்பட்டது. அந்த உணர்வினாலேதான் தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன் மைந்தன் மருமந்தன் தேராழி உற ஊர்ந்தான். வேந்தன் காட்டிய அறம் நீதி வழியிலானது. எல்லோருக்குமே பொருந்துவதாய் அமைவது. அமைச்சர்கள் குறிப்பிட்ட அறம் சில தேவைகளை நிறைவு செய்வதுடன் சம்பந்தப்பட்டது. காலம் இடம் என்பவற்றுக்கேற்ப மாற்றம்பெற வல்லது. மன்னன் அறம் காலத்தாலோ இடத்தாலோ மாற்றம் பெற முடியாதது.

"தருமம் என்றொரு பொருளுளது", என்ற உபதேசம் காசிப முனிவரால் சூரபதுமன் முதலியோருக்கு வழங்கப்படுகிறது. "இருமை இன்பத்தையும் கொடுக்க வல்லதாகிய அத்தரும இயல்பினைப் புலனடக்கம் உள்ளவர்களாலேயே உணரமுடியும்" என்றும் விளக்கம் தொடருகிறது. கந்தபுராணத்துக் காசிபர் உபதேசப் படலத்தில் இந்த விளக்கங் கிடைக்கிறது. ஐம்புலன்களையுங் கட்டி ஆளத்தெரிந்தவர்களுக்குத்தான் தரும இயல்பை உணரமுடியும் என்று தெரிகிறது. பஞ்சபாண்டவர்களுள் மூத்தவராய தருமபுத்திரர்தான் இதற்கு உதாரணபுருசர் என்பர்.

பெரியபுராணத்துக் காரைக்கால் அம்மையார் புராணப் பகுதியில் ஓரிடம் "இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டு கின்றார்" என்று தொடங்கும் திருப்பாடலின் இறுதி. "அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்", என்று நிறைவுறுகின்றது. இங்கே இறைவனை "அறவா" என்று அம்மை விளித்துள்ள மையைப் பார்க்கின்றோம். "அறவாழி அந்தணன்" என்னும் திருக்குறள் பாடலும் இங்கு சிந்தனைக்குள்ளாக வேண்டியது. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாய சிலப்பதிகாரம் என்னும் நூலில் "அரசியல் பிழைத்தோர்க் கறம் கூற்றாவதும்..." என்றுள்ள அடியில் அறம், கூற்றாமாறு பேசப்படுகின்றது.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. .... அவற்றுள் அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.

என்பது திருக்குறள் -பரிமேலழகர் உரைப்பாயிரம்

அறத்தின் பயன் இதுதான் ஆராய வேண்டி அவசியமில்லை. பல்லக்கினுள்ளே இருப்பவனையும் அதனைத் தூக்கிச் செல்பவனையும் கொண்டு மதிப்பீடு செய்யலாம் என்றும் வள்ளுவர் கூறுவார்.

# ஆன்மா அநாதியானது

இளவாலை ஆ.தா.ஆறுமுகம்

வேதம், ஆகமம், திருமுறை, சைவசித்தாந்த சாத்திரம் ஆகியன ஆன்மா பற்றிக் கூறிய கருத்துக்கள் சிலவற்றை, இக்காலத்துக் கண்ணோட்டத்தில் நோக்க முற்படுகிறது இக்கட்டுரை.

பதி, பசு, பாசம், முப்பொருள்கள்; அவை அநாதியானவை; எனவே, அந்தமும் இல்லாதவை. இது சைவசித்தாந்தத்தின் சிறப்புக் கொள்கை. "பதியினைப்போற் பசு, பாசம் அநாதி" என அழுத்தமாகக் கூறப்படுகிறது.

## பதி ஒன்றுளது

மணிக்கூட்டுக் கம்பிகள் இயங்குகின்றன. உள்ளே இருக்குஞ் சில்லுகள் ஒன்றையொன்று இயக்குவதன் பயனாகக் கம்பிகள் இயங்குகின்றன; அம்மணிக் கூட்டுக்குச் சாவி முறுக்கி இயங்க வைத்த மனிதன் ஒருவன் உளன். கண்டிருக்கிறோம். தானாகவே ஒரு ஒழுங்கு முறையில் இயங்கி உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் (Automatic machines) இன்று பல உள. அவற்றை அங்ஙனம் இயங்க நெறிப்படுத்திவிட்ட பொறியியல் வல்லுநன் ஒருவன் உளன். சனிக்கோளை ஆராயச் செல்லுகின்ற விண்கலத்தை வழிப்படுத்து கின்றது நாசா நிறுவனத்தின் கணனி. அதற்குத் துணையான கணனிகளும் அநேகம். அவையெல்லாம் இயங்க வேண்டிய ஒழுங்குமுறையினை முன்னரே ஏற்பாடு செய்துவைத்துப் (programming) பார்த்துக் கொண்டிருக்கிற விஞ்ஞானிகளும் இருக்கிறார்கள். இவை இயங்குவதைக் காணும்போது இவற்றை இயக்குபவரைக் காண்பதில்லை. அம்மனிதன், பொறியியலாளன், விஞ்ஞானி போன்று பிரபஞ்சம் இயங்க ஒழுங்கு முறையினைச் செய்து கண்காணித்துக் கொண்டிருப்பவன் ஒருவன் உளன். அவனே பதி. Readers Digest என்ற சஞ்சிகையில் தலைசிறந்த விஞ்ஞானிகள், கணிதப் பேராசிரியர்கள் இணைந்து "கடவுள் இருக்கிறார் என்பதற்குச் சான்றான ஏழு காரணிகள்" என்ற ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தனர். அக்கட்டுரை மீளவும் வெளியிடப்பட்டிருந்தது. அதனை வாசிக்கும் பாக்கியம் பெற்றிருந்தேனாயினும், அதன் பிரதியைப் பாதுகாப்பாக வைத்திருந்தும், யாழ்ப்பாணத்து நிலைமை காரணமாக இழந்து விட்டேன். உங்களிற் சிலரிடமாவது அப்பிரதி இருக்கக் கூடும். படப்பிரதி அனுப்பினால் நன்றியுடைய வனாவேன்.

## ஆன்மா என ஒன்றுளது

உடல் இயங்குகிறது; தாவரங்கள் கூட முளைத்து, வளர்ந்து, பூத்துக் காய்த்து இனம் பெருக்குகின்றன. இவ்வகை இயக்கம் காரியம். இயக்கத்துக்குக் காரணி ஒன்று இருத்தல் வேண்டும். இவ்வகை இயக்கத்துக்குக் காரணியே ஆன்மா எனப்படுகிறது.

## ஆன்மா எனப்படுவது எது?

பல்வேறு சமயவாதியர் தூல உடல், புறக்கரணங்கள், அந்தக் கரணங்கள், பிராணவாயு என்பவற்றுள் ஒன்றை அல்லது கூட்டத்தை ஆன்மா என்பதன்றி, பிரமமே ஆன்மா எனவும் வாதிடுவர். பிரமம் ஒழிந்தவையெல்லாம் அசித்துகள் எனவுங் கூறுவர். இவற்றுள் ஒன்றோ தொகுதியோ சித்தாகிய ஆன்மாவாக முடியாது எனச் சித்தாந்த சாத்திரங்கள் மறுத்துரைக்கின்றன. இறந்த பின்னும் உடல் எஞ்சியிருக்கிறது. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட விலங்குகளின் உடல்கள். மனித மம்மிகள் இன்றுங் கிடைக்கின்றனவே! மனிதப் பிறவியிலேகூட ஐம்பொறிகளில் ஒன்றும் பலவும் புலனுணர்வின்றியிருப்பது கண்கூடு. கோமா (coma) எனப்படும் மயக்க நிலையில் ஐம்புலன்களுஞ் செயற்படாத நிலையிற் பல நாளிருந்து உயிர் துறந்தோர் பலரன்றோ. இன்னும் பாம்புகளும் மீன்களும் செவிப் புலனற்றவை; அவை நில, நீர் அதிர்வுகளை மெய்ப்பொறியாலேயே உணர்ந்து பிறபிராணிகளின் வருகையை அறிகின்றனவாமே! தாவரங்கள் ஓரறி வுயிர்கள் எனப்படுகின்றன; எனவே அவ்வுயிரிகளுக்கு ஏனைய நான்கு பொறிகளும் இல்லை என்றாகிறதே! அவற்றுக்குப் புறக்கரணங்களில் நான்கே இல்லையெனில் அந்தக் கரணங்களும் இருப்பதில்லை என்பது தெளிவாகும். பிராணவாயுவே ஆன்மா என்ற கருத்துப் பலரிடையே வலிதாகக்கூட உளது. பிராணவாயுவின் உள், வெளிச்சுவாசம் நின்று விடுவதையே இறப்பு என்பது அவர்களுடைய வாதம். ஒரு உடல் எவ்வளவு காலத்துக்கு இயங்க வேண்டும். அதாவது அவ்வுடலில் ஆன்மா தங்கியிருக்க வேண்டும் என்பது அது பிறக்க முன்னரே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது.

இன்றைய புதுவகை இயந்திரம் எவ்வளவு நேரத்துக்கு எவ்வாறு இயங்க வேண்டும் என அதனை இயக்குங் கணனியிலே முன்னாடியே ஒழுங்கு படுத்தப்பட்டு விடுகிறது. அது இயங்கும்போது வளியை அதாவது காற்றை உள்ளிழுக்க, அவ்வளி எரிபொருள் வெடிக்க உதவுகிறது. வெடித்து இயங்க இயங்கக் கழிவு புகையாக வெளியேறுகிறது. இயந்திரம் இயங்கும்போது, இயக்கத்துக்கு உதவியாக வளி, உள்ளிழுப்பும் இயங்கியபின் கழிவுப்புகை வெளியேற்றமும்

நிகழுகின்றனவேயன்றி, அவை இயந்திரம் இயக்கத்துக்குக் காரணிகள் அல்ல. உதவியே.
மேலும், முனிவர்கள், சித்தர்கள் சுவாசித்தலின்றிப் பல்லாண்டு காலமாகத் தியானத்திலீடுபட்டிருந்ததாக நூல்கள் கூறும். ஏன், அண்மையிற்கூட சிறு பெட்டியிற் படுத்திருக்க வைத்து, நிலத்தினுள்ளே புதைத்தது மட்டுமன்றிக் காற்றே புகாதவாறு முன்னேற்பாடுகள் பலசெய்திருந்தனராம். சிலநாள் கழித்துத் திறந்தபோது சாதாரணமான ஆள்போல இந்தியாவிலே ஒரு யோகியும், மேலைநாட்டிலே ஒரு மந்திரவாதியும் வெளியே வந்ததாகப் பத்திரிகைச் செய்தி படித்திருந்தேன். உங்களிற் பலரும் வாசித்திருப்பீர்கள். வாசித்தவர்கள் சாட்சி. எனவே, தூல உடல், புறக்கரணம், அந்தக் கரணம், இவற்றின் தொகுதி, பிராணவாயு என்பவற்றில் எதுவும் ஆன்மா எனக் கொள்ளப்படத் தகுதியற்றவை. பிறவித் துன்பத்தில் ஆழும் ஆன்மா பிரம்மமாகுமா?

## ஆன்மாக்கள் எண்ணில்லாதன

நாம் இங்கே கூடியிருந்து கேட்கிறோம்; வெளியே பலர் உலாவுகின்றனர்; உலகிற் பல்வேறிடங்களிலும் மக்கள் பல்வேறு வேலை செய்து கொண்டிருப்பதை உணருகிறோம். விலங்குகள் சில வேட்டையாடுகின்றன; பல வேட்டையாடப்படுகின்றன. ஒரு மரம் முளைக்கிறது; மற்றொரு மரம் பூக்கிறது. இங்ஙனம் ஒரே வேளையிற் பல செயல்கள் நிகழ்கின்றன. ஒரு ஆன்மா ஒரே சமயத்திற் பல்வேறு உடல்களில் வாழ்வதும் பல்வேறு வகையிற் செயற்படுவதும் சாத்தியமானதன்று. எனவே, ஒவ்வோர் உடலில் ஒவ்வோரான்மா இருந்து இயங்குகிறது என்பதும், ஒவ்வொரு தொழிலை ஒவ்வோரான்மா செய்கிறதென்பதும் தெளிவாகிறது. எனவே, ஆன்மா அநந்தம்".

## ஆன்மா நித்தியமானது

ஒரு உயிரி பிறக்கும்போது உடலிலே படைக்கப்பட்டு, பின் இறக்கும்போது கடவுளிடம் போய்ச் சேருகிறது; அல்லது நரகத்துக்குப் போகிறது என்று சிலர் கருதுவர். கடவுளிடம் நேரே போகக்கூடிய வகையிற் புண்ணியங்கள் மட்டுஞ் செய்பவர் எவரும் இல்லை; பாவங்கள் மட்டுஞ் செய்பவரும் எவரும் இருப்பதில்லை. மனிதரும் ஏனைப் பிராணிகளும் பல்வேறுபட்ட நிலையிலிருப்பது கண்கூடு. அங்ஙனம் வேறுபட்ட நிலைமை இருப்பதற்குக் காரணம் முன்னைப் பிறவித் தொடர்பே என்ற கருத்து அடுத்துச் சிந்திக்கப்படும். இங்ஙனம், முன்னைய பின்னைய பிறவிகளுக்குத் தொடர்பு இருக்குமாயின் அவற்றிடையே தொடர்பை ஏற்படுத்த வல்லது ஒரே ஆன்மாவே.

உயிரிகளின் இயக்கத்துக்குக் காரணியாக இருப்பதுதான் ஆன்மா என்ற கருத்து முன்னர்க் கூறப்பட்டது. அது உடல்போலச் சாதாரணமான பொருளன்று. உடலை இயக்குகின்றது சக்திமயமானது. "சக்தியை இன்னொரு சக்தியாக மாற்ற முடியுமேயன்றி, அதனை ஆக்கவோ அழிக்கவோ முடியாது" என்பது விஞ்ஞான விதி. சக்தி எதுவும் எதனையாவது இயக்கும்போது வெப்பம் உண்டாவது வழமை. ஆன்மா உடலை இயக்கும் போதும் வெப்பம் உண்டாகிறது. இறக்கும்போது உடல் இயக்கம் நின்று விடுகிறது. வெப்பமும் இறங்கி விடுகிறதே! உடலை இயக்கிய அச்சக்தி எங்கே! பிறக்கும்போது உடலை இயக்குஞ் சக்தி ஆக்கப்பட்டிருக்கவும் முடியாது; இறக்கும்போது அழிக்கப்பட்டிருக்கவும் முடியாது. அங்ஙனமானால் நிகழ்வது என்ன?

மலையிலிருந்து வரும் ஆற்றிலே இருக்கும் நிலைப்பண்புச் சக்தி சுழலிக்கு (turbine) இடம்மாறி அதனை இயக்குகிறது. அது பெரிய தாய்ச்சில்லுக்கு (fly wheel) இடம்மாறி அதனை இயக்குகிறது. பின்னர் நாடாக்கள் வழியாக மற்றைய சில்லுகளுக்கு மாறி அவற்றை இயக்குகிறது. ஆன்மாவும் பிறவி எடுக்கும்போது, முன்னைய தூலசரீரத்திலிருந்து புதிய சரீரத்துக்கு மாறி வினைசெய்கிறது. இறக்கும்போது அச்சரீரத்தை விட்டு மற்றோர் சரீரத்துக்கு மாறுகின்றது. இங்ஙனம் உடல் மாறுகின்ற ஆன்மா காரண சரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம் என்பவற்றோடு கூடிய சூக்கும சரீரத்தில் இடம்மாறுகின்றது எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறும். எனவே, ஆன்மா ஒரு உடலிற் பிறந்து, வினைசெய்து, அவ்வுடலை விட்டு நீங்கி, இறந்து அடுத்ததாகச் சொல்லப்படுவதுபோல, செய்த வினைக்கு ஈடான மற்றொரு உடலை எடுத்தலாகிய பிறவித் துன்பத்தில் உழன்று சித்சக்தியின் அருளாற் பதியை அடையும்.

## ஆன்மா செய்யும் வினையும் பிறவியும்

சமூக வாழ்விலே முக்கியமாக விளக்கந் தேவைப்படுவது வினைக் கொள்கையே. வினை விஷயத்திற் சமய நூல்களின் கருத்துக்களிலேயே அதிகந் தங்கியிருக்க வேண்டி உளது. வினை பற்றிச் சமயங்கள் வெவ்வேறு கொள்கை உடையன வேனும் எல்லாச் சமயமும் நன்மை செய்யுமாறும், தீமையை விலக்குமாறுங் கூறுகின்றன. மறுபிறவிக் கொள்கை கொண்டிராதன, கடவுளின் அன்பைப் பெறுவதற்கு நன்மையையே செய்தல் வேண்டும் எனப் போதிக்கின்றன. மற்றையவை வினைகள் மறுபிறவியிலே தொடரும் என வலியுறுத்திக் கூறுகின்றன.

பிற உயிர்க்கு மனிதனுக்காயினும் விலங்கு முதலான பிற உயிருக்காயினும் நன்மை செய்பவர் இன்பமும், தீமை செய்பவர் துன்பமும் மறுபிறவியில் அநுபவிப்பர் எனச் சைவம் உட்படப் பல சமயங்கள் உறுதிபடக் கூறுகின்றன. ஒருவன் செய்யும் வினைப்பயனை அதே பிறவியிற் பெறுதலுமுண்டு. சிறப்பாக, நல்வினை

செய்தோர் பூதசாரசரீரம் பெற்றுச் சுவர்க்கத்தில் இன்பமும், தீவினையாளர் யாதனா சரீரம் பெற்று நரகத்திலே துன்பமும் பெரும்பகுதி அநுபவித்து, பூவுலகில் அடுத்த பிறவியில் வினைக்குத்தகப் பிறவி எடுத்து, எஞ்சியிருப்பதை அநுபவிப்பர் எனச் சைவ நூல்கள் கூறும். நல்வினை மட்டுமே செய்தோர் அல்லது தீவினை மட்டுமே செய்தோர், முன்னர்க் கூறியவாறு, அரிதினும் அரிது. பெருமளவு நல்வினை அல்லது பெருமளவு தீவினை செய்வோராயிருப்பதே இயல்பு.

ஓரான்மா மனிதனாகவும் மற்றொன்று புழுவாகவும் பிறப்பதேன்? என்ற வினாவுக்கு வினைக்கொள்கையே விடையளிக்க முனைகிறது.

"ஒவ்வொரு தாக்கத்துக்கும் சமனானதும் எதிரானதுமான தாக்கம் உண்டு" என்பது சேர் ஐசாக் நியூற்றன் தந்த விதி. இது தலைவிதிக்கும் விளக்கந் தருகிறது எனக் கூறுதல் தவறாகாது.

நன்மை செய்யப்படும்போது நன்மை பெற்றவனிடத்திலே மகிழ்ச்சி, மனநிறைவு ஏற்படுவதியல்பு. அது ஒரு தாக்கமே. அத்தாக்கத்துக்கு மறுதாக்கம் ஏற்படாதிருக்குமா? உதாரணமாக, பசியால் வாடியவனுக்கு உணவளித்தால், அவனுடைய வயிறு நிறையும் மனங்குளிரும. இது அவனுடைய மனதில் ஏற்படுகின்ற விளைவு அல்லது தாக்கம். இத்தாக்கத்துக்குச் சமமானதும் எதிரானதுமான தாக்கம் உணவு அளித்தவனிடத்திலே ஏற்படத்தானே வேண்டும். உண்மையான கடும் பசியால் வாடிய மனிதனுக்கு அல்லது நாய் முதலான பிராணிக்கு உணவளித்தால், உண்டு, வயிறும் மனமுங் குளிரும்போது நன்றி உணர்வுடன் நிமிர்ந்து அன்னமிட்டவன் முகத்தைப் பார்ப்பதைப் பலர் அவதானித்திருக்கக் கூடும். இத்தகைய நன்றி உணர்வுக்குத் தக்க பலன், தாக்கம் ஏற்பட்டேயாக வேண்டும்.

அவ்வாறே ஒரு மனிதனுக்கோ வேறு பிராணிக்கோ தக்க காரணமின்றி அடித்தால், அப்பிராணியின் மனதிலே துன்ப உணர்வு, தாக்கம் ஏற்படும். இத்தாக்கத்துக்குச் சமமான தாக்கம், மனம் வழியாக அடித்த ஆன்மாவைச் சென்றடையும். இங்கே ஒரு கேள்வி எழுவது இயல்பே. உணவு அளித்ததோ அடித்ததோ கைதானே, அதாவது உடம்புதானே. வெளிப்படையாகவே அதனைச் செய்த உடம்பை விடுத்து, வினைஉயிரைச் சார்வதேன்? ஆமாம். வெளிப்படைக்குச் சரியான கேள்விபோலத் தோன்றினாலும், ஆழச் சிந்தியாத ஒன்று. கை தன்னியல்பாகவே (involantary) செய்த ஒன்றா? அளித்த, அடித்த ஆன்மா அளிக்க, அடிக்கச் சிந்தித்துத் தீர்மானித்துக் கையை ஏவவே கை செய்தது. மேலதிகாரி கோவைகளை ஆராய்ந்து மேற்கொண்ட முடிவை நடைமுறைப்படுத்துமாறு குறித்த கொடுப்பனவைச் செய்யுமாறு - தனது உதவியாளருக்குக் கட்டளையிட உதவியாளர் தந்தால், அவ்வுதவியாளர்தான் தந்ததாகக் கருதலாமா?

இங்ஙனமான நல்வினை தீவினைகளின் தாக்கம் அந்தக்கரணங்களூடாக ஆன்மாவைச் சாரும். அத்தாக்கத்தின், வினையின் பயன் அப்பிறவியிற் சிறுபான்மையும் பிறவி முடிவிற் பெரும்பான்மையும், இன்னும் ஓரளவு அடுத்த பிறவியிலும் அநுபவிக்கப் படுகிறது. இக்கருத்துக்குச் சமயநூல்களின் கூற்றையே ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனினும், உயிர்கள் பல்வேறு நிலையிலிருப்பதற்கு வேறு காரணங் காண முடிவதில்லை. மனிதனாகவும் புழுவாகவும், சுகதேகியாகவும் தீரா நோயாளியாகவும் உறுதியான உடலாளியாகவும் அங்கவீனியாகவும், மனம் நிறைந்த வாழ்வினனாகவும் கவலை தோய்ந்த வாழ்வினனாகவும் பிறந்து வாழ்வதேன்? ஒரே சூழலில் உள்ளோரிடையேயும் ஒரே குடும்பத்தவரிடையேயும் இத்தகைய வேறுபாடுகளைக் காண முடிகிறதே! ஏன் எனச் சிந்திக்கும்போது, எம்மையறியாமலே திருவள்ளுவரின் "சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை"என்ற வாக்கு விடையாக முன்வந்து விடுகிறது.

இங்ஙனம் பிறந்து உழலும் ஆன்மா தீவினை - துன்பந் தருவதெனவும் நல்வினை இன்பந் தருவதெனவும் உணர்ந்து, இயன்றளவு அதிக நல்வினை செய்தலால் சிவஞானங் கைகூடத்தக்க சூழலிற் பிறந்து, அப்பேறு வாய்க்கப்பெற்று சித்சக்தி அருளாற் சத்திநிபாதம், மலபரிபாகம், ஆன்மசுத்தி எய்தி, பதியின் பாதத்திற் "தாடலை" போல இரண்டறக் கலந்து, என்றும் நீங்காப் பேரின்பத்திலே திளைக்கும் என்பது சைவசித்தாந்தக் கொள்கை.

1. "அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல், இக்கிரமத்து என்னும் உயிர்க்கு" - சிவஞானபோதம்.
   "ஆரியன் குலாலனாய் நின்று ஆக்குவன் அகிலமெல்லாம்" - சிவஞான சித்தியார்.
2. "உளது இலது என்றலின்...........மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா" - சிவஞான போதம்.
3. "அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று ...... விளம்பிய உள்ளத்து மெய்" - சிவஞான போதம்
4. "பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலும், துறந்தோர் துறப்போர் தொகை" - திருவருட்பயன்.
5. "வல் வினையின் வந்தது; வினைக்கு விளைவாயது" - மணிமேகலை.
   "இரு வினையின் ஈடான யாக்கை அண்ணல் அருளால் நண்ணி" - சிவப்பிரகாசம்
6. "பண்டு செய்த வினையின் பயன் கண்டும்" -திருநாவக்கரசர்.
7. "இருவினை ஒத்திட இன்னருட்சக்தி, மருவிட ஞானத்தின் ஆதன மன்னி
   குறவினைக் கொண்டருட்சக்தி முன் கூட்டிப் பெருமலம் நீங்கிப் பிறவாமை சுத்தமே" - திருமந்திரம்
   "அபரா அன்பின் அரன் கழல் செலுமே" - சிவஞானபோதம்.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பண்பாட்டுக் கட்டமைவு ஆய்வு

ஆய்வாளர்: மலைஅரசி சிவராஜா, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்

**அமைவிடம்:-**

இலங்கை மாதாவின் சிகரமெனத் திகழ்வது யாழ்குடா நாடு. யாழ் குடா நாட்டின் வடமராட்சிப் பகுதியில் துன்னாலை, வராத்துப்பளை, கற்கோவளம் என்ற கிராமங்களுக்கு மத்தியில் வல்லிபுரக் குறிச்சிக் கிராமம் அமைந்துள்ளது. இக் கிராமம் வல்லிபுரம் எனவும் அழைக்கப்படுகிறது. இலங்கையின் வடபகுதியை கனகசிங்கன் என்னும் மன்னன் சிங்கை நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் என்று பல சரித்திர ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இச் சிங்கை நகரே வல்லிபுரம் என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. பொற்சாசனம், முதுமக்கள் தாழை, பழைய நாணயங்கள் போன்ற வரலாற்று ஆதாரங்கள் இதற்குச் சான்றுகளாகின்றன. இக்கிராமத்தின் குடித்தொகை ஏறத்தாழ 750 பேர் எனவும் 130 வீடுகள் உள்ளதாகவும் வாக்காளர் எண்ணிக்கை 350 எனவும் அறியப்படுகிறது. இங்குள்ள மக்களின் முக்கிய தொழிலாக நெற்செய்கை, தோட்டச் செய்கை என்பன விளங்குகின்றன. உப தொழிலாக பனைத் தொழில், மாடு, ஆடு வளர்த்தல் சிறுகைத்தொழில்கள் என்பன இடம்பெறுகின்றன.

இங்குள்ள மக்களின் பண்பாட்டிற்கு முதுகெலும்பாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் இக்கிராமத்துடன் அதன் உருவாக்கத்துடன் இணைந்து நிற்கிறது. இம்மக்களின் பண்பாடு, கலை, கலாச்சார வரலாற்றுப் பாரம்பரிய நிலைக்களனாக இக்கோயில் விளங்குகிறது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முன்னோர்களின் வாக்கு. கோயில்கள் எமது கலைகளிற்கும் பண்பாட்டிற்கும் அளப்பரிய சேவைகள் செய்கின்றன. நுண்கலைகள் என்று சொல்லப்படுகின்ற கட்டிடம், சிற்பம், ஒவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் போன்ற அழகியற் கலைகளின் நிலைக்களனாக முதுகெலும்பாக கோயில்கள் விளங்குகின்றன. எமது சமய தத்துவங்கள், சிந்தனைகள், என்பன கலை உணர்வுடன் கலந்தவை.

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஆலயங்களில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் ஒன்று. எமது மக்களின் வரலாறு, கலை, பண்பாடு என்பன வற்றிற்கு மெருகூட்டும் பல சான்றாதாரங்கள் இக் கோயிலைச் சூழ உள்ள பகுதிகளில் கிடைத் துள்ளதென பல அறிஞர்கள் கூறுகின்றனர். பல்லவ, சோழ மன்னர்கள் தமிழ் நாட்டை ஆட்சிபுரிந்த காலங்களில் அவர்களினதும், தமிழ் மக்களினதும் நெருங்கிய தொடர்புடையதாக இக்கோயில் திகழ்ந்துள்ளது. இன்று மிகப்பாரிய அளவில் புனரமைக்கப்பட்டு வானளாவ உயர்ந்த கோபுரத்துடன் தமிழ் மக்களின் பண்பாட்டையும் வரலாற்றுப் பெருமையையும் பறைசாற்றி நிற்கிறது.

இப்புராதன விஷ்ணு ஆலயம் விசேடமாக வடமராட்சிப் பகுதியிலுள்ள மக்களாலும் பொதுவாக ஈழத்தமிழ் மக்கள் பலராலும் வழி வழியாக வழிபடுகின்ற தலமாக விளங்குகிறது.

**கோயில் வரலாறு பற்றிய வாய் மொழிக் கதைகள்**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இரு கண்போல விளங்குவது துன்னாலை, பொன்னாலை என்னும் இடங்களில் உள்ள விஷ்ணு தலங்களாகும் என்று தட்சண கைலாய மான்மியம் கூறுகிறது.

அக்கூற்றிற்கு மெருகிடுவது போல் அலைகடலின் தென்றல், வெண்மணற் பரப்பு, நிழல் மரங்கள் இவற்றின் மத்தியில் ஓங்கி உயர்ந்து மக்கள் மனதில் மனோரம்மியத்தையும், பக்தியையும் கொடுத்து நிற்கிறது வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று விசேடங்களையும் ஒருங்கே கொண்ட புராதன விஷ்ணு ஆலயம் இது ஆகும்.

இக்கோயிலின் உற்பத்தி பற்றிய வரலாறு அற்புதமானது. இவ்வரலாறு பரம்பரையாகக் கூறப்படுகிறது. பலநூறு ஆண்டுகளின் முன் புரட்டாதி பூரணை நாளில் வங்கக் கடல் பொங்கி அலைகள் ஆர்ப்பரித்து எழுந்து கரையில் மோதின. அதிசய பெரிய மச்சம் ஒன்று துள்ளிக் குதித்து மீன் வலைகளை அறுத்தும், வள்ளங்களைப் புரட்டியும் ஆரவாரம் செய்தது. மூன்று நாட்கள் இச்செயல் தொடர்ந்தது. மீனவர்கள் செய்த எதுவும் பயன்பெறவில்லை. மக்கள் கூடிநின்று இச்செயலை ஆரவாரத்துடன் பார்த்தனர்.

இந்நாளில் வராத்துப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த வல்லிநாச்சியார் என்ற விஷ்ணு பக்தை தனது நாகசாபம் நீங்கி புத்திரப்பேறு கிடைக்க ஸ்ரீமந் நாராயணனை நாள்தோறும் வணங்கி வந்தார். இந்நேரம் நாராயண பகவான் அவரின் கனவில் தோன்றி அவரை கற்கோவளம் கடற்கரைக்கு வரும்படி பணித்தார். அம்மையார் அவ்வாறே செய்தார். கரையை அடைந்து நாராயணனை நினைந்து ஜெபம் செய்து கொண்டிருக்கையில் அற்புதச் செயலாக மகரமாகி கடல் கலக்கிய மாயவன் அவரின் மடியில் விழுந்து அழகான குழந்தையாக மாறியது. இதைப்பார்த்த மக்கள் பேரானந்தத்தால் ஆடிப்பாடினர். இவ்வாறு

இன்பமயக்கத்தில் இருந்த நேரம் குழந்தை உருவில் இருந்த மாயவன் மீண்டும் மாயம் ஒன்றை நிகழ்த்தினான். குழந்தையாகத் தவழ்ந்தவன் சக்கர வடிவில் தன்னை மாற்றினான். அங்கு கூடியிருந்த மக்கள் சக்கரத்தைப் பல்லக்கில் வைத்துக் காவி, துன்னாலை, புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களின் மத்தியில் அமைந்த வல்லிபுரக் கிராமத்திற்கு வரும்போது பல்லக்கை காவியவர்கள் தாகசாந்திக்காகப் பல்லக்கை இறக்கி வைத்து நீர் அருந்தச் சென்றனர். பின்னர் வந்து பார்க்கையில் சக்கரம் பிரதிட்டை செய்தாற்போல் நிலத்தில் பதிந்துவிட்டது. அதை எடுக்க முயன்றும் முடியவில்லை. இறைவன் சித்தம் என எண்ணிய மக்கள் அந்த இடத்திலேயே குடிசை அமைத்து சக்கரதாரியை வழிபட்டு வந்தனர். பின்புதான் இன்று நாம் காணும் எழில் மிகு ஆலயம் அமையப்பெற்றது. இன்றும் மூலஸ்தானததில் சக்கரம் வைத்தே பூசிக்கப்படுகிறது. இக்கோயில் திருமாலின் மச்ச அவதாரம் என நம்பப்படுகிறது. வைஷ்ணவ ஆலயங்களிலும் ஆதிகாலம் தொட்டே விநாயகருக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அதனால் இங்குள்ள மக்களும் ஆலும் குளமும் வயலும் சூழ எழுந்தருளியிருக்கும் குருக்கட்டு சித்தி விநாயகருக்கு பூசை முடித்தே வல்லிபுர சுவாமிக்குப் பூசை செய்வது வழக்கமாகும். இன்றும் திருவிழாக்காலங்களில் மேற்படி விநாயகர் ஆலய மேற்குத் திசையில் அமைந்த திருக்குளங்கள் ஒன்றிலிருந்து தான் திருநாமம் எடுக்கப்பட்டு வருகிறது.

பூசகர்களின் பிரச்சினைகளால் கோயிலின் பரிபாலனம் பஞ்சாயத்து சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. பரிபாலன மாற்றத்தால் பிள்ளையார், நாகதம்பிரான், ஆஞ்சநேயர், நவக்கிரகங்கள், நாச்சிமார் தெய்வங்கள் என்பன அமையப்பெற்றன. அதன் பின்னர் வந்த பரிபாலன சபையினரால் பூசை ஒழுங்குமுறைகளும் திருப்பணி வேலைகளும் நடைபெற்றன. தற்போது நடைமுறையிலுள்ள தர்மகர்த்தா சபையினரால் ஆலய பரிபாலனம் மேலும் சிறப்புற நடைபெறுகிறது.

### பாடல்கள், பாடல் வகைகள் - இசை வேறுபாடுகள்

கோயில்கள் இசைக்கலையை வளர்க்கின்றன. இதற்கு இம் மாயவன் கோயிலும் விதிவிலக்கல்ல. பிரபஞ்ச உற்பத்திக்கு மூலம் நாதம். பிரபஞ்ச இயக்க சாதனமும் அதுவே. இவ் உண்மையின் விளக்கமாகவே மாயவன் கையிலும் இரு இசைச்சாதனங்கள் உண்டு. அவையாவன புல்லாங்குழல், சங்கு என்பனவாகும். நாதத்தை இயக்கும் இந்த நாயகன் கோயிலில் ஊஞ்சல் பாட்டு, ஏகாதசிப் புராணப்பாட்டு, ஆழ்வார் பாசுரங்கள், திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்பன இசையுடன் பாடப்படுகின்றன பண்ணிசை மூலமும் கூட்டுப் பிரார்த்தனை மூலமும் கிராம மக்கள் இசையுடன் கலக்கிறார்கள்.

### கூத்துக்கள் - ஆட்டங்கள்

கூத்துக்களும் ஆட்டங்களும் மகோற்சவ காலங்களில் அதிகளவில் இடம்பெறுகின்றன. வெண்ணெய் திருடல், மகாகம்சன் போர், துகிலுரிதல், வேட்டை, பாம்புத் திருவிழா போன்றவற்றில் கண்ணனின் லீலாவிநோதங்கள் கற்கோவள மக்களால் நடித்துக் காட்டப்படுகின்றன. கூத்துக்களின்போது இசையுடன் சேர்ந்த பாடல்கள் பாடப்படும். உடுக்கு வாத்தியங்கள் முழங்கப்படும். சிறுவர்களும் இதில் கலந்து கொள்வர். வீம ஏகாதசியன்று கற்கோவள பெண்களால் வல்லிபுரக் கோயிலின் வெளியே உள்ள நாச்சிமார் கோயிலில் இரவு முழுக்க மாயவன், அம்மன் புகழ்பாடி கும்மியடிக்கப்படுதல் விசேட அம்சமாகும்.

### கட்டிடம், ஓவியம், சிற்பம், பிறகலைகள்

நமது நாட்டில் வளர்ந்த கலை நாதஸ்வரக் கலை. நாதஸ்வரகானம் கேட்காத ஆலயம் இல்லை. மேளம் முழங்காத திருக்கோயில் இல்லை. அதேபோலவே வல்லிபுர ஆழ்வார் கோவிலிலும் நாளாந்த பூசைகளிற்குக் கோயில் கலைஞர்களினதும் விசேட காலங்களிலும் மகோற்சவ காலங்களிலும் பிற கலைஞர்களினாலும் நாதஸ்வர தவில் இசைகள் வழங்கப்படுகின்றன.

திருவிழாக் காலங்களில் நடன, நாடகக் கலைகள் இடம்பெறுகின்றன. கட்டிட, சிற்ப ஓவிய கலைகளுள் கோயிலின் கட்டிட அமைப்பு, இராஜகோபுரம், தேர், வாகனங்கள் சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் என்பன அடங்குகின்றன.

### தேர்

தேரின் தத்துவமாக அழித்தல் தொழில் கொள்ளப் படுகிறது. இக்கோயிலின் தேர் 1950ம் ஆண்டு அமைக்கப்பட்டது. திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் குழுவினரால் இத்தேர் அழகுற அமைக்கப்பட்டது. தேரில் கலையம்சங்கள் கொண்ட

1. தசாவதார சிற்பங்கள் (விஷ்ணுவின் பத்து அவதாரங்கள்)
2. நூற்றிஎட்டு மணிகள்
3. நான்கு குதிரைகள்

என்பன காணப்படுகின்றன.

### இராஜகோபுரம்

"கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்" என்ற கருத்தை நன்குணர்ந்தமையால் ஸ்தூலலிங்கமாகிய இராஜகோபுரம் 1981ல் கட்டத்தொடங்கி 1990ம் ஆண்டு கும்பாபிடேகம் நடைபெற்றது. இந்திய சிற்பாசாரியர்களின் கைவண்ணத்தில் மெருகுபெற்ற இக்கலைப்படைப்பு 71 அடி உயரத்தையும் 7 தளங்களையும் கொண்டது.

இதன்கண்ணே
1. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுவாமி சரிதம்
2. கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்
3. பன்னிரு ஆழ்வார்கள்
4. மகாவிஷ்ணுவின் இருபத்துநான்கு மூர்த்தங்கள்
5. கிருஷ்ண லீலா விநோதங்கள்
6. இராமாயணம், மகாபாரதம் சம்பந்தமான கிருஷ்ண கதைகள் கொண்ட சிற்பங்கள்
7. மார்க்கண்டேயர் சரிதம்
8. மகாத்மாகாந்தி
9. நல்லை ஆதீன முதல்வர்
10. கோயில் முன்னாள் பிரதம குருக்கள்

போன்ற சிற்பங்களை அதி அற்புதமாகச் சிருஷ்டித்திருக்கிறார்கள். திருமாலின் மேனி நிறமாகிய நீல நிறம் கோபுர வர்ணத்தில் முக்கியத்துவம் பெறுகிறது.

**வாகனங்கள்**

மரத்தினால் அழகுற அமைக்கப்பட்ட பாம்பு, குதிரை, அனுமார், கெருடாழ்வார், கெருடன், சிம்மாசன வாகனங்கள் காணப்படுகின்றன. அத்துடன் மாயவன் நித்தியமாக எழுந்தருளும் வெள்ளியிலான கெருட வாகனமும் காணப்படுகிறது. இவ்வாகனங்கள் விசேட உற்சவகாலங்களிலும் மகோற்சவ காலங்களிலும் முறையாகப் பயன்படுத்தப்படுகின்றன. வருடா வருடம் வர்ணம் தீட்டப்பெற்று அழகு குன்றாமல் பேணப்படுகிறது.

அத்துடன் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் இராஜகோபுர இரு பக்கங்களிலும் உள்ள சங்கநிதி பதுமநிதி ஆலயங்கள், விநாயகர், நாகதம்பிரான், ஆஞ்சநேயர், நவக்கிரக கோபுரங்களும் பன்னிரு ஆழ்வார் உருவங்களும் கட்டிட, சிற்ப, ஓவியக் கலைகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. அலங்காரக் கலைகளாக சுவாமியை அலங்கரித்தல் பூமாலை சரங்கள் கட்டுதல் பெருமானிற்குப் பிடித்தமான துளசி மாலை கட்டுதல் என்பன காணப்படுகிறது.

**பூசை நியமங்கள் உற்சவங்கள் பூசகர் நிலை**

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் துன்னாலை குருக்கள் பரம்பரையினர் பூசகர்களாக இருக்கின்றனர். இவர்கள் யாவரும் மாதகல் குரு பரம்பரையைச் சேர்ந்தவர்கள். தற்போது பிரதம குருக்களாக இருப்பவர் வைத்தீஸ்வர குருக்கள் பரம்பரையில் வந்த அவரது பேரன் குருச்சேத்துமக் குருக்கள் ஆவார். இவர் விசாக நட்சத்திர்தில் பிறந்தமையால் விசாக குருக்கள் என்றே கிராம மக்களால் அழைக்கப்படுகிறார். இவரிற்கு கோயிலிற்கண்மையில் கோயிலால் கட்டி வழங்கப்பட்ட வீடு உண்டு.

நாளாந்தம் ஆறுகாலப் பூசை நடைபெறுகிறது. அதைவிட கண்ணனுக்கு விருப்பமான ஞாயிற்றுக் கிழமைகளில் ஞாயிறு உற்சவம் காலை 10 மணிக்கு நடக்கிறது. அத்துடன் ஏகாதசி நாள் ஸ்ரீமந் நாராயணனுக்கு முக்கிய நாள் என்ற காரணத்தினால் வருடம் பூராகவும் வருகின்ற பூர்வபஷ ஏகாதசி, அபரபஷ ஏகாதசி, மாசி மாதத்தில் வருகின்ற வீம ஏகாதசி, மார்கழி மாதத்தில் வருகின்ற சுவர்க்க வாசல் ஏகாதசி உற்சவங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சுவர்க்க வாசல் ஏகாதசி, வீம ஏகாதசி உற்சவங்களில் புராணபடனம், இரவு நான்கு சாமப் பூசைகள், பாரணைப் பூசை என்பன நடைபெறும். ஏனைய ஏகாதசி உற்சவங்களில் பிற்பகல் 4 மணிக்கு நாராயணனிற்கு அபிஷேகம் நடைபெற்று வீதி உலாக் காட்சியும் இடம்பெறும். இவ் ஏகாதசி உற்சவங்களில் விரதமிருந்து மக்கள் தூய்மையாக மாயவனை வழிபடுவர். சுவர்க்க வாசல் ஏகாதசிக்கு முதல் நாள் விரதம் இருந்து ஏகாதசியன்று உபவாசம் இருந்து அன்று இரவு நித்திரை விழித்து, துவாதசியன்று விரதத்தை முடிப்பர். சுவர்க்க வாசல் ஏகாதசி மார்கழி வளர்பிறையில் வருகிறது. அத்துடன் மார்கழித் திருவெம்பாவை நோன்பும் அனுட்டிக்கப்படுகிறது. வல்லிபுரக் கிராம மக்கள் அனைவருமே மார்கழி மாதம் முழுவதும் விரதம் அனுட்டிக்கிறார்கள்.

அத்துடன் மிக விசேடமாக கிருஷ்ண ஜயந்தி (கண்ணன் பிறப்பு) கொண்டாடப்படுகிறது. கிருஷ்ண ஜயந்தி ஆவணி மாதத்தில் நடைபெறும். அன்று இரவு 12.00 மணிக்கு ஆலய சகல விளக்குகளும் அணைக்கப்பட்டு ஒரு கூடையில் நாராயணமூர்த்தி வைக்கப்பட்டு மௌனமாக வசந்தமண்டபத்தை அடைவர். அங்கு விசேட அபிஷேகம் செய்து தாலாட்டுப்பாடி வழிபடுவர். அதைத் தொடர்ந்து பிற்பகல் 5 மணிக்கு உறியடி உற்சவம் கொண்டாடப்படுகிறது. இவ் உறியடி உற்சவத்தில் சிறுவர்கள் கிருஷ்ண வேடம் ஏற்று கும்மிப்பாட்டுடன் கூத்தாடி தடிகளால் வெண்ணெய் முட்டிகள் உடைப்பர். இதன் மூலம் கண்ணணின் லீலைகள் மக்களிற்கு விளக்கப்படுகிறது.

கிருஷ்ண ஜெயந்தி விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் முதல் நாள் நோன்பிருந்து விரதத்திலன்று எள்ளு, நெல்லிப்பருப்பு இவைகளை அரைத்துத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்வர். பின்னர் கோயிலிற்கு வந்து துளசித் தீர்த்தம் அருந்துவர். இப்படிச் செய்கின்ற அடியவர்களிற்கு நான்குவித புருஷார்த்தங்களும் கைகூடுமென மக்கள் நம்புகிறார்கள். அத்துடன் விசேட காலங்களிலும் வருடப்பிறப்பு, தைப்பொங்கல் தீபாவலி காலங்களில் விசேட உற்சவங்கள் நடக்கின்றன. தீபாவலியன்று நாராயணன் நடத்திய நரகாசுர சங்காரம் நடித்துக்காட்டப்படுகிறது.

**மகோற்சவம்**

கொடியேற்றம் தொடங்கி தீர்த்தம் வரையிலான

கிரியைகள் மகோற்சவம் எனப்படும். இவை இறைவனின் ஐந்தொழில்களை விளக்குவனவாக அமைகின்றன.

| | |
|---|---|
| கொடியேற்றம் - | படைத்தல் |
| வாகனத்திருவிழா - | காத்தல் |
| தேர்த்திருவிழா - | அழித்தல் |
| தீர்த்தம் - | அருளல் |
| மௌனஉற்சவம் - | மறைத்தல் |

ஆகிய தத்துவங்களை விளக்குகின்றன. மகோற்சவம் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் புரட்டாதி மாதம் ஆரம்பமாகிறது. கொடியேற்றத்திற்கு மூன்று நாட்களிற்கு முன் ஸ்ரீ வல்லபுர ஆழ்வார் சுவாமி வல்லிபுரக் குறிச்சி குருக்கட்டு விநாயகர் கோயிலுக்குச் சென்று அங்கும் கொடியேற்றம் நடத்தித் தனது கோயிலில் இருக்கும் ஒரு பிள்ளையாரைத் திருவிழா முடியும் வரை அங்கு வைப்பார். இப் பிள்ளையாருக்கு குருக்கட்டு விநாயகர் கோயில் குருக்கள் பூசை செய்வார். ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி திருவிழா முடிவுற்றதும் இப்பிள்ளையார் திரும்பவும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்திற்குக் கொண்டுவரப்படுவார்.

மகோற்சவம் கிராமசாந்தியைத் தொடர்ந்து 17 நாட்கள் நடைபெறும். முதலாம் நாள் கொடியேற்றமும் 2-6 வரையிலான திருவிழாக்கள் உள் வீதித்திருவிழாவாகவும் 7-17 வரையும் வெளி வீதித் திருவிழாவாகவும் நடைபெறும். 8ம் திருவிழா குருக்கட்டு விநாயக கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்துவரும் விழாவாகும் 9,10,11,12,13,14,15,16,17ம் திருவிழாக்கள் முறையே வெண்ணெய, துகில், பாம்பு, கம்பம், வேட்டை, சப்பறம், தேர், சமுத்திர தீர்த்தம், புட்டுத்தீர்த்தம் எனப்படும். அடுத்த நாள் ஆஞ்சநேயர் மடை என்ற விழா நடக்கும். இம் மகோற்சவங்களில் கண்ணனின் லீலைகளான வெண்ணெய் திருடல், துகிலுரிதல், பாம்பின் சயனம், கம்சன்வதம், வேட்டை என்பன கற்கோவள மக்களால் நடித்துக் காட்டப்படும்.

சப்பறத் திருவிழாவில் மாயவனிற்கு முன்பு கிராம மக்களினால் பலவித பட்டுக்குடைகள் பிடிக்கப்பட்டுச் செல்லல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

அவ்வாறே தேர்த்திருவிழாவும் சிறப்பான நிகழ்ச்சி. சித்திரத்தேரில் சக்கரதாரியான ஸ்ரீமந்நாராயணன் வீதிவலம் வருவார்.

மாயவன் கடல்கலக்கிய தினமாகிய பூரணை தினத்தில் அதே இடத்தில் கடல் தீர்த்தம் நடைபெறும். அடுத்த நாள் பட்டுத்தீர்த்தம் கோயிற்குளத்தில் நடைபெறும். இம்மகோற்சவ காலங்களில் யாழ் மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்து மாயவன் அருள்வேண்டி பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவ்வாலயத்திற்கு வருகிறார்கள். அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட திருவிழாக்காலமாக இது இருப்பதால் போக்குவரத்துச் சேவைகள் சுகாதார சேவைகள் நீர் வசதி பாதுகாப்புச் சேவைகள் இடம்பெறுகின்றன. விரத அனுட்டானங்களும் சமய சிந்தனைகளும் முக்கியமாகின்றன. ஆலய வீதிகளில் கடைகள் அமைக்கப்படுகின்றன.

இறுதியாக இக்கோயிலின் அமைவு இங்குவாழும் மக்களில் ஏற்படுத்தும் பண்பாட்டுக் கோலங்களை ஆராய்ந்தால் ஸ்ரீ வல்லிபுர ஆழவார் சுவாமி கோயில் இசை, நடனம் நாடகம் சிற்பம் ஓவியம் கட்டிடம் இலக்கியம் போன்ற கலைகளை வளர்த்திருக்கிறது உற்சவ மகோற்சவ காலங்களில் உறவினர்களை உபசரித்தல் விருந்தோம்பல் பண்புகளை வளர்த்துள்ளது. உற்சவ காலங்களில் ஆலய வீதியில் பல ஆயிரக்கணக்கில் கூடும் பக்தர்கள் ஒற்றுமையும் ஒழுங்குமுறைகளையும் கற்கின்றனர். வீதிகளில் அமைக்கப்படும் வியாபார தலங்களினால் வியாபாரம் பெருகி பொருளாதாரம் உயர்வடைகிறது. எல்லாவற்றிலும் விசேடமாக இக்கோயில் சைவசமயத்தையும் விஷ்ணு சமயத்தையும் உள்ளடக்கி சமத்துவத்தைப் பேணுகிறது. சிவ நாராயண வணக்கங்கள் இதற்குச் சான்று பகர்கின்றது. அத்துடன் சிறந்த பக்தி இலக்கியமான பகவத்கீதை பல சிறந்த தத்துவங்களை மக்களிற்குக் கொடுக்கிறது.

**குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்!**
**படுதுயர் ஆயின எல்லாம்**
**நிலந்தரம் செய்யும் நீள் விசும் பருளும்**
**அருளொடு பெருநிலம்அளிக்கும்**
**வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற**
**தாயினும் ஆயின செய்யும்**
**நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்**

என்ற திருமங்கையாழ்வார் பாசுரப்படி அந்த நாராயணன் இக்குறிச்சி மக்களிற்கு எல்லாமாக இருக்கிறான். சுருங்கக் கூறின் இம்மக்களின் நாகரிக பணபாட்டு அம்சங்களிலும் பொருளாதார சமூக நடைமுறைகளிலும் இக்கோயில் இரண்டறக் கலந்துள்ளது

குறிப்பு

ஆரம்ப காலத்தில் தனியாரினால் கோயில் பராமரிக்கப்பட்ட்து. கிட்டத்தட்ட 15 ஆண்டு காலமாகவே இக்கோயில் தர்மகர்த்தாசபையினரிடம் ஒப்படைக்கப் பட்டது. அதன் பின்னர் கிடைத்த வருமானம் கோயில் திருப்பணி வேலைகளிற்குச் செவாகுவதனால் பாரிய சமூகப் பணிகளைச் செய்ய முடியாமல் இருப்பதைத் தர்மகர்த்தாசபையினர் மனவருத்தத்துடன் கூறினர். இனிவரும் காலங்களில் தாம் சமூகப்பணிகளை ஆற்ற உறுதி கொண்டுள்ளனராம்.

# PANTHION OF SAIVA DEITES

By Kumar Punithavel

The world contains many religions and they each profess to have the explanation for various questions such as "What is the source of our existence". What is the source of this world". "Where from we all came and where we will be going after death". "Is life meant to be enjoyed or do we just suffer until we pass on". All these questions boil down to one thing, namely, what life is all about. These questions arose in such religious minds as Lord buddha, Lord Jesus and Saint Thirumular. On the other hand there are many eminent scientists who try to rationalize the answers to these questions. One of the main questions for the scientists is that of the human mind. In spite of many technical advances we have yet been unable to determine how the brain ( composed of ordinary atoms and molecules) manages to allow us to sustain thought and reason.

While religion and science commonly seem ed to be at odds with each other, Hinduism has always been consistent with rational facts. Sankara chariar (the well known Hindu philosopher) mentioned in his commentary on the Bhagavad Geetha (Verse 18.67) "A hundred shruits may declare, the fire is cold, or that it is dark, still they posses no authority in this matter.....we should in no way attach to the shruiti a meaning that is opposed by other authorities". Due to this clear distinction the Hindu religion, unlike other religions, has not come into conflict with scientific views.

The Saiva view of God is based on logical explanations that have been well rationalized; it is not the least polytheist. Saivaim speaks of one God. St. Thirumular(who lived two thousand years ago) proclaims thus is his writing:

ONE THE RACE, ONE THE GOD
THUS INTENSE HOLD, NO MORE DEATH WILL BE
NONE OTHER REFUGE, WITH CONFIDENCE YOU CAN SEEK
THINK OF HIM AND BE REDEEMED, IN YOOUR THOUGHTS
HOLDING HIM STEADFAST #2104

If God is one, the question then arises about the purpose for the numerous Saiva deities. In order to seek an answer to this question we need to be familiar with the philosophy of the Saiva religion. The philosophy of the Saiva religion is known as Saiva Siddantha. St.Maikandar condensed the Saiva Siddantha into twelve stanzas. In the first he explains the Saiva perspective of God. The first stanza proclaims:

*As the seen Universe, spoken as he, she and it, undergoes the three changes (origin, Devevelopment, end decay) there must be an entity created (by the efficient cause). This entity owing to its conjunction with anavamala has to emanate from God to whom it returns during Samharam. Hence, the learned say that God is the first cause.*

Translated by J.M.Nallaswamipillai

The above stanza tells us that God, being the cosmic source, created the Universe and all in it. God when visualized through the faculty of intelligence is power. God when identified by emotiion or feelings is a person. Power and person signify the same thing. This power can be defined as that, which is independent, whereas all else is dependent upon it. It is also defined as that, which is uncaused cause whereas all else is effect. 'IT' is known as the original cause. 'IT'generates everything; however, power 'ITSELF' is not generated. 'IT' is self-generated. IT' knows everything, but 'IT' is not fully known.

When we express 'IT' emotionally we say 'HE' understands everything, but none understand him and so on. We accept God as the power that gave momentum to the Universe. that very momentum generates power whereby He maintains the Universe continually, perpetually, and forever. This results in the conclusion that He is an eternal, inexhaustible power. Modern science corroborates this conclusion. Science believes that there is an inexhaustible reservoir of Intelligence-power that

is self-generated, self-operated, self-sustained, out of which millions of solar systems constantly evolve. However, though all solar systems owe their source to this reservoir, the reservoir, the reservoir itself is never exhausted. In other words, there is a perpetually creating (Evolving), sustaima (Revolving), and re-absorbing (Resolving) Power that is ever present. This ever-present Power has the potential to maintain the cycle of self-sustenance, and has Done so from the beginning of time, and will do so to the end. For the want of a better word we call this God. The Tamil word for God is KAD AVUL, meaning the one who is transient. another fact accepted by scientists is the theory of conservation. This theory states that matter is neither created nor destroyed. From this we can conclude that God (the being) has the capability to transform from 'being' to 'becoming'. 'Being' is a static condition, whereas 'Becoming' is a dyanamic condition. The inference is that God in his unmanifested form, is static, and in his manifested from is dynamic. This power within God to manifest is known as Sakthi. Sakthi is translated as, meaning power and energy.

According to Saivaism , as the preceding paragraph indicated, there are two states to God. The first is the un-manifested (transcendental state) and the second being the mainfested (determinate state). The former is referred to as Svarupa (the state where God is himself). In this state God is not comprehensible, He is beyond word or thought. While in Svarupa, God is referred to as Parashiv am. It should be stated that in this state Parashivam contains Sakthi in a potential form. He becomes comprehensible by his own will. The state during which He relates to the Universe is known as Tatasta. The Nirguna Parashivam, which has no attributes, takes on attributes and chracteristics. As a result the Nirguna Parasivam transforms iinto the Saguna Parashivam. In this state He takes three forms. They are Rupa (with form), Arupa (formless), aruparupa (formless form). The fact that God, in his infinite grace, has taken these forms is further explained in the woeks of Saiva saints.

According to St. Thirumular:

*That which is fullness and incomprehensible by any one came downas the master and taught us in his own accord.......*

St. Manickavasagar says:

*By his grace does one get the opportunity to worship him....*

St. Appar says:

*Unless you see God with the help of his own grace you cannot identify him or describe him of his nature....*

There are three forms that are taken by God in the Tatasta state. The Arupa form is represented in Chithamparam by Akas (ether), which has no form. The Aruparupaform is represented by the Shivalingam and by Jothy (flame). Most of the other deities are in the Rupa form. In summary, the two aspects of God, Parashivam and Parasakthi (energizer and energy) are referred to as Shivam and Sakthi. The two aspects mainfest them selves in three phases, Evolution (Creation), Revolution (Sustenance), and Resolution (Reabsorption). These three phases of action are characterized as Saraswathi, Luxmi, and Durga. Saraswathi represents the Sakthi (energy) which creates, Luxmi the energy which sustains, and Durga the energy that destroys and reabsorbs. Hence, we see that the three aspects of creator, protector, and destroyer are but aspects of the same Sakthi in different forms. All three forms are equally important. As a result we worship Saraswathi to obtain wisdom, Luxmi to gain wealth, and Durga to get rid of out troubles.

To those who cannot understand the scientific principals, they are explained in simple images.. If we accept the God composed of two parts. Namely, 'Being" and 'Energy'. Sakthi characterizes the energy and Sivam characterizes the being. Saraswathi is the aspect of Sakthi that is responsible for creation. Sakthi in turn is the kinetic portion of God. The corresponding creative aspect of Shivam is Brahma. Hence, we say that brahma is the creator and Saraswathi is the catalyst. They are referred to as a husband and wife to emphasize the joint action, without any element of sexuality. Similary, the counterpart of Luxmi is Vishnu, and the consort of Durga is Rudra.

## SIVALINGAM

The Shivalingam represents both Shivam and Sakthi in one. The analogy is as follows. The surface of the ocean with its restless waves is Sakthi, and the calm, bottomless depth is Shivam. The surface action represents the three-action creation, protection, and devolution. Shivam is beyond all the surface changes that is Sakthi. The word lingam literally means symbol. Hence, the Shivalingam is the symbol that represents Shivam. Symbolism is the art of representing ideas and thoughts in a material form. A symbol merely takes a person from the symbolized object to the actual object by means of similarities. In fact all deities are no more than symbols. These symbols explain certain truths and philosophies through idols, forms, signs, and stories.

The Dravidians (forefathers of the Tamil civilization) were the first to worship the Shivalingam From the first time an elliptical shaped stone from the river Narmida was used to represent the supreme power to present day, these stones have represented Shivam. The ellipsoid stone is buried in a round stone base. As we all know the ellipse has two foci, one of which is buried and the other is above. Why an ellipsoid and not a round stone or another shaper? To understand the answer to this question we only need to look at the Universe around us. From macrocosm to microcosm there is uniformity in all things. At the larger end of the spectrum, if we observe the galaxies we can see that they are in the form of ellipses and they move in an elliptical path. The planets are flattened at the poles resulting in not a perfect round (as the common perception dictates) but in an ellipse. Next let us view that most magnificent creation- 'Man'. There are nine openings in the body, sll of which are elliptically shaped. If we move down to the next level we can view the microcosm of atoms and molecules. Here too we find that their movement is an elliptical path. Hence what better shape is there to represent the creator, protector and destroyer than that of an ellipse.

The ellipse has two foci of which one is buried. This focus represents the unchanging Shivam. The other represents Sakthi. The portionof the represents the mainfested Sakthi. The lower half, which is hidden from view, represents the unmainfested Shivam. Hence the half-buried ellipse represents the two forms of reality the manifest and the un-manifest. The ellipse represents Shivam and Sakthi in Aruparupa form in the state Tatasta. If an ellipse is cut perpendicular to the axis we get a circle. This circle represents the supreme reality. A circle has no beginning or end. God (the reality) also has no beginning or end. Next time you see a Shivalingam it should draw attention to this supreme power we call Shivaperuman.

## BRAHMA

Brahma is the creatice aspect of universal power, which we give here as Shivam. The image of Brahma has four faces each turned to each direction. this demonstrates that he bought the whole Universe into being. In his each of his four hands he holds a different symbolic article. The four articles are a pot of water (kamandala), a manuscript (Vedas), a sacrificial implement (Sruva), and a rosary (Rutratchamalai). As the creator, the pot of water shows his main characteristic. Water being formless symbolizes the potential for creation. The sacrificial instrument indicates that the world came into being through sacrifice. The book represents knowledge, which as the creator he makes possible. Brahma is shown adorned in white and seated on a white swan. The color white is of great significance to the creator. White is not a color proper, but it is a combination of the seven colors of the rainbow in a pre-evolved state. When the color white is passed through a prism the colors of the rainbow evolve. brahma brings whatever is already existent in a pre-evolved state into being. According to Saivaism somthing cannot be created from nothing, it accepts the theory of conservation, which states that matter is not created nor destroyed. The rosary that is held in one hand represents time. The rosary is also used for chanting during meditation. Meditation is the gate for realization. The swan he sits on has the unique ability of being able to separate milk from water. It is capable of drinking just the milk leaving the water behind. Similarly a man moves through the world

until he recognizes the one divinity in the pluralistic phenomena of the world. As a creator he should posses knowledge. Hence, his consort Saraswathi, a form of Sakthi, is said to be the goddess of knowledge.

## SARASWATHI

As the creative aspect of Sakthi the first aspect of interest is the white sari that she adorns. Normally in our culture it is customary for windowed women only to wear white. In Saraswathi's case the white sari serves to demonstrate the pre-creation state of color. She is usually depicted as being seated on a white lotus. The lotus flower represents blossoming. In this case it represents the energy of creation that has not yet begun. It is about to begin, as such there are no colors and so it is white. She has a veena in one hand. The veena represents the sound AUM (natham) when the cosmic energy begins to whirl and act. It should be noted that Saraswathi is believed to use a swan or Annam as a vehicle.The Annam also stands for the act of breathing.

Inhaling (soham) and exhaling(soham) the two components of breathing together form the movement of the life force. thus it can be seen that Saraswathi riding on an Annam vahana symbolizes cosmic energy, manifesting itself, as Sakthi in control of our lives.

## VESHNU

Vishnu is the protective aspect of Shivam. The word Vishnu is made of two parts, Vish and Anu. Vish means to pervade and Anu means atom. In other words the microcosm that pervades to the macrocosm. He is depicted as being dark blue in color, lilke infinite space. This is also the color of rain clouds, which bring relief and joy to all living things. Without rain all living things would perish. The color blue was attributed to Vishnu as a result of being like the rain, descending from the heavens to give life to the earth. In many cultures the rain is a symbol of God's grace.

Vishnu is often represented as standing upright in a frontal pose. This pillar-like stance is a reference to Vishnu's role as sustainer of the world. This concept echoes ancient idea. There was a belief that there was a pillar of the Universe, running through the various levels of existence, supporting the Universe. What a winderfully appropriate manner to describe one who protects all existence.

While Vishnu's main function (as an aspect of Shivam) is protection He also symbolizes the other roles of creation and devolution. the conch shell stands for Vishnu's role as the creator. A conch shell has a deep and powerful note. It is also associated with the sound AUM (which contains all of creation in potential).

The discus or Chakra represents the mind, whose thoughts fly swifter than wind. The prodigious power of the mind can destroy all forms of ignorance, hence the discus is the weapon that in legends is known to behead demons and errors.

In his one hand he holds the mace. The mace represents the destructive or more accurately the reabsorption aspect of Shivam.

This is also meant as a warning to draw mankind's attention to the sterner aspect of nature.

In the other hand he holds a lotus flower. The lotus represents the beautiful world, which arises from the being of supreme reality. A lotus though rooted in obscurity in the muddy depths of the swamps rises to float on the surface. As the lotus is an image of purity reaching towards the sun, so too the world arises mysteriously from the depths of the un-manifest and opens itself up to the all-pervading light of consciousness.

## MAHALUXMI

Mahaluxmi is the consort of Vishnu and the protective aspect of Sakthi. She is always depicted as wearing a red sari and sitting on a red lotus flower. The color red is the color of blood and it signifies life. Thus the protective aspect of Sakthi is given this color. Without wealth life in this world is a sad struggle and thus wealth is considered to be an important aspect of life. Luxmi is said to have 'swarna hasta', which means that she has golden hands. In a typical image of Luxmi she is shown with gold coins pouring from her hand. Wherever Luxmi is, wealth exists there. Without which one cannot even perform the humblest charity. For this reason the first fhree days of Devi (Sakthi) pooja is devoted to Luxmi. For a happy fulfilling life

a person requires eight things, such as 'santhanam' (children), 'dhanam' (money), 'dhaniyam' (Food) etc. Hence our forefathers gave us eight different forms of Luxmi to worship. For instance a person with all the wealth in world would still be unhappy if they could not have children. As a result this person could go and worship 'Santhana Luxmi' asking for children.

Mahaluxmi is shown as being seated on red louts flower. The reason for the red color has already been explained. The reason for the lotus is different. It signifies that the Goddess is well rooted in the supreme reality. She holds a lotus flower in another hand, signifing the supreme reality. Another hand points upwards towards the lotus flower, sim ultaneously signifying her blessings and pointing out to all humanity the goal of their existence. Due to her role as the giver of all types of wealth, her devotees tend to be those who are leading a life of 'grahasthan' (family life).

## RUDRA

The deity Rudra, a Vedic deity, Expresses the resolution or reabsorbing aspect of Shivam. There was certain level of merging Saiva wit the deity Rudra. As a result the two are treated as though they were the same. Thus the school of thought today states that Shiva is the one who does the resolution or reabsorption. As the destructive element we find numerous symbols in his image. We frequently find Shiva portrayed as being adorned with a garland of skulls. This is to symbolize his job as the destroyer. He is also depicted as being covered with holy ash (thiruneeru). St. Appar in one of his songs describes lord Shiva as having a 'corral -like body smeared with ahes'. Why referto the color of the Lord's body as being the color of corral? The reason is that corral has a color similar to that of a flame. Flame destroys everything in its path. Thus the Lord of resolution is said to be the color of corral. The smearing of ashes is to remind one that when cremated all that is left of any thing is ashes. The soul has become one with Shiva. Thus his color and the fact that he is covered in ashes serve to remind us that he is the God of resolution. His yogic posture symbolizes that he is in a continuous state of meditation. It proclaims that meditation is the final gateway for true self - realization. As a result he is always in harmony with the ultimate reality. He is usually depicted with a snow - white background; this symbolizes the purity of the soul. When you reach beyond Shiva all your impurities (Malam) are cleared and made pure. His eyes are usually depicted as being half closed. This state is known as samabha vee mudra". If his eyes were fully closed that would mean that. He has turned out the world. If his eyes we fully open it would signify that he was fully aware of the world. His eyes are half - open; this signifies that though he is rooted in his inner nature. He is still aware of the world.

Another name that is used to refer to Shiva / Rudra is Chandramouleeswara. This translated literally means 'one who wears the moon as a crown". The Puranic legend tells us that when Chandran (Moon God) was in danger he sought refuge at the feet of Lord Shiva. As a result Lord Shiva allowed Chandran to hide in his hair. This story serves to illustrate the belief that whoever prostrates at Lord Shiva's feet in surrender will be given the highest honor.

Another key feature on Lord Shiva's face is his third eye. It is located on his forehead. This is not to be taken literally. The third eye serves to show that he has vision beyond the human reach. He is able to visualize the absolute truth, where mortals are confined to mere perceptions, emotions and thoughts. His vision is timeless and limitless.

Lord Shiva/ Rudra is sometimes referred to as Gangatharan. He is often shown with the river Ganga flowing from his matted locks. The story attached to this symbol is an interesting one. According to legend the river Ganga was called by the Gods to come down from heaven and quench the world during a famine. However, the river came down with such force that world was sure to be destroyed. To save the world from destruction Lord Shiva caught the river in his hair and held her there. He then allowed the river to flow from his hair in an amount that could benefit the world. In this story Ganga symbolizes the ultimate knowledge that was bought down from the heavens and given to huma

nity in a manner that they could comprehend. Quantum physics cannot be taught to a grade five student. Similarly, religion too requires preparation. One becomes prepared by performing penance, and meditation. A person is given the truth in quantities that can be absorbed and assimilated. A person is never given more than can be handled.

In one hand Lord Shiva holds a 'Thirusulam'. The Thirusulam is a three - pronged weapon; it symbolized the killing of the three impurities. The three impurities (malas) are anava (ego), kama (karma), and Mayai(illusion). In the other hand he holds a pot of water (kamandala). The significance of water has been explained earlier. In the third hand he holds a drum. The drum signifies that he is also a creator. The rhythm that Lord Shiva beats out on his drum is the rhythm at the heart of the Universe. It is the rhythm of the celestial bodies, the rhythm of creation, sustenance, and resolution; it is the rhythm of life. The primordial rhythm that Lord Shiva makes is what causes the whole Universe to evolve, revolve, and resolve.

## DURGA

The consort of Rudra is Durga. She is the destructive aspect of Sakthi. The word Durga literally means one who is hard to approach. As the aspect of Sakthi responsible for destruction, She is usually represented with a stern expression. She is dark in color and is shown with a black sari. Science proves that the color black has the capability to absorb all colors and not emit them back. Thus Durga is black to show that she is the aspect of Sakthi who resolve or re absorb. As a result Durga is both beautiful and fearsome. She can be depicted with four, eight, ten, or twenty arms: each arm usually brandishes an impressive array of weapons. Being the destructive element of Sakthi it is acceptable for her to carry all these weapons. The Goddess Kali is said to come forth from the forehead of Durga. If Durga represents the fierce aspect of Sakthi, then Kali represents the terrible aspect. Kali is represented with black skin and a hideous countenance. She is said to drip with blood. She is covered in snakes. She wears a garland of human skulls and is more representative of fury than of a Goddess.

There are many explanations for her appearance. Her black color refers to her ultimate nature (to resolve or absorb). The color black absorbs all colors and emits none. Thus the destructive aspect of Sakthi is given this color. She is often sho wn dancing on cremation grounds, where all beings eventually end up. The necklace of severed heads is the Universe of names and forms that she as the destructive aspect has destroyed. As the the name Kali suggests she is the destroyer of time. Kali represents life with all its dangers, bloodshed, suffering, fierce competition, and inevitable destruction.

## CONCLUSION

There are many deities in the Saiva pantheon They are a result of the religion being developed in regional sectors, each with their own philosophy. The Saiva religion is one of the most tolerant in the world. The great member of the Saiva Sidd anta school of philosophy St. Arulnathy Sivachari yar is known to have said "Which ever God you may worship, even as Him the consort of Uma (Shi va) will apprear". However if you worship another religion you hardly expect to see Lord Shiva. The great Saiva St. Thayumanavar says, "The path proclaimed by all saints who have the true visiion is the same". Here too you can observe the Saiva tolerancce and recognition of the other faiths. St. Appar goes a step futher and says "Even those who profess other faiths that oppose the Saiva faith are acceptable to my Lord (Shiva)." Such is the Saiva religion. Thus do not be confused by the numerous images in the Saiva religion. They are no more than signs upon which to focus.

# சைவசமயமும் இளஞ்சந்ததியினரும்

(ஆய்வுச்சுருக்கம்)

வீ. விக்கினராஜா - இலங்கை

## 1. சைவத்தின் தொன்மையும் சிறப்பும்

1.1 மொகஞ்சதாரோ ஹரப்பா போன்ற அகழ்வாய்வுகளிற் பெற்ற சின்னங்கள் இச்சமயத்தின் கால வரயைறையற்ற தொன்மைக்குச் சான்றாகத் திகழ்கின்றன.

1.2 சைவம் சிவனை முழுமுதலாகக் கொண்டது. அநாதி சமயமாகவும் சநாதன தர்மமாகவும் இது விளங்குகின்றது.

1.3 சைவ சித்தாந்த தத்துவங்களே இச்சமயத்தின் ஆதாரமாகும்.

1.4 சைவசமய சாத்திரங்கள், வழிபாட்டு முறைகள், திருக்கோயில் வழிபாடு என்பவை இச் சமயத்தின் நிலைபேற்றுக்குக் காரணமாகும்.

1.5 சிவனருள் பெற்ற ஞானிகளால் அருளப்பட்ட பன்னிரு திருமுறைகள் சைவசமயத்தின் இலக்கியக் கருவூலங்களாகும்.

## 2. சைவத்தின் பரம்பல்

2.1 சைவசமயம் தென்னிந்தியா, இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர், டாபன் போன்ற நாடுகளில் வாழும் மக்களினால் அநுட்டிக்கப்படுகின்றது.

2.2 கடந்த பல தசாப்தங்களாக மேற்கு நாடுகளிலும் சைவமக்கள் குடியேறி வாழ்வதால் இலண்டன், ஜேர்மன், கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே, பிரான்சு போன்ற பல நாடுகளிலும் சைவசமயம் பரவிவருகின்றது.

2.3 பல்வேறு நாடுகளிலும் வாழும் சைவமக்கள் தமது சமய நம்பிக்கையை கடைப்பிடிப்பதில் பல சிரமங்கள் உள்ளன.

2.4 சைவ தத்துவங்களைப் புரிந்துகொள்ளல், திருக்கோயில்களை அமைத்தல், சமயக்கிரியை முறைகளைப் பின்பற்றல், ஆசார சம்பிரதாயங்களை மேற்கொள்ளல் போன்றவற்றிற்கு மேனாடுகளில் வாழும் சைவமக்கள் பல தடைகளை எதிர்கொள்கின்றனர்.

2.5 பிறநாடுகளின் கலாச்சாரம், காலநிலை, அந்நியத்தன்மை, சைவத்திற்கு எதிரான பிற மதங்களின் ஆதிக்கம் என்பனவும் இயந்திரமயமான வாழ்க்கையும் சைவ சமயத்தை நிலைநிறுத்திக் கொள்வதில் உள்ள தடைக்கற்களாகும்.

## 3. இன்றைய இளஞ்சந்ததியினர்

3.1 இன்றைய இளஞ்சந்ததியினர் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகளின் சவால்களுக்கு ஈடுகொடுக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

3.2 அத்துடன் ஒரு நாட்டிற்குள்ளும் நாடுகளுக் கிடையிலும் நிலவும், சமூக இன முரண்பாடுகள் காரணமாக இளஞ் சமூகத்தினர் அலைக்கழிக்கப் படுகின்றனர்.

3.3 போதைப்பொருள் பாவனை, பிறநாடுகளின் கட்டற்ற கலாசாரம் போன்றன இளைஞர்களை தீயவழிகளுக்கும், முரணான செயற்பாடுகளுக்கும் இட்டுச் செல்கின்றன.

## 4. சைவசமய நெறிமுறையும் இளஞ்சமூகமும்

4.1 இன்றைய இளைஞர் சமூகம் ஆன்மீக ரீதியில் வாழ்வதில் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

4.2 விஞ்ஞான ரீதியாகச் சிந்திப்பதால் அவர்கள் சமய நம்பிக்கைகளை ஏற்க மறுக்கும் தன்மை.

4.3 இலங்கை, தமிழ்நாடு, போன்ற நாடுகள் தவிர்ந்த நாடுகளில் வாழும் இளஞ்சமூகம் அவ்வவ் நாட்டு மொழிகளிற் பயில்வதும், பிற கலாசாரத்தைப் பேணுவதும் ஏற்படுத்தும் சிக்கல்கள்.

4.4 திருக்கோயில் வழிபாடு சமய நெறிகளைப் பின்பற்றல் போன்றவற்றை அறிந்து ஒழுக உரிய வாய்ப்பின்மை.

4.5 சைவசமய பாரம்பரியத்தைப் பின்பற்ற இயலாதவாறு நிலவும், பிறநாடுகளின் பண்பாட்டுச் சூழல்.

## 5. இளஞ்சமூகத்தினரின் எதிர்காலம்

5.1 சைவசமயத் தத்துவங்களை இளஞ்சமூகத்தினர் மத்தியில் உறுதியாகச் சொல்வதற்குத் திருக்கோயில் வழிபாடு மிகவும் அவசியம். ஆயினும் கோயில் இல்லா ஊரிலும் "சைவசமயியாக" வாழ்வதற்குப் பெரியோர் உதவ வேண்டும்.

5.2 சைவசமயத் தத்துவ நூல்களை இளையோர் அறியும் வண்ணம் அவ்வந்நாட்டு மொழிகளில் வெளியிடல்.

5.3 இன்டர்நெட் போன்ற நவீன விஞ்ஞான சாதனங்களின் மூலம் இளையோருக்குச் சைவசமயக் கோட்பாடுகளைப் பரப்புதல்.

5.4 இளைஞர்கள் குழுக்களாக இணைந்து ஐயங்களைத் தெளியுமாறு சமய அமைப்புகள் உதவி செய்தல்

5.5 சைவசமயப் பெற்றோர் சமய பாரம்பரியத்தை இளைஞர்களுக்குக் கையளிப்பதில் மிகவும் உறுதியாக இருத்தல்.

# சைவமும் ஸ்மார்த்தமும்

கலாநிதி மு. கந்தையா - ஏழாலை
சிவநெறியாளர்

சைவ ஆதார நூல்களுள் சைவம் என்ற பெயருக்கு விளக்கம் தருவதில் முன்னணியில் நிற்பது திருமந்திரம். "சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது" என்பது திருமந்திர வாக்கியம். சிவனுடன் எதன் சம்பந்தம்" என இதன் சார்பில் எழக் கூடும் விசாரணைக்குச் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் தத்துவ ஞான ஆய்வியல் வடிவமாகவும் சைவத்திருமுறைகள், அநுபவமயமாகவும் தரும் பதில்கள் உள. சைவசித்தாந்த உள்பொருள்களான பதி, பசு, பாசம் என்று மூன்றில் பதியும் பசுவும் சித்து என்ற ஓரினப் பொருள்கள். பாசம் சடம் என்ற மற்றோரினப் பொருள் சித்துப் பொருள் இரண்டில் பதி எந்நிலையிலும் பாசத்தை இரு பொருளாக வேண்டுவதோ அதைச் சார்ந்ததோ இல்லை. தன்சர்வ வியாபக இயல்பினால் பாசத்தையும் அது வியாபிக்க வேண்டியுள்ள நிலையிலும்கூட, பதி அதில் தோய்வின்றியே, அதைச்சாராமலே நிற்கிறது என்பது இங்கு பிரதானம். பாசத்தின் சடத்தன்மை பதியின் சிததுத்தன்மைக்கு எதிர் ஆதலால் பாசம் பதியைச் சார்தலும் இல்லை. இவ்வாறாதலால் பதியாகிய சிவனுடன் சம்பந்தமாதல் பசுவெனப்படும். ஆன்மாவுக்கல்லது இல்லை எனல் சித்தாந்த சாஸ்திரங்களின் தத்துவ ஞானவிளக்கப் பின்னணி.

பசுவுக்குப் பதியுடனான இச்சம்பந்தம் நிரந்தரமானது. பசுவின் மூவேறு அவஸ்தைகளாகச் சொல்லப்படும் கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை என்ற மூன்றிலும் அவ்வவ் ஆன்ம இயல்புக்கேற்ப அமையும் மூவேறு விதமான சம்பந்தம் இது எனலும் இச்சைவசித்தாந்த சாஸ்திரங்களில் ஆய்வியல்ரீதியாக நிறுவப்படும்.

இனி, இதற்குரிய அநுபவப்பயன் சைவத்திருமுறை களில் இடமிடந்தோறும் பல்கிக் கனிந்து கொண்டிருத்தல் காணத்தகும். மணிவாசக சுவாமிகள் முற்றுமுழுதாக ஆத்மாநுபவத்தையே உருக்கி வடித்ததாக உள்ள திருவாசகத்தில் ஒருவாசகமே இதற்குதாரணம் ஆதற்குப் போதுமானது.

"உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்து என்னுளம் மன்னிக் கருத்திருத்தி
ஊன்புக்குக் கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள் தில்லைகண்டேனே"
திருவாசகம் -கண்டபத்து

மேற்குறித்த மூன்றவஸ்தைகளிலும் தொடர்ந்திருக்கும் ஆன்மசிவசம்பந்தம் அநுபவரீதியாக வெளிப்பட்டிருக் கிறது இங்கே.

"உருத்........ உள்புகுந்திருந்தது" -கேவலநிலையில் "உளம்மன்னி" இருந்தது - சகலநிலையில் "கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டு" கொண்டது - சுத்தநிலையில். ஆன்மாவுக்கு சூக்குமசரீரம் என்ற உருத்தோன்றாதிருந்தநிலை கேவலநிலை. அந்நிலையிலேயே சிவன் அதன் உள்புகுந்திருந்தமை கேவலநிலையிலான ஆன்ம சிவசம்பந்தம். பிறகு தநு கரண புவன போகங்கள் எல்லாம் வழங்கி ஆன்மாவை மாறிமாறிப் பிறப்பில்விட்டு வாழ வைக்கும் நிலை சகலநிலை. அந்நிலையில் ஏலவே உள்புகுந்திருந்த சிவன் தன்னிருப்பு ஆன்மாவுக்குத் தோன்றாமல் அதன் உள்ளத்துக்குள்ளாகவே நிலைத்திருந்து பிறவி தோறும் அதற்கு வேண்டும் இன்பதுன்ப அநுபவங்களை ஊட்டி ஊட்டி அவற்றின் மூலம் இருவினையொப்பு நேர உபகரித்து சகலநிலையிலான ஆன்மசிவசம்பந்தம். இனி, இருவினையொப்பு நிலை ஆன்மாவின் வாழ்வியற்போக்கின் திருப்புமுனை. அதுவாயிலாக அத்துணைக்காலமும் தன்னை (சிவனை) அநுமதிக்காதிருந்த ஆன்மாவின் கருத்தில் அவர் தானாகவே செறிந்திருந்து கொண்டு தானே புறத்திலும் குருவடிவில் வந்து ஆட்கொண்டு அதன் மேல் கருத்திலிருந்த அளவிலல்லாது காயத்திலும் (ஊன்) புகுந்துலாவி ஆன்ம அநுபவம் முழுவதும் தன் அநுபவமே ஆக ஊட்டிநிற்றல், சுத்தநிலையில் ஆன்ம சிவசம்பந்தம்.

இங்ஙனம் தொடக்கமில்லாத ஆதியிலிருந்து (அநாதி) முடிவில்லாத முடிவு (முத்தியின்பப்பேறு) வரை உள்ள ஆன்மா சிவசம்பந்தம் சைவம். (சைவம் என்ற இதே சொல் அல்லது நம்மவர் (தமிழர்) தம் இயல்பு சமயத்தைக் குறிக்க வேறு எந்தச் சொற்கும் அருகதை இல்லை என்பதும் இதில் வைத்துணரப்படும். இது இங்ஙனமாக,

"ஸ்மார்த்தம்" என்பது ஸ்மிருதிவழி ஒழுக்கம் என்ற பொருளே பொருளாக உள்ள ஒரு பெயர். வேதங்கூறும் ஒழுக்கவிதிகள் கையாளப்பட்டதற்காகிய விதிகளைத் தெரித்துக் கூறுவது ஸ்மிருதி. அது அவ்வப்போது ரிஷிகளாயுள்ளோர் தத்தம் நிலையிற் கணித்துக் கூறியது என்ற காரணத்தோடு கூடிய பெயர்.

(ஸ்மிரு-நினை) இதனால் வேதங்கூறும் ஒழுக்கம்

மாத்திரமே சமய ஒழுக்கம் எனத் தழுவி வந்த வைதிகரின் சமயம் ஸ்மார்த்தம் எனல் நன்கு விளங்கும். அத்துடன் மேற்கண்டவாறான சைவம் பெயர்விளக்கத்தின் சாயை கூட இதற்கில்லையாதலால் ஸ்மார்த்தம் சைவத்தின் வேறென்பதும் அங்ஙனமே.

முதல்நூற் கொள்கை நோக்கில் இச்ஸ்மார்த்தம் போலாது வேதத்தை ஒருபொது அளவில் முதல்நூலாக ஏற்றுக் கொண்டு அத்துடன் சிவாகமத்தைச் சிறப்புநிலை ஆதாரநூலாகக் கொள்வது சைவம். வேதத்திற்கூடச் சிவாகமத்துக்கு மாறுபாடாயிருப்பதைச் சைவம் பெயர்விளக்கத்தின் சாயைகூட இதற்கில்லையாதலால் ஸ்மார்த்தம் சைவத்தின் வேறென்பதும் அங்ஙனமே.

முதல்நூற் கொள்கை நோக்கில் இச்ஸ்மார்த்தம் போலாது வேதத்தை ஒருபொது அளவில் முதல்நூலாக ஏற்றுக்கொண்டு அத்துடன் சிவாகமத்தைச் சிறப்புநிலை ஆதாரநூலாகக் கொள்வது சைவம். வேதத்திற்கூடச் சிவாகமத்துக்கு மாறுபாடாயிருப்பதைச் சைவம் ஏற்பதில்லை. இரண்டுக்குந் தத்தமளவில் திருப்தி என்ற நிலையில் இரண்டும் பாரதநாட்டிற் பல்லாயிர வருடங்களாக இருந்துள்ளதாக அறியப்படுகிறது. ஆனால், கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றினவர் என்ற ஸ்மார்த்தரான சங்கரர் என்பவர், தாம் தரங்கடந்த அதிவிவேகியாயிருந்ததனாற் போலும் சிவாகமத்தைச் சிறந்த ஆதாரமாகக் கொண்டு நிலவிய சைவத்தையும் ஸ்மார்த்தம்போல் வேதத்தை மட்டும் ஆதாரநூல் ஆகக் கொள்ளும் நிலைக்குத் தட்டியடக்கும் ஒரு எடுகோளை மேற்கொண்டுள்ளார். அதற்காக அவர் மேற்கொண்டுள்ள பிரயத்தனங்கள் பல. பலவேறு தரத்தின. அவற்றை நிரல்படுத்தின்:

1. சிவனை முழுமுதற்கடவுள் என ஏற்று, சக்தி, விஷ்ணு, விநாயகர், குமரன், சூரியன் என்ற ஐந்தையும் சிவவழிபாட்டில் உள்ளடங்கக் கொண்டிருந்த சைவத்திலிருந்து குறித்த ஐந்தையும் பிரித்து அவற்றையும் தனித்தனி முழுமுதல்களாக நிறுவி அதேவேளை சிவன் அனைத்துக்கும் முழுமுதல் என்ற நிலையைப் பகிஷ்கரித்து அதுவும் மற்றைய ஐந்தையும் போலத் தன்சமயமாகிய சைவத்துக்கு மட்டுமே முழுமுதற்கடவுள் எனக் கற்பித்து அவ்வகையால், சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணபத்யம், கௌமாரம், சௌரம் என ஆறுமுழுமுதற் சமயங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சரிநிகர் சமம். அனைத்தும் அநாதியானவை. ஆறையும் சமமாக வழிபடுவதே உண்மைச் சைவவழிபாடு என்ற பிரசாரத்தை முடுக்கிவிட்டார்.

ஸ்மார்த்தராயுள்ளோர் இச்சங்கரருக்குச் "ஷண்மதஸ்தாபகர்" என்ற தனிவிருது கொடுத்துப் பிரசித்தமாகப் போற்றி வருவதொன்றே இதற்குப் போதுமான அத்தாட்சியாயமையும்.

இவ்விடத்தில் கட்டுரைத் தொடர்பை முறித்து இது சார்பான மற்றொன்று சொல்லவேண்டிய அவசியம் நேர்கிறது.

இச்சங்கரர் தமது மந்திர தந்திர உபாசனைகளாற் பெற்ற ஆளுமை விசேடத்தாலும் இமயம் முதற் குமரியீறாகவுள்ள பாரதம் அடங்கலும் சமயரீதியில் தமது ஷண்மதக் கொள்கையையும் தத்துவரீதியில் தமது விவர்த்தமாயாவாதத்தையும் நிலைநாட்டிவிடப் பகீரதப் பிரயத்தனம் பண்ணியவர். அதன் சார்பில் பத்ரிநாத், பூரி, சிருங்கேரி, திருச்சூர், துவாரகை, காஞ்சி முதலிய இடங்களிற் பெருமளவிலான ஸ்மார்த்த மடங்களை நிறுவி அவற்றின் மூலம் ஷண்மத பரிபாலனம் நிகழ வகை செய்து வைத்தவர். இப்பணியில் எக்காலத்தும் முனைப்புற்று நின்று வருவது காஞ்சிகாமகோடி மடம். கடைசியாக மறைந்த, அம்மடத்து முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் ஆழ அகலமான அறிவாராய்ச்சித் திறத்தினாலும் மாசுமறுவற்ற துறவொழுக்க விசேடத்தினாலும் அகில உலகமதிப்பை முறைமையாகப் பெற்றுத் திகழ்ந்தவர். தமது மடபரிபாலன வழிநின்று ஸ்மார்த்தஷண்மத விளக்க சாதனங்களான விரிவுரைகளை அருளுரைகள் என்ற பெயரில் பெருமளவில் வழங்கி வந்தவர். ஸ்மார்த்தம் பற்றியவற்றில் அவருரைகளில் அடங்காததெதுவுமில்லை. அவர் பேரில் அருளுரைகள் 101 என்ற பெயரில் பல பாகங்களாக (விகடன் பதிப்பாக) வெளிவந்துள்ள பாரியநூலொன்றுண்டு. இக்கட்டுரையில் இடம்பெறும். ஸ்மார்த்தம் பற்றிய கருத்துக்கள் ஷண்மததாபனம் பற்றிய சங்கரரின் செயற்பாடுகள் அனைத்துக்கும் அந்நூலில் ஆதாரமுண்டு. அவற்றில் 1ஆம், 3ஆம் அருளுரைகள் பிரதானமானவை.
இனி விட்ட இடத்திலிருந்து தொட்டுக் கொள்ளலாம்.

2. இச்சங்கரர் அன்றைய சைவாலயங்களில் சிவாகமவிதிவிளங்க நடைபெற்று வந்த கிரியைகளைத் தாம்காட்டும் வேதவிதிப்படி நடத்தப்படுமாறு வற்புறுத்தி வந்துள்ளார்.

3. சைவாலயங்களிலுஞ் சக்தி பூசையையே பிரதானப்படுத்தியுள்ளார். அதன் சார்பில் சாக்தர் பழக்கமாகிய சக்கரபூஜையையும் பிரபலப்படுத்த முயன்றுள்ளார். ஸ்ரீ சக்கரத்தின் திருத்தந்தை அவரே.

4. காஞ்சி காமாக்ஷி சந்நிதியில் தமது ஸ்ரீசக்கரம் பதித்து அதன் குரூரத்தை அடக்கிச் சாந்தமாக்கி அங்கிருந்து கிளம்பி ஊரை வருத்திய எட்டுக் காளிகளையும் தேடி அடக்கியுள்ளார். திருவானைக்காவில் உள்ள அகிலாண்டேஸ்வரிக்குக் காதணி (தாடங்கம்) செய்வித்து அதில் தமது ஸ்ரீசக்கர ஆற்றலை ஏற்றி அணிவித்து அதன் மூர்க்கத்தை மாற்றிச் சாந்தமாக்கியுள்ளார்.

திருவொற்றியூரில் சக்தியாகிய திரிபுவனசுந்தரியின் மூர்க்கத்தைக் கிணறொன்றிற் பாய்ச்சி அதற்கும் வருஷத்தில் ஒருநாள் பூசை நிகழ உத்தரவிட்டிருக்கிறார். அசாமில் "காமாக்யா" என்ற சக்தியின் கோரத்தைக் கொஞ்சம் அடக்கி மீதியை இருக்கட்டும் என்று விட்டிருக்கிறாராம்.

குறித்த அருளுரைகளில் இல 1. இவற்றை அப்படியே கண்முன்னே வைத்தெடுத்தாற்போல்க் காட்டுகிறது. இவற்றின் பதார்த்தம் அறிஞர் அங்கீகாரம் பெற்று ஊர்ஜிதமானதில்லை. அதற்குப்பதில், குறித்த சம்பவங்களின்போது அச்சக்திகளின் நாயகர்களாக ஏகாம்பரநாதரும், ஆனைக்கா அண்ணலும், படம்பக்க நாதரும் வேறு அலுவலாய் வெளியேறியிருந்தார்களா? எனக் கிண்டல் செய்வாருமுளர். (இவை சைவஞான விரோதம் என்பதே காரணம்). இவை ஒருபோதும் உண்மையாகா. சிவசக்தி தனியாள் ஆற்றலால் ஆட்டிப்படைக்கப்படும் பொருளல்ல என முன்னைய சைவசித்தாந்தம்" ஆசிரியர் மு. அருணாசலம் மறுத்துமிருக்கிறார். எப்படியிருப்பினும் சநாதன சைவத்திற் குறுக்கிட்டு அதனைத் தனது ஸ்மார்த்த வளாகத்துட் கொண்டுவரச் சங்கரர் அரும்பாடுபட்டிருக் கிறார் என்பது மட்டும் தெளிவு.

சைவசமயாசாரியர்கள் சார்பில் அற்புதம் நிகழ்ந்ததென்பது வேறு, இது வேறு. அவை அவர்களின் சுயயத்தனமின்றியே திருவருள் நிகழ்வுகளாக வெளிவந்தவை என்பது அந்நிகழ்ச்சிகளின் ஞானவிளக்கப் பண்புகளாக அறியப்படுவதனால் இவை பயில்வான் வித்தைப் பாங்கில் நடந்துள்ளனவாகப் புலப்படுதல் கொண்டு அங்ஙனமாகாமை துணியப்படும்.

5. இவ்வகையவெல்லாம் அதிக பிரயாசத்தினால் ஷண்மததாபனம் பண்ண முயன்றிருக்கும் சங்கரர் திருக்கைலாசம் போய்ச் சிறீகண்ட பரமேஸ்வரனிடம் படிகலிங்கம் (சந்திர மௌலீசர்) ஐந்து பெற்றுவந்து உலக ஷேமத்துக்காகத் தென்னாட்டில் அங்கங்கு பிரதிஷ்டை செய்திருக்கிறார். சிதம்பரத்தில் நிகழும் தினசரி அபிஷேகங்கள் ஆறில் ஐந்துக்கு உரிய ஸ்படிகலிங்கமும் அவற்றுள் ஒன்று. அது மட்டும் அவர் தாமாகப் பிரதிஷ்டை செய்து வைத்ததில்லை. தமது அந்நிய காலத்தில் தமது சிஷ்யரொருவர் மூலம் பிரதிஷ்டை செய்வித்துள்ளார் என்ற விதப்பும் இதிலொன்று.

6. இம்முயற்சியிற் பாரதம் முழுவதிலும் 72 சமயத்தலைவர்களைத் தேடிச் சென்றெதிர்த்து வாதில் வெற்றி கொண்டபின் காஞ்சியில் சர்வக்ஞ பீட ஆரோகணம் பண்ணியிருக்கிறார்.

தாமற்றுத் தம் செயலற்றுச் சிவன் வசமாகவே நின்று எல்லாஞ் சிவன் செயலாகவே நிகழும் என்ற அந்தரங்க உண்மையைப் பகிரங்கமாக அகில உலகும் தெளியத் தேற்றித் திருவருள் நெறியே சைவநெறியாமாற்றைத் தம் அருளிச் செயல்களாலும் ஆணித்தரமாக அறிவுறுத்தி அலகில் செழுந்தமிழ் வழக்கே (சைவசித்தாந்தம்) அயல்வழக்கின் (வேதாந்தம்) வெல்ல வைத்த சமயாசாரியர் மறைந்து ஒரு நூறாண்டு கழிவதற்குள்ளே இப்படித் தான்தோன்றித்தனமான சண்டப்பிரசண்ட மாற்றங்களெல்லாமென்றால் இது ஏதோ விரோத நடவடிக்கை எனல் தானே? புலனாகா தொழியாது.

இவ்விரோதப் போக்குக்கு முக்கியகாரணம் இச்சங்கரர் பத்மபாதர் சிஷ்யராகிய கோவிந்தபாதர் மூலம் தாம் பெற்ற ஞானத்தைத் தர்மிஷ்டமாகப் பரிணமிக்கவைத்து வெளிப்படுத்திய விவர்த்தமாயாவாதம் என்னும் புதுவேதாந்தக் கொள்கையாகும். அவர் விரோதச் செயற்பாடுகளாக அறியப்படுவன ஒவ்வொன்றும் ஒவ்வோராற்றல் மாயாவாதப் பின்னணியோடு கூடியவை என அறிதல் சுவாரசியமானதாகும்.

சிவன் தன் முழுமுதற் கடவுள் அல்ல எனக் காட்ட முயல்கின்றார் சங்கரர். ஏன்? பிரமமல்லாது முதல் வேறில்லை என்ற தம் கொள்கைக்கு முரணாமென்பதால் சாதாரண அறிவியலுக்கே விரோதமாம் பாங்கில் முழுமுதற்கடவுள் ஆறு என வலியுறுத்துகிறார். ஏன்? இவை எல்லாம் பிரமம் மாயையோடு கூடியதால் செயற்கையாக ஏற்பட்ட விவர்த்தங்கள்.(விவர்த்தம்- உண்மையில் இல்லாத ஒன்று உள்ளதுபோல் தோன்றல்). ஆதலின் முடிந்த முடிபான முத்திப்பேற்றுக்கு இவ்எதனாலும் ஆவதொன்றில்லை. ஆதலால் எத்தனை இருந்தாலும் பரவாயில்லை என்பதற்காக. புராண இதிகாச கதாபாத்திரங்கள் மந்திர உபாசனா தேவதைகள் எல்லாம் வழிபடு தெய்வங்கள் என்றார். ஏன்? இவை ஒன்றாலும் ஞானம் வராது. ஞானம் வருவது சாதன சதுஷ்டயத்தால். இவை சும்மா பக்திக்காக. ஆதலால், அவரவர் தம் இஷ்டப்படி இவை சார்பாகப் பக்தியைப் பெருக்கி இம்மைச் சுகபோகங்களைப் பெறுவதே இவற்றாலாம் பலன் என்ற தம் கொள்கையை வலுவுறுத்தற்காக.

சங்கரர் சிவசக்திகளை ஆட்டிப்படைத்ததாகப் பிரசாரங் கிளம்பியது. அவர் சிவனது அவதாரம் என்ற பொருந்தாமேற்கோளை யதார்த்தப்படுத்தி அதன்மூலம் பிரமமே அவித்தையோடு கூடிப் பல்வேறு உயிர்களாகிக் கருவுற்றுப் பிறக்கிறது என்ற தமது மேற்கோளுக்கு அத்தாட்சி காட்டுதற்காக. அருளுரை ஆசிரியர் இதற்குரைத்திருக்கும் சமாதானம் அவசியம் அறிதற்பாலது.

கருவாய்ப்பட்டுப் பிறத்தல் சிவனுக்கு அபசாரம் என்பானேன். பிரமம் தானே அவித்தையோடு கூடி அநேககோடி உயிர்களாகக் கருவில் தங்கிப் பிறந்து வருகிறது. அப்படிச் சிவனும் கருவிலிருந்து பிறப்பதில்

என்ன ஆட்சேபம் என்பது அவர் சமாதானம். அது தவறு. இவ்வருளுரை ஆசிரியர் போன்ற பெரியார்கள் அப்படிச் சொல்லக்கூடாது" என முற்குறித்த மு. அருணாசலம் பகிரங்கமாகக் கண்டித்திருக்கிறார். அன்றியும், பிறக்கும் ஒவவோருயிரும் பிரமம் எனில் சங்கரரும் பிரமம் பிறந்த பிறப்பே. எனில் இவருக்கு ஒரே தடவையில் பிரமம் பிறந்த பிறப்பொன்றும், சிவன் பிறந்த பிறப்பொன்றுமாக இரட்டைப் பிறப்பா என்ற ஆசங்கையும் எழுகிறது. பிரமமும் சிவனும் ஒன்றுதானே என இதற்குச் சமாதானங் கூறுதற்கு, பிரமமே முழுமுதல் சிவன் முதலல்ல என்ற சங்கரர் கூற்றும், சிவனும் சக்தியும் பிரமத்தின் படைப்புகள் என அருளுரையாசிரியர் தம் உரையில் ஓரிடத்திற் கூறியிருப்பதும் இடங்கொடா.

மேலும் பிரமமே எல்லாமாய் (உயிர், உலகம்) தெரிகிறது என்னும் சங்கரரே பிரபஞ்சம் இல்லாத பொய்த்தோற்றம் என்கிறார். இதன் பொருந்தாமையைச் சுட்டி, பிரமமே பிரபஞ்சம் என்னும் மாயாவாதி பிரபஞ்சத்தைப் பொய்யென்றுங் கூறுவான் எனக் கைலாசபதி ஸ்மிருதி கூறுதல் காண்க. (கைலாசபதி ஸ்மிருதி: இந்நூற்றாண்டின் முற்பகுதியில் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை உபஅதிபராயிருந்த ஆத்மீக சாதனையாளர் பொ. கைலாசபதியின் சிந்தனைத் தொகுதி)

இவை போல்வன அளப்பில. விரிக்கிற் பெருகும். இங்ஙனம் அருத்தமும் பொருத்தமுமற்ற மாயாவாதம் எனும் தவறான தத்துவக் கொள்கைக்குத் தாக்குப் பிடிப்பதற்காக நிஜமான மெய்யியல் விழுமியங்களுக்கும் அறிவியலுக்குங்கூட முற்றிலும் பொருத்தமானதென அகிலப் பிரசித்திபெற்ற சநாதன சைவத்தைச் சிதைத்து ஷண்மதம் படைத்திருக்குஞ் ஸ்மார்த்தத்தைச் சைவம் எனக் கொண்டு ஏமாறுதல் மகாதவறாகும்.

ஷண்மதத்தையும் சுட்டும் தொகுதிப் பெயரான இந்துசமயம் என்ற பெயரை நம் சைவத்துக்கும் ஏற்றி அதை இந்து சமயம் என்ற பெயரால் வழங்குவது அதனினும் பெருந்தவறாகும்.

ஷண்மதம் சைவத்தையும் உட்கொண்டுள்ளது என்று இந்நாளிற் கூறப்பட்டு வருவது வெறும் பசப்பு வார்த்தை யல்லதில்லை. ஷண்மதம் உட்கொண்டிருக்கும் ஸ்சவம் சித்திரவதை செய்யப்பட்டுச் சிறைக்கைதியாக்கப் பட்டிருக்குஞ் சைவம் என்பதே நிஜம். அதில், சிவன் முழுமுதல்வன் என்ற சைவஉண்மைக்குத் தலைவெட்டு. சிவனுக்கு சகுனப்பிரமம் என்ற பதவியிறக்கம்- (Depromotion) பரமுத்திப்பேறு சிவனால் என்ற உண்மைக்கு நிராகரணம். மூச்சான மகாமந்திரமா யிருக்கும் ஐந்தெழுத்துப் பொருண்மைக்கு ஏகப்பட்ட அவமதிப்பு. அதன் உயர்விளக்கமாகிய ஊனநடன ஞானநடன உண்மைகள் பிழிந்து தள்ளப்பட்ட சக்கையின் நிலை அதற்குச் சண்மத சைவத்தில். வேதஸ்மிருதி விதி தவிரப் பிரபல்யமான சிவாகம விதிகளுக்கு அச்சைவத்தில் செல்மதியோ சேர்மதியோ (Admision) அதற்கில்லை. வேதவிதிப்படியான வெறும் வரட்டுக்கிரியைகளன்றி பக்திப்பண்பூட்டும் திருமுறை உபயோகத்துக்கு அதில் நிராகரிப்பு. ஆசார பக்திக்கு அதில் அருகதை இல்லை. இதற் குதாரணமான உண்மைச் சம்பவம் ஒன்று வருமாறு

தஞ்சாவூர்ப் பிருகதீஸ்வரர் கோயில் தற்சமயம் காஞ்சிகாமகோடி பீட ஆளுமையில் சமீபத்தில் அங்கு ஏற்பாடான மாகாகும்பாபிஷேக வைபத்தில், அபிஷேகத்தினத்துக்கு முதலிரவே மாபெருந்தீவிபத்து நேர்ந்து கும்பாபிஷேகப்பந்தர் சர்வநாசம். 60க்கு மேற்பட்ட மரணங்களுங்கூட சம்பந்தப்பட்ட யாவரும் செய்வதறியாது திகைத்த நிலை. "ஒன்றுக்காகவும் வைத்துப் பார்க்கத் தேவையில்லை. குறித்த முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடக்கட்டும்" என வந்தது மேலாணை. நடந்துவிட்டது கும்பாபிஷேகம். (பிரமத்துக்குத் துடக்கில்லை செத்ததுகளும் பிரமங்கள். ஆதலால் தோஷமில்லை என்பது உட்குறிப்பு) இதற்கு மதுரை ஆதீனத்தின் கண்டனம் பிரசுரமாகியிருந்தது. கண்கண்ட விஷயம்.

எனவே ஷண்மதத்திலும் சைவம் உள்ளது என்பதை ஏற்பது சைவத்துக்குப் பிரதிபதம் இந்துசமயம் என்பதை ஏற்பதைவிடப் படுபாதகமான தவறாகும்.

இந்த இயல்பற்ற சைவத்தைப் பரிபாலிக்கும் காஞ்சிகாமகோடி பீடத்துக்குச் சைவப்பிராமணர் குருமார் பயிற்சிக்கெனப் பிள்ளைகளை அனுப்பிவருஞ்செயல் அதிபாதகங்களுள் முதுபாதகமாகும்.

காமகோடி பீடத்திற் குருத்துவப் பயிற்சி பெற்றிருந்த மலேஷியாச் சைவாலயபூசகரிலொருவர் அந்நாட்டு மலேஷிய நண்பன் என்னும் தினசரியில் எல்லாம் சங்கரமயம் எனப் பிரகடனம் பண்ணியிருந்தமை கண்ணாரக் காணக்கிடந்ததண்டு. இம்மடத்திற் பயிற்சிக்குச் செல்வோர் சங்கரப்பிரேமையோடுதான் திரும்புவர் என்பதற்கு இது நிதர்சனம். எல்லாம் சிவமயம் அதுதான் சைவம் எனல் கூறவேண்டா. அதையெல்லாம் சங்கரமயம் ஆக்கிரமித்துவிடுதல் ஸ்மார்த்தத்துக்குச் சைவம் இடங்கொடுத்தமையால் நேர்ந்த விபரீதம் ஆதல் வெளிப்படை.

இவ்விபரீதம் நேர வந்ததேன்? எப்படி? என்பதும் விசாரணைக்குரியதே.

சங்கரரிடத்தில் அமாநுஷ்யமான திறமைகள் இருந்ததுண்மை. அவரினத்தாரான பிராமணர்களால் அத்திறமைகள் பெருகிப் பிரசாரஞ் செய்யப்பட்டுள்ளதும் அதற்கும் மேலான உண்மை. அதேவேளை புத்திஜீவி களான மேல்நாட்டு ஆய்வியலாளர் சங்கரரின் புத்திசாதுரியத்திறமையை வியந்தோதியதும் உண்மை. அவர் சாதித்தனவாக அவர் வரலாற்றிற் காண்பன பல அவரது மந்திர தந்திரங்களாலும் சக்திவாலாயத்தினாலும் சக்கரபூசை உபாசனையாலும் விளைந்தவை என்பதும்

அப்பட்டமான உண்மை. இவற்றாற் கவரப்பட்ட அயல்நாட்டுப் பிராமண சமூகமும் மற்றெவர்க்குமில்லாத அபாரத் தெய்வீகம் அவர்பாலுளதாகக் கொண்டு அவர் மகிமையில் எடுபட்டுவிடுவதாயிற்று. ஆனால், புத்திசாதுரியங்கள், விவேகத்துணுக்குகள் தெய்வீகமல்ல உபாசனைகள், வாலாயங்கள் ஞானசாதனமல்ல என்ற விளக்கம் பெறற்காம் கல்வி அறிவாராய்ச்சி யற்றிருந்தமையால் பிரதானமாக இத்தலைமுறை சார்ந்த பிராமணசமூகம் இதில் மயங்குவதாயிற்று. இலங்கைச் சைவசமூகத்தில் குறித்த விளக்கம் பெற்றிருந்த சிவப்பிராமணர் சென்ற தலைமுறையின் இறுதிவரை இதில் எடுபட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தகும்.

மேலும் சைவஞானவிளக்கமோ, இயல்பான சைவப்பற்றோ, சைவக்கிரியைப்பேறான நிலையான ஆன்மீகப்பேற்றில் விசுவாசமோ அற்றுப் பொதுசனக் கவர்ச்சிச் சாதனங்களை மிகுத்து அதன் மூலம் அர்த்தலாபம் பெறும் இத்தலைமுறைப் பிராமணர் போக்கும் இதற்குபகரிப்பதாகிறது.

இங்கு தென்னிலங்கையில் நம்பொடையிலும் வடஇலங்கையில் இணுவிலிலும் கால்கொண்டிருக்கும் ஆஞ்சநேயர் ஆலயமுயற்சி முற்றிலும் இந்த அடிப்படையிலேயே எழுந்துள்ளது. ஸ்மார்த்தரும் ஸ்மார்த்தத்தில் எடுபட்ட சைவாலயப் பிராமணருமே இம்முயற்சியில் தலையிட்டிருத்தல் கண்கூடு.

ஸ்மார்த்தம் சைவமல்ல, சைவத்தினால் அடுக்கப்படக் கூடியதுமல்ல என்பதுடன் அது சைவநாசகாரி என்பதும் இவ்வளவுங் கூறியவற்றால் இனிது பெறப்படும்.

இனி இத்தொடர்பில் ஸ்மார்த்தத் தலையீட்டால் நாளிதுவரை சைவத்திற் புகுந்துவிட்ட நூதன அம்சங்களை நிரல்படுத்திக் காண்டலும் பயனுடைத் தாகும்.

1. சைவாகமங்களால் இரத்தினப்பிரதிஷ்டை விதிக்கப்பட்ட சைவக்கோயிற் பிரதிஷ்டைகளில் யந்திரப்பிரதிஷ்டை புகுத்தப்பட்டமை.

2. சைவாகமங்களால் சூரியப்பிரதிஷ்டை மாத்திரம் விதிக்கப்பட்ட சைவாலயங்களில் நவக்கிரகப்பிரதிஷ்டை புகுத்தப்பட்டிருத்தல்

3. சிவாகம விதிவிரோதமாகச் சைவாலயங்களில் சாக்த தியான மூர்த்தி இராஜஇராஜேஸ்வரி, வைஷ்ணவ சம்பிரதாயத்துக்குரிய கிருஷ்ணன், இராமன், அநுமார் வழிபாடுகளும், கிருஷ்ண ஜயந்தி, இராமஜயந்தி, உறியடி உற்சவம் போன்றனவும் புகுத்தப்பட்டிருத்தல்

4. சிவன் மூலமூர்த்தியாயிருக்குங் கோயில்களுக்கே விதிக்கப்பட்ட பரிவாரமூர்த்திகளால் காளிகோயில், வைரவர்கோயில், ஐயனார் கோயில்கள்கூட நிரப்பப்பட்டு நூதனசாலைகள் போலாக்கப்பட்டிருத்தல்

5. சாக்த வழக்கமான சக்கரபூசை சைவக்கோயில்களிலும் பிரவேசித்திருத்தல்

6. பூசகர் ஒருவர் தமக்குப் பூசைத்தகுதி நேர்தற்காகப் புரியும் ஆன்மார்த்த பூசை நியமமும், பூசைக்குச் சமூகமாயிருக்கச் சுவாமியை ஆவாஹித்துப் பிம்பத்தில் இருத்திக் கொள்ளுதற்குரிய ஆவாஹனம் முதலிய முன்னோடி அநுசரணைகள் இல்லாமலே ஐயர்மார் சைவக்கோயில்களிற் பூசை செய்வழக்கம் இங்கிருத்தல்

7. ஆத்மீக ஞானப்பேறும் முத்திப்பேறுமே சைவாலய பூசை வழிபாட்டுப்பலன் என்ற விளக்கம் மறைக்கப்பட்டு லௌகீகசுகபோகங்களே பூசைவழிபாட்டுப்பேறுகளெனக் கொள்ளும் அந்நியபுத்தி அபரிமிதவளர்ச்சி உற்றிருத்தல்

8. சைவசித்தாந்தக் கல்வி கேள்விகளில் நாட்டங்கொள்ளும் அளவுக்கு சைவ அந்தணர் புத்தி அடியொடு மரத்துப் போயிருத்தல்.

9. கிரியை விரிவுகளை மட்டின்றிப் பெருக்கி (32 கும்பம், இலட்சார்ச்சனை) கோயில்கள் தொழிற்பண்ணை களாக்கப்பட்டிருத்தல்.

10. பணத்தாலல்லது கோயிலை நெருங்கமுடியா விபரீதம் நேர்ந்திருத்தல்.இவையும் இவையொப்பன பிறவும் யதார்த்தமான சைவநிலைபேற்றுக்கு உகந்தனவாகா.

சைவநிர்வாகத்துக்கு அரச ஆணைவலுவுள்ள சட்ட ஆளுமை இல்லை. அது இருப்பதும் விரும்பத்தக்க தல்ல. மெய்யடியார் மட்டுங் கையாளற்குரிய திருவருள் நெறி அநுசரணையே அந்நிர்வாகத்துக்கு ஒரே ஒரு சாதனமாம். அதுபோன்றே மேற்கண்ட ஒழுங்கீனங்கள் சைவாலயங்களில் இடம்பெறாமைக் காக்கும் உபாயமாமெனில், மெய்யடியார் என ஆரிருக்கின்றார் எனக்கேட்டுமழுப்பிவிடுதல் யுக்தியாகாது.

அக்குறையைப் போக்கவே சிவனருளிய சிவாகமங்களும் அவற்றின் சார்பினவான சைவபத்ததிகளும் உள்ளன. சைவசித்தாந்த ஞானவிளக்கமும் உயர்தரமான சைவாசார சீலமும் ஆலயவழிபாட்டுயர்பேறான முத்திப்பேறும் விசுவாசமும் உள்ளோரான தூயோர் அவற்றை அநுசரித்து மேற்கொள்ளும் நிர்வாகம் உண்மையில் திருவருள் நெறி நிர்வாகமாகவே அமையும் என்பதில் ஐயம் எட்டுணையுமிருத்தற்கிடமில்லையாகும்.

இக்கட்டுரை முடிவில் இதனையும் குறிப்பிடுதலின் அவசியம் காலத்தின் தேவை ஆதல் அன்புணர்வாற் கண்டு கொள்ளப்படும்.

# பக்தி இலக்கியங்களில் உமையொருபாகன்

பா. சர்வேஸ்வரசர்மா B.A. (Hons)
போதனாசிரியர், தர்ம சாஸ்தா குருகுலம், யாழ்ப்பாணம

திருமுறைகள் இறைவனும் இறைவியும் சேர்ந்திருக்கும் நிலையைப் புகழ்ந்து பாடுகின்றன.

சம்பந்தசுவாமிகள் தனது பாடல் பலவற்றில் உமையொருபங்கனைப் பாடுகிறார்.

"உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்" என்றும்
"வேயுறு தோளிபங்கன்"
"செந்துவர் வாயுமை பங்கன்"
"வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த"

எனவும் இறைவன் உமையோடு இருந்து அருள் நல்கும் காட்சியைப் பாடினார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ பெண்ணில் நல்லாளொடும் வீற்றிருக்கும் பெருந்தகையைக் கண்ணால் கண்டுதொழ வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

அப்பர் சுவாமிகள் இணையுருக் காட்சியைச் சிறப்பாகப் புகழ்கிறார்.

*"உருஇரண்டும் ஒன்றோடொன்று ஒவ்வா அடி"* என அர்த்தநாரீஸ்வரர் பாதப் பெருமையைப் பேசுகிறார். இறைவன் எமது துன்பத்தைக் குறைப்பதற்கு இணைவடிவமாகவே வருவார் என்பதை *"மதுவரி கொன்றை துன்னு சடைபாகம் மாதர் குழல் பாகமாக வருவார்"* எனக் கூறியருளினார்.

இமவான் பெற்ற மகளாக இருந்த உமையம்மையார், இறைவனிடம் இருந்து பிரிந்து தவம் செய்து, அவரது இடப்பாகம் பெற்ற வரலாற்றைத் தனது பாடல் ஒன்றில் பாடுகிறார். *"பெருந்திரு இமவான் பெற்ற பெண்கொடி பிரிந்த பின்னே வருந்துவான் தவங்கள் செய்ய மாமணம் புணர்ந்த மன்னும் அமர்ந்திடு மேனிதன்பால் அங்கொருபாகத்திருந்திட வைத்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே"*

இந்தியத்திருத்தலங்கள் பல உள. அத்தலங்கள் பல இடங்களில் அர்த்தநாரீஸ்வர சிற்பங்கள் ஓவியங்கள் நிறைந்துள்ளன. காஞ்சிபுரத்திலும் ஓர் அர்த்தநாரீஸ்வர சந்நிதி உள்ளது.

திருவொற்றியூா எனும் தலத்தில் பாகம் பிரியாள் என்னும் பெயருடனும் ஒரு சந்நிதியுண்டு. இத்தலத்தின்மீது பாடல் பாடிய அப்பர் சுவாமிகள் சிவனுடைய மூன்று கண்களில் ஒன்றரைக்கண் அம்பிகையினுடையது எனச் சுவைபடப் பாடுகிறார். இதனால் சிவனை "ஒன்றரைக்கண்ணன்" எனக் குறிப்பிடுகிறார்.

இன்று அரைக்கண்ணுடையார் யாரும் இல்லை
- இமையமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணும் கொடுத்து உமையாளையும் பாகம்
- வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூருறை உத்தமனே

உமாதேவியாருக்குப் பாதி இடம் கொடுத்த காரணத்தால் சிவனுக்கு ஒன்றரைக்கண், அம்பாளுக்கு ஒன்றரைக்கண் எனப் பகுத்துச் சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் இன்னுமொரு பாடலில் "இறைவனே வில்ஏந்திய கை இடதுகை அது அம்பாளுடையது, வில்லின் நாண் வலித்த வலதுகரம் உன்னுடையது இவ்வாறு இருக்க திரிபுரதகனம் செய்த பெருமை உனக்கெவ்வாறு சேரும் என்பதை இயம்புவாயாக" என வினவுகிறார். எனவே சிவனும் சக்தியும் சேர்ந்தே ஒரு செயலைச் செய்து முடிக்க முடியும் என முடிவு கூறுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பல பாடல்களில் மங்கை பங்காளனைப் பாடி மகிழ்கிறார்.

"மங்கை பங்காளனை மாசிலா மணியை"
"மங்கையோர் கூறுடையான்"
"உமையோர் கூறுடையான் உருவே
- திருக்காளத்தியாய்"

என்று பல இடங்களில் உமாபதியைப் போற்றுகிறார். திருவெண்ணை நல்லூரில் பாடிய பதிகத்தில்

"மழுவாள் வலன் ஏந்தி மறை ஓதிமங்கைபங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுனதொழிலே"

என்று பாடி மங்கை பங்காளனை தொழுவதால் பலதுயர்கள் நீங்கும் எனப்பாடுகிறார்.

திருவாசகத்தில் மாணிக்கவாசக சுவாமிகளும் சிவசக்திப் பெருமையைப் போற்றிப் பாடுகிறார். திருச்சாழல் என்னும் பகுதியில் சிவன் சக்தியோடு சேர்ந்திருக்காவிட்டால் உலக வாழ்க்கையில் ஆருயிர்கள் ஆண், பெண் தொடர்பின்றி உயர்வடையாது என்பதை "தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காணேடி, பெண்பால் உகந்தில னேற்பேதாய் இருநிலத்தோர், விண்பாலியோ கெய்தி வீடுவர் காண்சாழலோ

திருப்பள்ளியெழுச்சிப் பாடலில் இறைவனும் இறைவியும் இணைந்து ஒவ்வொரு மெய்யடியார் களுடைய சிறிய குடில்கள் தோறும் எழுந்தருளிய

சிறப்பினை

"பந்தனை வீலியும் நீயும் நின்னடியார்

பழங்குடில் தோறும் எழுந்தருளிய பரனே என்று கூறுகிறார்.

திருவெம்பாவைப்பாடலில் அர்த்தநாரீஸ்வர வடிவமாக மாத்திரமன்றி பல்வேறு தனிவடிவமும் தாங்கி எம்மை வந்து காப்பான் என்பதை "பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்" எனவும் இறைவனும் இறைவியும் சேர்ந்திருந்து திருவருளாகிய அருள் நீரைத் தருவது போல் காட்சிதரும் பொய்கையில் நீராடுங்கள் எனப் பாடுகிறார். "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடுவில் புகப்பாய்ந்து" எனவும் கூறுகிறார்.

எம்மையாளும் சக்தியாகிய உமையம்மையாரைவிட்டுப் பிரியாதவன் சிவன் என்பதை "நந்தம்மை ஆளுடையான் தன்னிற் பிரிவிலா எங்கோமான்" என இறை சக்தி மகிமையைப் பாடுகிறார்.

இம்மங்கை பாகவடிவமே தொன்மைக் கோலம். அக்கோலத்தைக் கண்டு அரசவண்டே நீ குளிர்ந்து ஊதுவாயாக எனத் திருக்கோத்தும்பியில் பாடுகிறார்.

"தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளைநீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய் கோத்தும்பி"

எனக் கூறுவதன் மூலம் அர்த்தநாரீஸ்வர வடிவச் சிறப்பம்சத்தையும் அவ்வடிவத்தின் பழம் பெருமையையும் உணர்த்துகிறார்.

திருப்பொற்சுண்ணம் என்னும் பகுதியில் இறைவன் மங்கள நீராடுவதற்காக தயாரிக்கப்படும் பொடியை

"மங்கை பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடகமாமலை அன்னகோவுக்
காடற்பொற்சுண்ணம் இடித்து நாமே" எனப்பாடி

மங்கைபங்கினன் திருமுழுக்காடப் பொற்சுண்ணம் இடிப்பதாகக் கூறுகிறார்.

இவ்வாறு சமய குரவர்கள் நால்வரும் அர்த்தநாரீஸ்வர வடிவத்தின் மேன்மையையும் சிறப்பையும் பாடியருளினார்கள்.

ஏனைய திருமுறை ஆசிரியர்களும் இவ்வடிவத்தின் பெருமையைப் பாடியுள்ளனர். சேந்தனார் திருவிசைப்பாவில்

"மங்கையோர் பங்கத் தென்னரு மருந்தை
வருந்தி நான் மறப்பனோ பிணியே" என இவ்வடிவம்

எமது பிணியை நீக்கும் எனப் பாடுகிறார். திருப்பல்லாண்டில்

"அன்னநடைமடவாள் உமைகோன்" எனவும் பாடி சிவனையும் சக்தியையும் இணைக்கிறார்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் உமைபாகனை உயர்த்திப் பல இடங்களில் கூறுகிறது. இறைவன் ஐந்தொழிலைச் செய்வதற்காக உமைபாகனாக நடமாடுகிறார் என்பதை

"ஆன தொழிலருளாலைந் தொழில்செய்தே
தேன்மொழிபாகன் திருநடமாடுமே" எனவும்

சிவனுக்குப் பாகமாக இருந்து ஆன்மாக்களுக்கு நன்மை செய்கிறார் என்பதை சிவனுக்குப் பாகமாக இருந்து ஆன்மாக்களுக்கு நன்மை செய்கிறார் என்பதை

"மாலினி மாகுலி மந்திர சண்டிகை
பாலினி பாலவன் பாகமதாமே" எனவும் கூறுகிறார்.

ஆன்மாக்கள் சிவசக்தி வணக்கத்தை மேற்கொண்டால் துன்பங்களில் இருந்து விடுபட்டு பழவினைகளில் இருந்தும் நீங்குவர் என்பதை

"அதுவிதுவென்றவமே கழியாதே
மதுவிரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதிமதுமேலிப் பணிய வல்லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிடலாமே"

புலனொடுக்கத்துடன் சிவசக்தியை வழிபட்டால் சகல சித்திகளும் கைகூடும்.

அறிவு பெருகும்

"நெறியதுவாய் நின்ற நேரிழையாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞகனோடுங்
குறியது கூடிக் குறிக்கொண்டு நோக்கும்
அறிவொடும் ஆங்கே அடங்கிடலாமே"

உலக இன்பமும் பேரின்பமும் பெறும் மூர்த்தமாக அர்த்தநாரீஸ்வர வடிவம் போற்றப்படும்.

பரமனும் அம்மையும் சேர்ந்திருக்கும் அக்காட்சியைக் கண்டு தொழுதால் ஞானம் கைகூடும் என்பதை

"எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்தவுரைத்து முறைசொல்லின் ஞானமாம்" எனத்

திருமூலர் கூறுவார்.

அர்த்தநாரீஸ்வர தத்துவத்தின் பெருமையை மற்றும் ஒருபாடலில் பாடுகிறார். சிவசக்தி சேர்ந்திருக்கும் உருவ வழிபாட்டால் சிவனது அருளும் சக்தியினது அருளும் வேறுபாடின்றி அருளாகவும் ஆற்றலாகவும் எம்மை வந்தடையும்.

சத்தன் அருள்தரின் சக்தி அருளுண்டாஞ்
சக்தி அருள்தரின் சத்தன் அருளுண்டாம்
சக்தி சிவமாம் இரண்டும் தன்னுள்வைக்க
சக்தியும் எண்சித்தித் தன்மையுமாமே

சிவனும் சக்தியும் இணைந்திருந்து நடத்தும் திருவிளையாடலே உலகம் என்பதை

"சக்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சக்திசிவமாம் சிவன் சக்தியாம்.......

இவ்வாறு திருமந்திரத்தில் காணப்படும் அர்த்தநாரீஸ்வர தத்துவத்தைப் பெருமைகளைக் காணலாம்.

பெரியபுராணத்தில் சேக்கிழாரும் உமைபாகனைப் புகழ்கிறார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவாலவாய்த் திருக்கோவிலில் யாழிசைத்த முறையினைக் கூறும்போது ஆலவாயமர்ந்தார் கோயில் வாயிலை அடைந்து நின்று.....

....... தேவலார் குழலாள் பாகர் பாணிகன் யாழிலிட்டார். எனவரும் பாடலில் குறிப்பிடுகிறார். அடியார் திருக்கூட்டச் சிறப்பைக் கூறும்போது

"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓதுகாதல் உறைப்பின் நெறி நின்றார்
கோதிலாத குணப்பெருங் குன்றனார்" என இறைவனும் இறைவியும் இணைபிரியாத திருக்கோலத்தை மறக்காதவர்கள் எதற்கும் பயப்படமாட்டார்கள் எனக்கூறி மாதோர் பாகவடிவம் வீரமும் தரவல்லது எனச் சுட்டுவதைக் காணலாம்.

பரவையார் உமாதேவியாரின் தோழி என்பதைக் குறிக்கும்போது "சம்புவின் பங்கினாள் திருச்சேடி பரவையார்" எனவும் புற்றிடம் கொண்டாரைப் பணிந்து சங்கிலியாரை மணம் முடித்துத் தருமாறு சுந்தரர் வேண்டுகின்ற செய்தியை

"மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றிமணிநீர் முடியின்கண்.... எனக்கூறி அர்த்தநாரீஸ்வர வடிவைக் கூறுகிறார்.

அதாவது இறைவன் இறைவியோடு மகிழ்ந்துள்ளார். சுந்தரர் சங்கிலியாரை விட்டுப் பிரிந்துள்ளார். எனவே தன்னைச் சங்கிலியாருடன் சேர்த்து விடுமாறு பாடுகிறார். பிரிந்தவர்களைச் சேர்ப்பதற்கு அர்த்தநாரீஸ்வர வடிவத்தைக் குறிப்பிட்டுச் சேக்கிழார் பாடும் சிறப்பினைக் காணலாம்.

எனவே, குடும்பத்தில் அன்பு, அமைதி நிலவவும் உமைபாகன் வடிவ வணக்கம் பொருத்தமானதாகும். இவ்வாறு பெரியபுராணம் சிவதேவி பற்றிய பல சிந்தனைகளைச் சொல்கிறது.

அருணகிரிநாதர் தனது பாடல்களில் உமாநாயகனைப் பாடும்பல சந்தர்ப்பங்களைக் காணலாம். வேல்வாங்கு வகுப்பு எனும் நூலில்

"அங்கதர் வாமாங்கனை" எனவும், கந்தரலங்காரத்தில் "ஒருவரைப் பங்கில் உடையான்" எனவும் குறிப்பிடுகிறார்.

திருப்புகழ்ப்பாடல்களிலும் பல இடங்களில் சிவசக்தி பெருமையைப் போற்றுகிறார்.

"அரனார் இடங்கொள் மலைமாது"
"இறைவன் பங்கில் உமை"
சிவனோடு பக்கத் துறைந்த மங்கை"
"நாதரிடமேவு மாது"
"கண்ணுதல் இடத்திலுற்ற புண்ணிய ஒருத்தி"

இவ்வாறு பல பாடல்களில் மங்கை பாகனைப் பாடுகிறார்

## சித்தாந்த சாஸ்திரங்களும் மாதொரு பாகனும்

சித்தாந்த சாஸ்திரங்களும் அம்மை அப்பனைப் பெருமையாகப் பேசுகின்றன. திருக்களிற்றுப்படியார் என்னும் நூல் ஆகமங்கள், ஆறுசமயங்கள், யோகங்கள் யாவும் தோன்றுவதற்குக் காரணமான திருவடிவம் உமை ஒருபாக வடிவமேயாகும். அவ்வடிவம் இல்லை எனின் மேற்கூறப்பட்டவை தோற்றம் பெறாது என்பதை

"ஆகமங்கள் எங்கே அறுசமயந் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே - பாகத்
தருள் வடிவம் தானும் ஆண்டிலரேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு" எனக் கூறுகிறது.

உலகில் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வமாக மாதொரு பாகனார் தான் வருவார் என்பதைச் சிவஞானசித்தியார் எனும் நூல் கூறும்.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி
மாதொருபாகனார் தான் வருவார்"

உலகில் உள்ள அனைத்தும் சிவசக்தி மயம் என்பதை

"சக்தியுஞ் சிவமாகுஞ் சக்திதான் சத்தனுக்குச்
சக்தியாஞ் சத்தன் வேண்டிற்றெல்லாமாஞ்சக்தி தானே"

இவர்கள் இருவரும் இணைபிரியாமல் சேர்ந்து இருந்தாலும் சீவன் பிரமச்சாரி என்றும், சக்தி கன்னி என்றும் சித்தியார் கூறுகிறது.

"சிவன் சக்தி தன்னை ஈன்றுஞ் சக்திதான் சிவத்தை - ஈன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங்குலகுயிர் எல்லாமீன்றும்
பவன் பிரமச்சாரியாகும் பான்மொழிகன்னியாகும்"

உலகில் உள்ள அனைத்தும் இவ்வாறு இருமையாக இருந்தாலும் இணைந்து ஒருமையாகச் செயற்படும் திறமதனை

"சக்தியும் சிவமுமாய தன்மையிவ் வுலகமெலாம்
ஒத்தொவ்வாணும் பெண்ணும் உயர்குணசூனியுமாகி"

எனச் சித்தியார் எடுத்துரைக்கிறது.

(இக்கட்டுரையின் முதலாம் பாகம் "வடமொழி இலக்கியங்களில் அர்த்தநாரீஸ்வரர்" என்ற மகுடத்துடன் ஏழாவது உலக சைவமாநாட்டுச் சிறப்பு மலரான சிவஞானம்" என்ற நூலில் இடம்பெற்றது. இதன் மூன்றாம் பாகம் சைவநீதி தீபாவலி மலரில் "சித்தாந்த சாஸ்திரங்களில் மாதொருபாகன்" என்ற தலையங்கத்தில் இடம்பெறுகிறது.)

### சான்றோர் சொல்லமுதம்

நம் காரியங்கள் அனைத்திற்கும் பலன் தருகிற இறைவன், நாம் தீவிரமாகப் பக்தி செலுத்தும்போது அதற்குப் பலனாக மேலும் மேலும் அவரிடம் நெருங்க அனுக்கிரகம் செய்கிறான். "நாம் யார்? எப்படிப்பட்டவர்கள்? நம்முடைய பலன் என்ன? பலவீனம் என்ன?" என்பனவற்றையெல்லாம் இறைவனே நமக்குத் தெரியப்படுத்துகிறான். நம்மை ஆராய்ந்து பார்த்து நமக்கு அருள் புரியும் இறைவனை நாம் ஆராய்ந்து பார்க்க நினைப்பது அறிவீனம் ஆகும். - *காஞ்சி காமகோடி பீட பரமாச்சாரியார்*

# குடியிருப்பு - மக்கட் பரம்பல் - கோயிலமைத்தல்

திருமதி சித்ரா இரட்ணஜோதி ஜேர்மனி
(முன்னாள் நூலக உதவியாளர் யாழ். பல்கலைக்கழகம்)

**'கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனிய னாயிடினுங்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ"**

திருவாசகம் 12 - 3

இறைவனுக்குச் சுடலையாடி என்றோர் திருநாமம் உண்டு. இப்பாடலிலே இறைவன் இருப்பிடம் சுடுகாடு எனப் பேசப்படுகிறது. ஆலயத்தைக் கோயில் எனவும் கோவில் எனவும் மக்கள் அழைக்கின்றனர். எனினும் பக்திப் பனுவல்களிலே "கோயில்" என்னும் பிரயோகம் பெரிதும் ஆளப்படக் காண்கிறோம். ஆலயம், தளி, தானம், கற்றளி, பதி, ஈச்சரம், ஈஸ்வரம், சினகரம், தலம், க்ஷேத்திரம், நகரம் என்னும் பதங்கள் வணக்கஸ்தலங்களைக் குறிப்பிடுகின்றன. கோயில் என்ற புனிதமான திருநாமத்துக்குச் சைவமும், வைணவமும் மேலாந்தரம் வழங்கியுள்ளன. வைணவம் ஸ்ரீரங்கத்தைக் கோயில் எனப் போற்றுகிறது. சைவம் சிதம்பரத்தையே கோயில் என அழைக்கிறது. தில்லைப்பதி பற்றி எழுந்த புராணத்திற்குக் கோயிற்புராணம் என்று பேர். தில்லையம்பலம், பொன்னம்பலம், சிற்றம்பலம் எல்லாம் ஒன்றே. திருவாசகத்திற கண்ட பத்து, குலாப்பத்து நிருத்த தரிசனம், அனுபவம் இடையீடுபடாமை பற்றித் தில்லைப் பதிக்கரசையே பாடுகின்றன. கோயிற்றிருப்பதிகம், கோயில்மூத்த திருப்பதிகம் என்பனவும் ஆடல் இறைமேற்பாடப்பட்டனவே.இவற்றிற் கோயில் என்ற பதப்பிரயோகம் இடம்பெற்றுள்ளமை கவனித்தற்குரியது. திருப்பொற்சுண்ணத்திலும் திருவேகம்பன் செம்பொற்கோயில்பாடி" என அமைவதும் குறிப்பிடத்தக்கது. ஊரானோர் தேவகுலம் என்ற வழக்காறு ஆலயம் பற்றி எழுந்தது. காயமே கோயிலாக (திருமூலர்) உள்ளம் பெருங்கோயில் (அப்பர்) என்பன விழுமியமிக்க தொடர்களாகும். இக்கண்ணோட்டத்தில் வரும் இன்னோர் பாடல் கோயில்வகைகளையும், அமைப்பையும், ஆலயவணக்கத்தின் அவசியத்தையும் பற்றி இப்படிப் பேசுகின்றது.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டு மற்றும்
கரக்கோயில் கடில்பொழில் சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கோகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்து
மிளங்கோயின் மணிக்கோயி லாலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந் திறைஞ்சத் தீவினைக டீரு மன்றே"

- ஆளுடையரசு

கோயில் என்ற பிரயோகம் ஒன்பது இடங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இறைவன் எங்கும் தங்குகின்றவன்-அடியார்க்கு நல்லார். இறைவனுக்காக அமைந்த, அமைத்த இல்லம் கோயில். இதனை "செம்மலர் நோன்றான் சேரலொட்டா, அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ மாலற நேய மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" எனவரும் சிவஞானபோதச் செய்யுளும் உணர்த்தக் காணலாம். திருமங்கையாழ்வாரும் கோச்செங்கணான் அமைத்துப் பூசித்த திருநறையூர் மணிமாடம் பற்றி மங்களா சாசனம் செய்துள்ளார்.

**'தாராளன் தண்ணரங்க வாளன் பூமேல்
தனியாளன் முனியாள ரேத்தநின்ற
பேராளன், ஆயிரம்பே ருடைய வாளன்
பின்னைக்கு மணவாளன் பெருமை கேட்பீர்
பாராள ரவரிவரென் றெழுந்தை யேற்ற
படைமன்ன ருடல்துணியப் பரிமா வுய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"**

பெரியதிருமொழி 6-6-9

இத்திருமொழியில் செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்தகோயில் என்னும் தொடர் ஐந்து பாடல்களில் பயின்று வரக்காணலாம். மகுடபத்திரர்களில் இருந்து மல்லபத்திரர் வரை பல்லினப்பட்ட சைவசமயிகள் இறைவனுக்கு ஆலயம் அமைத்துச் சமுதாயத்தைத் தெய்வீகநெறிக்கு ஆற்றுப்படுத்தினர். மூதாட்டி அவ்வை "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என இடித துரைத்தாள். சால என்ற உரிச்சொல் ஆலயம் செல்ல வேண்டும என்பதை நம் உள்ளங்களிலே இடித்துரைக் கின்றதன்றோ. இக்கோச்செங்கணான் எழுபது சிவன் ஆலயங்களை அமைத்தான் என்கின்றது வரலாறு.

"முருக்கு இலங்கு கனித் துவர் வாய்ப் பின்னை கேள்
- வன்
மன் எல்லாம் முன் அவியச் சென்று வென்றிச்
செருக்களத்துத் திறல் அழியச் செற்ற வேந்தன்
சிரம் துணித்தான் திருவடி நும் சென்னி வைப்பீர்
இருக்கு இலங்கு திருமொழி வாய் எண்தோள் ஈசற்கு

எழில் மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட
திருக் குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

மேலது 8

(முருக்கம் பூப்போல விளங்கிக் கோவைக்கனிபோல், வாயுடைய நம்பின்னை மணாளன், அரசர்களெல்லாம் அழியும்படி பரசுராமனாய் அவதரித்தபோது பகைவனான கார்த்த வீரியார்ச்சினனுடைய தலையைத் துணித்தவன் திருவடிகளை உங்கள் தலைமேலே சூடவிரும்பு வோர்களே! நீங்கள் இருக்குவேதம் சொல்லும் வாயுடைய, எட்டுத்தோள்களை உடைய சிவனுக்காக எழுபது கோயில்கள் கட்டி உலகத்தை ஆண்ட நல்ல குலத்திற் பிறந்த சோழன் விரும்பும் நறையூர் செல்வீர்!

கோயில் என்னும் பிரயோகம் நாவலரால் எடுத்தாளப்பட்டுள்ளது. சமயரீதியில் வணக்கத்தலம் உயிர்நாடியானது. இதை எடுத்துச் சொல்லவே உலகநீதி "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என எடுத்துரைக்கிறது. மக்கட் பரம்பலில் தாம் குடியேறும் புலம் எங்கும், நகரும் இடந்தொறும், குடியிருப்புகளிலும் தத்தம் வணக்கத்துக்குரிய ஆலயங்களை அமைத்து வழிபாடியற்றத் தவறக் கூடாதென்பதை உலகநீதி காத்திரமாய்ச் சமுதாயத்துக்கு எடுத்தியம்பி உள்ளது. புதிய குடியேற்றத் திட்டங்கள் அமைக்கும்போது பாடசாலை, நூலகம், சுகாதார நிலையம் அமைப்பதுபோல வணக்கத்தலங்களும் அமைப்பதும் இன்றைய காலகட்டத்தின் கட்டாய சேவையாம். எனவே, சைவமும், அதன் பண்பாட்டியல், கலை, கலாச்சாரம்,ஒழுகலாறுகளும் மாசுறா வண்ணம் சைவசமயிகள் புலம்பெயர்ந்த நாடுகளில் ஆலயங்களை அமைப்பது இன்றியமையாததாகும். இந்நெறிப் பாட்டைத் திருநாவுக்கரசு நாயனார் தம்தேவாரங்களிற் தெளிவுறக் கூறியுள்ளார்.

**'திருக்கோயில் இல்லாத திருவிலூரும்**
**திருவெண்ணீறு அணியாத திருவிலூரும்**
**பருக்கோடிப் பத்தியமையாற் பாடாவூரும்**
**பாங்கினொடு பலதளிகளில்லாவூரும்**
**விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்**
**விதானமும் வெண்கொடியும் இல்லாவூரும்**
**அருப்போடு மலர்பறித்திட்டு உண்ணாவூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே"**

"எவ்வழி ஆடவர் நல்லவர் அவ்வழிவாழியநிலனே" எனச் சங்ககாலப்புலவர் ஒருவர் பேசினார். கடின உழைப்பினாலேதான் நாடும், வீடும் உயரும் என்பது முன்னோர் வாக்கு. எனவே மக்கள் குடியேறி வாழும் பகுதியிற் கோயில் இன்றேலது அடர்ந்த காடு என்பதே அப்பர் அடிகளின் குறிப்பு. ஒரு நாடு எப்படி அமைய வேண்டுமென்பதைப் பத்துக் குறட்பாக்களில் வள்ளுவர் வடித்துக் காட்டினார். அவற்றுளொன்று இது;

"தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

திருக்குறள் 74:1

நாடு, நகரம், ஊர்கிராமம் என்பனவற்றை அழகு செய்வன ஆலயங்கள். இவ்வாலயப் பெருமை மக்களின் வாழ்வியலை மேம்பாடடையச் செய்யும். எனவே, மக்கள் குடியேறும் இடங்களில் எங்கணும் கோயிலைக் கட்டிய பின் தான் குடியேறினார்கள் இல்லை. வாழ்வியலை ஓரளவு நிரந்தரம் செய்து ஆத்மீக நெறியிற் தம்மை வழிப்படுத்தவும், பிறவிப்பயனை எய்தவும் ஆலயங்களை அமைத்தனர். இதை விளக்கவே கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என உலகநாதர் பாடினார். இந்நிலையிற் தனிநபர் ஒவ்வொருவரும் தினமும் கோயில் செல்வது, வலம் வருவது, திருநீறணிவது, எம்பெருமான் பெரும்புகழைப் பேசுவது பாடுவது, பஞ்சாட்சரம் ஓதுவது, பூத்தொண்டு புரிவது, மாலை கட்டிக் கொடுப்பது போன்ற பல தொண்டுகளை ஆற்ற வேண்டுமென்பதையும் அழுத்திக் கூறியுள்ளார் அப்பர் பெருமான். அப்படிச் செய்யாவிடின் மீண்டும் மீண்டும் பிறவிப் பிணிப்பட்டு அழுந்த வேண்டியும் வரும். பிறத்தலும் பிறந்தாற் பிணிபட வாய்ந்து உடலும் இறப்பதும் உண்மை.

**"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்**
**தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்**
**ஒருக்காலுந் திருக்கோயில் சூழாராகில்**
**உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்**
**அருநோய்கள் கெட வெண்ணீ றணியாராகில்**
**அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்**
**பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்**
**பிறப்பதற்கே ஆளாகி இறக்கின்றாரே"**

- அப்பர் தேவாரம்

ஆக- அதிகாலையில் எழுந்து, நாட்கருமங்களை நிறைவேற்றி, நீராடிப், புனித ஆடை, அணிந்து, இறைதியானத்துடன் ஆலயஞ் சென்று, விடியுமுன், கூட்டி, கழுவி, மெழுகி, பூமாலைத்தொண்டு மேற்கொண்டு, தேவையான ஆலயப் பணிகளை மேற்கொண்டு ஓதி, அழுது, ஆனந்தம் சொரியத் தினமும் செய்ய வேண்டும் என்ற நித்திய விரதத்தை தாண்டக வேந்தர் மனதுக்குக் கூறும் நெஞ்சறிவுறுத்தலாகப் பாடியுள்ளார்.

**'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்**
**சங்கரா சயபோற்றி போற்றி என்றும்**

**அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே!**
- திருநாவுக்கரசர்

இவ்வண்ணமே ஆழ்வார்களும் மனக்கோயிலைப் பற்றியும், மண்ணுலகத்து மக்கள் அமைத்துப் பூஜிக்கும் ஆலயம் பற்றியும் பாடியுள்ளனர்.

"நகரிழைத்து நித்திலத்து நாண்மலர் கொண்டு, ஆங்கே
திகழும் அணிவயிரம் சேர்த்து - நிகரில்லாப்
பைங்கமல மேந்திப் பணிந்தேன் பனிமலராள்
அங்கம் வலம் கொண்டானடி"
- திருநாலாயிரம் 2185

"நெஞ்சமே! நீள்நகராக இருந்தவென்
தஞ்சனே, தண்ணிலங் கைக்கிறை யைச்செற்ற
நஞ்சனே, ஞாலங் கொள் வான்குற ளாகிய
வஞ்சனே, என்னுளெப் போதுமென் வாசகமே
நகர், நகரம், கோயில்,
- திருவாய்மொழி 3:8.2

பூசலாரின் அகக்கோயிலிலே முதற்தினமும், காடவர் கோனின் புறக்கோயிலிலே அடுத்தநாளும் ஆண்டவன் எழுந்தருளினான் என்பது வரலாறு. மக்கள் மனநிறைவும், வாழ்வு நெறியும் சீர்பட ஆலயதரிசனம் முக்கியம். ஆக, ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள், வசிக்கும் நாடுதொறும் கோயில் கட்டுவதும், சமயநெறி மேற்கொள்வதும் இன்றியமைதாததாகும். சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி, கொலண்ட், டென்மார்க், நோர்வே, பெரிய பிரித்தானியா, வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற தேசங்களில் ஆலய உற்பத்தி மிகமிக அவசியமாகும். பிறமதங்களினின்றும் நம் இளம்பரம்பரையைப் பாதுகாக்கவும், சமய ஒழுகலாறைக் கட்டிக் காக்கவும் பண்பாட்டுக்கோலங்களைப் பேணவும் சைவம் சார் மக்கள் எப்போதும் தம்மைத் தயார்படுத்த வேண்டும்.

# சைவ சமயம்

**டாக்டர். குமார் வடிவேல்** B.A. (Cey)

சமயம் என்ற சொல் நெறி, கொள்கை என்று பொருள் படும். வைதீக சமயங்களுள் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொள்ளுஞ் சமயமே சைவ சமயம். உலகத்திற்கு ஆதிகாரணன் சிவன் என்பதே இச்சமயத்தின் முடிந்த முடிபாகும். இது சுவேதாசுவதர உபநிடதம் கூறும் உண்மையாகும். உபநிடதங்களுள் ரிஷிகளாற் கூறப்பட்ட உண்மையே திருமுறைகளும் சைவ சமய சாத்திரங்களுமாகும். "எல்லா உலகமும் ஆனாய் நீயே என்றும்," 'துய்ப்பனவுமுய்ப்பனவுந் தோற்றுவாய் நீ துணையாய் என் நெஞ்சந் திறப்பிப்பாய் நீ' என்று திருநாவுக்கரசு நாயனார் கூறியதும் சிவனே எல்லாவற்றுக்கும் உரியவர் என்பதை விளக்குவனவாகும்.

உலகத்தை இயக்கும் பரம்பொருளாகிய சிவனே அறிவுடைய பரம்பொருள் என்பது சைவ நூல்களின் துணிபு. சைவ சித்தாந்தம் சற்காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது. 'இல்லது தோன்றாது உள்ளது அழியாது' முத்தொழில்களையும் செயற்படுத்தும் இறைவனாகிய சிவன் ஒருவனே சைவ சமயிகளுக்கு உரிய கடவுளராவர். சைவ சித்தாந்தத்தில் தத்துவங்கள் பதி, பசு, பாசம் என்பனவாகும். இத்தத்துவங்கள் மூன்று நித்திய பொருள்களாக வுள்ளதுடன் ஒன்றுக்கொன்று சமமில்லாதனவையாகவும் காணப்படுகின்றன.

சைவத்தில் இறைவனுக்கு உருவமுண்டு. இதனைச் 'சொரூப நிலை', 'தடத்த நிலை' என இருவகையில் அடக்குவர். தடத்த நிலையில் இறைவன் பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என ஐந்து நிலைகளாகப் பிரிந்து செயற்படுவதைக் காணலாம்.

சர்வசங்காரம் செய்யும் உருத்திரனைச் சிவன் என்று சைவசமயிகள் வணங்குகின்றனர். யாவற்றையும் படைப்பவனையும் யாவற்றையும் காப்பவனையும் விட யாவற்றையும் அழிப்பவனே இறுதிக் காலத்தில் நிலைத்து நிற்கும் அழியாப் பரம்பொருள் என்பது உலக உண்மை. அதைத்தான் பிரம்மா விஷ்ணுக்களின் தலை ஓடுகளைத் தன் கழுத்திலே சிவபெருமான் தாங்கியிருக்கின்றார் என்பதும் உலகம் முழுவதையும் நீறாக்கி எரித்து அந்த நீற்றை உடலில் பூசியிருக்கிறார் என்றும் எரிந்த சுடலையிலே நடனமாடுகிறார் என்ற கருத்தும் சைவத்தில் போற்றப்பட்டது. முத்தொழிலையும் செய்பவர்களில் முழுமுதற் பரம்பொருள் சிவனே என்பது இந்த அடிப்படையிலே தோற்றமாகியது.

ஒருவன் செய்த பாவ புண்ணியங்கள் அவனைச் சூழும். அதனை மாற்ற முடியாது என்ற கோட்பாடு பௌத்த சமணக் கோட்பாடாக இருக்க சைவசமயம் அதை சிவ வழிபாட்டால் மாற்றலாம் என நிறுவியது. மார்க்கண்டேயர் வரலாறு இதில் முக்கியமானது. ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியாக விளங்கும் சிவன் இவ்வுலக உயிர்களுக்கு ஒப்பற்றவராக விளங்குவதால் சைவசமயம் மேன்மைகொள் நெறி சார்ந்த சமயமாக என்றும் நின்று நிலவும.

## மாணவர் பகுதி

# தீபாவலி

நிசாந்தன் இராஜரெட்ணம்

இந்து சமயத்தவர்களின் தலையாய பண்டிகை இது. ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி வெகு உற்சாகமாகத் தீபாவலியைக் கொண்டாடுகின்றனர். பண்டிகை கொண்டாடப்படும் முறையில்தான் நாட்டுக்கு, நாடு சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தீபாவலி தீபங்களின் வரிசை என்ற பெயருக்கேற்ப வடஇந்தியாவில் மக்கள் தங்கள் வீடுகளில் பளிச்சென்று விளக்கேற்றிக் கொண்டாடுவர்.

ஞானம் என்ற விளக்கொளியால் மனத்தின் உள்ளே குடிகொண்டுள்ள அஞ்ஞானம் என்ற இருளை விரட்டியடிப்பது என்பது தத்துவம். பொய், பித்தலாட்டம் வஞ்சனை முதலிய அரக்க குணங்களை ஞானஒளியால் வெளியேற்றி அகஒளிபெற உதவும் பண்டிகை தீபாவலி. நரகாசுரன் எனும் அரக்கனைக் கண்ணன் வதம் செய்வதையொட்டி அமைந்த பண்டிகை என்பது புராண வரலாறு. தேவர்களும் மனிதர்களும் கொடிய அரக்கனாம் நரகாசுரனுடன் போர்புரிய சத்தியபாமாவுடன் புறப்படுகின்றார். சத்தியபாமா இப்போரில் சக்தியின் அவதாரமாகச் செயல்பட்டாள் என்பது குறிப்பிடத்தக்கது. நரகாசுரன் என்ற தீயசக்தி கண்ணன். சத்தியபாமா வினால் அழிக்கப்பட்டு மக்கள் அசுரனின் கொடுமை யினின்றும் விடுபட்ட நாளையே தீபாவலியாகக் கொண்டாடுகின்றோம்.

தீபாவலி அன்று விடியற்காலையே எழுந்து தலைக்கு எண்ணெய் தேய்த்து புனிதநீராடுவதை கங்கா ஸ்நானம் எனக் கருதுகிறோம். இப்பண்டிகை நாளில் எண்ணெயில் லக்ஷ்மியும், நம்வீட்டுத் தண்ணீரில் கங்கையும் பிரசன்னமாகின்றன என்பது ஐதீகம். வீட்டுக்கிணற்றின் நீரிலோ அல்லது குழாயில் வரும் நீரிலோ கூட தீபாவலியன்று நீராடினால் புனித கங்கையில் நீராடிய பலன் கிட்டும் என்பது ஆன்றோர்வாக்கு. அதனால்தான் இப்பண்டிகையன்று நீராடிப் புத்தாடை உடுத்து, இறைவனைத்துதித்து இனிப்புப் பண்டங்கள் புசித்து மகிழ்ந்த பின்னர் அக்கம்பக்கத்தில் வசிக்கும் உற்றார், உறவினரிடம், "கங்காஸ்நானம் ஆயிற்றா? என்று விசாரிக்கிறோம். பகவத்கீதா கிஞ்சித் அதீதா - பகவத்கீதையில் சிறிதளவு, ஒரேஒரு சுலோகம் மட்டுமாவது படித்தால் போதும் கங்கஜலவகணிகா பீதா - கங்கை நீரில் ஒரு திவலை அருந்தினாலும் போதும்!

ஸக்ருதபியேன முராரி ஸமர்ச்சா - விஷ்ணுவின் நாமத்தை வாழ்க்கையில் ஒரே ஒரு தடவை சொன்னாலும் போதும். பரலோக பயம் நீங்கும் மக்கள் பேரின்பமாகிய மோட்சம் அடைவது உறுதி என்பர் ஆன்றோர், கங்கையில் நீராடுவது அததுணை சிறப்பானது. தீபத் திருநாளில் இல்லங்களில் நீராடியே அந்தப் பலனைப் பெறலாமே?

இமய மலையிலிருந்து பெருகிவரும் அலக நந்தா, மந்தாகிரி, பாகீரதி என்ற நதிகள் கங்கை எனப்பெயர் பூண்ட புண்ணிய நதி. மக்கள் அதில் அகல் விளக்கேற்றி வழிபடுவது வழக்கம்.

அன்னை பவானியின் பூஜையாக வங்காளத்திலும், தாம்பூலத் திருநாளாக மகாராஷ்டிர மாநிலத்திலும் கொண்டாட இப்பண்டிகை, குஜராத்தில் குபேர பூஜையாகப் புதுக்கணக்குத் துவங்கும் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது.

திருமணமான முதல் ஆண்டு வரும் தலைத்தீபாவலியன்று மாப்பிள்ளையைக் கோலமிட்ட மணையில் உட்காரவைத்து "கௌரீ கல்யாண வைபோகமே" என்று மாமியார் பாடித் தலையில் எண்ணெய் வைப்பது தமிழ் நாட்டவர் பழக்கம். பட்டாசு கொழுத்துவதன் மூலம் ஆயிரமாயிரம் குடும்பங்கள் பிழைக்கவும் இந்த தீபத்திருநாள் வழிவகுக்கிறது. புத்தாடை உடுத்தும் வழக்கம் நம்மிடையே இருப்பதால்தான் நெசவுத்தொழிலும் செழிக்கிறது. இப்பெருநாளில் இந்துக்கள் மட்டுமன்றிப் பிறமதத்தவரும் தங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பட்டாசும், ஏன் புத்தாடையும்கூட வாங்கிக் கொடுத்து மகிழ்கின்றனர்.

தீபாவலியன்று துவங்கும் தீப அலங்காரம் கார்த்திகைப் பண்டிகைவரை நீடிக்கிறதெனலாம். தென்னாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் அகல்விளக்கேற்றி வரிசை, வரிசையாக வைத்து அலங்கரிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்.**
"Oozhit Petuvali Yaavula Mattrontru
Choozhinum Thaanmunth Thurum"

**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.**
"Entrum Otuvuthal Vaendum Puhazhodu
Nantri Payavaa Vinai"

# நவராத்திரி விழா

சோபனா பன்னீர்ச்செல்வம்

கல்வி, செல்வம், வீரம் அனைத்தும் தருவது இறைவியே. கருணை வடிவம் கொண்டவளே பெண். எனவே இறைவனைப் பெண் தெய்வமாகக் கொண்டே நவராத்திரி விழாவினைக் கொண்டாடுகின்றோம்.

வீரத்தைத் தருபவர் துர்க்கை. செல்வம் தருபவர் லக்ஷ்மி. கல்வியைத் தருபவர் சரஸ்வதி என்றும் வணங்குவர். இவ்விழா புரட்டாதி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் ஆரம்பமாகும். முதல் மூன்று நாட்களும் துர்க்கைக்கும் அடுத்த மூன்று நாட்களும் லக்ஷ்மிக்கும் இறுதி மூன்று நாட்களும் கலைமகளுக்கும் என வழிபடுபவர். பத்தாம்நாள் விஜயதசமி எனப்படும்.

இத்தினத்தை புதியதொழில் ஆரம்பிப்பதற்கு சிறந்தநாளாக இந்துக்கள் கருதுவர். இந்நாளில் வித்தியாரம்பம், புதுக்கணக்குப்பதிதல், ஏர்பூட்டல் போன்ற தொழில்களை ஆரம்பிப்பர். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

# ஸ்கந்த சஷ்டி

கார்த்திகா கார்த்திகைக்குமரன்

ஐப்பசி மாதம் சுக்லபட்சம் சஷ்டி (ஆறாவது) திதியன்று முருகப்பெருமான் சூரனை வதைத்த திருநாள். ஆறுமுகப்பெருமானின் ஆலயங்களில் எல்லாம் இத்திருநாள் கொண்டாடப்படுகிறது. எனிலும் திருச்செந்தூர் முருகன் கோயிலில் இது சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிவபக்தனான சூரபதுமன் மகேந்திரபுரியை ஆண்டவன். யாகங்கள் பல செய்து சிவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி வரம் பல பெற்று கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினான்.

ஆனால் ஆணவமிகுதியால் தேவர்களைச் சிறைப்பிடித்து யாராலும் வெல்ல முடியாத பலத்துடனும் செருக்குடனும் இருந்தான். அவனை வென்று அழிக்கும் ஆற்றல் படைத்தவன் மால்மருகன் ஒருவனே. முருகன் நினைத்தால் சூரனை உடனே வதைத்திருக்க முடியும். ஆனால் கொடியவர்கள் மனந்திருந்தி நல்வழிப்பட போதிய அவகாசம் கொடுத்துப் பொறுத்திருப்பதுதான் ஆண்டவனின் பெருமையாகும்.

வீரபாகுத் தேவரைதூது அனுப்பி, சூரன் திருந்தி நல்வழிபட வாய்ப்பளித்தான் குமரன். ஆனால் ஆணவம் குடிகொண்ட சூரன் முருகப்பெருமானின் நல்லுரைகளைக் கேட்டானில்லை. மூண்டது போர். கந்தவேளின் வேலுக்கு இறுதியில் இரையானான் சூரன்.சூரன் தன் அவுணப்படையுடன் மாயங்கள் பல புரிந்து முருகனுடன் பொருந்திய போரில், சூரனின் படைகள் அழிந்தன. சூரனை அழிக்கவென்றே தோன்றியவன் அல்லவா குமரன்?

சிவபெருமானின் திருவருளால் தோன்றிய குமரன் சூரனை சம்ஹாரம் செய்த இத்திருநாளே சூரசம்ஹாரத்திருவிழா ஆகும்.

ஆறுபடை வீடமர்ந்த பெருமானின் புகழ்பாடி உய்ய உகந்த நாள், இந்த கந்தசஷ்டி தினமாகும். இந்த சஷ்டி கவசம், கந்தரனுபூதி, திருச்செந்தூர்க்கந்தர் கலிவெண்பா, பாம்பன் சுவாமிகள் எனப்படும் குமரகுருதாச சுவாமிகள் அருளிய ஷண்முககவசம், அருணகிரிநாதரின் திருப்புகழ் இவையனைத்தும் பாடி மகிழலாம்.

# பூக்கள்

ர. பிரியா

பூக்கள் பல நிறங்களில் இருக்கும். பூக்களில் பலஇனங்கள் உண்டு. பூக்கள் வாசனை மிக்கவை. பூக்கள் அழகானவை. பூக்களால் மாலைகள் கட்டலாம். பூக்களைச் சுவாமிக்குச் சூட்டி வணங்கலாம். பூக்களை எல்லோரும் விரும்புவார்கள். தாமரைப்பூக்கள் சிறப்புமிக்கவை. செந்தாமரைப் பூவில் இலக்குமியும் வெண்டாமரப்பூமியில் சரஸ்வதியும் வீற்றிருப்பதாக எங்கள் சைவசமயத்தவர்கள் கூகின்றனர். மல்லிகைப்பூ வாசனை நிறைந்தது. எனக்குப் பிடித்த பூ மல்லிகைப்பூ இவற்றை யெல்லாம் தந்தருள்பவர் அம்மை அப்பரே. நல்ல கலிவி சொல்லும் உயர்களிடத்தில் அன்பு என்றும் உண்மைபேசுதல் பெரியோரை மதித்தல் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் ஆகிய வற்றை எமக்குத் தரும்படி நாம் அவரை வேண்டுதல் செய்ய வேண்டும் எமது கடவுளை நாம் கண்களால் நேரில் பார்க்கமுடியாது ஆனால் எங்கள் கடவுளை மனதினால் நினைத்துப் பார்க்க முடியும் நாங்கள் கோவிலுக்குச் சென்று கடவுளை வணக்குகின்றோம்.

# UNICAIR

**HEATING & AIR CONDITIONING LTD.**
**"Your satisfaction is our concern"**

Amana
Heating • Air Conditioning ®




உங்களுடைய சகலவிதமான **HEAT PUMPS / KOOL FIRES** மற்றும்
குளிரூட்டிகள், **CENTRAL SPACE PACK, ROOM** ஆகியவற்றுடன்

FURNACES (GAS, OIL & ELECTRIC)
DEEP FREEZERS
COOLERS (BOTTLE & WATER)
WALK IN COOLERS

HUMIDIFIERS
DEHUMIDIFIERS
REFRIGERATORS
WALK IN FREEZERS

இவற்றை நல்ல நிலையில் தொடர்ந்து பேணுவதற்குமான தேவைகளிற்கும்,
**HEATING & AIR CONDITIONING** இணைப்புகளிற்கும் **UNICAIR**

**OVER 25 YEARS OF EXPERIENCE**

FREE ESTIMATES ON NEW INSTALLATIONS

**TEL: (416) 297-9957**
**FAX: (416) 297-5859**

**100 MELFORD DR., #23, SCARBOROUGH. ONTARIO, M1B 2G4**

**WE ARE AUTHORIZED DEALERS FOR Amana**

**METRO LICENCE NO: H1256**
**REGISTERED FUEL SAFETY BRANCH CONTRACTORS 60652-001**

# கல்வியின் பெருமை

சுஜிதா பரசுராமன்

குழந்தைகளே! நீங்கள் நாள்தோறும் பள்ளிக்குச் செல்லுகிறீர்கள். எதற்காகச் செல்லுகிறீர்கள்! கல்வி கற்பதற்காகச் செல்லுகிறீர்கள். கல்வி மக்களுக்குக் கண் போன்றது. கல்வி கற்பதால் நம் அறியாமை நீங்கும், அறிவு வளரும்.

கல்வி கற்றவரே மனிதர் ஆவர் கல்லாதவர் விலங்குக்கு ஒப்பாவர். கற்றவர்க்கு எந்த நாடும் சொந்த நாடு ஆகும். எந்த ஊரும் சொந்த ஊர் ஆகும். எல்லாரும் உறவினர் ஆவர். கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு உண்டாகும்.

கல்வி அறிவு இல்லாதவர் எவ்வளவுதான் செல்வம் பெற்றிருந்தாலும், அதனால் பயன் இல்லை. அவர் தமது செல்வத்தைத் தீயவழியில் செலவு செய்து துன்பம் அடைவார். கல்வி அறிவு இல்லாதவரை எவரும் விரும்பமாட்டார்.

பொருட்செல்வத்தைவிடக் கல்விச் செல்வமே மேலானது. பொருட்செல்வம் வெள்ளத்தால் அழியும், நெருப்பால் எரிக்கப்படும்; கள்வரால் கவரப்படும்; கொடுத்தால் குறையும். ஆனால், கல்வியோ எதனாலும் அழியாது கள்வராலும் கவரமுடியாது ; கொடுத்தாலும் குறையாது. கல்வியின் பயன் நல்ல ஒழுக்கமும் நல்ல குணமும் பெறுதல் ஆகும். நாம் நல்ல எண்ணங்களையே எண்ண வேண்டும்; நல்ல பேச்சுகளையே பேசவேண்டும் நல்ல செயல்களையே செய்ய வேண்டும்.

நாம் கற்பனவற்றைக் கசடறக் கற்று நாடு போற்றும் நன் மணிகளாகத் திகழ வேண்டும்.

# எனது தாய்நாடு

சுஜிதா பரசுராமன்

எனது தாய்நாடு தமிழ்ஈழம் எனது அம்மா அப்பா பிறந்தநாடு இது. எனது தாய்நாட்டைப் பற்றி எனது பெற்றோர் நிறையவே எனக்குச் சொல்லித் தந்துள்ளார்கள். இது மிகவும் அழகான நாடு. எமது நாடு மொழிச் சிறப்பும் பண்பான கலை கலாச்சாரங் களும் நிறைந்த நாடு. நீர்வளம் நிலவளம் நிறைந்த நன்நாடு. அருள்நிறைந்த கோவில்களும் அன்பும் வீரமும் விருந்தோம்பலும் மிக்க மக்களும் பயன்தரு கால்நடைகளும் நல்லறிவு தரும் கலைக்கூடங்களும் செறிந்த தமிழ்நாடு. இத்தகைய சிறப்பு மிக்க நாடு என் தாய்நாடு என்பதில் நான் மகிழ்வடைகிறேன். நான் பெரியவனாக வளர்ந்து நன்றாகப் படித்து எனது தாய்நாடாம் தமிழ்ஈழம் சென்று சேவை செய்து வாழவேண்டும். இதுவே எனது நிறைந்த ஆசை.

# கடவுள்

திவ்யா விஜயபாலன்

கடவுள் எங்கும் இருகிறார் கடவுளை நாங்கள் காலையும் மாலையும் வணங்குகிறோம் கடவுள் எங்களுக்கு வேண்டியதைத் தருபவர் கடவுள் எங்களைப் படைத்தவர் கடவுள் எல்லாம் வல்லவர். நாங்கள் பிறஉயிர்களை நேசிக்க வேண்டும் அனைவரிடத்தும் அன்புடையவராக வாழ வேண்டும். பிறருக்கு உதவிபுரிதல் வேண்டும் வயோதிபர் குருடர் செவிடர் வாய்பேசாதவர் கால்நடக்கமுடியாதவர் களிடத்தில் இரக்கம் காட்டி அன்போடு அரவணைக்க வேண்டும் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் இவையெல்லாம் கடவுளுக்கு விருப்பமான செயல்களில் பெற்றோர் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும் பெற்றோர்கள் தான் நாம் கண்ணால் பார்க்கும் கடவுள் அவர்கள்தான் இந்த உலகத்தைப் படைத்த கடவுளைப்பற்றிய நல்ல அறிவை எமக்குச் சொல்லித் தருகின்றனர்.

# நவராத்திரி

சங்கீதா நாகசிவகுமாரன்

நவராத்திரி ஒன்பது நாட்கள் கொண்டாடப் படுகிறது. முதல் மூன்று நாட்களும் வீரந் தரும் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தைத் தரும் இலக்குமிக்கும் கடைசி மூன்று நாட்களும் கல்வியைத் தரும் சரஸ்வதிக்கும். 10ஆவது நாள் விஜயதசமி சின்னப் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குவார்கள்.

# என்னைப் பற்றி

விஜயசோபனா யுககுலராசா

என் பெயர் விஜயசோபனா. நான் ஏழாம் வகுப்பில் படிக்கிறேன். என் அப்பா பெயர் யுககுலராசா. என் அம்மா பெயர் வையந்திமாலா. எனக்கு பூக்களில் விருப்பம். எனக்கு மூன்று அண்ணன்மாரும் ஒரு தம்பியும் அக்காவும் உள்ளார்கள். எனக்கு நாய் வளர்ப்பதில் விருப்பம். நான் கீண்டாவில் இருக்கிறேன்.

# கோயில்

**றினிஷ். க**

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க் கூடாது என்று கூறுவார்கள் கோயில் என்பது ஒரு புனிதமான தூய்மையான இடம்தான். கோயிலுக்குச் செல்லும் போது சுத்தமாக குளித்துத் தூய்மையான ஆடை அணிந்து செல்ல வேண்டும். கோயிலுக்குள் பாதணி கூடாது. தகாத வார்த்தைகள் சண்டைகள் இருக்கக்கூடாது இது மட்டுமல்ல மனங்கூடச் சுத்தமாயிருக்க வேண்டும்.

கோயில் என்பது தெய்வங்கள் இருக்கும் இடம் மானிடாகள் ஆகிய எல்லோருக்கும் எத்துன்பம் வந்தாலும் கோயிலுக்குச் சென்று தங்கள் குறையைத் தீர்த்துக் கொள்ளுவார்கள் கோயிலை ஆலயம் என்றும் கூறுவார்கள். எங்கள் தமிழ் ஈழத்தில் கூட பல பெரிய பெயர் பெற்ற கோயில்கள் அமைந்துள்ளன. கோயில்களுக்குத் தொண்டு செய்வது மிகச் சிறந்த ஒன்றாகும். அவையாவன கோயிலைக் கூட்டிக் கழுவிச் சுத்தம் செய்வது மாலைகட்டிக் கொடுத்தல். பூபறித்துக் கொடுத்தல் இப்படிப் பல தொண்டுகள் கோயிலுக்குச் செய்யலாம். நாங்கள் அகதிகளாக வந்த நாட்டில் கூடப் பல கோயில்கள் அமைந்துள்ளன. நாங்கள் தினமும் கோயிலுக்குச் சென்று வழிபடுவது மிகவும் சிறந்தது ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

# எனது பாசமுள்ள பூனை

**யோகனாதன். க**

அப்பா எனக்கு ஒரு பூனை வாங்கித் தந்தார் அதன் நிறம் வெள்ளை. இதற்கு இரு வட்டமான கண்கள் இரு காதுகள் நான்கு கால்கள் உண்டு பூனையின் மேனிமிகவும் மென்மையானது.

எனது பூனை என்னிடத்திலும் எனது குடும்பத்தாருடனும் அன்பாக இருக்கும் எனது பூனை பாலும் சோறும் உண்ணும் சிறுவர்களைக் கண்டால் மிகவும் பிடிக்கும். நான் பாடசாலைக்குச் செல்லும் போது எனது பூனை என்னை கவலையுடன் வழியனுப்பி வைக்கும். நான் மீண்டும் வீட்டுக்கு வந்ததும் மிகவும் சந்தோஷத்துடன் வலம்வரும்.

எனது செல்லப்பிராணி பூனையின் எதிரி எலி. அவற்றைக் கண்டால் துரத்திப் பிடிக்கும். எனக்குப் பூனை என்றால் மிகவும் பிடிக்கும். இந்த நாட்டில் கூடப் பூனையை அன்போடு வளர்க்கிறார்கள்.

மியா மியா பூனை
எங்கள் வீட்டுப் பூனை

# கல்வி

**கார்த்திகா. கோபால்**

"செல்வத்தில் செல்வம் கல்விச் செல்வம்."
இக் கல்வியானது
"வெள்ளைத்தால் அழியாது
தீயால் வேகாது
கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் குறையாது".

இப்படியான கல்விச் செல்வத்தை நன்கு விளங்கிக் கற்று அதன் படி நடந்து கொள்ளவேண்டும். பருவத்தில் பயிர் செய்வதுபோல் கல்வியையும் உரிய வயதில் நன்கு விளங்கிக் கற்று அதன்படி நடந்து கொள்ள வேண்டும். இப்பெரும் கல்வியை நன்கு கற்றுச் சிறப்புடன் வாழ்ந்து வருபவர்களை நாம் நூல்கள் பத்திரிகைகள், வானொலிகள் தொலைக்காட்சிகள் மூலம் நாளாந்தம் அறிந்து கொண்டே இருக்கின்றோம்.

ஒருவரிடம் கல்வி அறிவு இல்லாவிட்டால் அவர் வாழ் நாளில் வாழ்க்கையில் பெரும் கஸ்டத்தை அடைவார். எனவே நமது கல்லூரியில் கல்வியைக் கற்றுக் கொள்ளும் போது ஆசிரியர்களிடம் அன்பாகவும் ஆதரவாகவும் பண்பாகவும் நடந்து கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டியது மாணவராகிய எமது கடமையாகும்.

# என்னைப்பற்றி

**யு. கமலகாந்தன்**

எனது பெயர் கமலகாந்தன். எனது அப்பாவின் பெயர் யுககுலராசா. எனது அம்மாவின் பெயர் வைஜந்தி மாலா. எனக்கு மூன்று அண்ணாவும் இரண்டு அக்காவும் உள்ளார்கள். எனக்குப் பன்னிரண்டு வயது. எனது பிறந்த நாள் புரட்டாதி பதினைந்தாம் திகதி. எனக்குப் படம் வரைய விருப்பம்.

எனக்கு நாய் வளர்க்க விருப்பம். நான் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். நான் அலெக்ஸான்டர் ஸ்ரேலிங் பாடசாலையிற் கல்வி கற்கின்றேன். எனக்கு மின் கணனித் துறையில் படிக்க விருப்பம்.

# சைவசித்தாந்தம் கூறும் ஞானம் வரும் முறை

சட்டத்தரணி இ. நமசிவாயம்

"காட்டிடுங் கரணமொன்று மில்லையேற்காணொணாதாம்
காட்டிய விவற்றான் நணுகவு மொண்ணா முன்னம்
ஈட்டிய தவத்தினாலேயிறையருளுருவாய் வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குரைகழல் குறுகுமாறே"

சிவப்பிரகாசம் ஞானவாய்மை, ஞானம், வருமுறை (68)

காட்டிடுங்கரண மொன்றுங்........ஞானம் நணுகவு மொண்ணா: ஆன்மாபெத்த நிலையிற் கருவிகளைக் கூடி உணர்த்த உணருமேயன்றி அக்கருவிகளின் சேர்க்கையின்றி உணரமாட்டாது, இக்கருவிகளோடு கூடி அறியும் அறிவுபாசஞானம் பசுஞானமாகிய ஏகதேசஞானமேயாம். முற்றுணர்வாகிய மெய்ஞ்ஞானம் (பதிஞானம்) இவற்றால் வரமாட்டாது, அன்றியும் அவை அம்மெய்ஞானத்துக்குத் தடையாயுமிருக்கும்.

முன்னமீட்டிய தவத்தினாலே ...... குரைகழல் குறுகுமாறு:

ஆன்மா கருவிகரணங்களைப் பெற்று அவற்றால் வரும் சிற்றறிவு சிறுசெயல்களால் வினைகளைச் செய்தும் வினைப்பயனை அனுபவிததும் பிறந் திறந்து வரும்பொழுது சத்துவகுண சம்பந்தம் முதலியவற்றாலும், திருவருளின் துணையினாலும் சரியா, கிரியா, யோகங்களைச் செய்யநேரும். அப்படிச் செய்து முதிர்ச்சி பெற்ற தவவிசேடத்தால் இருவினையொப்பும் மலபரி பாகமும் சத்திநிபாதமும் வந்தெய்தும், (செய்யுள் 48 சிவப்பிரகாசம்)இந்த நிலையில் உடன் நின்று திரோதான சக்தியானது அருட்சத்தியாக மாறிநிற்கும். அப்பொழுது, அதற்கு முன்னே கருவி கரணங்களைக் கொண்டு மறைந்து உண்ணின்றுணர்த்திய பரமசிவன் திருவருளே திருமேனியாகக் கொண்டு குருமூர்த்தியாய்வெளிப்பட்டு வந்து தீக்கைசெய்து உண்மை ஞானத்தை அருளி ஆன்மவியல்பை உணர்த்துவர். அவ்வாறு உணர்த்தப்பட்ட ஆன்மா, கருவிகள் சடமாகிய பொய்ப்பொருளென்றும், தான் அவற்றின் வேறாகிய சித்துப் பொருளென்றும் அறிந்து அக்கருவிகளால் மயக்குறாது நீங்கப் பெறும். அதன்பின், இதுகாறும் அக்கருவிகளே தாரகமாக நின்று ஆன்மா, சிவபெருமான் திருவடியைத் தாரகமாகத் தலைப்படும். (செய்யுள் 8 சிவப்பிரகாசம்)

பரமசிவன் குருமூர்த்தியாய் வருவரென இங்கே கூறிய சகலவர்க்கத்துயிர்களுக்கும் அருள்செய்யும் முறைமையேயாம். விஞ்ஞான கலருக்குப் பரமசிவன் அறிவுக்கறிவாய் நின்று உணர்த்துவர்.

பிரளயாகலருக்கு நாற்புயம், திரிநேத்திரம், நீலகண்டம் முதலிய உறுப்புக்களையுடைய ஸ்ரீகண்ட வடிவே குருவடிவாகக் காட்டி நின்று உணர்த்துவர்.

சகலருக்கு மானுட வடிவாய்க் குருமூர்த்தியை இடமாகக் கொண்டு ஆவேசித்து நின்று அருள் செய்வர். சிவன் வடிவங்கொள்ளும்முறை அதிட்டான பக்கமெனவும் ஆவேசபக்கமெனவும் இருவகைப்படும். அநந்தாதி கிருத்தியாகர்த்தாக்களை நிலைக்களமாகக் கொள்ளுதல் அதிட்டான பக்கம். மெய்கண்ட தேவர் உமாபதி சிவம் முதலிய குருமூர்த்திகளை நிலைக்களமாகக், கொள்ளுதல் ஆவேசபக்கம்.

வீரசைவக் கொள்கை கன்னட நாட்டில் பசவரால் ஆக்கப்பட்டது. இக்கொள்கையைப் பின்பற்றும் மடங்கள் தமிழ்நாட்டிலுள்ளன. இவர்கள் சிவபெருமானை இலிங்க -அருவுருவவடிவில் வழிபடுகிறவர்கள். சிவாகம முறைப்படி திருக்கோயில் வழிபாடு இவர்கள் கோட்பாட்டில் இல்லை. இவற்றில் ஒன்று தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம் பேரூர், கோவை 10. மற்றது மயிலம் பொம்மபுர ஆதீனம். பேரூர் கோவை சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் அதிபராக தவத்திரு இராமசாமியடிகளார் ஆடசியிலுள்ளனர். மெய்கண்டார் ஆதீனம்: அன்னார் இலண்டனில் உள்ள உலக சைவப்பேரவையின் பரிபாலனராக முதல் இடத்தில் உள்ளார்.

வீரசைவர்களுக்கு மெய்ஞானம் வரும்முறையை மேற்குறிப்பிட்ட மடத்தில் ஆதிமுதல்வராகிய தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அவர்கள் இயற்றிய "அவிரோத உந்தியார்" என்னும் நூலில் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. இது செய்யுள் வடிவிலுள்ளது. இதற்குப் பேரூர் தவத்திரு சிதம்பரசுவாமிகள் சிறந்த உரை எழுதியுள்ளார்.

**'உணர்ந்தோர் அனைத்துமாம் ஓர் பொருள் தன்னை**
**உணர்ந்தோர் அனைத்தும் என்று உந்தீபற**
**உள்ளங்கை நெல்லிஈது உந்தீபற"**

உரை

"என்பது, தானன்றிப் பிறிதொரு பொருளும் இன்மையால் அனைத்துமான ஒரு பரம்பொருளை யாவரொருவர் உணர்ந்தார், அவரே எல்லாப் பொருள்களையும் ஒருங்கே உள்ளங்கையின் நெல்லிக் கனிபோல் ஐயந்திரிபின்றிப் பிரத்தியட்சமாக உணர்ந்தோர் என்றவாறு (செ 50 அவிரோத உந்தியார்) இது வெளிப்படையாகத் தெரியக்கூடிய வேதாந்தக் கொள்கையைக் கூறுகிறது. அன்றியும் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் இயற்றிய இன்னுமொரு நூல் "கொலை மறுத்தல்" இதனை உரைநடையில் இயற்றியவர் திரு. J. வையாபுரி, இவர்

திருமடத்தால் நடத்தப்படும் தமிழ் கல்லூரி விரிவுரையாளர். இந்நூல் தவத்திரு இராமசாமி அடிகள் அருள் ஆட்சி, ஏற்பு விழாவின் வெளியீடு. இது மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாகிய சங்கற்ப நிராகரணத்தைப் பின்பற்றியே இயற்றப்பட்டது. சங்கற்ப நிராகரணம்: செய்யுள் நடையிலும், கொலை மறுத்தல் உரைநடையிலும் உள்ளன. இதன் கூற்று உயிர்க் கொலை பாவச் செயல், ஆனால் இதற்கு விலக்குண்டு அந்தணர் வேள்வியிற் (வேதவேள்வியிற்) கொன்று புலால் உண்டாராயினும் அதனால் அவர்களுக்குப் பாவம் உண்டாவதில்லை, புண்ணியமே உண்டாம், சுவர்க்கமும் பெறுவர். புலால்வடிவம் மாறாமலிருப்பதால் குற்றமில்லை. அதில் புலால் தன்மையில்லை, என்பதனால் தூய்மையடைந்த தென்று கொள்க. ஆதலால் யாகத்திற் கொல்லப்பட்ட தன் உடம்பு புலால்தன்மை நீங்கவே உருத்திரர் முதலிய தேவர்க்குப் படைக்கத்தக்கதாகிறது.அங்ஙனம் உருத்திரர் முதலியோர் கொள்வதனால் அவ்வுயிர் சிறந்த இன்பம் அடைகிறது. இங்ஙனம் அவ்வுயிர் இன்பம் அடைதலின் அதற்குக் காரணமாய் வேள்வி செய்த அந்தணரும் சுவர்க்க இன்பம் எய்துவர்.

வேள்வியிற் கொல்லப்படும் உயிர் துன்புறுவதுபோல் தமக்குத் தோன்றினாலும் அத்துன்பம் துன்பமாகக் கருதப்படாது, அவ்வுயிர் சுவர்க்கம் பெறுகின்றது. ஆதலின் அதனைச் செய்த அந்தணரும் பாவம் அடையார், சுவர்க்கம் எய்துவர். வேள்வியில், அவியுணவு முன்னர் உருத்திரனுக்கும் பின்னர் மற்றைத் தேவர்களுக்கும் கொடுக்கப்படுதலின் அவ்வுயிர் சுவர்க்கம் அடையும். தேவர் புலால் உண்ணார் என்பதேயாண்டும் கொள்ளத் தக்கது. வேள்வியிற் கொடுக்கும் அவியுணவு புலாலன்று - அதில் புலால் தன்மையில்லை. அது தூய்மைப்படுத்தப்பட்டது. வேதமந்திரங்களால் தூய்மைப்படுத்தப்பட்டது. இப்படிச் செய்வன சுத்த அத்துவிதச் சைவக்கொள்கைக்கு உடன்பாடல்ல, "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற்" (பட்டினத்தார் பாடல்)

இதுதான் சுத்த அத்துவித சைவக் கொள்கை.

தேவர்கள் மோட்சப்பிரியர்கள் அல்ல:

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்
- பால்
தாழ்த்துவதுந் தாம் உயர்ந்து தம்மை யெல்லாந்தொழ
- வேண்டி

(திருவாசகம் திருசதகம் - பாடல் 20)

வானோர்கள் வாழ்த்துவதும் வணங்குவதும் தாம் நெடுங்காலம் இன்பவுலகில் வாழும் பொருட்டே, அவர்கள் தம்மை எல்லா உயிர்களும் வணங்க விரும்பியே. இன்னும்: "எத்தேவை நலமென்றிசைந்தா யதைத் தொழு சத்தியபத்தியாலுந்தீபற தனுவாதியைக் கொடுத்துந் தீபற என்பது இங்ஙனம் கூறிய முத்தேவர்களுள்ளும் யாதொரு வடிவத்தைச் சிவமென்று துணிந்தாய், அந்த வடிவத்தையே நாடோறும் வழிபடக்கடவாய்.

மூவரும் மற்றொழிந்த தேவரும்
அணு (ஆன்மா) பட்சத்தினர்"

"மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான் - மாவேறி
வையகத்தே வந்திழிந்தவார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும் "திருவாசகம்"
(வெண்பா 9)

என்பது, பிரகிருதித் தத்துவத்திலுள்ள பிரமாவிட்டுணு, உருத்திரன் "சில்லாண்டிற் சிதையுஞ்சிலதேவர்" இப்படியான சிறுதெய்வங்களை சிவனென்று வழிபடுவது சுத்த அத்துவித சைவத்திற்கு ஒவ்வாததும் எவ்விதப் பயனுமில்லாததுமாகும்.

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிறுதேவர்
சிறுநெறிசேராமே
வில்லாண்ட கனகத்திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே"

## சான்றோர் சொல்லமுதம்

சாதிப்பிரிவு என்பது நாட்டிற்குத் தேவையான நான்கு அம்சங்களைக் கொண்டது என்கிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன். 1. ஆன்மீகத்துறை 2. அரசியல், போர்த்துறை 3. வாணிபம் - தொழில்துறை 4. தொழில்களை இயக்கும் தொழிலாளிகளின் துறை. இவை பிரம்ம, ஷத்திரிய, வைசிக, சூத்திர என நான்கு வருணங்களாக ஆக்கப்பட்டன என்பது அவர்கருத்து. இவர் மட்டுமல்லாது இந்து மதச் சான்றோர்களின் வாதமும் அதுதான். காழ்ப்புணர்ச்சியின்றி, ஆத்திரமின்றி தத்துவரீதியாக நாம் இதை ஆராயவேண்டும். ஆனால் இவை சாதிப்பிரிவுகள் ஆகமாட்டா. சமுதாய வாழ்க்கையையே நான்கு அங்கங்களாகப் பிரித்து, ஒன்றை ஒன்று அனுசரித்து வாழும் முறையை இந்து மதம் உருவாக்குகிறது.

- கவிஞர் கண்ணதாசன்

# "ஒறுத்துக் கொஞ்சம் ஊருக்கும்........"

குறிஞ்சித் தேவன்

அந்நாட்டில் அந்நாளில் அரச ரென்பர்
ஆருக்குத் தான்தெரியும் அவரின் கோலம்
எந்நாளும் இருட்டடிப்புச் செய்து நிற்கும்
ஈங்கிவரை இவ்வுலகில் நம்ப லாமோ?
இந்நாளில் இரும்புருகப் பேசி நிற்போர்
ஈழத்தின் சாயலென எண்ண லாமோ
முன்னாலே பேசிப்பின் மூக்கை வெட்டும்
மூடரினை நம்பிப்பின் பற்ற லாமா?

வாழ்நாளில் வையத்தில் வனப்பு மில்லை
வருங்கால உணர்வில்லை வாக்கில் சூழ்ச்சி
பாழ்போன படையெடுப்பு வந்த தாலே
பயந்தோடி வந்தவராய் மாறி விட்டோம்
ஊழ்வலிது எவராலும் மாற்ற வொண்ணா
உலகத்தில் வாழ்வாங்கு வாழ்தல் நன்று
கூழுக்கு உப்பில்லா விட்டா லும்நம்
குடிப்பெருமை காத்திட்டு வாழ்தல் நன்று

மாட்டிற்கு மாடுசொன்னால் கேளா தென்றும்
மணிகட்டும் மாடேதான் வேண்டு மென்பர்
வீட்டிற்கு வீடுவாசற் படிகள் வேறாம்
வினைகெட்ட மனிதரென வாழ மாட்டோம்
கூட்டுக்குள் அகப்பட்ட புலியா னாலும்
குணங்கெட்டு வாழ்ந்திடுதல் காணோம் என்றும்
பாட்டிக்குக் கதைசொல்லிக் கொடுப்பா ரில்லை
பண்போடு மன்போடும் வாழ்வோம் பாரில்

கொட்டாவி விட்டுத்தம் கோலம் மாறி
குறுக்காகப் போய்விடுதல் குலத்திற் கீனம்
எட்டப்பன் கூட்டத்தில் இறங்கா தீர்கள்
ஏணிக்கு மேலேறிக் குதிக்க லாமா?
முட்டாக்குள் கைகாட்டி முனைய வேண்டாம்
மூதறிவைப் பயனாக்கி முயல்தல் நன்று
பட்டாங்கில் உள்ளபடி பயின்று நிற்பின்
பாதாளம் போனாலும் வேதா ளம்வரா.

கனடாவில் கவிஞர்க்குப் பஞ்ச மில்லை
காவியங்கள் உருவாகும் கவலை யில்லை
மனமாரச் செய்யுளினை மாசில் லாது
மாண்புடனே யாத்திடுதல் மரபுத் தேவை
நனிதாயின் நற்றமிழர் உலகம் போற்றும்
நாற்றமெடுத் தாலுலகம் நக்கித் தூற்றும்
இனிதாக என்றென்றும் போற்ற வாழ்ந்தால்
ஏற்றமுடன் எல்லோரும் போற்றி நிற்பர்.

பொய்யொன்றை மெய்யாக்கிப் புழுகு வார்கள்
போலவெனப் புரையவெனச் சாற்று வார்கள்
மெய்யொன்று மவர்நாவில் மிளிர மாட்டா
மேசைக்கு முன்னாக நிற்க ஆசை
தெய்வத்தின் அங்கியையும் திருடு வார்கள்
தேவருக்கு மஞ்சாத பூனை யாவர்
நெய்தொட்டுக கைநக்கும் நேயத் தொண்டர்
நேர்மையே காணாத நெஞ்சத் தாரே.

சப்பாணி கொட்டிடுவார் சரீர மெங்கும்
சார்ந்திருக்க நீற்றினையே பூசிப் கொள்வர்
தப்பாத பக்தரெனச் சாடை காட்டித்
தாபதர்போல் வாயாட்டித் தபசு செய்வர்
எப்போது இவர்மாயம் அடங்கு மோதான்
ஈசனையே ஏமாற்றும் இந்தப் பேர்கள்
நப்பாசை நடிகரென நன்கு ஓர்ந்து
நாளடைவில் தெரிவீர்கள் நம்பு வீர்கள்

அன்பாக அழைப்பார்கள் அன்பே தொங்கும்
ஆருக்குந் தெரியாது அமைதி தோன்றும்
இன்பாகக் கதைபேசி இனிது பார்த்து
ஈதலெனக் கேட்காது ஈயக் கேட்பர்
தன்பாடு வெற்றியெனில் முதுகில் தட்டித்
தாராளம் போய்வருக தம்பி யென்பர்
இன்னாரை இன்னாரென் றறிந்து கொண்டால்
ஈட்டிக்கு இரையாக்க எண்ண வேண்டாம்.

குறுக்காகச் செல்வதற்கு விடுவார் வண்டி
கூலிக்கும் மாரடிக்கக் கூச மாட்டார்
நறுக்கான பேச்சுண்டு நாண நடிப்பே
நாளுக்கு நாள்வேறு பேச்சு மூச்சு
மறுப்பில்லா மாற்றமுடன் மனுவுங் கூறி
மாண்பினர்போல் சபையேறி மதிப்புப் பார்த்து
அறங்காவல் தொண்ட ரென ஆசை காட்டி
ஆடிவரும் அன்பர்களை அறிவீர் நாளும்

அறிவாற்றல் கல்வியிலே அற்ப மானால்
ஆனவரை புகழ்பேசி ஆப்பே வைப்பர்
குறியில்லை கொள்கையும் குறைவு தானே
கூடுமட்டும் சமாளிக்க வேண்டு மெண்ணம்
வெறுப்பின்றித் தன்கருமம் கண்ணாய்க் கொண்டு
வேதனைகள் வந்தாலும் வெறுப்புக் காட்டார்
பொறுப்பான இடந்தன்னில் புகுந்து கொண்டு
போதனையால் சாதிப்பார் புத்தி தானே.

படிப்பில்லைத் துடிப்பில்லை பண்பா டில்லை
பாசாங்கில் பட்டத்தைத் தாமே சூட்டி
நடிக்கின்ற நல்லோரை என்ன என்போம்
நாமென்ன செய்திடலாம் நரம்பே யில்லை
குடியில்லை கூடில்லை கோலத் தாலே
கோடிடவே முடியாது கொள்கை ஏது
மடியிற்றான் கனமில்லை பயந்தா னேது
மானமுடன் வாழ்ந்திட்டா லதுவே போதும்.

கண்ணாலே கண்டதெல்லாம் பொயென் பாரகள்
காதாலே கேட்டதெல்லாம் மெய்யென் பார்கள்
அண்ணாந்து பார்ப்பவர்கள் பத்த ராகார்
ஆண்டவனை அடிமனதில் எண்ண வேண்டும்
சுண்ணாம்பு நீற்றறையும் சுகத்தை நல்கும்
சோதியனை மனதாரத் தொழுது நின்றால்
பண்புடனே பக்குவமாய் வாழ்ந்து காட்டு
பாரினிலே பெருமனித னாகி நிற்பாய்.

ஆரியக்கூத் தாடினாலும் அங்கும் தானே
அன்பாகப் பேசிநின்று ஆசை காட்டி
காரியத்தில் கண்வைப்பார் கரும வீரர்
கஞ்சிக்கு உப்பாக கதைத்து நிற்பார்
நாரியர்போல் நடந்திட்டு நலமாய்ப் பேசி
நல்லவராய் நடித்திடுவர் நாச காரி
கூரியமுள் ளானாலும் குத்த மாட்டார்
கோயில்சொத் தானாலும் கூச்ச மில்லை

பேசுவதும் பொய்யிந்தப் பிறப்பும் பொய்யே
பெட்டிக்குள் பாம்பாக இருப்பின் பெட்பாம்
மீசையிலே மண்படினும் மெதுவாய்ச் சொல்வர்
மிட்டாசித் தூள்பட்ட தெண்ப தாக
காசினிலே பேராசை இருந்தால் கூட
கடவுளடி கருத்தினிலே இருத்தல் வேண்டும்
கூசிவிட வேண்டியதை கூட்டித் தள்ளு.
கும்மாளம் கொட்டாது குஞ்சம் கட்டு.

முறையான நிருவாகம் முடங்க லின்றி
மூதறிவை முன்வைத்து முகம னின்றி
நிறைவான எண்ணமுடன் நெஞ்சில் வஞ்சம்
நேராது சோராது நிகழ வேண்டும்
மறைவாகப் பேசாது மனத்தை விட்டு
மாசகற்றி நேசமுடன் மக்கள் சேவை
இறைசேவை எனஎண்ணி இனிதே செய்க
ஈடற்ற பெருநன்மை இதனா லெய்தும்

முகத்திற்கு முன்னொன்று சொல்லிப் பின்னால்
மூடிவைத்து வேறேதோ முடுக்கிக் கூறும்
அகத்தோரை அடையாளம் கண்டே வைத்து
ஆனமட்டும் உறவின்றி நீக்கிக் கொள்க
சகபாடி யாகநின்று சதியே செய்வோர்
சாயமது ஊறமுன்பு சரணா குங்கள்
இகபரமே சரணென்று எண்ணி வாழ்வில்
ஈசன்தான் கைகூடும் எல்லாம் சித்தி.

சட்டத்தைச் சொல்லிடவும் சட்டை செய்யார்
சாட்டுக்கள் கூறிடுவார் சலன மின்றி
இட்டமுடன் ஏதேதோ சொல்லிச் சொல்லி
ஏய்த்திடுவர் எல்லாமே அறிவுத் தாழ்வே
மட்டந்தான் புத்தியென மதித்துக் கொண்டு
மானமுடன் நாம்வாழப் பழக வேண்டும்
சட்டியிலே இருந்தாற்றான் அகப்பை அள்ளும்
சாதுரியம் அறிவோடு சார்ந்த வென்றே

பணியாற்ற வந்துவிட்டால் பணிவும் வேண்டும்
பாரபட்ச மில்லாத பக்குவம் வேண்டும்
துணிவான மனத்தோடு தூர நோக்கு
தூதுவரின் நேரொத்த தூய்மை உண்மை
அணிபோல் அமைவாக அமைதல் வேண்டும்
ஆராக விருந்தாலும் நீதி யொன்றே
கணிப்போடு நடந்தாலே கண்ணிய முண்டு
காணிவரம் பழித்திட்டால் எல்லை எங்கே?

தத்துவங்கள் பேசிடுவர் தக்கோ ராக
தாயாதி போல்நடிப்பர் தூயோ ராகி
மெத்தமெத்த உத்தமராய் மினுங்கி நிற்பர்
மேடைக்கண் முழங்கிடுவர் மேலோ ராக
பத்தியிலே முத்திபெறும் பக்கு வராக
பாட்டாளி யாய்நடிப்பர் பணிவு கூர
எத்தனைநாள் ஏமாற்றி வாழப் போறார்
இவராலே நாட்டிற்கு ஏற்ற முண்டோ?

நாடோறும் முழுநேர வருவா யுண்டு
நன்றாகக் கொண்டாட்டம் நடத்து வார்கள்
காடேறும் காலத்தும் கஞ்சா வாட்டம்
கலகலப்பாய் திரிவார்கள் " கப்ஸிப்" என்று
சூடேறச் சூடேறச் சுழற்சி தானே
சுற்றத்தார் சிரிக்கத்தான் செய்வா ரன்றோ
ஆடாத கூத்தெல்லாம் ஆடி நிற்பார்
அவள்விம்மி அழுவதற்கு ஆரென் செய்வார்.

கணக்கேது மில்லையே காலம் போயும்
காவலுக்கு யாருளரோ கண்டு கேட்போம்
பிணக்கின்றி வாழ்ந்திடுதல் எங்கள் நோக்கம்
பேர்கேட்டு வாழமாட்டோம் உறுதி யாக
சுணைப்புண்டு நினைப்புண்டு சூது வாதேன்
சுடர்த்தீபம் போலுலகில் நன்றே வாழ்வோம்
இணங்கிநின்று சுணக்கெல்லாம் யாவுந் தீர்த்து
ஈரநெஞ்சம் கொண்டினிது இன்னும் செய்வீர்

நற்பணிகள் செய்தோமே நாடு போற்ற
நாற்றிசையும் புகழாரம் நன்றாய்க் கேட்டோம்
பற்பலருஞ் செய்யாத பங்கை உங்கள்
பாசத்தால் ரோசத்தால் செய்தீர் மேலாய்
சிற்பரனைச் சேவிக்கும் செந்தமிழ் சைவம்
சீர்பெறவே செய்தபணி சீரிய தாகும்
முற்பகலும் பிற்பகலும் முழு மையாக
மேன்மேலும் செய்தீர்கள் மிகவும் நன்றி.

காட்டாற்று வெள்ளமதில் கல்லும் முள்ளும்
கரும்புந்தான் வரக்கூடும் கவலை வேண்டாம்
போட்டாலும் கணக்குண்டு பொய்மை வாரா
புகழ்சேர்த்தெம் தமிழருக்குப் பெருமை சேர்த்தோம்
வீட்டிற்கும் நாட்டிற்கும் வேறு என்ன
விருப்போடு செய்திடுவோம் மேலும் மேலும்
ஆட்டுவித்தா லாரொருவர் ஆடா தாரே
அவனருளால் நாம்வாழ்வோம் அன்பே தூய்மை

கல்வியிலே கரைகண்டார் யாரு மில்லை
காரியத்தில் கண்ணாக இருத்தல் வேண்டும்
முல்லைப்பூ மொட்டெனினும் முறுவல் காட்டும்
மூவாசை இல்லாதார் யாவர்? யாரோ
நெல்லிக்க னியுண்டஔவை நெடுநாள் வாழ்ந்தாள்
நீங்களுமே கவிபாடி உண்டு பாரீர்
சொல்லாலே சுழற்றுவதில் யாதும் ஆகா
சொன்னபடி செய்திடுக வெற்றி காண்பீர்.

சங்கங்கள் பதவிக்கே சிலருக் குண்டு
சாகுமட்டும் இருக்கலாம் சலிப்பே யில்லை
பங்கமின்றிப் பாடுபட்டால் பலனு முண்டு
பாசாங்கு செய்பவர்க்குப் பட்டுப் போர்ப்பர்
மங்குசனி நடந்தாலோ மாற்ற முண்டு
மாசின்றி நடந்திட்டால் மன்றே போற்றும்
எங்களது நாடதனில் சேவை தன்னை
ஏற்றிட்டுச் செய்தவரே சிறப்பை ஏற்பர்

ஈழத்தில் உணவில்லை உடையு மில்லை
இருக்கத்தான் இயலாது என்னே கோலம்
வாழவுமே உண்பதற்கு என்ன உண்டு
வருத்தத்தை மாற்றிடவும் மருந்தே யில்லை
கூழைத்தான் குடித்தாலும் கொசுவின் தொல்லை
கும்மாளங் கொட்டுகிறோம் இங்கே நாங்கள்
ஏழைக்கு நாமிரங்கி இயன்ற மட்டும்
எல்லோருங் கூட்டாக உதவி நிற்போம.

கொண்டாட்டம் குறையட்டும் கோலம் வேண்டாம்
" கொண்டமேனி" யம்வேண்டாம் கொஞ்சக் காலம்
திண்டாட்டப் படும்போது தீவின் மக்கள்
தேற்றுவது நங்கடமை யாகு மன்றோ
எண்டோளும் முக்கண்ணு முடைய அப்பன்
ஈசனையே தொழுதுநிற்போம் இன்னல் தீர
உண்பதிலும் உழைப்பதிலும் ஒறுத்துக் கொஞ்சம்
ஊருக்கும் அனுப்புங்கள் ஒன்றாய்க் கூட்டி

போலிவேடம் போட்டிங்கு ஆடல் போடின்
புத்திகெட்டு பார்க்கின்ற மனித ரில்லை
வேலியிலே வந்துநின்று வேடம் பார்த்தே
விளங்கிடுவர் எல்லாமே வீணாம் என்று
கூலிபெற வேண்டுமெனில் கொழுத்த வேலை
கொண்டிடலாம் எவ்விடமும் கோணல் பேச்சு
சோலியென எண்ணிடுக சோடை போகீர்
சொல்லுவது நன்மைக்கே சூழ்ச்சி யல்ல.

சங்கவிதி காத்திடுதல் சபையோர் தானே
சாகுமட்டும் பதவிக்கு ஆசைப் பட்டால்
இங்கிதனைக் கேட்டவர்கள் என்ன சொல்வார்
ஈங்கிவர்கள் ஆசையின் காரணம் ஆய்வர்
எங்களுக்கென் எனவெண்ணி இருந்தால் வெட்கம்
இவர்களுக்கு ஒழுங்கொன்றும் தெரியாதென்பர்
மங்கிடுமே மரியாதை மனிதப் பண்பு
மாமனிதர் செய்கையா இதுவா என்பார்

சுயலாபம் கருத்தானால் சூழ்ச்சி தானே
சூதாட்டம் பொல்லாது சுழற்சிக் காற்று
புயலுக்குப் பின்னமைதி உண்டென் றாலும்
பூவுலகிற் கதுதெரியத் தானே வேண்டும்
குயிலுக்கு கூடுகட்டத் தெரியா தென்பர்
கூர்பார்த்தல் தீட்டியவம் மரத்தில் தானா
சுயமாகச் சிந்திக்க சூழ்ச்சி வேண்டாம்
சூதாட்டம் பொதுப்பணியா? சிந்திப் பாயே.

தொண்டுமனப் பான்மையே தெய்வஞ் சேர்க்கும்
தோள்மாறிச் சுமந்தாலே துன்பங் குன்றும்
கொண்டாட்டம் போடுவதா கொள்கை யாகும்
கோடிபணி சமயத்திற் காற்ற வேண்டும்
திண்டாடும் நிலையின்றிச் சமூகம் வாழ
தீவிரமாய் இளைஞருக்குத் திட்டம் போட்டு
பண்டாகப் பலவாகப் பணிக ளாற்றி
பாடுபட்டுச் செயற்பட்டுப் பாரந் தீர்ப்பீர்.


முறையாகக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்
மூதறிவால் முற்போக்குத் திட்டம் போட்டு
குறைபோக ஆராய்ந்து கூட்டந் தன்னில்
கூடியநல் லாதரவால் கொண்டொப் பேற்றின்
துறைபோன ஒப்புரவு துளங்கித் தோன்றும்
தூரத்து ஒத்துழைப்பும் தொடர்பு மோங்கும்
பறைபோட்டு உறையிட்டா? பால்தயி ராகும்
பாறையும் வேருக்கு நெக்கி நிற்கும்.

தமிழோடு சமயத்தை வளர்க்க வேண்டும்
தமக்குமுதல் அவைதானும் தெரிய வேண்டும்
அமிழ்தாகு மவையென்று அறிதல் வேண்டும்
ஆருக்கும் பதில்கூறிச் செல்லல் வேண்டும்
நமைநாமே தமிழரெனக் காட்டல் வேண்டும்
நாடெங்கும் நம்மினங்கள் செழிக்க வேண்டும்
சுமைதாங்கிச் சோர்வின்றி வாழ்தல் வேண்டும்
சோதனைகள் வந்தாலும் சோகம் வேண்டாம்.

மலைமகளாம் ஆதிசக்தி அருளும் வேண்டும்
மாதுமகா இலக்குமியின் அருளும் வேண்டும்
கலைமகளின் கலையெம்மில் நிறைய வேண்டும்
காலமெல்லாம் காப்பெமக்குக் கடவுள் தானே
தலையாய மக்களென வாழ்தல் நன்று
தாரணியில் தமிழ்சமயம் தழைத்தல் நன்று
குலையாத குணக்குன்றாய் இருத்தல் நன்று
கூட்டுறவே நாட்டுயர்வு கூடி வாழ்க!

*With the best compliments from*

# ஸ்ரீசிவா ஜுவலரி



# SRISIVA JEWELLERY

**721 BLOOR STREET WEST, TORONTO, ONTARIO**
**TEL: (416) 531 - 4867**

# ராஜாராம் உணவுச் சேவை



**இந்திய, இலங்கை உணவு வகைகள்**

## உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

சாதமா, நெய்ச் சாதமா, **Pillau** சாதமா, புரியாணியா, புளிச்சாதமா, தயிர்ச்சாதமா, இடியப்பமா எதுவானாலும் வகை செய்வேம்

*கனடா இந்து மாமன்றத்தினர் தமிழ் சைவசமய கலாச்சாரப் பண்பாட்டினை வளர்க்கும் நோக்கமாக வெளியிடும் – "சைவநீதி"– சஞ்சிகை புதிய மறுமலர்ச்சியை மேலும் ஏற்படுத்தட்டும். சமயத்திற்கும் நாட்டிற்கும் நற்றமிழர்க்கும் நம்மொழிக்கும் நற்பணி புரியட்டும். எங்கள் உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்*

## வாழிய! வளர்க! சைவ நீதி

# RAJAH RAM CATERERS

**589 Middlefield Road, #20, Scarborough, Ontario, M1V 4Y6**
**TEL: (416) 299-5200, 439-4256**

# தமிழ் - தமிழ்ச் சமுதாயம் - சைவசித்தாந்தம்
# (Tamil - Tamil Society and Saiva Siddhanta)

டாக்டர் கி. கருணாகரன்,
மிச்சிகன் பல்கலைக்கழகம், மிச்சிகன், (அமெரிக்கா)

## தமிழ் - தமிழ்ச் சமுதாயம் - தமிழ்ச் சமயம்: முன்னுரை:

தமிழ் நீண்ட நெடிய இலக்கிய - இலக்கண வளத்தையும் பாரம்பரியத்தையும் ஒருங்கே பெற்று விளங்கும் முதுமொழி. தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அரியவை - சிறப்பிற்குரியவை - என்றும் புதியவை. காலந்தோறும் வளம் பெற்றும் பயன்பாட்டில் (in use) செல்வாக்கும் வலுவும் பெற்றும் நிலைபேறு பெற்ற செம்மொழியாக - செவ்வியல் மொழியாக (standard classical language) விளங்கி வரும் மொழி என்பதில் இரு கருத்திற்கு இடமில்லை.

தமிழ்ச் சமுதாயம் தொன்மையான சமுதாயம். நயத்தகு நாகரிகத்தினையும் பெருமைமிகு பண்பாட்டினையும் ஒருங்கே பெற்று, மற்றவர்க்கு எடுத்துக்காட்டாக இயங்கி வரும் சமுதாயம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்துபட்ட உயரிய கோட்பாட்டினை மேற்கொண்டு எழுச்சி கண்ட சமுதாயம் (adventurous Society even from the early period). அக - புற வாழ்வியலில் அரும்பெரும் நிகழ்வுகளைக் கண்ட சமுதாயம். வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த ( தொல்காப்பியம் பொருளதிகாரம்) சமுதாயம். வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே வரலாறு படைத்திட்ட சமுதாயம், இச்சமுதாயம். ஆரியர் காலததிற்கு முன்பே தனக்னெ ஒரு நாகரிகத்தைக் கொண்டு விளங்கிய ஒப்பற்ற சமுதாயம். மனித வாழ்வியலைத் தம்மொழியோடு ஒருங்கிணைத்து வாழ்வியல் நெறிமுறைகளையும் சமுதாயத் தத்துவங்களையும் உலகிற்கு உணர்த்திய பண்பட்ட சமுதாயம் தமிழ்ச் சமுதாயம் - திராவிட சமுதாயம் எனின் அது மிகையாக அமையாது. ஏனெனில் தமிழ் மொழி - இலக்கியம் - இலக்கணம் - தமிழ்ச் சமுதாயம் வாழ்வியல் - நாகரிகம் இவற்றின் தொன்மை செம்மை வளம் போன்றவற்றை வெளிப்படுத்தும் அக மற்றும் புறச் சான்றுகள் (internal and external sources and evidences) பல. இவை பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை - ஏற்றுக்கொள்ளத் தக்கவை என்பதைத் துணிந்து கூறலாம். இதையே தமிழ் மொழி இலக்கிய - இலக்கண சமுதாய வரலாறு நன்கு எடுத்துக் காட்டுகிறது.

மனிதர்கள் குழுவாக - இனமாக இணைந்து வாழத் தொடங்கியது முதலே வாழ்க்கைத் தத்துவங்களும் நெறிமுறைகளும் தொடங்கிவிட்டன என்று குறிப்பிடலாம். மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை எத்தனையோ நிகழ்வுகள் - அமைப்புகள் - செயற்பாடுகள் (இயக்கம்) - கண்டுபிடிப்புகள் தோன்றுகின்றன. இவை அனைத்தும் பல்வேறு வகைகளில் வெளிப்படுகின்றன - வெளிப்படுத்தப் படுகின்றன. மனித இனம் அன்பால் - அருளால் - அறத்தால் - அறிவால் தொடர்பு கொள்கிறது. அன்பு வழி, அருள் வழி, அறவழி, அறிவு வழி செயல்படுகிறது. இத்தகைய வழிகள் நெறிகள் போன்றவை மனிதனை மனித சமுதாயத்தை ஒரு இயக்கத்திற்குள் - கட்டமைப் பிற்குள் கொண்டு வருகின்றன. இதனையே சமயம் என்கிறோம்.

## தமிழ்ச் சமுதாயம் - தமிழ்ச் சமயம்

கடவுள் - மனித சமுதாயம் - வாழவியல் இவற்றிற் கிடையேயான நெருங்கிய தொடர்பினை - பிணைப்பினை வெளிப்படுத்துவதும் உறுதிப்படுத்துவதும் சமயம் என்ற இயக்கம் - அமைப்புதான். அதாவது மனித சமுதாயம் அன்பு - அருள் - அறம் ஆத்மஞானம் இவற்றைப் பெற்று இனிதே சிறக்க வழி அமைத்துக் கொடுப்பது தான் சமயநெறியாகும். இந்த நெறிமுறைகளில் இருபிரிவுகள் உண்டு 1.பொது நெறிமுறைகள் (General principles) 2. சிறப்பு (தனிப்பட்ட) நெறிமுறைகள் (Specific principles). அன்பு, உண்மை, ஒப்புரவு, இன்சொல் போன்றவை பொது நெறிமுறைகளாகும். வாழ்வியல் அமைப்பிலும், இயக்கத்திலும் மனித சமுதாயம் அமைத்துக்கொள்ளும் நடை, உடை, பாவனை போன்றவை சிறப்பு (தனிப்பட்ட) அல்லது சமுதாயம் சார் நெறிமுறைகளாகும் (சுத்தானந்த பாரதியார், 1965)

இந்நிலையில் தமிழன் கண்ட சமயம் - தமிழ்ச் சமுதாயம் அமைத்துக் கொண்ட இயக்கம் - திராவிட இனம் மேற்கொண்ட நெறிதான் சைவம் என்பதாகும். சைவ நெறியாகும். உலக, சமயத் தத்துவங்களில் மிகவும் தொன்மை வாய்ந்தது சைவத்தத்துவம் என்பார் (ஜான் மார்ஷல்). திராவிட இனத்தின் "அறிவுக் கொடை"யே சைவசித்தாந்தத் தத்துவம் என்றும் கருத்துரைக்கப்படுகிறது. The Saiva Siddhanta system is the most elaborate influential and undoubtedly the most intrinsically valuable of all the religions in India. It is peculiarly the south Indian and TamilOrigin.

Saiva siddhanta philosophy is the choicest product of the dravidian intellect" (Pope, G.U.).

It is in fact the roots of Saivism are deeply embedded in the ancient classical literature of the Tamils. the cankam literature in a beautiful verse which forms the invocatory verseof Ainkurunu ru (ஐங்குறுநூறு) a cankan work the very essence of siddhanta philosophy is given in a condensed form:

**"நீல மேனி வாலிழை பாகத்**
**தொருவ னிருதாள் நிழற்கீழ்**
**மூவகை யுலகு முகிழ்த்தன முறையே"**

The universe demonstratable as of three kinds (he she and it) has sprung under the shade of the two feet of the one whose from is shared in halves by his jewel bedecked consort (sakthi) of the azure hue. This is an adequate evidence to establish the high antiquity of saiva siddhanta the religion and philosophy of the Tamil society.

Pope continues to say Saivism is the old prehistoric religon of south India essentially existing from pre-Aryan times, and holds sway over the hearts of the Tamil people". the South Indian hindus of the saiva peresuassion can proudly cherish this as their richest heritage a rare legacy handed down by seers and sages who experienced bliss. Tolkappiyam the oldest extant grammatical treatise in Tamil speaks in familiar terms of arivar and Tapatar (sages and Saints) this

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியி னாற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்"
(Tol. Purattinaiyiyal su"20)

Arivar were those who had conquered all last passion and confusing mental delusions spring out of ignorance or fascinations and they are said to have acquired the gift of knowing the past present and future. Naccina rkkiniyar the commentator says that the works of these arivar or seers of wisdom were known as the Agamas which chalked. out the course to be followed. by the ascetics or Tapatar to attain salvation. The tapathars were those who had spinned the pleasures of the world and had betaken. themselvs to a lifeof renunciations. They were wedded to the strict observance of the eight austerities (taking holy ablvtions or sacred baths lying on bare ground wearing only deerskin tending sacred fire, avoiding town life living far from the madding crowd growing matted hair eating only yeild of the jungle ie. fruits and dry leaves and worshipping god) The folowing stanza of purana nu ru presents a glimpse of tapatars

"ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
-----------------------------------------------------------
கடுந் தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே"

He was once indulging in luxury and langoor in the midst of a bevy of damsels in mansion halls but now has turned an ascetic renunciate with matted hair tending sacred fire with faggots brought by elephants in the inner recesses of forests (Subramania pillai 1948).

Apart from Pope there were scholars like Gowdie who observes " The saiva siddhanta system possessed the merits of great antiquity; in the religious world it is heir to all that most ancient in southern India. It is a religion of the Tamil People by the side of which every other form is of comparatively foreign origin. As a system of religious thought as an expression of faith and life the saiva siddhanta is by far the best that south India possesses indeed it would not be rash to include the whole. of India and to maintain that judged by its intriusic merits the siddhanta represents the high water mark of Indian thought and Indian feeling" (subraminia pillai 1948 D.3).

இவைமட்டுமன்றி, செம்மையான மற்றும் கூர்மையான - சிந்தனை வழியான தத்துவங்களைக் கொண்ட சிறப்பிற்குரியது சைவ சித்தாந்தமே என்ற கருத்தும் உற்றுநோக்கத்தக்கது (சுவலெபில்) சைவ சித்தாந்தத் தத்துவம் மற்றும் நெறிமுறைகளோடு ஒப்பிட்டு எண்ணத்தக்க உயரிய கோட்பாடுகளைக் கொண்ட சமயத்தை எண்ணிப்பார்க்க இயலவில்லை - ஏனெனில் இதனுடைய தொன்மை சிறப்புத்தன்மை பெருமைக்குரியன என்றும், இந்திய வாழ்வியலின் அடிப்படையை - பெருமையைப் படம்பிடித்துக்காட்டுவது சைவ சித்தாந்தமே என்றும் கருத்துரைப்பார் கௌடி. தென்னிந்திய வாழ்வியலில் செல்வாக்கு மிக்க நல்ல இலக்கியங்களைக் கொண்டு, அவற்றின் வழி செயற்படும் நல்லியக்கம் - தத்துவம் சைவசித்தாந்தமே என்பார் (பார்க்குஹர்). இந்து சமயத் தத்துவத்தின் வாழ்வியல் அமைப்பு நெறிமுறைகள் போன்றவற்றைத் தெளிவாகவும் - கூர்மையான முறையிலும் வெளிப்படுத்துகிற சமயத் தத்துவம் என்பதோடு தமிழ்ச் சமுதாயத்தின் செம்மையான படைப்பாகவும் விளங்கி வருவது சைவ சித்தாந்தக் கோட்பாடே என்று கூறின் அது சிறிதும் மிகையாகாது என்பார் பியெட். இவ்வாறு சைவ சமயம் - சைவ சித்தாந்தம் - சித்தாந்தம் காட்டும் வாழ்வியல் அமைப்பு மற்றும் நெறிமுறைகள் பற்றிய பல்வேறு

வகையான மதிப்பீடுகளும் எண்ணங்களும் கருத்துரைகளும் வெளிப்படையாகவும் தற்சார் பற்ற நிலையிலும் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம் (Thimma Reddy 1994 Murugesa mudaliar 1968).

உலகில் பல சமயங்கள் உள்ளன; பின்பற்றப் படுகின்றன. அவற்றிற்கென தத்துவங்கள் உள்ளன பின்பற்றும் சமுதாயங்கள் உள்ளன. வேதாந்தம் சித்தாந்தம் இந்திய மண்ணிற்குரியவை. ஒன்று ஆன்மாவே பரமன் என்கிறது மற்றொன்று நன்கு முற்றக் கண்ட ஞான முடிவாக, தூய மெய்யின்ப வழியாக எடுத்துச் சொல்லப்படும் வேதம், ஆகமம் என்ற இரண்டையும் போற்றும். ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட தத்துவநெறியாக அமைகிறது சித்தாந்தம். இறைவனை முதல்வராகக் கொண்டு திருநெறித் தொண்டரால் வளர்க்கப்பட்டது. திருமூலர், மெய்கண்டார் முதல் சேக்கிழார் வரை அதைக் குறிப்பிடத்தக்க வகையில் வளர்த்தவர்கள் பதினைந்து திருநெறித் தொண்டர்களாவர். சமயப்பணி மேற்கொண்ட இவர்கள் தமிழால் சைவத்தை வளர்த்தனர்; தமிழோடு சைவமும் சைவத்தோடு தமிழும் தழைத்தன. இவர்களது படைப்புகளில் சிவனே முழு முதற்கடவுளாக - கருப்பொருளாக அமைந்திருக்கக் காண்கிறோம். எல்லாம் சிவனே என்பது உறுதியாகிறது.

**சைவம் - சைவ சித்தாந்தம்:-**

சீவன் சிவமயமானதால் அது சைவமாகிறது. உடலில் உள்ள ஆன்மா சீவன். அது மனமாசுடன் வினை சுமப்பது. எனவே மனம் தெளிந்து, வினை நீங்கி, சீவன் சுத்தமாகி, பின்னர் சிவத்தன்மை பெறுகிறது. அதாவது, நிறைவான மாசற்ற சுத்தமான ஆன்ம நிலை பெறுகிறது.

தெய்வம் ஒன்றே. அது என்றும் எல்லா இடத்தும் உளந்தோறும் உள்ளது என்பது வேதம் - ஆகமம் ஆகிய அனைத்து நூல்களும் கண்ட தெளிவு - முடிவு "ஒருவனே போற்றி ஒப்பிலா அப்பனே போற்றி உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே, ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என்று அருட்பெரியார் பாடியுள்ளது. குறிப்பிடத்தக்கது.

வேதாந்தம் "அது நீ" என்று சுத்தான்மாவைக் குறிப்பிடுகிறது. சித்தாந்தம் "அது நீ" என்று பரமனைச் சொல்லும். சைவசித்தாந்தம் வேத நெறியைப் போற்றி ஆகமப் பொருளை அடைந்து மனித சமுதாயமானது உலகில் சிவசக்திபோல் யோகபோக நிறைவுடன் வாழச் செய்யும். உலகம் இறைவனது ஆலயம். வாழ்க்கை இறைவனது ஆடல் எல்லா உயிர்களும் இறைவனது உடல் எங்கும் சிவமயம் என்று விளக்கும் ஆகமம். பதி பசு பாசம் (இறை, உயிர், தளை (உடல்) என முப்பொருளை விளக்கும் (சுத்தானந்த பாரதியார், 1965)

**விளக்கம்:**

நான் இருக்கிறேன் / வாழ்கிறேன்
↓
நான் (எனக்கு உயிர் உண்டு)
↓
வாழ்க்கை – வழிநடத்துதல்
↓
வழிநடத்தும் (இயக்கம்) பொருள் உண்டு
↓
அது தான் (சிவம்)

**முப்பொருள்:**

| உடல் | உயிர் | சிவம் |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| (பாசம் | பசு | பதி) |
| Matter | Mind | Supreme Self (God) |

உயிர் ◄──► சிவம்
↓
உள்ளுறவு
↓
(இரண்டறக்கலந்த உறவு – ஞான சம்பந்தம்)

இந்த ஞான சம்பந்தத்தை நாம் சரிவர உணராமல் இருக்கும் வகையில் பாசம் தடுக்கிறது. எனவே இதிலிருந்து விடுபட்டு நாம் இந்த உள்ளுறவை அறிய வேண்டும் - உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கான வரையறை செய்யப்பட்ட நெறிமுறைகள்தான் சிவநெறிமுறைகள், அதாவது சித்தாந்த நெறிமுறைகள் என்பன.

இந்த நெறிமுறைகளை நாம் தொடக்க காலத்திலிருந்தே தமிழில் தமிழ்வழி காண்கிறோம். சமய நெறி விளக்கம் திருமுறைகளின் வாயிலாக சமுதாயத்திற்கு நிறைவாகவும் விரைவாகவும் எடுத்துச் செல்லப்பட்டது பரப்பப்பட்டது பரவியது.

"Saivism is strictly a monotheistic religion holding that only as God which is truth intelligence and bliss which is above births and deaths, which is all love and grace towards all individual souls which is distinct from both matter and finitte selves and yet dwells within them and without and is ever active in bringing the souls out of darkness and setting them in its light and beautitude. It calls God by the name of Sivam simply because this term speicifies the essen-

tial quality of God which is pure love and bliss. In later times many more Gods such as Subramanya Ganesa Veerabhadra and others were adopted into its fold; but none of the founders of the Saiva religion held anyone as God except Siva. In the ten collections of the sacred hymns of Thirumurai (திருமுறை) sung by St. Thirujnanasambandar, St.Appar, St.Sundarar and St. Manickavachakar and others, there is not a single hymn in praise of any other God....... Other than Siva. And in each and every temple of Siva, his only ture emblem. the Sivalinga is set up in the central shrine as the pre-eminent object of first worship................ thus we find that not only do the ancient sacred litrerature of Saivism by the very construction of its temples and worship offered to Lord Siva" (Maraimali Adigal, 1966 3-6)

Saiva Siddhanta as a system of philosophy first assumes palpable form in Tirumantiram (திருமந்திரம்) composed by St. Thirumular. He deprecates the differences existing between the vedic and Agamic doctrines and says that they are both equally the revelations of the Almighty.

"வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்

...........................................................................

பேதம் தென்பர் பெரியோர்க் கபேதமே"

The veda with the Agama is the turth they are the words of the Lord; these revelations are to be studied as doctrines.

## Saiva Doctrine:

As for Tamil source saivism could be traced back to the period of Tolkappiyam, the earliest extant Tamil grammar- the mention of Kandali Kanadali: is that which is unfeltered or unbounded (siva or pati) and hence, implies the existence of the fettered or bound (pasu or souls and the fetters or bonds (pasu that is anava karma and maya) . Thus the nucleus of Saiva Siddhanta can be seen in the Tolkappiyam with its concept of that which, without requiring any support for itself is the support for everything else and which prevades everything like the fragrance of a flower. Later Tamil literacy works known as cankam literature, contain the basic ideas of Saiva siddhanta. This doctorine accord prominence to two sets of work one of which is mainly devotional and the other is mainly doctrine. The devotional works, twelve in number include the Thevaram Thiruvasagam, the Thirumantiram and the Periapuranam. The doctrinal works traditrionally reckoned as fourteen the sivagnana podham is considered as the basic text.

SIDDANTA

↓

Recongnizes

↓

| 1. Perception inference & Scriptures (As valid means of knowledge) | 2. Souls's intelligence (citsaka) | 3. God's intelligence energy (civa citsakti) |
|---|---|---|

**Siddhanta main categories**

| pati (lord) | pacu (souls) | pasa (bonds) |
|---|---|---|

(reasoning and scriptual authority)

(depends on Gods grace at every stage)

Arguements in favor of P1 - P2 - P3

P1 i) cause effects (intellgent vs non-intelligent)

ii) morality (Agent- action- fruits of action siva

P2 i) existence of soul

ii) plurality of soul

P3 i) Anava - Maya - Karma

| Anava | Maya | Karma |
|---|---|---|
| ↓ Prniaple at egosim | ↓ Matter in its primal state | ↓ Achair (punya / Papa) |

**Pratical side of Saiva Siddhanta**

**Steps of practise**

| | |
|---|---|
| i) cariyai: | (external acts) |
| ii) Kiriyai: | (worship of an icon) |
| iii) Yoga: | (attuning the mide to experience communication with God) |
| iv) Jnana: | (total awareness of God as the over all reality) |

That is there are six main entities in the structure of

siddhanta vi2)

i) Lord (பதி)
ii) Aggregate of the souls (பசு)
iii) Impurity (ஆணவம்)
iv) Two fold deeds (வினை)
v)&vi) pure and Impure (மாயை)

Entitiy 1

சிவம் God

(தூய்மையான அன்பு, பேரினபம்)

இறைவன்

தொலைவு — அண்மை
(சேய்மை) + தனிப்பட்ட விழைவு
(+தியானம்) (+உருவம்)

Entity 2: The aggregate of all souls (continue to exist)

Entity 3: The potential existence of evil principle in man

Entity 4: Two kinds of deeds: Good & Bad ( Karma/ vinai in Siavism)

Entry 5 & 6: Pure and Inpure (மாஜயு)
Impure: Direct material cause of the universe
Pure: Indirect material cause of the universe

Sivagnana potham was composed by St. Meikandar the truth seer or Satyadarshi who flourished at the beginning of the 13th century. "Although the four great saints of Saivism who flourished before the 8th cent. A.D. have given distinct experssion of the essential principles of the system in their sublime devotional lyrics an exposition of the same in a scientific manner is found only in St. Thirumalar's Thirumantiram and a few other books prior to the age of Meikandar who inaugurated the renaissance of Siddhanta philosophy in the 13th century.

The following verse shows in what light and order the Tamils viewed those siddhantic works.

"வேதம் பசு; அதன்பால் மெய்யாகமம்; நால்வர் ஓதுந்தமிழ் அதனின் உள்ளுறுநெய்; - போதமிகு நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் - மெய்கண்டான் செய்த தமிழ் நூலின் திறம்"

The veda is the cow; the Agamam is its milk the Tamil of the four Saints is the ghee churned from it; the excellence of the well instructive Tamil of Meikandar is like the sweetness of such a ghee (subramania pillai, 1965).

In fact Meikandar has expounded the truths realised by him in the form of syllogisms beautifully marshalled out in the order of proposition reason instance, assumption or application and deduction. Its simpicity in expounding the theistic position arrests our attention and can easily be comprrhended by the generality of the people. The convincing arguments of Sivagnana Potham easily prepare the ground for renunciation and instil the firmness of mind necessary for the attainment of the ultimate goal viz. Spuritual bliss.

The four saints, as mentioned earlier, were the torch bearers of the then existed Saiva Siddhanta doctrine principles way of life from Kanyakakumari to Kashmir (Himalayas). A philaosophy a doctrine principles of way of life has to be popularised and propagated. Language serves as an effective and efficient medium for the systematic propagation and popularisation of human thought in different ways. The poetical style of these saints the simple easily adoptable and rational style was highly responsible for achieing adequate efficiency in communication especially among the masses. It is noteworthy to metion here the language style of St.Appar in his Tevaram. St.Appar not only simplifies and rationalises his style, but also touches the heart of the mases and commom men and women, by the use of the then existed spoken forms of the Tamil languages, one can come across a number of lexical as well as grammatical features in his language structure drwn from the spoken Tamil (உலக வழக்கு) (singara velan, 1972)

அன்பு, அறிவு, அருள், அறம் போன்ற கொள்கைகள் விளக்கங்கள் தமிழ் இலக்கியங்களின்வழி தொன்றுதொட்டே எடுத்துச் சொல்லப்பட்டு சங்க இலக்கியமும் திருக்குறளும் வெளிப்படையாக இதனை எடுத்துக்காட்டுகின்றன. அதுவும் குறள்மொழி வழி நாம் பெறும் தெளிவு, எளிமை, திறன் ஒப்பற்றது. என்றாலும் பின்னர் வந்த, சமயச் சான்றோர், அருளாளர் மொழிப்பயன்பாட்டை (Language use) இன்னும் எளிமைப்படுத்திப் பரவலாக்கம் செய்ய வழி அமைத்துள்ளதைக் காண்கிறோம். இதற்குக் காரணம்

அவர்கள் எடுத்துச் சொல்லும் பொருண்மையே (subject matter) எனின் அது மிகையாகாது. இன்று மொழியையும் சமுதாயம் மற்றும் பண்பாட்டையும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட்டுவரும் அறிவார்ந்த ஆய்வுகள் இதனையே சுட்டிக்காட்டுகின்றன. இச்சான்றோர்களுக்குப் பொதுமை (comionalty) என்பது குறிக்கோள்களுள் ஒன்றெனினும், எடுத்துக் கொண்ட பொருண்மையின் சிறப்புத்தன்மையும் (distingtive feautres) வேறுபாட்டியல்புமே அவர்தம் கருத்து வெளிப்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்திருந்தன என்பதைத் துணிந்து கூறமுடியும்.

தமிழ் மொழி வேத காலத்திலும் அதற்கு முந்திய மற்றம் பிந்திய காலங்களிலும் தொடர்ந்து செவ்வியல் வழக்காகப் பயன்படுத்தப்பட்டே வந்துள்ளது. காலந்தோறும் பல்வேறு வகையான மாற்றங்கள் தோன்றியிருந்தாலும், தமிழ்மொழியின் பயன்பாட்டு வளம் அவற்றிற்கெல்லாம் ஈடுகொடுக்கும் வகையில் அமைந்து வந்துள்ளதைச் சைவச் சான்றோர்களின் மொழிப் பயன்பாட்டின் வழி நன்கு அறிந்துகொள்ளமுடிகிறது.

தொல்காப்பிய மொழியின் வாயிலாகத் தொன்மையும் சங்க இலக்கிய மொழிவழி அக - புற கோட்பாடுகளும் விளக்கங்களும் குறள்வழி அறநெறியும் எனக்காலந்தோறும் 'மொழியும் நெறியும் இணைந்தே' வந்துள்ளதைக் காண்கிறோம். பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் இதனையே காண்கிறோம். 14 சூத்திரங்களில் 52 வரிகளில் பாநடையில் (கவிதை மொழியில்) பத்துக்கு மேற்பட்ட அரிய தத்துவங்கள் செறிவாகச் சொல்லப்பட்டிருப்பது கண்கூடு. மெய்கண்டார் கண்டுள்ள மெய்யோடு தமிழ் என்கிற மெய் (உண்மை)யும் அடங்கும். எளிமைக்கு எளிமை இனிமைக்கு இனிமை ஆழத்திற்கு ஆழம் எனத் தமிழ்மொழி கருவாயும் உருவாயும் பயன்படுத்தப் பட்டுள்ளது இத்தகைய மொழிப் பயன்பாட்டால் தமிழுக்குப் பெருமை கூடுகிறது. அதன் கருத்து வெளிப்பாட்டுத்திறன் (Communicative value and natioanality) புலனாகிறது. சைவத் தத்துவங்களின் பொருண்மைத் தன்மையால் (servantic value and nationality) மொழிப் பயன்பாடும் மொழியமைப்பும் புத்தாக்கம் (அ) புதுமையாக்கம் பெறுகிறது என்பதும் புலனாகிறது. அதாவது தமிழால் சைவமும் சைவத்தால் தமிழும் ஓங்கி நிற்பதைத் தெளிவாக இத்தகைய அமைப்பியல் - சமுதாய மொழியியல் - பயன்பாட்டியல் போன்றவற்றால் ஆய்ந்துணர முடிகிறது.

சமுதாயம் அதன் இயக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கட்டுக்கோப்பிற்குள் செயற்படுகிறது. அதேபோன்று மொழியும் ஒரு முறையான உறுதியான வலுவான அமைப்பினைக் கொண்டு வரையறை செய்யப்பட்ட ஒழுங்கமைவிற்குள் இயங்குகிறது. மொழிப்பயன் பாட்டிலும் விதிகள் உள்ளன. சமுதாய இயக்கத்திற்கும் விதிகள் உள்ளன, எனவே, மொழி - சமுதாயம் பின்பற்றும் போற்றும் பிறவற்றிலும் இந்தப் பிரதிபலிப்பு இருப்பதில் வியப்பேதுமிலலை. என்றாலும் நல்லிலக் கணத்திற்குச் சொல்லப்படும் வரையறை போல் தன்னிறைவு (adequary) ஒழுங்கமைவு (formalistion) மற்றும் வெளிப்படை (விளக்கம் போன்றவை) (explicitness) என்ற மூன்று முறைசார் பண்புநலன்களைக் கொண்டு தமிழ்ச் சமயமான - சைவம் தொடர்ந்து விளங்கி வருவது இச்சமுதாயத்திற்கும் அது பயன்படுத்தும் மொழிக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

**List of References:**


Arulsamy, S. (1987). Saivism A perspective of Grace sterling publishers New Delhi

Chandraleka, V. (1995) The concept of Vannanpu in Tamil Saivism (with spe cial reference to the periapuranam), uu: uppsala

Devasenapathi, V.A. (1994). 'Saivism from Tamil sources saiva siddhanta' in saivism (ed.) K. Thimna Reddy Telugu University: Hyderabad.

கண்ணப்பனார், கா.ம. (1987). தேவார அருள்முறைத் திரட்டு (மூலமும் உரையும்), பராசக்தி பதிப்பகம் சென்னை

கருணாகரன் கி. (1994) குறள் மொழியும் நெறியும் மணியம் பதிப்பகம்: குறிஞ்சிப்பாடி

Maraimalai Adigal (1996) The saiva siddhanta as a philosophy of practical knowledge kazhagam publishers: chennai

Murugesa Mudaiar, N. (1979) Siva Gnana Potham (translation), Dharmapura Adhinam: Dharmapuram

Murugesa Mudaliar, N. (1968) Releiance of Saiva siddhanta philosophy annamalai university Annamalainagar


Pandit, M.L. (1987) Saivism- A religion philosophical History, the theological research & communication Institure: New Delhi

Shiddananta Bharathi (1965). சமய விளக்கம் சுத்தானந்த நூலகம் சென்னை

Subramania Pillai, G. (1948) Introduction and History of Saiva Siddhanta, Annamali University: Annamalinagar

Thimma Reddy, P. (1994 Saivism origin (ed.) History and thought, Telugu University Hyderabad

# LAW OFFICE



## யசோ சின்னத்துரை

பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

- வீடு கொள்முதல், விற்பனை - உறுதி எழுதுதல்
- வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை, பதிவு
- சிவில் வழக்குகள், முக்கியமாக சமரச வழியில் பிணக்குகளைத் தீர்த்தல்
- குடிவரவு அகதி விசாரணை
- குடும்ப விவகார சட்ட உதவி, பிரதிநிதித்துவம்
- உயில் தத்துவப் பத்திரங்கள் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்
- சத்தியப் பத்திரம் தயாரித்து அத்தாட்சிப் படுத்துதல்

மற்றும் பொதுத் தேவைகளுக்கான சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்

## Yaso Sinnadurai

Barrister & Solicitor, Notary Public

- Real Estate - Home Purchase, Sales and Mortgage
- Commercial Law, Commercial and Residential Lease
- Civil Litigation, with focus on Alternate Dispute Resolution (ADR)
- Immigration and Refugee Law
- Family Law (uncontested)
- Last Will
- Power of Attorney and Statutory Declarations

* Consultations by appointments only

**அலுவலகத்தில் நேரடியாகச் சந்திப்பதற்குத் தயவுசெய்து முன்கூட்டியே நேரம் ஒழுங்கு செய்து கொள்ளவும்.**

**2555 Eglinton Ave. East**
**Suite 204, (at Midland)**
**Scarborough, ON MIK 5J1**

**Tel: (416) 265-3456**
**Fax: (416) 265-2770**

வீடு உறுதி எழுதுவதற்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**Mississauga Branch Office**
**3038 Hurontario Street, Suite 203**
**(Just North of Dundas Street)**

**Tel: (905) 306-1100**

மிசிசாகா, ஒக்வில், பிறாம்ரன், எற்றபிக்கோ ஆகிய நகரங்களில் இருந்து எமது சேவையை நாடுபவர்கள் எமது மிசிசாகா அலுவலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்.

# HINDUISM

S. PONNUCHCHAMY (MELBIOURNE)

Hinduism is not only a religion with distinctive dogma and rituals, but is a way of life dominated and informed by the fundamental values found in the Vedas, later supplemented by other values, which came to be incorporated into Hinduism.

Hinduism is a universal religion. Its proper name is Sanatana Dharma and is followed in several parts of the world. The word "Hindu" was coined by the Turks and Afghan invaders to indicate the people of India. The word "Hinduism" was applied to the religion of the Hindus in the British period.

Hinduism is the oldest religion. The cyclonic Hindu monk Swami Vivekananda, in his paper on Hinduism read at the Parliament of Religions on 19th September 1893 said: "Three religions now stand in the world which have come down to us from time prehistoric - Hinduism, ZOROASTXR IANISM and JUDAISM. They have all recieved tremendous shocks and all of them prove by their survival their internal strength. But while Judaism failed to absorb Chistianity and was driven out of its place by its all - conquering daughter, and a handful of Parsis is all that remains to tell the tale of their grand religion, sect after sect arose in India and seemed to shake the religion of the vedas to its very foundations, but like the waters of the sea shore in a tremendous earthquake, it receded only for a while, only to return in an all-absorbing flood, a thousand times more vigorous, and when the tumult of the rush was over, these sects were all sucked in, absorbed and assimilated into the immense body of the mother faith."

The Hindu eschews no faith and no path. He does not condemn any form of spiritual search of attainment. The true Hindu is not alien to the true Christian or the true Muslim and, in any case sees no hostility between his creed and the fundamental tenets of those religion. He recognizes all forms of worship as valid so long as quality of devotion remains pure.

Listen again to what Swami says on this: "From the high spiritual flights of the Vedanta philosophy of which the latest discoveries of science seems like echoes, to the low ideas of idolatry with its multifarious mythology, the agnosticism of the Buddhists and the atheism of the Jeins, each and all have a place in the Hindus religion.

Sir Monier, one time professor of Sanskrit in Oxford describes Hinduism in the following words: "A characteristic of Hinduism is its recepturity and all comprehensiveness. It claims to be the arc religion of humanity of human nature of the entire world. It cares not to oppose the progress of any other systems. For, it:has no difficulty in including all other religions within its all - embracing arms and ever widening field."

And in real truth, Hinduism has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversity of human character and human tendencies. It has its highly spiritual and abstract side suited to the metaphysical philosopher, its practical and concrete side suited to the man of poetic feelings and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seoularism.

In the bhagward gita the lord says " Whoever whoever follows any faith and worships me under whatever Denominations and in whatever form with stead fastness of purpose and of faith, His stead and his faith shall I regognise and rein force"

Dr Arnold Tuynbee, author of 10 volumes of 'A study of history' says: "Although, of course, I cannot get away from my Judaeo-christian back ground, tempearmentally I am a Hindu. As a Hindu, I don't have any difficulty in believing many gods simutaneously or thinking that a syncretist faith may be the answer for an age. To Hindus, it is of no consequence which road , SHIVA or VISNU, travels - All roads lead to heaven".

The common and underlying features of all varieties of Hinduism are:

1. God, the undefinable and mysterious power pervades the entire universe.
2. The laws of cause and effect are irrevocable.
3. The law of unity of all life (oneness of life).
4. The doctrine of karma and re-birth.

Swami Vivekananda predicted that before many years elapse, a vast majority of the English people will be Vedantins. The German Scholar and professorSchopenhauer foretold that Hindu influence would be as momentous in Europe when it became well known as the revival of Greek and Latin culture after the Dark Ages. We are privileged to witness these prophesies coming true in all parts of the world particularly in Europe and America.

There is a fallacy that Rome and Greece were the founders of European civilization. This errorneous notion ought to be erased from the text books of world schools and the minds of nations. In reality, it was India and her immortal religion, Hinduism that fostered the first steps in science which later illuminated the minds of swamps in other lands. Indias' civilization was the core of western civilizations, Greece is indebted to India which gave her knowledge in philosophy, sciences, medicine and other aspects of her culture. Geometry, multiplication tables, decimal systems went to Greece from India. The science of Algebra first originated in India and the Arabs later introduced it to Europe. In astronomy, we again turn to the Hindu systems of division of the lunar Zodiac, lunar mansions and constellations. It was the Hindu astronomer Arya Bhatta 476 AD who first discovered the rotation of the earth on its own axis. He also discovered the true causes of solar and lunar eclipses and the law of gravitation. India contributed greatly to Western music. Today western musicians are showing more interest and are sincerely attracted to the depth, richness and charm of Indian classical music as proliferated with great success by Ravi Shankar, the famous sitarist and singers like M.S. Subalakshmi. Hindu medicine inspired the father of Western Medicine, Hippocra tes who borrowed his mareria medica debt to the Hindus. Roman law and Jurisprudence was influenced by Hindu law. As regards Hindu philosophy, no greater compliment can be offered than the words of Schopenhauer towards our Hindu scriptures: "There is no study more beneficial and elevating to man kind than the study of the upanishads". Professor Brian Josephson, Nobel Laureate in Physics during his recent visit to India, when asked how the universe was created he replied "I cannot add more to what is said in Indian Philosophy".

Today we find wonderful discoveries of modern science coming upon us like bolts from the blue opening our eyes to marvels we never dreamt of. Swami Vivekananda said: "Many of these are only re- discoveries of what has been found by Hindu seekers of Truth ages ago". Ron Lounig, who was deeply interested in spirituality and was a well known writer in super normal phenomenon said: "The ancient Hindus knew all about Einsteins theory of relativity and the nature of the atom bomb but wisely decided not to split it."

How many of us know that the first Aeroplane was invented by a Hindu from Bombay in India.

Finally let me quote Max-Muller, the great savant of Germany. "If one would ask me under what sky the human mind has more fully developed its precious gifts, has scrutinised most profoundly the greatest problems of life and has al - least - for some , provided solutions which deserve to be admired even by those who have studied Plato and Kant, I would indicate Hindu India. And if one would ask me which literature would give us (Europeans) back the necessary equibrium in order to make our inner life more perfect, more comprehensive, more universal in short, more human, a life not only for this life but for a transformed and eternal life once again I would indicate "Hindu India"

India is a PUNYABHUMI. We have the standing proclamations of Bhagavan Sri Krishna in the Gita that age after age. He will incarnate amidst mankind to uphold the suprmacy Dharma. It is in from India. Even the science of Chemistry has its fulfilent of this Divine proclamation that India has all along been blessed with an unbroken succerrion of AVATARAPURUSHAS. These AVATARAPURU

SHAS have enabled India to preserve the continuity of her ageless, priceless treasure - our SANATHANADHARMA - for the last 5000 years or more, While other ancient cirlizations like those of Greece, Rome and Babylon have withered away.

Hinduism, The oldest Religion is impersonal is not based on the teaching of any individual. It is based on vedas which is no book but a body of trancedental knowledge gathered and tested by generations of ancient seers through personal and direct experience. According to the Hindus there is one supreme God from whom all that exists has come, in whom it has its being and into whom it finally dissolves. It is like waves on the ocean.

Let us be proud of our religion.

# THE MEANING OF NAVARATRI PUJA

Saiva Nanmani Thiru N. Sellapah of Sri Lanka explains in this article the philosophy underlying the worship of Sakti in different forms that is celebrated among the Saivites. For nine days, a form of worship widely prevatent to this days. In Saivism, Siva and Sakti are inseparable and Thirumular in his celebrated Thirumanthir am provides all the necessary philosophical explanations underlying the worship of Sakti in different manifestational forms. The chief female archetypes Uma, Laksmi and Saraswathy are decmed the real POWERS of the male archetype Siva, Vishnu and Brahma. The three forls (or five god) activities of Parasiva cannot be realilshed in the world without recourse to these POWERS. The dynamics for action is provided by Uma, the search for truth and honesty Laksmi and the linguistic capabilities to articulate them by Saraswathy.

Sakti worship is very ancient among Saivites one can say it is prehistoric. However in recent developments only Laksmi and Saraswathy are extolled and the worshiip of Uma and along with It SIVA himself has declined. It may be possible that people are at the moment disinterested in metaphysical pursuits but more interested in economic pursuits. Education has come to mean technical education and doing well academically is deemed more important than spiritual development through metaphysical pursuits.


The external forms of such pujas are a wase if they are not internalized. Saiva Siddhanta extols such internal pujas and affirms that only such pujas provide that illumination that is called "tatva tarisanam"--the SEEING of Tatvas.

Pujas are meant for self purification-the absolving of malas particularly the anavam-that which particularises the human mind. In order to observe Navaratri property we must educate ourselves about the Sivakalais-the Navaratiri and so forth. The mind must not be allowed to wander aimlessly and thereby dissipate the psychic energy. With immense mental control one must pursue metaphysical inquiries in order to uplift ourselves.


மேன்மை கொள் "சைவநீதி" விளங்குக உலகமெல்லாம்
அன்னை மொழியை நாளும் பொன்னெனப் போற்றி வாழ்க !

# VJS AUTO SALES

- தரமான பாவித்த கார்கள்
- நியாயமான விலை
- உத்தரவாதம் (Warranty)
- கடன் ஒழுங்குகள்



- Trade வசதிகள்



**Call: 416-292-9291**

**4181 Sheppard Ave. East (at Midland)**
**Scarborough, On**

# PN Auto Sales

**BUYING - SELLING AND TRADING USED CARS**

**CALL:**

*Nada*

**416-953-9462**

## 4181 SHEPPARD AVE. EAST

**(Midland / Sheppard)**

# கலாபீடம்

தொகுப்பு - சைவநீதி ஆசிரியர்

**ஐந்தெழுத்து மந்திரமே ஆதிசிவ மந்திரம்**
**சிந்தனைக்குச் சிறப்பளிக்கும் சிவாயநம மந்திரம்**
**நந்தமக்கு அருள்தூல நமசிவாய மந்திரம்**
**இந்துமன்றக் கலாபீடம் இங்குதரக் காண்மினே. - நம்பி**

வினா 1: சைவ சமய நெறியில் நான்கு நிலைகள் உண்டு. அவை யாவை

விடை: 1. திருக்கோயிலைத் தூய்மை செய்தல், வலம் வருதல், வணங்குதல், வழிபாட்டிற்கு வேண்டியவற்றை வழங்குதல் முதலியன. இவை சரியை நெறியாகும்.
2. மலர்கொண்டு வழிபடுதல், கூடிப்பாடுதல், இறைவன் திருநாமங்களை ஓதுதல் முதலியன கிரியை வழிபாடாகும்
3. இறைவனுடைய திருவுருவத்தை நெஞ்சில் இருத்தல, மனத்தை அடக்கித் தியானித்தல் முதலியன யோகம் எனப்படும்
4. எப்பொழுதும் கடவுள் தொடர்பு நீங்கா திருத்தல் ஞானம் எனப்படும்.

வினா 2: "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமோழி. ஆலயதரிசனம் செய்யும் முறையாது?

விடை: திருக்கோயிலுக்கு நாள்தோறும் காலை - மாலை சென்று வழிபடுதல் மிகநன்று. முடியாதவர்கள் ஒரு நேரமாவது அல்லது விசேட நாட்களிலாவது சென்று இறைவனை வழிபடல் வேண்டும். அப்படிச் செய்தால் நமது துன்பங்கள் நீங்கி இன்பம் பெறலாம். கோயிலுக்குச் செல்லும் போது குளித்து தோய்த்துலர்ந்த ஆடைதரித்து திருநீறணிந்து இளநீர், பால், பழம், வெற்றிலை, பாக்கு, பூக்கள், கற்பூரம் முதலிய வழிபாட்டிற்குரிய பொருட்களுடன் செல்லுதல் நன்று. கோயில் அருகே சென்றவுடன் முதலில் நம் கண்ணுக்குத் தெரிவது கோபுரமாகும். ஆகவே, அதனை முதலில் வணங்கவேண்டும். கோவிலுக்கு உள்ளே சென்றதும் பலிபீடத்தைக் காணலாம். அப்பலிபீடத்திற்கு முன்நின்று அமைதியுடன் ஆண்களாயின் அட்டாங்க நமஸ்க்காரமும் பெண்களாயின் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். இவ்வாறு வணங்கியபின் இருகைகளையும் கூப்பி திருஐந்தெழுத்தையும் சொல்லி உள்ளே சென்று வழிபாட்டிற்கான பொருள்களை கடவுளுக்கு பூசகர் மூலம் அளித்து இறைவனைத் தொழவேண்டும். இதன்பின் கோயிலை வலம் வருதல் வேண்டும். வலம் குறைந்தது மூன்று முறை அல்லது ஐந்து முறையாவது வரவேண்டும். இதன் பின் இறைவன் முன்னிலையில் நின்று திருப்பாடல்களைப்பாடி மனங்கனிந்துருகிநின்று வழிபடுதல் சிறப்பும் இறையருள் பெறும் வழியுமாகும்.

வினா 3: அட்டாங்க நமஸ்காரமாவது யாது? பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

விடை: 1. அட்டாங்க நமஸ்காரமாவது ஆண்கள் செய்யவேண்டிய வணக்கம். தலை, கைகள் இரண்டு, காதுகள் இரண்டு, தோள்கள் இரண்டு, மோவாய், நெஞ்சு ஆகிய எட்டு உறுப்புக்கள் நிலத்தில் தோய வழிபடும் வணக்கம்.
2. பஞ்சாங்க நமஸ்காரம் பெண்களுக்குரியது. தலை, முழங்கால் இரண்டு, கைகள் இரண்டு, ஆகிய ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் தோய வணங்குதலாகும்.

வினா 4: சித்தாந்தம் என்பதன் பொருள் யாது?

விடை: சித்தாந்தம் என்பதன் பொருள் முடிந்த முடிபாகும். எனவே சைவ சித்தாந்தம் சைவ சமயத்தின் முடிந்த முடிபாகும்.

வினா 5: சித்தாந்தத்திற்குக் கொள்ளப்படும் பொருள் மூன்று யாது?

விடை அவை பதி, பசு, பாசம். பதி - கடவுள், பசு - உயிர், பாசம் - உயிரைப் பிணித்துள்ள கட்டு. இதனை மலம் அல்லது அழுக்கு என்றும் கூறுவர்.

**சமயத்திற் பேசப்படும் அடிப்படை அம்சம்**

சமயம் என்பது மனிதனின் நம்பிக்கைகள், சடங்குகள்,

ஐதீகத் தத்துவம் போன்ற பல அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது. இங்கு கடவுள், உலகம், உயிர் போன்ற மூன்று விடயங்கள் பேசப்படுவது வழக்கம். மனிதன், அவனது உடலியக்கத்திற்குக் காரணமான உயிர் அல்லது ஆத்மா, மனிதன் வாழும் பிரபஞ்சம் இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டு நிற்பதுமாகிய பரம் பொருளாகிய இறைவன் ஆய முப்பொருள்களுக்குமிடையேயுள்ள சம்பந்தமே சமயத்தில் பேசப்படுகின்ற அடிப்படை விடயமாகும். கடவுள் அல்லது இறைவன் பற்றிப் பேசாத சமணம், பௌத்தம், உலகாயதம் போன்றனவும் மதங்களாகவே கொள்ளப்படுகின்றன. சமயம் மனிதன் ஒருநெறியுடன் வாழ்வதற்குரிய வழிபாடு, சிந்தனைகள், ஒழுக்க விதிகளைப் போதிக்கின்றது. இவற்றைப் பின்பற்றுவதன் மூலம் ஒருவன் வாழ்வில் விடுதலை பெறலாம். மக்கள் தம்பக்குவ நிலைக்கேற்பக் கிரியைகளினூடாக ஞானத்தைப் பெற்று மோட்சம் அடையலாம். இதற்குப் பக்தியே பிரதான இடமாக அமைகிறது.

கண்ணனைக் குழந்தையாகக் கண்டு பாடல்களைப் பாடியவர் பெரியாழ்வார்

இறைவனைக் காதலனாகக் கண்டவர் ஆழ்வார்

இறைவனை எஜமானனாகப் போற்றியவர் திருநாவுக் கரசர்

பரமபதத் தந்தையாக இறைவனை வழிபட்டவர் ஞானசம்பந்தர்.

தோழனாக - நட்பாக இறைவனை வழிபட்டவர் சுந்தரர்.

இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடியதாக மணிவாசகரின் திருவாசகம் பேசப்படுகிறது.

அன்புநெறி:

மனிதரை விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு, மனிதநிலையிலிருந்து தெய்வீக நிலைக்கும் உயர்த்த வல்லது அன்பு நெறியாகும்.

யோகம்:

வாக்கையும் மனத்தையும் ஒன்றுபடுத்துவது. பேசியதையே மனதில் கொள்ளவேண்டும். மனதில் கொண்டிருப்பதையே பேசவேண்டும். உள் ஒன்றுவைத்து புறம் ஒன்று பேசுபவன் அருளுக்கு புறம்பாகிறான்.

அஞ்ஞான இருள் என்று சொல்லப்படுவதும் பிறவிப் பெருங்கடல் என்று சொல்லப்படுவதும் ஒன்றே. ஏனென்றால் பிறப்பும் இறப்பும் அஞ்ஞானத்தின் விளைவாகும். பரஞானம் அல்லது சிவஞானம் உதிக்குமிடத்து அஞ்ஞான இருள்தானாக அகலும்.

அசையாத கடல் உருண்டோடுகிற அலையாகவும் காட்சி கொடுக்கிறது. அத்தகைய அலையையும் கடல் எனக் காண்பது முறை. உலகமாக இயங்குபவன் ஈசன். ஆகவே உலகையே ஈசனாகக் காண்பது ஆத்ம சாதனம். வேதங்களில் கடவுளைக் குறிப்பிடும் பொழுது அவன் என்ற சொல் பயன்படுத்தப்படுவதில்லை. அது என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. ஏனென்றால், அவன் என்ற சொல் கடவுளை ஒருமனிதன் எனக் காட்டிவிடும். அது என்றே சொல்லப்படும். அது - அத்வைதம் என்று அழைக்கப்படுகிறது.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொழுதவர்க்கு
ஓர் வார்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.
- தாயுமானவர்

சமயகுரவர் நால்வர்: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்
சுந்தரர், மாணிக்கவாசகர்

சந்தானகுரவர்: மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர்
மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியர்

முப்பெரும் சக்தி:

வீரத்தையும் வெற்றியையும் அருளும் போது துர்க்கை ஆகிறாள்.

செல்வத்தையும் செழிப்பையும் அருளும்போது இலக்குமி ஆகிறாள்

ஞானத்தையும் பக்தியையும் அருளும்போது கலைமகள் ஆகிறாள்.

வீரம், செல்வம், கல்வி மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள். இந்த மூன்றில் ஒன்று இல்லாவிட்டாலும் வாழ்வு முதன்மை பெறாது. அன்னை வழிபாடே ஒருவரை விரைவாக முத்திநிலைக்கு இட்டுச் செல்லும்.

முக்கரண வழிபாடு: நினைத்தல் (மனம்)
வாழ்த்தல் (வாக்கு)
வணங்கல் (காயம்)

அடியார்கள்:

1. இறைவனின் திருவடிகளை இடையறாது சிந்திப்பவர்களே அடியார்கள்
2. அடியார்கள் அரனே ஆவர்
3. அடியார் வழிபாடு முத்தி அடைவதற்குரிய சாதனங்களுள் ஒன்றாகும்.
4. அடியார் வேடத்தை வழிபடுதல், அடியவருக்கு அமுதளித்தல், அடியவருக்கு வேண்டும் பொருள் கொடுத்தல், அடியார் வழிபாட்டிற்கு இடையூறு செய்பவர் களைத் தடுத்தல் முதலியனவும் இதன்பாற்படும்.
5. அடியார் இதயங் கலங்காமல் காப்பது அரச கடமைகளில் ஒன்று.

மகா வாக்கியம்:- முடிவான உண்மையை ஒரு வாக்கியத்தில் விளக்குங்கால் அந்த வாக்கியத்தை மகாவாக்கியம் என்பர்.


ஓம் ஐயப்பா

சைவமும் தமிழும் எங்கள்
கண்ணெனக் கருதிக் காப்போம்

# சங்கர் அன் கம்பனி

இறக்குமதியாளர்கள் – மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

**Compact Disc**
ஓடியோ, வீடியோப்
பிரதிகள்



பக்திப் பாடல்கள்
திரைப்படப் பாடல்கள்
பழைய பாடல்கள்
புதிய பாடல்கள்
தேவார – திருவாசக
– தோத்திரப் பாடல்கள்

சமயபாடப் புத்தகங்கள்
சமய நூல்கள்
பாலர் பாடப் புத்தகங்கள்
கலை – கலாச்சாரப் பொருட்கள்
ஆடம்பர – அலங்காரப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
சுவாமிப் படங்கள் – சிலைகள்
அனைத்து வைபவங்களுக்குந்
தேவையான பொருள்கள்
பூஜைத் திரவியங்கள்
சமயாசாரப் பொருள்கள்

கரம் போட்
சுவர்மணிக்கூடுகள்
சமையல் பாத்திரங்கள்
சில்வர் – பித்தளைப்பொருள்கள்
குத்து விளக்குகள் – பூச்சாடிகள்

அத்தியாவசிய உணவுப் பொருள்கள்
மரக்கறிவகைகள் – பதனிடப் பெற்ற
உணவுவகைகள் **(FROZEN FOOD)**
முருங்கையிலை, வல்லாரை,
வெங்காயப்பூ மற்றும் அனைத்துக்
காய்கறிகளும் பெற்றுக் கொள்ளலாம்

மாவிலை, அறுகம்புல்
வேப்பிலை, துளசி
வில்வமிலை, வாழை இலை
முடித்தேங்காய், திருநீறு
சந்தனம், குங்குமம்
கப்பல் வாழைப்பழம் வாரா வாரம்
கிடைக்கும்.

# SANKAR AND CO.

**2425 EGLINTON AVE. EAST, UNIT6**
**SCARBOROUGH, ONTARIO. M1K 5G8**
**TEL: 759-5100, 759 - 4916, FAX: 759-4916**

# வாசகர் அகழ்வும் ஆய்வும்

தவத்திரு. சிவநந்தி அடிகளார்
இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்
15-08-99

"சிவநெறிச் செல்வர்" சிவத்திரு பண்டிதர் வி.வ. நம்பி அவர்கட்கு
பேரன்புடையீர்!

போற்றி ஓம் நமசிவாய
கனடா சைவ மாநாட்டின் வெற்றிக்கு உங்களுக்கு எமது நன்றி!

தில்லை நடராஜப் பெருமான் திருவருளாலும் உங்களது அயராத உழைப்பினாலும் கனடாவில் நடந்தேறிய ஏழாவது உலக சைவ மாநாடு வெற்றி பெற்றதை நினைத்து உங்களுடைய அரிய பங்களிப்பைக் கருத்தில் கொண்டு எமது உளமார்ந்த நன்றிகளையும் அருளாசி நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

தொடர்ந்து உங்களது சைவத் தமிழ்ப் பணி உலக சைவப் பேரவையின் வளர்ச்சிக்கும் செயல்திட்டங்களுக்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இறை அருளை நினைந்து பிரார்த்திக்கின்றோம். உங்களுக்கும் குடும்பத்தினர்க்கும் எமது அருளாசி நல்வாழ்த்துக்கள் என்றும் உரியது.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"
அன்பே சிவம்

சிவநந்தி அடிகளார்

---

உவாசிங்டன்
10-08-99

திருவாளர் வீ. வ. நம்பி அவர்களின் நலம் பாராட்டல்
அன்புடையீர்

தாங்கள் ஏழாவது உலக சைவ மாநாட்டில் ஆற்றிய தொகை வகைத் தொண்டினைக் கண்டு களித்தேன். ஆசிரிய குலத்தைச் சேர்ந்தவனாக நானிருப்பதனால் உருத்தும் உரிமையும் பாராட்டுகிறேன்.

நீங்கள் எதனையும் துருவி ஆராய்ந்து கண்டெடுத்து தொகைப்படுத்தி வகைப்படுத்தி முறைப்படுத்தி பெயர்ப்படுத்தி செயற்படுத்திய பெருமை சொல்லுதற்கரியது. ஆகவே அவற்றை மொழிப்படுத்துகின்றேன்.

வெண்பா

நந்திப்பேர் நல்லதம்பி நலமிகுசீர் ஆசான்
சந்தித்த சைவமா நாடுவக்க – முந்தியதாய்
சிந்தித்து ஏழாக வகைசெய்ய வந்தவனை
முந்திய மூத்தோனே கார்.

அகவல்

கனடா மூதூர் கண்ட காலை
கனகம் ஆய்வது கற்றவர் சேர
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருவக்கும்
துன்னிய கல்வி தோற்றியும் தேற்றியும்
சைவம் எனப்பெயர் சைவ மாய
சபையும் தனிநிகர் தமிழும் ஒன்றாய்
இணைந்து ஒன்றாய் ஒருசபை கூட்டி
முன்னே நின்றதால் முனிவுகள் பற்பல
பின்னி வந்து பேர்கெட வந்தும்
மலையென மதியா மண்ணென மதித்து
தந்தை தாயர் முந்திய தரமாய்
தாரமிழந்து தாழ்ந்து இராமல்
ஏழாம் உலக சைவ மாநாடு
கூழை இலாமல் கொடிபோல் படர
தலைவர் தம்பையா ஸ்ரீபதி தகுதிகாண்
புடமிடு பொன்னென பொருந்தி வந்ததும்
காரியம் காணும் காரிய தரிசியாய்
நந்தி ஈஸ்வரர் நண்ணி வந்ததும்
பொருந்தும் பொருந்தும் புண்ணிய மேலீர்
வந்தவர் வருபவர் பிந்தி வந்தவர்
பெரியோர், சிறியோர் கூந்தல் அழகிய
தோகை தோள்பல தொங்கிய கோதயர்
பாவலர், நாவலர், பார்ப்பனர் பந்நலம்
ஒன்றாய்க் கூடி வாழ்ந்த
நலம்பல பெற்ற நல்லோர் வாழியவே

ஆசிரியராய் இருந்து ஆற்றிய நற்பயனை
தேசிகனாய் வந்துசெய் தொண்டுகள் ஒன்று சேர்
பாலதுநெய் பரவிநிற்ப கோலது கொண்டு
காலமது கண்டு கடைந்து நெய்யாக்கிநீரே

அன்பும் நண்பும் மறவா
இரா. மயில்வாகனம்
சிவநெறிச் செல்வர், சைவநன்மணி, ஞானவாரிதி

கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், தமிழ்நாடு
15-08-99

சிவத்திரு நல்லதம்பி
ஆசிரியர் சைவ நீதி

சாந்தலிங்கப்பெருமான் இன்னருள் பெருகுக. நலம்

அன்பிற்சிறந்த பேராசிரியர் சிவத்திரு நல்லதம்பி அவர்களுக்கு எழுதிக் கொள்வது,

ஏழாவது உலக சைவ மாநாட்டினை மிகச்சிறந்த முறையில் நடத்தினீர்கள். இதற்குச் சைவ உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. மாநாட்டில் பங்குகொள்ள வந்தபோது ஆர்வத்துடன் வரவேற்று மகிழ்ந்தீர்கள். சைவ நெறிமீது ஈழத்து மக்கள் காட்டும் ஈடுபாடு மாநாட்டில் வெளிப்பட்டது. தொடர்ந்து திருமுறை நெறிமுறைகளை கனடா நாட்டில் ஏற்படுத்தும் பணியினை மேற்கொள்ளுங்கள். மாநாட்டில் எடுத்த படங்கள், ஒளிப்பதிவு நாடாக்கள் ஆகியவற்றை இங்கு அனுப்பி வைத்தால் பலருக்கும் வெளிப்படுத்த வாய்ப்பாக அமையும். தளர்ந்த வயதிலும் தாங்கள் செய்கின்ற சமய இலக்கியப் பணிகளுக்கு தமிழ் கூறும் நல்லுலகம் கடமைப்பட்டது. மாநாட்டில் சிறப்பாய் பணியாற்றிய அன்பர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

வேண்டுந்தங்களன்பு
அன்புள்ள
சாந்தலிங்க இராமசாமியடிகள்

---

Scarborough
Ontario, M1G 3S5
October 10, 1999

பண்டிதர் வி. நல்லதம்பி மேற்பார்த்து

தலைவர், அமைப்புக்குழு
7வது உலக சைவ மாநாடு 1999, கனடா.

அன்புடையீர்,

ஏழாவது உலக சைவமாநாடு சென்ற யூலாய்த் திங்கள் 30, 31 ஆகஸ்ட் 1 ஆகிய தினங்களில் சிவனருளால் ஒரு தனிப் பெரு விழாவாகச் சிறப்புற நடந்தேறியது சைவத்தமிழ் உலகம் அறிந்ததே.

இம்மாநாடு கனடாவில் நடத்தப்படவேண்டுமென்ற எண்ணம் வெளிவந்த போது, இப்பாரிய பொறுப்பை ஏற்று, சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியுமா என்ற ஐயப்பாடு கொண்டவர்களில் தமியேனும் ஒருவன். எனவே, இப்புனித கைங்கரியத்திற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த கனடா இந்து மாமன்ற உறுப்பினர்களையும், மற்றும் ஏனைய சைவசமய ஸ்தாபன உறுப்பினர்களையும் வாழ்த்துவதில், வணங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். மேலும் அவர்களுக்குப் பலவகைகளிலும், நிதி உதவி உட்பட உறுதுணையாக நின்று ஒத்துழைத்த அன்பர்களையும் பாராட்டி வணங்குகின்றோம்.

" அன்னமிட்டுத் தண்ணீரும் வாரீர்" என்றான் பண்டைய தமிழன். அதற்கிணங்க, மாநாடு நடைபெற்ற மூன்று நாட்களிலும் வெளிநாட்டு உள்நாட்டுப் பிரதிநிதிகள், பார்வையாளர்கள் அனைவருக்கும் மனமுவந்து மதியபோசனம் (அன்னதானம்) அளித்தான் கனடிய ஈழத்தமிழன் ஒருவன். அவனை என்னவென்றுதான் பாராட்டலாம்?.

கனடா இந்துமாமன்ற பிரதம உறுப்பினர்கள், ஒரேசிந்தனையில், ஊன் உறக்கமின்றி உழைத்ததையும் அறிவோம். " Comparisons are odions" என்ற ஆங்கில வாக்கியம் ஒன்றுண்டு. அதாவது, ஒப்பிடுவது வெறுக்கத்தக்கது / நன்றன்று என்றவாறு.

எது எவ்வாறாயினும், உள்ளதை உள்ளபடியே உண்மையாய்ச் சொல்வதில் தப்பில்லைத்தானே"?. அவ்வகையில், கனடா இந்து மாமன்ற" மும் மூர்த்திகள்" பம்பரம் போல் சுழன்று செயற்பட்ட" .....பதி"," நந்தி....." மற்றும் ஒரு கப்பலின் நங்கூரம் போல், படுக்கையில் இருந்து கொண்டே, மாநாட்டு அலுவல்களை நெறிதவறவிடாமல் / தளரவிடாமல் கவனித்து வந்த" நம்பி" யையும் பாராட்டாமல் வாழ்த்தாமல் இருக்க முடியுமா?

இன்னொன்றையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தான் வேண்டும். எம் கிராமப்புற பாஷையில் குறிப்பிடுவதானால், " நொட்டை" சொன்னவர்களும், " நக்கல்" அடித்தவர்களும் இல்லாமல் இல்லை. இவை எல்லாம் எதிர்பார்க்கவேண்டியவை தான்.

இறுதியில் இம்மாநாட்டை முன்னின்று நடத்திய அன்பர்களின் பெயர்ப்பட்டியலை அவதானித்தபோது," சண்முகம்", " .....பதி"," நந்தி"," புனிதர்"," நம்பி"," லிங்கம்"," கரன்"," வேல்"," விஜய"," ஸ்ரீஜெயா"," மனோ"," பொன்"," கௌரி" (இன்னும் பலர்) ஆகிய தெய்வத்தின் திருநாமங்களே தென்பட்டன.

" சிவனே" இச்சீவன்களில் மறைந்து நின்று செயல்பட்டதால் மாநாடு மிக விமரிசையாக நடந்தேறியதில் வியப்பில்லைத்தானே?.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி ஓம்!!!
நன்றி. வணக்கம்

பணிவன்புடன்
சி. சேனாதிராசா

# Sri Sakthy Jewellery

## ஸ்ரீ சக்தி ஜுவலறி

உங்கள் அன்பானவர்களுக்கு ஆச்சரியமான பரிசாக நவீன தொழில் நுட்ப முறையில் அவர்களது படம் பதித்த 22 கரட் பென்ரனை அன்பளிப்பாகக் கொடுத்து மகிழ அல்லது கைக்கடிகாரங்களில் நீங்கள் விரும்பும் படங்களை பதித்துக்கொள்ள முன்னணியில் திகழும் நகைமாளிகை ஸ்ரீ சக்தி ஜுவலறி

பழைய நகைகளை உருமாற்றிப் புத்தம் புதிய டிசைன்களில் உங்கள் எண்ணம்போல் ஓடருக்குச் செய்து பெற்றுக்கொள்ளலாம். திருத்த வேலைகள் உடனுக்குடன் எமது தொழிற்சாலையிலேயே செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

## சிவா ராமையா பத்தர்

**2525 PHARMACY AVENUE (PHARMACY& FINCH)**

**SCARBOROUGH, ONTARIO**

**TEL.: (416) 499-4070**

**FAX: (416) 499-6945**

# "AN APPRECIATION OF THE SEVENTH WORLD SAIVA CONFERENCE"

S. PONNUCHCHAMY (AUSTRALIA - 14TH SEPT - 1999)

There is nothing that our Pundit Nallathamby touches that he does not adorn. He versatality and achievements are in a way unique. His is a great Tamil scholar and an ardent admirer of Saiva Siddanta philosophy. His services to Tamil literature and Hindu Religion have been characterized by rare courage and decisive energy.

After reading a few articles in the Special Edition of the 'Seventh World Saiva Conference Canada' a wonderful thought came to my mind. How was it that Hindu culture had survived when so many ancient cultures in history had withered away? The greatness of Greece and of Rome, the glories of Egypt and Persia have become museum pieces. But the witality of Hindu culture and civilization had continued through the ages despite historical vicissitudes. The foreign European powers, the Portugese, the Dutch and the English ruled us for 450 years. The crafty christian missionaries under their rule did every thing to destroy our culture and religion. But they miserably failed in their nefarious activities.

Due to the ethnic war in our country, a large number of Tamils had left their traditional homeland and had become refugees in alien countries. The ethnic conflict has been going on for more than 16 years now. Every beginning must have an end. That is the law of nature. The present war will also end and the country will return to normalacy. I wish our people in the foreign countries return to their country of origin and help to preserve our culture and religion. I shall give an example. An extra ordinary phenomenon has occured in the world during recent times, illustrating the vitality and strength of a vital culture. Before world war II, Jews lived in many countries (exactly in the same way the Jaffna Tamils are living today) and for centuries had been subjected to inhuman persecution and mass massacre. During World War II, 6 million of them were burnt alive in Nazi camps. Inspite of this savage persecution and mass massacre they had built their life in common traditions and vivid memories of their achievement of their ancestors glorified in the Old Testament.

Impelled by a collective will to achieve these Jews migrated from 73 countries to Palestine. Inspired by the vivid memory of the 'Promised Land', given to them by Jehova 3 thousand years ago, these men and women - barely a million - worked, suffered, fought and died to build a new Isreal. They converted deserts and swamps into a land of trees and flowers and farms: and by rare heroism developed defensive might.

This provides the most brilliant example in history of the collective will generated by common traditions and common memory of achievements.

The Tamils now living in foreign countries must follow the example of this great Jewish race, unless they like the Jews develop a collective will to suceed, the future is bleak for the Tamil people.

வாழிய சைவநீதி ! VALIA SAIVA NEETHI

# JOHN M. GUOBA

## BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC



**All Legal Matters Specializing in**

- **IMMIGRATION**
  **(Including Refugee Claims, Sponsorships & Appeals)**
- **CRIMINAL LAW**
- **REAL ESTATE**
- **FAMILY LAW**
- **MOTOR TRAFFIC ACT**

## LEGAL AID ACCEPTED

குடிவரவு – குற்றவியல் – குடும்பவியல் – மோட்டார் வாகனங்கள் தொடர்பான வழக்குகள்
மேன்முறையீடுகள் – வீடுகள், வர்த்தக நிலையங்கள் வாங்குதல் – விற்றல்
ஆகியவற்றில் அனுபவம் நிறைந்த சிரேஷ்ட சட்ட வல்லுநர்.

**TEL: (416) 923 - 7002**
**FAX: (416) 923 - 7590**

**1, St. Clair Avenue East, Suite #802**
**Toronto, Ontario M4T 2V7**

**சட்ட உதவியாளர்கள்**

**கனக. மனோகரன் – சட்டத்தரணி (416) 531 – 1650**

**தம்பையா. ஸ்ரீபதி – சட்டத்தரணி (416) 492 – 8543**

உ
*சிவமயம்*

# திருமுறைத் திருமணம்

தொகுப்பு: டாக்டர் ச. சாம்பசிவனார் எம்.ஏ., பிஎச். டி
தமிழ்நாடு

### 1. பிள்ளையார் வழிபாடு

மஞ்சளில் பிள்ளையார் செய்து (அதாவது மஞ்சளை அம்மியில் அரைத்து ஒரு கைப்பிடி பிள்ளையார் போல் பிடித்து வைத்தல்), அறுகம்புல் இட்டு, அப்போதே, மங்கல மடந்தையரைக் கொண்டு விளக்கேற்றிவைத்தல். தொடங்கும் வினைகள் இனிதே நிறைவேறப் பிள்ளையாரை முதலில் வணங்கித் தொடங்குதல் தமிழ் மரபு.

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே!
(சம்பந்தர்: 1:123:5

### 2. முருகன் வழிபாடு

முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! - ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்! (11 ஆம் திருமுறை)

### 3 திருவிளக்கு வழிபாடு

திருவிளக்கிற்குப் பூஇட்டு வழிபாடு செய்தல்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது!
சொல்லக விளக்கது சோதி உள்ளது!
பல்லக விளக்கது பலரும் காண்பது!
நல்லக விளக்கது நமச்சி வாயவே!

### 4. நிறைநாழி வழிபாடு

நாழி நிறைய நெல் நிறைத்துப் பூஇட்டு வழிபடல்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும், இப் பூ மிசை
என்னன் பாலிக்கு மாறு, கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே (அப்பர்:5:1:1)

### 5. இறைவன்பால் நம் மனத்தைச் செலுத்துதல்

உயிருக்கு உயிராய் நிற்கும் இறைவனைச் சென்று அடையுமாறு நாம் அனைவரும் நம் மனத்தைச் செலுத்துவோமாக!

நீறு தாங்கிய திருநுத லானை
நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக்
குற்றம் இல்லியைக், கற்றைஅம் சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை, அமரர்க்கு
அரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத்தினை நகருள்
சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே
(சுந்தரர்:7)

### 6. கோள் வழிபாடு

(கும்ப வழிபாடு)

பச்சரிசியை வாழை இலைமேல் பரப்பிச் சிறிய செம்பு வைத்து, அது நிறையத் தூய நீர் நிரப்பி, அதன்மேல் முழுத் தேங்காயும் உடன் மா இலைகளும் வைத்து, மலர் இட்டு, "நாளும் கோளும் (கிரகங்கள்) நல்லனவே செய்ய வேண்டும்" என்று இறைவனை நம் உள்ளத்தில் எண்ணி வேண்டுவோமாக!

வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி,
சனி, பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே!

### 7. மன்றில் திருவருள் பொலிதல்

இப்பொழுது இம் மன்றில் திருமண விழா இனிதே நடைபெற எம்பெருமானின் திருவருள் பொலிவதை உணர்ந்து மகிழ்வோமாக!

மாதவர் பாகன் மறைபயின்ற வாசகன்
மாமலர் மேய சோதி
கோதில் பரங்கருணைஅடியார் குலாவு
நீதிகுண மாக நல்கும்
போது அலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே!
(மாணிக்கவாசகர் திருவாசகம்)

### 8. மணமகன் சடங்கு

மணமகனுக்குத் திருநீறு கொடுத்தல்

“மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமை பங்கன் திருவாலவாயான்
- திருநீறே”
(சம்பந்தர்: 2:66:1)

### 9. பெற்றோர் வழிபாடு

மணமகன், தன் தாய் தந்தையை வணங்கி அவர்தம் திருவடிகளில் சந்தனம் பூசி மலரிட்டு வழிபாடு செய்தல்.

தந்தையாய் உலகுக்கு ஓர் தத்துவன்
மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயின பெருமான் பரிசுடையவர் திருவடிகள்
அந்தண் பூம் புனலானைக் காவுடை யாதியை நாளும்
எந்தை என்று அடிசேர்வார் எம்மையும் ஆளுடையாரே
(சுந்தரர்:7)

### 10. பெற்றோர் வாழ்த்துதல்

மணமகனைப் பெற்றோர் வாழ்த்தித் திருநீறு அணிவித்துத்திருமணப் புத்தாடைகளை வழங்குதல்

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே! (சுந்தரர்:7)

### 11. அரசாணிக்கால் நடுதல்

இக்குடும்பம் வாழையடி வாழையாக வளரவேண்டும் என்ற அடிப்படையில் அமைவது இது. மங்கலப் பெண்டிர் மூன்றுபேர் கூடிச் செய்ய வேண்டும். மணமேடையின் இடப்புறம் (அதாவது பார்வையாளருக்கு நேரே வலதுபக்கம்) கட்ட வேண்டும். வாழை இலை பரப்பிப் பச்சரிசி இட்டு ஓம் எனும் மந்திரம் எழுதி மணவிழா நடத்திவைக்கும் பெரியவர் மலரிட்டு மணமகனைக் கொண்டு வழிபாடாற்றல்.

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதுஇயலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட்கு இன்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்!
(திருவாசகம்)

### 12. மணமகள் சடங்கு

மணமகளுக்குத் திருநீறும் குங்குமமும் கொடுத்தல்

முத்தின் தாழ் வடமும் சந்தனக் குழம்பும்
நீறும் தன் மார்பினில் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர் மரகத மடுத்தாற்போல்
அத்தனார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவா யாவதும் இதுவே!
(சம்பந்தர்: 3:120:7)

### 13. பெற்றோர் வழிபாடு

மணமகள் தன் தாய்தந்தையரை வணங்கி, அவர்தம் திருவடிகளில் சந்தனம் பூசி மலரிட்டுவழிபாடு செய்தல்

அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ!
அன்புடைய மாமனும் மாமியும் நீ!
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ!
ஒருகுலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ!
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ!
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணிநீ இம் முத்து நீ!
இறைவன் நீ ஏறு ஊர்ந்த செல்வன் நீயே!
(அப்பர்: 6:95:1)

### 14. பெற்றோர் வாழ்த்துதல்

மணமகளைப் பெற்றோர் வாழ்த்தித் திருநீறும் குங்குமமும் அணிவித்துத் திருமணப் புத்தாடைகள் வழங்குதல்.

“கானார் புலித்தோல் உடை தலை ஊண் காடுபதி
ஆனால் அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆரேடீ!
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ!” (திருவாசகம்)

### 15. திருஊஞ்சல்

மணமேடைக்கு முன்னால் எதிரெதிரே இரு நாற்காலிகளில் மணமகனையும் மணமகளையும் அமரச் செய்தல் திரு ஊஞ்சல் பாட்டை மங்கல மகளிர் சிலர் பாடப் பின்பு நாதசுரம் அதனை இசைத்தல்.
சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக

ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாள்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோச மங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணை பாடிப்
போரார்வேல் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ!
(திருவாசகம்)

## 16. திருவிளக்கு வழிபாடு

திருவிளக்கில் சுடர் ஒளியாய்த் திகழும் அருட்பெருஞ் சோதியை, மணமக்கள் வழிபட்டு அருள் வேண்டுதல்

சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே!
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தம் மேவியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே! (திருவாசகம்)

## 17. திருமாங்கல்யத்தை வழிபடுதல்

ஒரு பெண் தாம்பாளத்தட்டில் குங்குமச் செப்பில் உள்ள திருநாணை அப்படியே வைத்துக் கொடுக்கப் பொறுப்புள்ள ஒருவர் அதனை அவையில் உள்ள பெரியோர்களிடம் எடுத்துச் சென்று காட்ட அவர்கள் தம் கையால் தொட்டு, மனத்தால் வாழ்த்தல். பின்னர் அதனை மணமேடையிற் கொண்டுபோய் வைத்தல்; அப்போது மணமக்கள் அதனை வழிபடல்.

அணிபெறு வடமர நிழலினில் அமர்வொடும் அடி இணை இருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும் அருளிய பரன் உறை விடமொளி
மணிபொரு வரு மரகத நிலமலி புனல் அணைதரு வயலணி
திணிபொழில் தருமணமது நுகர் அறுபதம் முரல் திருமிழலையே!
(சம்பந்தர் 1:20:5)

## 18. ஓம்படை செய்தல்

மணமகளின் பெற்றோர்கள், தம் மகளின் வலதுகையை மணமகனின் வலதுகையின்மேல் வைத்து ஒப்படைத்தல்

உம்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப் பழம் சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான், உனக்கு ஒன்று உரைப்போம்! கேள்!
எம் கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க!
எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க!
கங்குல் பகல் எம் கண், மற்று ஒன்றும் காணற்க!
இங்கு இப் பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்குஎழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்
(திருவாசகம்)

## 19. மணமக்கள் உறுதிமொழி எடுத்தல்

மணமக்கள் இருவரும் பின்வருமாறு உறுதிமொழி எடுக்க வேண்டும்.

மணமகன் :......................................... ஊரில் உள்ள .......... (தந்தை தாய் பெயர்கள்) இவர்களின் மகனாகிய ................................(மணமகன் பெயர்) நான், ......................... (மணமகளின் பெற்றோர்கள்) இவர்களின் அருமைத் திருமகளாகிய ......................... (மணமகள் பெயர்) என்னும் பெயருடைய இவளை இறைவன் திருவருளால், என் பெற்றோரும் உற்றாருமாகிய உங்கள் நல்வாழ்த்துக்களுடன், என் வாழக்கைத் துணைநலமாக மனமகிழ்ந்து ஏற்றுக்கொள்கின்றேன். நாங்கள் இருவரும் வள்ளுவர் வகுத்த வழியில் இல்லறம் ஏற்று இனிது நடத்துவோம் என உறுதியளிக்கின்றோம். அதற்கு இங்குள்ள சோதிச் சுடராம் திருவிளக்கே சாட்சியாகும்!

மணமகள்:.......................... ஊரில் உள்ள................... (தந்தை தாய்பெயர்கள்.) இவர்களின் மகளாகிய ............. (மணமகள்பெயர்) நான்..................(மணமகனின் பெற்றோர்கள்) இவர்களின் அருமைத் திரு மகனாராகிய திரு............ (மணமகன் பெயர்) என்னும் பெயருடைய இவரை இறைவன் திருவருளால் என் பெற்றோரும் உற்றாருமாகிய உங்கள் நல்வாழ்த்துக்களுடன் என் கணவராக மனமகிழ்ந்து ஏற்றுக் கொள்கின்றேன். நாங்கள் இருவரும் வள்ளுவர் வகுத்த வழியில் இல்லறம் ஏற்று இனிது நடத்துவோம் என உறுதியளிக்கின்றோம் அதற்கு இங்குள்ள சோதிச் சுடராம் திருவிளக்கே சாட்சியாகும்!

அண்ணல் ஆலவாய் நண்ணினான்றனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே!

## 20. திருநாண் பூட்டுதல்

மங்கல இன்னிசை முழுங்க, வந்திருந்தோர் மங்கல அரிசி அட்சதையை மணமக்கள் மீது போடத் திருமாங்கல்யத்தை மணமகளது கழுத்தில் மணமகன் அணிவித்தல் அப்போது மங்கலப்பெண்டிர் உடனிருந்து திருநாண் கயிற்றில் முன்று முடிச்சுப் போடுதல். பெண்டிர் குலவன் இடுதல்: நாதசுரம் முழுங்குதல்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவில்லைக்
கண்ணின் நல் அஃது உறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!
(சம்பந்தர்: 3:24:1)

## 21 மாலை மாற்றுதல்

மணமக்கள் தங்கள் கழுத்தில் உள்ள துணை மாலைகளைக் கழற்றி ஒருவர்க்கொருவர் மூன்று முறை மாற்றிக் கொள்ளுதல்

தலையே நீவணங்காய்! தலைமாலை தலைக்கணிந்து

தலையாலே பலிதேரும் தலைவனைத் தலையே
- நீவணங்காய்!
(அப்பர் 4:9:1)

### 22. உறவினர் வாழ்த்துதல்

இவ்விநாடி முதல் மணமகள், இல்லத்து அரசியாக வாழ்வுக்கு, அரசியாக இல்லத்தை ஆள்பவளாக விளங்குவதைக் குறிக்க, உறவினர் ஒருவர் மணமகளது நெற்றியில் பட்டம் கட்டி வாழ்த்துதல்.

பட்ட நெற்றியர் நட்டம் ஆடுவர்
பட்டினத் துறை பல்லவ னீச்சரத்
திட்டமா யிருப்பார் இவர்
தன்மையறிவார் ஆர். (சம்பந்தர்: 3:112:2)

### 23. விருந்தினர் வாழ்த்து

திருமணத்திற்கு வந்திருக்கும் பெருமக்கள் சார்பாக வாழ்த்துதல்

இன்பம் பெருக்கி இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. (திருவாசகம்)

வாழ்கவே வாழ்க என் நந்திதிருவடி!
வாழ்கவே வாழ்க மலம் அறுத்தான்தம்!
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன் தாள்!
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே!
(திருமூலர் திருமந்திரம்)

வையம்நீடுக மாமழை மன்னுக!
மெய்விரும்பிய அன்பர் விளங்குக!
சைவ நன்நெறி தாந்தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே!
(பெரிய புராணம்)

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

வாழ்க மணமக்கள்!
வாழ்க வாழ்க வாழ்கவே!

(அதனை அனைவரும் ஒருசேர வழங்க வேண்டும்)

திருச்சிற்றம்பலம்

## சான்றோர் சொல்லமுதம்

தமிழர் பண்பாடுள்ள சிறந்த இனத்தவர்களாவர். அவர்கள் பண்பாட்டில் வாழ்ந்தபோது தம் பெண்ணை ஒரு ஆண்மகனுக்குக் கொடுக்கும்போது சீர்வரிசை செய்து கொடுத்தார்களே தவிர சீதனம் கொடுத்து ஆண்மகனை விலைக்கு வாங்கவில்லை. தம் தகுதிக்கேற்ப ஆடை, ஆபரணங்கள், மற்றும் உதவிகள் செய்தார்கள். மணமகளை வீட்டிற்கு வரும் இலட்சுமி என்றும், மங்களப் பொருள் என்றும் எதிர்காலத்தில் இல்லத்தை - இல்லறத்தைத் திறம்பட நடாத்தும் தலைவி என்றும் மாமன், மாமி நினைத்து அன்புடன் வரவேற்றனர். பணத்திற்கு மதிபபளிக்காது குணத்திற்கு மதிப்பளித்தனர். ஆண்மகனுக்கும் அதுவே சிறப்பாகும். அவனின் ஆளுந் தன்மையும் அதனால் சிறப்பெய்தியது. இல்லறம் நல்லறமாகியது.

- அடியான்

**மணமக்களுக்கு அறுகரிசி போடத் தகுதியானோர்**

திருமணமாகி மக்களைப் பெற்றோரே விரும்பத்தக்கது. மணமாகாதவர் அறுகரிசி போடத் தகுதியற்றவர் என்பர் ஆன்றோர். மணமக்களின் முன்பாகத் தட்டத்தில் இருக்கும் மஞ்சள் , அறுகு என்பன கலந்த வெள்ளரிசியை இரண்டு கைகளினாலும் அள்ளி மணமக்களின் முழுங்கால், மூட்டு, தோட்பகுதி, உச்சி ஆகியவற்றில் படியுமாறு மும்முறைதூவி நீடுவாழ்க என்று இறைவனை நினைத்து வாழ்த்த வேண்டும்.


விதை தரையில் ஊன்றப்பெற்று, மண்ணும், காற்றும், நீரும் அதனைச் சூழ அமைக்கப்படுகின்றன. விதை மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ ஆகிவிடுகிறதா? இல்லை, அது செடியாகிறது. தனக்குரிய வளர்ச்சி விதிக்கேற்ப விருத்தியடைகிறது. காற்றையும், மண்ணையும், நீரையும் தனதாக்கிக் கொண்டு தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக மாற்றி ஒரு செடியாய் வளர்கிறது.

சமயத்தின் நிலையும் இதுவே. கிறிஸ்தவர் இந்துவாகவோ, பௌத்தராகவோ மாறவேண்டியதில்லை. அல்லது இந்து, பௌத்தராகவோ, கிறிஸ்தவராகவோ மாறவேண்டியதில்லை. ஆனால், ஒவ்வொருவரும் மற்றச் சமயங்களின் நல்ல அம்சங்களைத் தமதாக ஆக்கிக்கொண்டு தம் தனித்தன்மையைப் பாது காத்துக் கொண்டு நிதம் வளர்ச்சி விதிகளின்படி வளரவேண்டும்.

- சுவாமி விவேகானந்தர்.







# Ardhanareeswara

Sri Amirthananthanatha Sharswathi - *Sri Rajarajeswari Peetam, Rochester, NY*

The concept of the Hindu Trinity, establishing *Brahma* as the creator, *Vishnu* as the preserver and *Siva* as the destroyer was taught to the simple peasants by the *Rishis* (Seers) who came out of the jungles and down from the mountain abodes. They sought to share the experience and wisdom that they had gained through their spiritual austerities and in this way they offered to the peasantry of *Bharatham* (India), in the many hundreds of thousands of villages spanning across the subcontinent, images of the three fold function of the divine. While making such complex ideas understandable through simplification, it also created confusion in the minds of the devotees as to the existence of one God. This confusion has remained in the minds of the devotees by the oral transmission of the legends and stories by the mothers and grandmothers and other storytellers for countless number of generations. I myself inherited this confusion from listening to the stories and other puranic legends from my mother. Of particular concern for me was the fact that this ancient concept of a divine trinity relegates to *Siva* the role of being a terrible aspect of an otherwise compassionate god.

In the following I wish to complicate or put to rest this one dimensional depiction of *Siva* in the best way I know how: by literally expanding His proportions to include the feminine and maternal aspect of god. This component is something - as I understand it - is integral to understanding *Siva* in his complexity; it is not separate nor can it be separated from him. An iconographical and textual depiction of *Siva*, which epitomizes this dynamic most powerfully, is through the figure of *Ardhanareeswara*.

The iconography of *Ardhanareeswara* seems to have developed after the seventh century CE, judging from the pieces that have survived. While common among them is an expression of the dual male/female nature of the divine, these images display slight variations within this unified theme. Some of the best-preserved examples of this iconography belong to the period of the *Chola* dynasty. For example, in the temple at *Thiruccenampadi, Tamil Nadu*, His/Her face is grave, portentous and yet compassionate. The body, suave and voluptuous, *Ardhanareeswara* leans on the *vahana*, *Nandi*, the bull. The figure is usually sculpted with the triple-flexed stance (*Tribhanga vadivam*) characteristic of the Dravidian school of sculpture.[1] The seventy-second *patala* of the *Kashyapa Silpa Sastra* specifies that the *Ardhanareeswara* murti's right leg should be *susthitam* and the left leg *kunchitham*. It should also have six, four or two hands for which various ornamentations are detailed.[2] Nonetheless, examples of a three-handed deity also exist, as detailed in the *Suprabheda Agama*, such as the *Ardhanareeswaras* among the Tanjur sculptures of the Chola period, of the tenth century. Many examples of this deity in its three handed form, seem to have originated from the legend of the *Meenakshi-Sundereswara* Temple in the temple town of Madurai. The Devi, as legend has it, was born into the family of a Pandya king by the name of *Malaiyatvajan*, and his wife *Kanchanamalai*, *Siva* appeared as *Sundareswara* and married her. The



*Thiruccenampadi*

left side of the deity is therefore depicted as a human with two hands and the right half depicted as *Siva* the divine with four hands, hence the deity exhibits three hands. Further descriptions of the iconography of the *Ardhanareeswara* are found in : *Amsumadbheda Agama, Kamika Agama, Suprabhedha Agama, Silparatna and Karana Agama.*3



**Chola Sculpture**

It is interesting to note that the indivisibility of male and female expressed through *Ardhanareeswara's* various iconographical forms also can be found in ways hidden to the eye. In selecting the stones for the sculpting of temple deities "male " and "female" stones are used depending on the nature of the deity. The Dravidian schools of sculpture specify that the stones selected must be of the primary rock group, having come out of the bowels of the earth. This means granite stones depending on their colour, chemical content and resonance at particular notes of the basic scale of Indian music are to be selected. When the reversed chisel is struck against the stone and it resonates at *Sadjamam, Rishabham, or Ghandharam* then it is considered a male stone and masculine deities are made from it. If it resonates at *Madhyamam,* and then it is considered a neutral stone and a male/female deity, such as *Ardhanareeswara* is made from it. If on the other hand the resonance is at *Panchamam, Dhaivatham or Nishadham* it is considered female stone and feminine deities are to be made from such a stone.4

*Ardhanareeswara's* iconographical embodiment of paradox and the meeting of dualities - embodied sonically as well as visually - mirrors a similar paradox and synthesis embodied by individual men and women. The male hormone Testosterone in women and the female hormone Estrogen in men testify to the fact that characteristics of both sexes are present in each one of us. The production of these in our bodies keeps our personalities and our bodies in balance. The differences are brought together in the beautifully conceived anthropomorphic form of *ardhanareeswara.* The form encompasses every thing from action to inaction, eternal rest to endless activity, the terrible and the benign. The *Devi* depicted on the left half of the deity, is the power of god by which creation, protection and destruction of the universe is accomplished.

Having considered the imagery and the latent sound forms contained in some if the images, let us consider the written references to the *Ardhanareeswara* in the religious literature. Although references to the bi-unity of *Siva* and *Devi* abound in scriptural writings, the source that comes readily to my mind is the incomparable set of a thousand names, described as the *Rahasya Sahasranama.* That which is to be practiced in the deepest recesses of a seeker's mind.

The *Sri Lalitha Sahasranama*, from the *Uttarabhaga* of the *Brahmanda Purana*, gives one of several names for the *Devi* as "*Chaithanya Kusumapriya*". The nature of the, "*Siva-Shakti Samarasya*" is the experience of pure Consciousness. This brings us to the very nature of this deity as pure Consciousness, unfettered from the sensory experience of the human intellect. This also

means that the experience of the *Ardhanareeswara* in one's *Sadhana* or spiritual practice is to reach that state of undifferentiated bliss (meaning the *Advaita Bhavam*). Another name is "*Vyktavyakta Swaroopini*". She who is the embodiment of that which is manifest and that which is unmanifest. The nine hundred and ninety ninth name is, "*Siva Shaktyaikya roopini*" it reflects the entire philosophy behind the *Ardhanareeswara* as a deity.5 She is referred to as "*Sri Kandartha Saririni*". The name means "She who is half of the one who has poison in the throat". The word, "*Sri*" is used in the scriptures to denote that which is auspicious. It also means poison *Siva*, the eternally auspicious one, holds in his throat, the poison that came out of the churning of the milky ocean. She occupies "*ardha*" half his body. Here the *Ardhanareeswara tatva* is clearly defined. The interpretation in terms of one of the forms of yoga is as follows the milky ocean referred to be the mind, the snake used as the rope, "*Kula Kundalini*". The *Meru* Mountain is the spinal chord or the backbone. When the depths of the mind are churned, many undesirable attributes that have been forced into the background during the *sadhana* will be dredged up. This is the poison. *Siva* embodied in the form of the preceptor (*Guru*), in his infinite grace, intervenes and protects the devotee by holding it in his throat. Another name describes Her as, "*Vidya-vidya swaroopini*" the one in enlightenment and ignorance. Another name, "*Vyapini*" also details Her as the one who is spread over all of creation. The word *Siva* is a combination of Sa + Ee + Va. If the *bijakshara Ee* is removed from the word then *Siva* will read as *Sava*, a corpse. In fact the *Sahasranama* refers to the ultimate as, "*Panchpretasanaseena*". This means that She presides over the five-fold function of "*Sristi, Stithi, Laya, Thirodhana and Anugraha*". She, who creates, protects, dissolves, veils the grace and finally gives the grace to the devotees. She can only perform these in her manifestation as a male/female biunity, namely *Ardhanareeswara*.5a Descriptions of the *Dhakshinamurthy* aspect of Siva detail him as, "*Dhakshina*" the one on the right side, being, "*Amurthi*" the one without form or the Unmanifested. The one on the left is described as, "*Vama Devi*" the manifested.



**Sthapathi's Representaion**


In another work, attributed to *Sage Hayagriva* the horsefaced embodiment of *Vishnu*, (who taught the *Lalitha Sahasranamam* to the great *Sage Agastya)*, the *Sri Lalitha Trisati*, there are names that reflect in spirit and essence the philosophy of the *Ardhanareeswara* as a deity. *Kameswara Gruheswari*. She who is the power, *Easwary*, in the house of *Kameswara, Siva*. There is also a name that addresses her as, "*Kameswara Prananadi*". The meaning is that she is the basis for the life of *Kameswara*.5b The fore going clearly establishes the equality and importance of the feminine aspect of the divine .A significant mention of the unity of the mother principle and the father principle as the divine is found in the *Taitreyopanishad*, which enjoins the seeker to treat the mother as godhead and the father as godhead. It is to be noted that equal importance to both the paternal and maternal principles is given in the text.5c A similar sentiment is expressed in the great work normally attributed to the first *Shankaracharya*, the *Soundarya Lahari*. In the very first verse, "*Sivashaktyayukta Prabhavidhum...*" where he says that *Siva* cannot even move if he were not united with the *Devi*.6 This is further reflected in the description of the deity in the *Bhagavatha Purana*, "The *Parabrahman* (the transcendental essence), He / She is the lord of *Shakti* and *Siva*, who are the womb and seed respectively of the universe and who, like a spider, forms it in his

sport, through the agency of *Shakti* and *Siva*, (who are one with himself),the universe is thus preserved and re-absorbed ".7

The symbolism of the deity, expressed iconographically and textually, is that Godhead is beyond even the totality of His male/female bi-unity. Summed-up as, "A gentle (*soumya*) aspect of *Siva* in androgynous form which, denotes the inseparability of all male and female forms, the cause of creation in the world. The same notion is conveyed by the linga emerging from the yoni. Much symbolism attaches to the *Ardhanareeswara* aspect, which denotes the *Samkya* dual principle of the cosmic *Purusha* and *Prakrti*, as well as personifying the abstract *Vedantic* principle of *Brahman* in his *Yogeswara* aspect. From the philosophical point of view this composite form represents the creative union of the active and passive principles. The male principle is also represented as fire, the devourer, while the female principle is *Soma*, the devoured offering. The deity is then the embodiment of the cosmic sacrifice, the image of the universe"8. In the other pairs of opposites the *Siva* and the *Devi* are thought of as the earth and the sky. In the Hindu tradition the pairs of opposites are portrayed with a seemingly intense dose of eroticism and all the forms are exclusively allegorical.9

The many philosophers of history, the contemporary ones and the many scholars of Hinduism, reflecting on iconographic and textual sources seem understandably indebted to this bi-unity of *Siva*. In his book, "The Love of God according to *Saiva Siddhanta*", M. Dhavamony (Oxford at the Clarendon press, ) writes, "Since the whole universe is male and female (*pullinga* and *sthrilinga*) all belong to *Siva* and *Devi*. He furthers writes, "In himself *Siva* possesses a double nature in which are reconciled all opposites".9aIn fact where *Siva* is venerated the *Devi* is venerated too. In the words of a contemporary writer Frank Morales writes in the world wide-web site, "Veneration of God necessarily entails the veneration of the Goddess. They are two aspects of the same being and are, as such, mutually dependent upon one another.10 In his book, "Tantra the path of Ecstasy", Georg Feuerstein, (1998), says, "Hindu Iconographers have made various attempts to depict in three dimensional form the zero-dimensional relationship between *Siva* and *Shakti*, (the maternal aspect of God worshipped as *Devi*). Obviously this is only an imperfect depiction of the union between *Siva* and *Shakti*, which is a seamless continuity of Consciousness and Power within one and the same reality. Even the term Polarity does not describe this transcendental situation accurately. A some what more fitting analogy would be that of a hologram that yields one image when viewed from a certain angle and another image when viewed differently"11

In *Sri Vidya*, my own tradition of the worship of the *Devi*, the half of the *Ardhanareeswara*, there is a strong connotation of the erotic sentiment present. In the mantras and teachings of the *Tantras*, detailing the worship of the *Sri Chakra*, the celestial abode of the Mother, the erotic sentiment is felt and experienced as the *sadhana* progresses. Here, we are to behold the primal couple engendering the spheres of being, personifying the divine essence in its productive aspect, and polarized for fruitful self-reflection. In the, "*shad Chakra Japam*" taught by Amritananda, the Nuclear Scientist turned *Yogi* and my *Guru*, the power is brought up through the system of *Chakras* with the chanting of combinations of the seed syllables found in them. The *Devi*, visualized as



**Siva Shakti Samarasyam**

seated on the left thigh of *Siva*, is turning toward Him and locking Him in the eternal embrace of the father and mother of the Cosmos.[12]

In *Mantra sastra* or the science of mantras, the *mantra* for the *Ardhanareeswara* is at the heart of *Sri Vidya*. This is the *Mantra, Hrim*. A combination of the *Bijaksharas: Ha, Ra and Eem. Ha* is for *Hara or Siva, Eem* is for the *Devi (Eem* is called *Shakti Pranava) Ra* is for *Agni*, the fire of the union between *Siva* and the *Devi. Ha+Ra+Eem* produces the mantra that is also called the *Kurchcha Bhija*. The play of this *mahamantra* in the *Ardhanareeswara* sculptures, especially the ones from the Chola period, whether they are of stone or of metal, " produces an ultimate, marvelous balance between the dynamism of manifestation-process- constant evolution, and the serene, static repose of eternal being"[13]



Another Chola Piece

In spite of the preponderance of evidence within iconography, text and tradition supporting the dual nature of the divine and the irrevocable connection between *Siva* and *Devi*, the reality of practice expresses something quite different. It should be evident that texual, iconographical and traditional importance for the biunity of *Siva* has been readily apparent throughout history, but has been omitted by design.The feminine half, meant to be equal and opposite, has been relegated to being another, "*Parivara Devata*" part of the retinue in *Sivalayas*. It is impossible to come across any temple where the *Ardhanareeswara* is the main deity, with the iconographical image placed in the sanctum. This is due to the fact that it is not *agamically* correct to install a figure in a *Sivalayam*. Nonetheless, the *Sivalingam* itself- in fact a representation of the *Ardhnareeswara* theme of *Sivashakti Samarasyam* - is found in the sanctums.

It is my opinion that the obvious erotic sentiment displayed by the infusion of the feminine aspect into the otherwise masculine based worship had the effect of unsettling the practitioners and the priests of the *Saivites*. The situation has been further compounded by the influence of foreign philosophies making inroads into the *Saivaite* mindset, setting the stage for a puritanical style of worship and relegating deities such as the *Ardhanareeswara* to the periphery of the rituals in temples.

The sixty-four *tantras* are written in the form of conversations between *Siva* and the *Devi*. These texts have sometimes been called the *fifth veda*. In spite of their authenticity and antiquity the tantras have received poor treatment from the preists and pundits performing the temple rituals mainly because the tantric way of worship is open - in theory but not always in practice - to all without bias, regardless of the age, sex, caste, creed or national origin. The tantras have been relegated to second class status mainly due to their disuse as textual sources in Saivaite temple rituals and exclusive use of later *agamic* texts, or suktas from the *Vedas*, which upheld the males only access to temples. Along these lines I have found through researching the place of the *Ardhanareeswara* in the *Saiva* temples and the philosophy associated with this deity, an inescapable and paradoxical fact repeatedly presenting itself, that of marginalizing the role of women in *Saivaism*, something which has reduced their role in temples to a minimum.



Suspicions of the purity of the texts (*Tantras)* detailing the worship of the *Devi*, because some of them are decidedly to the left of the center have further eroded the place of women in the temples and the rituals. The philosophy of the *Ardhanareeswara* places the genders on equal terms without question. It is time that greater efforts be made to restore to the mainstream, the role of the *Devi* and her embodiments on the planet. It is my opinion that this can be done by fully understanding the philosophy and historical place of this deity in *Saivaism*.

**Ardanareeswara**


1. T.A.Gopinatha Rao. *Elements of Hindu Iconography. 1916*
2. K.S.Subramanya Sastry. *Kasyapa Silpa Sastra. T.M.S.M. Library series 1960,1989*
3. T.A.Gopinatha Rao. *Elements of Hindu Iconography vol 2 part.I 1968*
4. Chaithanyananda. *SriChakra: Special Issue Sivarathri 1992*
5. Sri Lalitha Sahasranamam *Brahmandapuranam*

5a.Sri Lalitha Sahasranamam *Brahmandapuranam*

5b.Sri Lalitha Thrisati *Brahmandapuranam*

5c.Chandrashekarendra *Taitreyopanishad*

6. Adi Shankara *Soundaryalahari*
7. T.A. Gopinatha Rao. *Elements of Hindu Iconography vol.II part I*
8. Vijayananda Tripathi. *Devata Tatva Sanmarga III 1942*
9. Heinrich Zimmer. *Some Aspects of Time in Indian Art. Journal of the Society of Oriental Art, 1933*

9a. M.Dhavamony *The Love of God According to Saiva Siddanta 1971*

10. Frank Morales *worldwideweb 1998*
11. Georg Feuerstein *Tantra the Path of Ecstasy 1998*
12. Amritananda *SRI CHAKRA PUJA 1989 Sri Rajarajeswari Peetam Rochester NY.*
13. S.T.Sathiamurthy *Editor, Handbook of the Madras Government Museum* .Madras 1964




அனைவருக்கும் முதல்வணக்கம்!

# நன்றிக் கலசம்

சைவநீதி வாசகர் அனைவருக்கும் தீபாவலி வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக. **வழமைப்பிரகாரம் சைவநீதி தமிழ்** – சமயத்திற்கும் கலை – கலாச்சாரத்திற்கும் நீங்கள் அளித்த ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் **நன்றி தெரிவிக்க இதோ!** உங்கள் முன்னிலையில் வந்து நிற்கிறது. எனவே, நன்றியை ஏற்று மகிழ்ச்சி ஆரவாரம் **செய்வீர்களாக.**

1. இதுவரை கனடா இந்து மாமன்ற வெளியீடான "சைவநீதி" மலர்கள் பதினொன்று . இந்த பதினொரு **மலர்களையும்** பாராட்டி உள்நாடு – வெளிநாடுகளிலுமுள்ள பேரறிஞர்கள், அன்பர்கள் – ஆதரவாளர்கள் பலர் **கடிதங்கள் வரைந்**துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும்;

2. 1999 ஐப்பசி – தீபாவலி மலருக்கான கட்டுரை – கவிதைகளைத் தரமாகத் தந்துதவிய கட்டுரை – கவிதையாளருக்கும்;

3. 'சைவநீதி' மலருக்கான செலவினங்களைச் சரிசெய்ய அவ்வப்போது உதவியளித்துவரும் பதவிவழி உத்தியோகத்தர்களுக்கும், வர்த்தகப் பிரமுகர்களுக்கும், சமயகுருமார்களுக்கும்; முதற் பிரதிகளைப் சித்தரை வெளியீட்டு விழாவில் வாங்கியவர்களுக்கும்

4. மலரை மிகக்குறுகிய காலத்தில் வடிவமைப்புச் செய்த திரு. மா. கனகசபாபதி,, அழகுற அச்சிட்டுத் தந்த ROYAL GRAPHIC அச்சகத்தினருக்கும், முகப்பு அட்டையை அழகுற வரைந்து உதவிய சிறந்த கலைஞர் திரு. கண்ணன் அவர்களுக்கும்

5. சைவநீதி சிறந்து – வளர்ந்து உலகிற்குப் பயன்தரவேண்டுமென்ற பெருநோக்கில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கும் கனடா இந்து மாமன்றத்தின் தலைவர் – செயலாளர் – பொருளாளர் – நிருவாக உறுப்பினர்களுக்கும் கனடா இ.மா.ம. பாடசாலைகளின் பெற்றோர் – ஆசிரிய சங்க சம்மேளனத்தின் தலைவர் – செயலாளர் – பொருளாளர் – நிருவாக சபையினருக்கும் மன்றப்பாடசாலைகளின் ஆசிரியர் – பெற்றோர், மாணவர்களுக்கும்;

6. சைவநீதி வெளியீட்டு விழா, பெற்றோர்தினவிழா – சர்க்கரைப் பொங்கல் – சமய கலாச்சாரவிழா – கலைவிழா –சித்திரக் கண்காட்சி விழா முதலிய பலநிகழ்வுகளுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கிவரும் அனைவருக்கும்;

7. கனடா இந்து மாமன்றத்தின் சேவைக்கு மதிப்பளித்து, பல்வேறு வகையில் பாராட்டும் உதவியுமளித்து விழாக்களுக்கும் சமுகமளித்த கௌரவ Minister of Citizenship, Culture and Recreation, ஸ்காபுரோ நகரசபை முதல்வர் (Mayor) – பா. உறுப்பினர் (M.P) – நடைமுறை (Officers) உத்தியோகத்தர்களுக்கும்;

8. "சைவநீதி" – சிவநெறி – தமிழர் நீதி என்ற பேரெண்ணத்தினால் வாங்கி வாசித்துப் பயன் பெறும் வாசகர் – வாசக வட்டத்தினருக்கும்;

9. சைவநீதி மலரை உரிய தினங்களில் ஆலயங்களில் பொது மக்களுக்கு விநியோகித்து வரும் மன்றத்தினருக்கும் அனுமதியளித்து ஆதரவு நல்கும் ஆலய நிருவாகத்திற்கும்;

10. கனடா இந்துமாமன்றமும் ஏனைய சைவஸ்தாபனங்களும் சோந்து நடாத்தி மாபெரும் வெற்றிகண்ட உலகப் பெருவிழாவாகிய உலகச் சைவப் பேரவையின் ஏழாவது சைவ மாநாட்டினை (கனடாவில் நடத்த) மிகத் திறம்படுத்தி – ஒத்துழைத்த அனைவருக்கும் மாநாட்டில் சமுகமளித்த உலக சைவப் பேரவையினருக்கும், பேரவைத் தலைவர், செயலாளர், பொருளாளருக்கும் மற்றும் பல நாட்டின் கிளை உத்தியோகத்தர்களுக்கும், பேரூா ஆதீனத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளுக்கும் சொற்பெருக்காற்றிய அனைவருக்கும் விழாவுக்கான நிதி உதவி அளித்த அனைவருக்கும் மாநாடு சிறப்பாக நடாத்தப் பல வழிகளிலும் ஆதரவு தந்த சகலருக்கும்


11. சைவநீதி மலரை வரவேற்று ஆசீர்வதிக்கும் "கலசம்" "சைவஉலகம்" சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் கனடா – இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கும், இலங்கை – கனடா – லண்டன் சிவதொண்டன் நிலையத்தினருக்கும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினருக்கும், கொழும்பு இராமகிருஷ்ண சபையினருக்கும், அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்கும், இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டுச் சைவ ஸ்தாபனங்களுக்கும் மன்ற வளர்ச்சி விரும்பும் அனைவருக்கும்.

ஓம் சிவாயநம அன்பே சிவம்

கனடா
06–11–1999

வணக்கம்

மலராசிரியர் – சைவநீதி
கனடா இந்து மாமன்றம்



*For all your Graphic Design and Printing Service needs*

ROYAL Graphic inc.

3031 Markham Road, Unit 30
Scarborough, Ontario
M1X 1L9

Tel: (416) 293-9163
Fax: (416) 293-9617

VALKA NEETHI

AIR POWER

SUCCESSFULLY COMPLETING OUR 8TH YEAR

# AIR LINK

NOW

## INTRODUCING KOREAN AIR

## LOW LOW FARE TO

## COLOMBO AND INDIA

A great way to fly SINGAPORE AIRLINES

GULF AIR

Canadian

Lufthansa

KOREAN AIR

AIRLANKA

KLM

Emirates

CANADA 3000

### TOP AGENT AWARDS

SINGAPORE AIR LINES
1994 1995 1996 1997

LUFTHANSA
1996 1997

KLM
1995 1996 1997

AIR LANKA
1992 1993 1994

GULF AIR
1996 1997

### SINGAPORE AIRLINES

THE BEST AIRLINE IN THE WORLD

OFFERS QUALITY SERVICE TO COLOMBO WITH FREE HOTEL

### CANADA 3000

Reliable Affordable Air Travel

### GULFAIR

ஏக விநியோகத்தர்கள்

COLOMBO & MADRAS

உங்கள் பயணச்சீட்டுகளுக்கு நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்

## AIR LINK TRAVEL LTD.

5200 Finch Avenue East, Unit G115, Toronto, ON M1S 4Z4

TEL: (416) 292-6200 FAX: (416) 292-7478

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க!!
வாழிய! வையகம்

# Rainbow Village Dental Office

# Main Square Dental Office

இருபது ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற
உங்கள் நம்பிக்கைக்குரிய

**டாக்டர். அ. சண்முகவடிவேல்**

குடும்ப பல் வைத்தியர்

பல்வைத்திய சேவைகளும் கிளிப்போடுதலும்


**Dr. A. Shan Shanmugavadivel**

திங்கள், செவ்வாய், புதன்,
வியாழன் வெள்ளி, சனிக்கிழமைகளில்

இவரது சேவையும் இடம் பெறுகின்றது
டாக்டர் தவமணி
சிறிகந்தராஜா
செவ்வாய், சனிக்கிழமைகளில்
**Main Square**

வியாழக்கிழமைகளில்
**Rainbow Village**

சப்வேயில் இருந்து
நடந்துவரின்
Mid Scarborough
Community Centre Exit
ஐ எடுக்கவும்




**Tel: (416) 266-5161**
**2466 Eglinton Ave. East, Unit 7**
**Scarborough, Ontario M1K 5J8**
(near Kennedy Subway)

**Tel: (416) 690-0121**
**2575 Danforth Ave.**
**Toronto, Ontario M4C 1L5**
(near Main Subway)

Royal Graphic Inc. (416) 293-9163